3015



JL
V2IIஞ, N70TA
N59.19.3.
127072.


தமிழ் இசை விழா
தமிழரசு
1-1-1989



சென்னை கடற்கரையில், மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் சமாதியில் அமைக்கப்பட இருக்கும் நினைவகத்தின் மாதிரி வடிவம்.





## "ஆர்மீனிய நில நடுக்க நிவாரண நிதிக்கு நிதி உதவி வழங்க"

மேதகு தமிழக ஆளுநர்

டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களின்

# வேண்டுகோள்

சோவியத் யூனியனைச் சேர்ந்த ஆர்மீனியாவில் கடந்த டிசம்பர் 7-ந் தேதி ஏற்பட்ட பயங்கரமான நிலநடுக்கம் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பெருத்த சேதத்தை விளைவித்துள்ளது. இந்த துயர்மிகுந்த நிகழ்ச்சியில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வீடுகளை இழந்துள்ளனர். இந்த மக்களின் துயர் துடைப்பு மற்றும் மறுவாழ்விற்கான நடவடிக்கைகளை சோவியத் மக்கள் மேற்கொண்டுள்ளார்கள். என்றாலும், இந்தியா உள்ளிட்ட பல உலக நாடுகள் சோவியத் யூனியனுக்கு உதவிக் கரம் நீட்டி பாதிக்கப்பட்ட பகுதிக்கு உணவுப் பொருட்கள் உள்ளிட்ட துயர் துடைப்பு உதவிகளை அனுப்பியுள்ளன. இந்த மீட்புப் பணியின் முதல் கட்டம் முடிந்துள்ளது. இடிந்த கட்டடங்களை மீண்டும் எழுப்பி மக்களுக்கு மறுவாழ்வளிக்கும் மிகக் கடினமான பணி இனிமேல்தான் ஆரம்பமாக வேண்டும்.

ஆர்மீனியாவில் நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக நம் பிரதமர் அவர்கள் தேசிய நிவாரணக்குழு ஒன்றை அமைத்துள்ளார்கள். இந்த நிவாரண நிதிக்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு 1961-ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டம் 80-ஜி பிரிவின் கீழ் வரி விலக்கு அளிக்கப்படும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது. ஏராளமான அமைப்புகளும் தனி நபர்களும் இந்த நிவாரண நிதிக்கு மனமுவந்து வாரி வழங்குவதைக்காண மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நம்மாநிலத்தில் நிதி திரட்டும் முயற்சியினை ஒருங்கிணைத்துச் செயல்படுவதற்கு மாநில அளவில் என்னுடைய தலைமையின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே நன்கொடை அளித்துள்ளவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, சோவியத் யூனியனைச் சார்ந்த ஆர்மீனியக் குடியரசின் மக்களுக்கு, அவர்கள் அல்லலுறும் இந்த நேரத்தில் தங்களால் இயன்ற நன்கொடைகளை மனமுவந்து தாராளமாக, பெருமளவில் அளிக்குமாறு தொண்டு நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் தனி நபர்கள் ஆகிய ஒவ்வொருவரையும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நன்கொடைகளை 1989 ஜனவரி 31-ம் தேதிக்குள் "பிரதமரின் ஆர்மீனிய நிலநடுக்க நிவாரண நிதி' என்ற பெயரில் தமிழக அரசு துணைச் செயலர், நிதித்துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன். இவற்றைக் காசோலை மூலம் அனுப்புவது சிறந்தது.

தமிழ்நாடு ஆளுநர்
மற்றும்
தலைவர், பிரதமரின் ஆர்மீனிய
நிலநடுக்க நிவாரண மாநிலக்குழு.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019

விபவ - மார்கழி 17

மலர்: 19 இதழ்: 13

1-1-1989

127072

"[illegible] தொன்மையை மேன்மையாக்க வேண்டும் என்பதில் நாம் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும்" என்று ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் கூறினார்.

தமிழிசைச்சங்கத்தின் 46-வது ஆண்டு இசை விழாவினை; கடந்த 21-12-88 அன்று துவக்கி வைத்த மேதகு ஆளுநர் அவர்கள், 46-வது

அட்டை சொல்லும் செய்தி




தமிழிசை விழாவுக்குத் தலைமை வகித்த இளாரினட் இசைக் கலைஞர் திரு ஏ.கே.சி. நடராஜனுக்கு 'இசைப் பேரறிஞர்' என்ற பட்டத்தை வழங்கினார்.

"தமிழ் இசையில் நவீன சினிமா இசை கலந்து விடாமல் காப்பாற்றப்பட வேண்டும். அதற்காக நான் சினிமா இசையைக் குறை கூறுவதாக யாரும் கருதக்கூடாது.

"தொடக்க காலத்தில், பக்தியை அடிப்படையாகக் கொண்ட சினிமா படங்கள் வெளிவந்தன. அப்படி இருந்த காரணத்தால், கர்நாடக இசையும் சினிமாவில் இணைந்து வந்தது.

"ஆனால், இன்றைய சினிமா நம் அன்றாட வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படுகின்றது. எனவே கர்நாடக இசையை அதில் கலக்க முடியவில்லை.



ஆளுநர் தமது துவக்க உரையில் குறிப்பிட்டதாவது:

"அண்மையில் நான் கலந்து கொண்ட இன்னொரு இசை விழாவில் கர்நாடக இசையின் தூய்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறினேன். நான் இசைமேதை அல்ல; ரசிகனும் அல்ல; ஆனால், தூரத்திலிருந்து தரம் பிரித்துப் பார்க்கும் பண்பு கொண்டிருக்கிறேன். எனவே, தமிழிசையின் தூய்மை பாதுகாக்கப்பட வேண்டுமெனக் கூறுகிறேன்.

"தமிழ் இசை இயக்கம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே இதை நான் அறிவேன். தமிழ் இசையில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காக, ராஜா சர் அண்ணாமலை செட்டியார் இந்த இயக்கத்தைத் தொடங்கினார்.

ராஜா சர் அண்ணாமலை செட்டியார்



"சினிமா இசை நட... அனைவரையும் ஆக்கிரமித்து விட்டது. அப்படி இருந்தும், கர்நாடக இசை, தமிழ் இசை ஆகியவற்றின் தூய்மை சிதையாமல் அப்படியே காப்பாற்றப்பட வேண்டும்.'

"நான் இப்படியெல்லாம் பேசுவதால், ஆளுநர் எப்படி இசையைப் பற்றிப்பேசலாம் என்றுகூடச் சிலர் விமர்சிக்கலாம். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. நான் ஒரு இந்தியக் குடிமகன். தமிழ் இசையின் தூய்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே என் விருப்பம் ஆகும்."

விழாவில் தமிழ் இசைச் சங்கத் தலைவரும், குஜராத் மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியுமான திரு பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார்.



# டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவு நாள்

மறைந்த தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் சமாதியில் நினைவு மண்டபம் கட்டுவதற்கான வடிவமைப்பைத் தமிழக அரசு தேர்ந்தெடுத்துள்ளது. இந்த வடிவமைப்பை, சென்னையைச் சேர்ந்த திரு ரஞ்சன் டானியல், திரு. ரகுராமன் ஆகியோர் தயாரித்துத் தந்துள்ளனர்.

நினைவு மண்டபம் பழம் பெருமைமிக்க திராவிடரின் கட்டடக் கலைச் சிறப்பை மையமாக வைத்து ரூ. 22 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படுகிறது. மூன்று பகுதிகளைக் கொண்டதாக நினைவு மண்டபம் இருக்கும். மண்டபத்தின் கடைசிப் பகுதியில் எம். ஜி. ஆர். அவர்களின் சமாதி இருக்குமாறு வடிவமைக்கப்படுகிறது. சமாதியின் பின்புறத்தில் மரங்களிடையே கடல் தெரியும்படி இருக்கும்.

டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் பிறந்த நாளன்றும் நினைவு நாளன்றும் சமாதியினுள் சூரியஒளி படுமாறு வடிவமைக்கப்படுகிறது.

சமாதியைச் சுற்றிலும் புல்தரை, செடிகொடிகள், மரங்கள் நிறைந்த தோட்டம் அமைக்கப்படும். அருகேயுள்ள அண்ணா சதுக்கத்திற்கும் இதற்கும் எவ்வித இணைப்பும் இருக்காது.



டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் முதலாவது நினைவுநாள் 24-12-88 அன்று அனுசரிக்கப்பட்டது.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர், நாடாளுமன்றத் துணைச் சபாநாயகர் திரு தம்பிதுரை, ஆளுநரின் துணைவியார் திருமதி அக்கம்மா அலெக்சாண்டர், ஆளுநரின் ஆலோசகர்கள் திரு ஜி. வி. இராமகிருஷ்ணா, திரு ஆ. பத்மநாபன், அரசு தலைமைச் செயலாளர் திரு. எம். எம். இராஜேந்திரன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் அன்று காலை 7.30 மணியளவில் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் சமாதிக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அனைவரும் அச்சமாதியில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

பிறகு, மேதகு ஆளுநரும், அவரது துணைவியாரும் டாக்டர் எம். ஜி. ஆர். நினைவு வளாகப் பணியைத் துவக்கி வைக்கும் வகையில் இரண்டு மரக் கன்றுகளை நட்டார்கள்.

மாணவ மாணவிகள் பக்திப் பாடல்களை இசைத்துக் கொண்டிருந்தனர். லேடி சிவசாமி ஐயர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, செயின்ட் ஆண்டனி பள்ளி, ஆதர்ஷ வித்யாலயா, முத்துசேவியா பள்ளி, மணிலால் மேத்தா பள்ளி ஆகியவை இந்நிகழ்ச்சியில் பங்கேற்றன.

சிறிது நேரம் அங்கிருந்த பின்னர், மேதகு ஆளுநர் அவர்கள் டாக்டர் எம். ஜி. ஆர். நினைவகத்தின் வடிவமைப்புப் படத்தைத் திறந்து வைத்தார்.

நினைவகத்தின் வடிவமைப்பும் அதில் இடம் பெறவிருக்கும் பிரிவுகளும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. நுழைவுக்கூடம், கூட்ட வளாகம், நினைவிடம், காலணிகள் விடும் இடம், குடிநீர்க் குடில், தடாகம், நீரோடை, புல்வெளி— என்ற வகையில் வரைபட விளக்கம் இருந்தது.

வடிவமைப்பு: திரு ரஞ்சன் டானியல், திரு ரகுராமன் என்றும், செய்தி மக்கள் தொடர்புத்துறை பொதுப்பணித் துறை, தமிழ்நாடு அரசு என்றும் கீழே எழுதப்பட்டிருந்தது.

மாதிரி வரைபடத்தைத் திறந்து வைத்துவிட்டு மேதகு ஆளுநரும் பிறரும் அங்கிருந்து புறப்பட்டனர். அதன் பின்னர் ஆண்களும் பெண்களுமாகப் பல்லாயிரக் கணக்கானோர், டாக்டர் எம். ஜி. ஆர். சமாதிக்கு வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

—நமது செய்தியாளர்

# திருப்பூரில் ஒரு தியாகதீபம்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத ஊர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பூர்; இந்த ஊரில்தான், 1932 ஜனவரி மாதம் வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற அறப்போராட்டத்தில தாயின் மணிக்கொடியான தேசியக் கொடியைக் காப்பதற்காக, தடியடியைத் துச்சமென மதித்து, உயிர்த் தியாகம் செய்தார் குமாரசாமி என்கிற தீரர்; குண்டாந்தடியால் தாக்கப் பட்டுக் குருதி வெள்ளத்தில் -குற் றுயிராகக் கிடந்தபோதும், பாரதத் தாயின் மணிக்கொடியைத் தரையில் விழாது காத்த குணக் குன்று குமாரசாமி 'திருப்பூர்க் குமரன்' என்ற புகழ்ப் பெயரைப் பெற்று, இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனிஇடம் பெற்றுவிட்டார்.

பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த சென்னிமலையில் நெசவாளர் குடும்பத்தில், நாச்சிமுத்து-கருப்பாயி தம்பதியருக்கு, 1904 அக்டோபர் மாதத்தில் பிறந்தவர் குமாரசாமி. இவருக்கு ஆறு சகோதரர்கள். ஐந்தாவது வயதில் சென்னிமலையில் பள்ளியில் சேர்ந்த குமாரசாமி ஐந்தாவது வகுப்பு வரை தான் படித்தார். அதற்குமேல் அவரைப் படிக்க வைக்க அவரது பெற்றோரின் பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லை.

பள்ளிப்பாளையத்தில் தாய் மாமன் வீட்டில் தங்கி, நெசவுத் தொழிலைக் கற்றுக்கொண்டு, சென்னிமலை திரும்பி, நெசவுத் தொழிலைச் செய்யத் தொடங்கினார். இவரது பத்தொன்பதாவது வயதில் பதினான்கு வயதுப் பெண் இராமாயியை இவருக்கு இவரது பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். நெசவுத் தொழிலில் போதிய வருமானம் இல்லாததால், திருப்பூர் பஞ்சரைக்கும் தொழிற்சாலையில் எடைப் பதிவு எழுத்தர் வேலையில் சேர்ந்தார்.

கள்ளுக்கடை மறியலா, கதராடை உற்பத்தியா, எதிலும் முன்னணியில் நின்ற ஊர் திருப்பூர்; காந்தியடிகள் காட்டிய வழியில், சுதந்திரப் போராட்டத்தில், அந்நகர மக்கள் காட்டிய ஆர்வமும், எழுச்சியும் போற்றத் தக்கவை. தேசபந்து வாலிபர் சங்கம் என்ற பெயரில் ஒரு அமைப்பு திருப்பூரில் இருந்தது. அதில் குமாரசாமியும் உறுப்பினராகச் சேர்ந்து, சுதந்திரப் போராட்டத்தில் தீவிர ஆர்வம் காட்டினார். காந்தியடிகள் கூறிய படி கதராடையே உடுத்தினார், தம் மனைவியையும் கதர்ச் சேலை அணியும்படி செய்தார். தினந்தோறும் ராட்டையில் நூல் நூற்பதைத் தம் கடமைகளுள் ஒன்றாக நினைத்துச் செயல்பட்டார்.



வேதாரணியத்தில் மூதறிஞர் ராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளத் துடித்தார். ஆனால், குடும்பத்தினரும், தொழில் நிலையத்தினரும் தடுக்க, அவரது ஆசை நிறைவேறவில்லை. அதனால் மனம் உடைந்தார். ஒருநாள் முழுவதும் உண்ணாவிரதம் இருந்து, மன ஆறுதல் தேடிக் கொண்டார்.

1932ஆம் ஆண்டு ஜனவரி 4-ஆம் நாள் ஆங்கிலேய வைஸ்ராய் லார்டு வெல்லிங்டன் கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறை தர்பார் காரணமாக அண்ணல் காந்தியடிகள் பம்பாயில் கைது செய்யப்பட்டார். நாடே கொந்தளித்தது. நாடெங்கிலும் அறப்போர் தொடங்கப்பட்டது. திருப்பூரும் களத்தில் இறங்கியது. ஜனவரி 6-ஆம் நாள் திருப்பூரில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடந்தது. ஜனவரி 10 முதல் 'அறப்போர் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

ஜனவரி 10ஆம் நாள், 144 தடை உத்தரவை மீறி, பி.எஸ். சுந்தரம் என்கிற வீரர், ஒன்பது தொண்டர்களுடன் ஒத்துழையாமை ஊர்வலத்தை நடத்தினார். 'வந்தே மாதரம்' முழக்கத்துடன், 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற நாமக்கல் கவிஞரின் பாடலை எழுச்சியுடன் பாடிக் கொண்டே, திருப்பூர் நகர வீதியில் தொண்டர்கள் வீர நடை போட்டனர். அந்தத் தொண்டர்களில் ஒருவராக, குடும்பத்தினர் தடுத்தும், நண்பர்கள் அறிவுரை கூறியும் கேட்காமல், எல்லோருக்கும் முன்னால், முன்னணி வீரராக, மூவர்ணக் கொடியுடன், குமாரசாமியும் வீரநடை போட்டார்.

போலீஸ் படை 'கலைந்து செல்லுங்கள்' என்று எச்சரித்தும், கலைய மறுத்து, ''அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே'' என்று முழங்கினார்கள் விடுதலை வீரர்கள். போலீசார் பாய்ந்து, அவர்களை ஓட ஓடத் துரத்தி அடித்து நொறுக்கினார்கள். கொடியைத் தாங்கி, முன்னால் சென்று கொண்டிருந்த குமாரசாமிக்குச் சரியான அடி. அவரை ஆளுக்கொரு பக்கம் குண்டாந்தடியால் தாக்கினர். மண்டை எலும்பு முறிந்தது. குருதி கொட்டிய நிலையிலும், தாங்கிப் பிடித்த தாயின் மணிக்கொடியை வீரர் குமாரசாமி விடவில்லை. அவரது கரங்களிலிருந்து போலீசாரால் கொடியைப் பறிக்க முடியவில்லை.

பட்ட அடியால், மூளை செயலற்றதும், மாவீரன் குமாரசாமியின் உடல் மண்ணில் சாய்ந்து, குருதியில் தோய்ந்தது. ராமன் நாயர் என்பவர் மார்பில் பலமான அடி விழுந்தது. மார்பு எலும்பு ஒன்று ஒடிந்தது. சுந்தரத்தின் உடலெல்லாம் எலும்பு முறிவு.

சந்துபொந்துகளில் வீசி எறியப்பட்டிருந்த தொண்டர்களை அவர்களது உறவினர்களும், நண்பர்களும் வந்து எடுத்துச் சென்றனர். குமாரசாமி, ராமன் நாயர், சுந்தரம் ஆகிய மூவர் மட்டும் நடுத்தெருவில் குற்றுயிராகக் கிடந்தனர். வெகுநேரத்திற்குப் பிறகு, திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அவர்கள் எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

ஆபத்தான நிலையில் குமாரசாமி நினைவு இழந்தார். அடுத்தநாள் ஜனவரி 11, விடியற்காலை 4 மணிக்கு அரசு மருத்துவமனையில் திருப்பூர்க் குமரன் அமரர் ஆனார். சுந்தரமும், ராமன் நாயரும் நீண்ட சிகிச்சைக்குப் பிறகு, உயிர் பிழைத்தனர்.

சென்னிமலையில் பிறந்து வளர்ந்த குமாரசாமி திருப்பூர்க் குமரனாக மறைந்தார். தாயின் மணிக்கொடியைக் காக்க, இன்னுயிர் ஈந்த குமாரசாமி, திருப்பூரை, இந்திய மக்கள் மறக்க முடியாதபடி செய்துவிட்டார்.

வ. இராசசேகரன்



# இதயத்தை வென்றவர்

– பேரறிஞர் அண்ணா



நேரு நல்ல இதயம்படைத்தவர்; அவரிடமிருந்த அறிவாற்றல் வேறு பலரிடம் இருந்திருக்கிறது. இனியும் இருந்திடலாம்.

ஆனால், அறிவாற்றலுடன் அவருக்கு இதயம் இருந்தது. பாலைவனத்தைச் சோலைவனமாக்க, மனிதனின் கடினமான உழைப்பைக் குறைத்திட உதவும் கருவிகளைத் தொழிற்சாலைகளில் அமைக்க, நாட்டிலே புதுக்கோலம் எழுந்திடச் செய்திட அறிவாற்றல் வேண்டும். அதனைப் பெற்றிருந்த அப்பெருமகன் குழந்தையின் மழலை கேட்டதும் துள்ளும் குழந்தை தயாகிடும் இயல்பினை, ஏழை வதைபடுவதைக் காணும்போது அவன் நிலை எண்ணிக் கண்ணீர் சிந்திடும் இரக்கத்தினை, நல்லிதயத்தைப் பெற்றிருந்தார்.

ஆட்சியிலே அவர் கையாண்ட செயல்முறைகள் குறித்துக் கருத்து மாறுபாடு கொண்டோருங்கூட அவரிடமிருந்த அந்தப் பண்பிற்குப் பாராட்டுத் தெரிவித்திடத் தயங்கியதில்லை.

நிலை உயர-உயர-நெரித்த புருவத்தினராகி விடுவதும், அதிகாரம் குவியக்குவிய 'ஆள் மிரட்டி' ஆகி விடுவதும் உண்டு. அரசியல் உலகில் இத்தகையோர் பலர் உளர். ஆனால் நேருவின் நிலையும், புகழும் அதிகாரமும், ஓங்க, ஓங்க அவருடைய இதயத்திலே கனிவு மிகுதியும் இடம் பெற்றது. கண்கள் கவி பாடலாயின.

என்னிடம் இத்தனை அன்பு காட்டிடும் மக்களுக்கு நான் நிரம்பச் செய்திட வேண்டுமே; முடியவில்லையே, செய்தளித்திருப்பது போதாதே என்ற கவலை கப்பிக் கொள்ளும் நிலை, அவருக்கு அடிக்கடி ஏழ்மையின் கொடுமைகளைக் காணும்போதெல்லாம்.

நிலை உயர, உயர, தலைவர்களுக்கும், மக்களுக்கும் இடையில் ஒரு பயங்கரமாக இடைவெளி அமைந்து விடுவதுண்டு. பண்டித நேரு இதற்கு இடம் கொடுக்கவே இல்லை.

மக்களுடன் கலந்து உலவிட-உரையாட-அவர் உள்ளம் அறிந்திட அவர் எப்போதும் துடித்து வந்தார். மக்களும் அவரைக் காண்பதிலே தனிக்கவர்ச்சி கண்டனர்.

பாராளுமன்றத்திலே முதியவர் நேரு அமர்ந்திருந்தார். திடல்களிலேயோ, இளைஞர் நேரு உலவினார்; உற்சாகமளித்தபடி, உறுதி அளித்தபடி நம்பிக்கையூட்டியபடி.

சிறந்த ஜனநாயகப் பண்பாடு பூத்திட வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறைகாட்டி வந்தார். அவர் ஏற்படுத்திவிட்டுச் சென்றுள்ள அந்தப்பண்பு, பாழ்படாமல் இருந்திடச் செய்திடல் வேண்டும். அனைவருக்கும் அதிலே பொறுப்பும் பங்கும் நிச்சயமாக உண்டு.

நிலை உயர, உயர, தலைவர்கள் எனக்கு இதற்கெல்லாம் நேரம் இல்லை என்று கூறிக்கொள்வதைப் பெருமைக்கு அடையாளமாக்கிக் கொள்வர். பண்டித நேரு அவ்விதம் இருந்ததில்லை. பார் புகழ் நிலை பெற்ற பிறகும், அவருக்கு நல்ல கவிதைகளைப் படிக்க, கேட்க, இசை நுகர, நாடகம் கண்டுகளித்திட, மலைவளம் காண்பதிலே மகிழ்ச்சி பெற, மலர் மணம் நுகர, மழலைகளைக் கேட்டு இன்புற, ஓவியம் கண்டு வியந்திட, நேரம் கிடைத்தது; நினைவு இருந்தது; காரணம், அவர் மூளை பலத்தை மட்டும் காட்டி, மக்களை வியப்படையச் செய்திட்ட தலைவர் அல்ல; தமது இதயத்தைக் காட்டி மக்களின் இதயம் வென்றவர். அதன் காரணமாகவே பல்வேறு அரசியல் கட்சியினரும் அவருடைய நினைவைப் பசுமையாகக் கொண்டுள்ளனர். அவருடைய நோக்கம் நிறைவேற தத்தமக்குச் சரியென்று தோன்றிடும் முறையில் பணியாற்ற விழைகின்றனர்.

(காஞ்சி 30.5.1965)

## எனது நம்பிக்கை

இதம்-கோட்பாடுகள் ஆகியவற்றை நான் மௌடீகமாகப் பின்பற்றுவது இல்லை. ஆனால் மனிதர்களின் உள்ளார்ந்த உணர்வுகளில் தெய்வாம்சத்தில் -அதை மதம் என்று அழைத்தாலும் சரி- இல்லையென்றாலும் சரி-அதிலே எனக்கு நம்பிக்கை உண்டு. ஜீவனுக்கு ஒரு பெருமை இருக்கிறது. அந்தப் பெருமையிலே எனக்கு நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு மனிதனுக்கும் சம வாய்ப்புத் தரவேண்டும் என்ற நெறிமுறையில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதிகமான ஏற்றத் தாழ்வுகள்இல்லாத சமுதாயத்தை நிர்மாணிப்பது கடினமாக இருக்கலாம். ஆனால் அந்தச்சமுதாயத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஏழை மக்களின் ஏழ்மையை நான் எவ்வளவுவெறுக்கிறேனோ,! அந்த அளவுக்குச் செல்வந்தர்களின் பகட்டையும் வெறுக்கிறேன்.

—பண்டித நேரு



# மனித உரிமைகள் நாள்

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 111-வது பிறந்தநாள் விழா மற்றும் மனித உரிமைகள் நாள் விழா தமிழ் நாடு அரசின் சார்பில் 10.12.1988 அன்று காலை சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

திருப்பனந்தாள் திரு. எஸ்.பாலசுப்பிரமணியம் குழுவினரின் நாதஸ்வர இசையுடன் விழாத் தொடங்கியது. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜோர்சிங் சியாம், அவர்கள் விழா வரவேற்புரையாற்றினார்.

செய்தி, சுற்றுலாத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு செ.ராம்தாஸ் இ.ஆ.ப. அவர்கள் விழாத் தலைமை ஏற்றார்.

அவர் தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது:

"சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதி, ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டு கட்டப்பட்ட கோட்டையில் கொடிகட்டிப் பறப்பது, தனி மனித உரிமை என்ற கொள்கை. மனித குலம் இந்த மகோன்னத இலட்சியத்தை அடைய அளவற்ற தியாகங்களைப் புரிந்திருக்கிறது. எனினும் பூரண வெற்றி கிட்டிவிட்டதாகச் சொல்ல முடியாது. இன்றும்கூட உலகத்தின் சில பகுதிகளில், மனித உரிமைகள் அடக்கி ஒடுக்கப்படுகிற அநியாயத்தைக் காண்கிறோம். இந்தக் கொடுமையை எதிர்த்துக் குரல் கொடுப்பதில் இந்தியா உலக அரங்கில் மனித உரிமைகளின் பாதுகாவலனாக உறுதியுடன் பணியாற்றி வருகிறது.

"மனித உரிமைகள் நாளாகத் திகழும் இன்று, மூதறிஞர் இராஜாஜியின் பிறந்தநாளாக விளங்குவதால் இங்கே இரு விழாக்களையும் கொண்டாடுவது மிகவும் பொருத்தம். நம் நாட்டிலாகட்டும், வெளிநாடுகளிலாகட்டும், உலகின் எந்த மூலையிலாகட்டும், மனித உரிமைகள் மீறப்பட்டால் அதை எதிர்த்து முதல் குரல் கொடுப்பவராக மூதறிஞர் இராஜாஜி விளங்கி வந்தார்".

சிறப்புரையாற்றிய மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள், "இராஜாஜி எனது மனசாட்சியின் காவலன்' என்று அண்ணல் காந்தியடிகள் ஒருமுறை குறிப்பிட்டார். மனித உரிமைகளுக்காகப் போராடியவராகவும் மூதறிஞர் இராஜாஜி விளங்கினார் என்றால் அது மிகையாகாது. நாட்டு விடுதலைப் போரில் தியாகத் தழும்புகளை ஏற்றார். சிறந்த காந்தியவாதியாகத் திகழ்ந்தார்" என்று கூறினார்.

புதுக்கோட்டை மன்னர் கல்லூரி முன்னாள் முதல்வர் பேராசிரியர் ஆர்.சுவாமிநாதன் அவர்கள் தமது சிறப்புரையில்,

"தமிழ்நாட்டில் பிறந்த அவர், இந்தியாவுக்கே பெருமை சேர்த்தார். உலகின் ஒளி விளக்குகளில் அவரும் ஒருவர்."

'மாநில முதல்வர், மத்திய அமைச்சர், மாநில ஆளுநர், இந்தியாவின் விடுதலைக்கு முந்திய இந்திய கவர்னர் ஜெனரல் என்று எந்தப் பதவியில் இருந்தாலும், அந்தப் பதவிக்கே சிறப்பு சேர்த்த தலைசிறந்த நிர்வாகி அவர்' என்று கூறினர்.

மத்திய அரசின் நல்வாழ்வுத் துறை இணை அமைச்சர் திருமதி ராஜ்குமாரி பாஜ்பாய் அவர்கள் இராஜாஜி அவர்களின் கீர்த்திகளையும், மனித உரிமைகளுக்காக அரசு ஆற்றிவரும் சிறந்த சேவைகளையும் எடுத்துக் கூறினார்.

தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் ஆற்றிய சிறப்புரையில் தெரிவித்ததாவது:

"மூதறிஞர் இராஜாஜி அரசியல் தலைவர் மட்டுமல்ல, அரசியல் ஞானியும் ஆவார். அவர் பல்வேறு வெளிநாட்டு எழுத்தாளர்களின் நூல்களைத் தமிழில் கொண்டுவந்த சிறந்த எழுத்தாளர். சமூக, அரசியல், பொருளாதார நூல்கள் மட்டுமல்ல; ஆன்மீக ரீதியான நூல்களையும் எளிய தமிழில் எழுதினார். இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் எழுதியவர்.

1937லிருந்து 1939 வரை அவர் ஆட்சி செய்து சிறந்த நிர்வாகி என்ற பெயர் பெற்றார். அவர் பிறப்பித்த முதல் அவசரச் சட்டம் ஆலயப்பிரவேசச் சட்டம்தான். அதேபோல, துணிவுடன் மதுவிலக்கைக் கொண்டு வந்தார். தஞ்சையில் உழவர் போராட்டம் மேலோங்கி இருந்த காலத்தில், உழவனுக்கு உகந்த சட்டத்தைக் கொண்டு வந்தார்.

"இன்று மனித உரிமைகள் நாள். எங்கள் தந்தையர் வெள்ளையனுக்கு விசுவாசமாக இருப்பதே மேல் என்று, அடிமையாக இருப்பதே மேல் என்று, இருந்திலர். எங்கள் தலைமுறை சிறைசென்று போராட, தியாகம் பல ஏற்று சுதந்திரத்தை வாங்கித் தந்துள்ளது.

சர்வாதிகார ஆட்சியில் இல்லாமல் நல்ல கருத்துக்களைச் செவி மடுக்கும் ஜனநாயகச் சூழ்நிலையில் இன்றைய தலைமுறை உள்ளது. அந்த அளவிற்கு இங்கு உரிமைகள் உள்ளன. அதற்குக் காரணமான இந்த நாட்டின் வாழ்வை, வளத்தை ஜனநாயக உரிமைகளை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு வி.டி.வீரப்பன் அவர்கள் நன்றி நவின்றார்.

விழாவின் இறுதியில் கல்லூரி மாணவியரின் இசை நிகழ்ச்சியும் சென்னை இராணிமேரி கல்லூரி மாணவியர் பங்கேற்ற டி.எஸ்.எலியட் எழுதிய '*Murder in the Cathedral*' என்ற நாடகமும் நடைபெற்றன.





# பாரதியார் பல்கலைக் கழகத்தில் பாரதியார் விழா

செய்தி மக்கள் தொடர்புத்துறையும், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகமும் இணைந்து, மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழாவையும், பாரதி கருத்தரங்கத்தையும் டிசம்பர் 13ஆம் நாளன்று கோவை பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் மிகச் சிறப்பாக நடத்தின.

பாரதியார் பல்கலைக் கழகத்தின் விழா அரங்கில் நடைபெற்ற இவ் விழாவிற்குக் கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என். கோவிந்தன் தலைமையேற்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை உதவி இயக்குநர் திரு கு.கோவிந்தராஜூலு அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறைத்தலைவர் டாக்டர் கி.கருணாகரன் கருத்தரங்க அறிமுக உரையை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

"ஒவ்வோராண்டும் பாரதி அறக் கட்டளையின் சார்பில் நாங்கள் கருத்தரங்குகளை நடத்தி வருகிறோம். கடந்த 3 ஆண்டுகளாக நடத்தப்பட்ட கருத்தரங்கச் செய்திகள் காற்றுவாக்கில் போய்விடக் கூடாது என்பதால், அவற்றை "பாரதி ஆய்வுரை' என்ற தலைப்பில் நூல்களாக வெளியிட்டு வருகிறோம்."

'பாரதி உரை நடை' என்னும் ஆய்வுநூலை வெளியிட்டு உரையாற்றிய பாரதியார் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் கொ.ம.மாரிமுத்து தெரிவித்ததாவது:

"பாரதியார், முன்பு வாழ்ந்த காலத்தில் நாட்டுக்கு எந்த அளவுக்குத் தேவைப்பட்டாரோ, அதைவிட அதிகமான அளவுக்கு இந்நாளில் அவர் தேவைப்படுகிறார்.

"தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதற்காக அவர் என்ன பாடுபட்டார் என்பது நமக்குத்தெரியும். இன்று நமது நாட்டில் உள்ள பிரிவினைகள் கோடியிருக்கும்.

"பாரதியின் கவிதைகளில் மட்டுமல்ல, உரைநடையிலும் வீறுகொண்ட உணர்ச்சியைக் காணமுடிகிறது. அவரது எண்ணங்களைப் பரப்பவேண்டும். அவை மக்களுக்குப் பயன்படவேண்டும்."

விழாவுக்கு முன்னிலை வகித்த செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா.கிருஷ்ணபாரதி தமது உரையில் குறிப்பிட்டார்:

"பாரதியாரின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவதன் மூலம் அவரது கருத்துக்களை-சிந்தனைகளை நாம் மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும்.

"அவர் எழுதிய கட்டுரைகளின் எண்ணிக்கை குறைவுதான். அவர் எழுதிய கட்டுரைகள் பல இன்னும் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கின்றன.

"பாரதி ஒப்பற்ற கவிஞர்-உலகு ஒப்புக் கொண்ட கவிஞர்; புதிய சொற்களை உருவாக்கிய கவிஞர். 'பொதுவுடைமை' என்ற சொல்லை உருவாக்கித் தந்தவர் பாரதி.

"விடுதலை என்னும் வார்த்தையை உருவாக்கித் தந்தவர் பாரதி. விடுதலையைச் சில இடத்திலும், சுதந்திரத்தைச் சில இடத்திலும் பயன்படுத்தியிருக்கிறார் பாரதி. சுதந்திரம் என்னும் சொல்லை (Independence, Freedom) என்ற பொருளில் கையாண்டார். விடுதலை என்னும் சொல்லை

## கட்டபொம்மனைக் குறித்து கட்டுரை எழுதியிருக்கிறார் பாரதியார்

மகாகவி பாரதியார் கட்டபொம்மனைப் பற்றி எதுவும் எழுதவில்லையே என்று பலரும் குறைப்பட்டுக் கொண்டது உண்டு. பாரதியார் எட்டயபுரத்தைச் சேர்ந்தவர் என்பதால் தானோ என்னவோ, கட்டபொம்மனைக் குறித்து எதுவும் எழுதாமல் விட்டுவிட்டார் என்று பலர் கருதிவந்தார்கள்.

பாரதியார் நூற்றாண்டு கொண்டாடப்பட்டு வந்த நேரத்தில், நான் டெல்லிக்குச் சென்றிருந்தபோது தற்செயலாக அங்குள்ள ஆவணக் காப்பகத்திற்குச் செல்ல நேர்ந்தது. அங்கே கட்டபொம்மன் பற்றி மிக உணர்ச்சிகரமான கட்டுரை ஒன்றை பாரதியார் எழுதியிருந்ததைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் பிரதியை எடுத்துச் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களிடம் கொடுத்தேன். அதனைக் கண்ணுற்ற அவர், "பாரதி, தான் ஒரு மாபெரும் சிந்தனையாளன் என்பதை நிரூபித்து விட்டான்" என்று சொல்லி மகிழ்ச்சி அடைந்தார்.

[கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் 13.12.88 அன்று நடைபெற்ற பாரதியார் பிறந்த நாள் விழாவில், செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி ஆற்றியஉரையிலிருந்து]

(Liberty) என்னும் பொருளில் கையாண்டார்.''

''பாரதி புகைப்படக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள புகைப்படங்களும், வண்ணத்திலே தீட்டப்பட்ட பாரதியாரின் திருவுருவப்படமும் பாரதியார் பல்கலைக்கழகத்துக்கே அன்பளிப்பாக வழங்கப்படுகின்றன'' என்று செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்கள் அறிவித்தபோது, அரங்கில் கூடியிருந்தோர் அனைவரும் கையொலி எழுப்பி வரவேற்றார்கள்.

தலைமை வகித்த மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என். கோவிந்தன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''பாரதியின் தந்தை, தன் மகன் கணிதப் புலவராக மாறவேண்டும்-பொறியியல் நிபுணராக விளங்க வேண்டும், நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அவர் கவிஞராக விளங்கினார். தன் தந்தையின் கனவைக் கவிதையாகப் பாடினார். 'ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம் செய்வோம்' என்று பாடினார்.''

மகாகவி பாரதியாரின் திருவுருவப்படத்தையும், பாரதியார் புகைப்படக் கண்காட்சியையும் திறந்து வைத்த, தமிழ்வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் தமது உரையில் தெரிவித்தார்:

''நாட்டுப்பற்று, தெய்வப்பற்று, மொழிப்பற்று என்ற மூன்று பற்றுகளைக்கொண்டிருந்தார் பாரதியார். நாட்டுப் பற்றுக் கொள்வது சட்ட விரோதம் என்று அறிவிக்கப்பட்ட காலத்தில், அவர் நாட்டுப் பற்றுக் கொண்டிருந்தார். தான்மட்டும் பற்றுக் கொண்டிருக்காமல், நாட்டு மக்களுக்கும் நாட்டுப்பற்றை ஊட்டினார்.

''பாரதியின் பாடல் பறிமுதல் செய்யப்பட்டது, அந்நாளைய கலெக்டர் ஒருவரால். இன்று பாரதியின் பிறந்த நாள் விழாவுக்குத் தலைமை தாங்குகிறார் ஒரு கலெக்டர். இதற்குப் பெயர்தான் விடுதலை.

''தமிழ் இலக்கியத்தில் தாலாட்டு என்னும் பகுதி சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. பிள்ளைத் தமிழில் தாலாட்டுப் பருவம் என்றே ஒரு பிரிவு உள்ளது. பாரதி தாலாட்டுப் பாடவில்லை. அவர் பள்ளி எழுச்சியைத்தான் பாடினார். அவர் காலத்தில் மக்கள் தூங்கிக் கிடந்தார்கள். அவர்களை மேலும் தூங்கவைக்க விரும்பவில்லை. அதனால்தான் தாலாட்டுப் பாடலை அவர் பாடவில்லை.

''எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் கேட்டவுடனே உணர்வு பெறும்வகையில்பாடினார் பாரதி''

## 1989-ஆம் ஆண்டில் அரசு விடுமுறை நாட்கள்

1989-ஆம் ஆண்டு அரசு விடுமுறை நாட்களாக, கீழ்க்கண்ட நாட்களைத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| சனவரி | 1 | ஞாயிறு | ஆங்கிலப் புத்தாண்டு நாள் |
| .. | 14 | சனி | பொங்கல் திருநாள் |
| .. | 15 | ஞாயிறு | திருவள்ளுவர் நாள் |
| .. | 16 | திங்கள் | உழவர் திருநாள் |
| .. | 26 | வியாழன் | குடியரசு நாள் |
| மார்ச் | 24 | வெள்ளி | நல்ல வெள்ளி |
| ஏப்ரல் | 6 | வியாழன் | தெலுங்குப் புத்தாண்டு நாள் |
| .. | 14 | வெள்ளி | தமிழ்ப் புத்தாண்டு நாள் |
| மே | 1 | திங்கள் | மே நாள் |
| மே | 7 | ஞாயிறு | ரம்சான் |
| ஜூன் | 30 | வெள்ளி | வங்கிக் கணக்குகள் அரையாண்டு முடிப்பு |
| ஜூலை | 14 | வெள்ளி | பக்ரீத் |
| ஆகஸ்ட் | 13 | ஞாயிறு | மொகரம் |
| .. | 15 | செவ்வாய் | விடுதலை நாள் |
| செப்டம்பர் | 4 | திங்கள் | விநாயகர் சதுர்த்தி |
| அக்டோபர் | 2 | திங்கள் | காந்தி ஜெயந்தி |
| .. | 9 | திங்கள் | ஆயுத பூஜை |
| .. | 10 | செவ்வாய் | ஆயுத பூஜை |
| .. | 13 | வெள்ளி | மிலாடி நபி |
| .. | 28 | சனி | தீபாவளி |
| டிசம்பர் | 25 | திங்கள் | கிருஸ்துமஸ் |
| .. | 31 | ஞாயிறு | வங்கிக்கணக்குகள் ஆண்டு முடிப்பு |

குறிப்பு :

பொங்கல், திருவள்ளுவர் நாள், ரம்சான், மொகரம், தீபாவளி, ஆகியவை விடுமுறை நாட்களான சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் வந்தாலும் குறிப்புப் பார்க்க வசதியாக, இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஜூன் 30, டிசம்பர் 31 ஆகிய விடுமுறை நாட்கள் அரசு அலுவலகங்களுக்குப் பொருந்தா.

பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் டாக்டர் நா. செயராமன் நன்றி உரை கூறினார்.

பாரதி பிறந்தநாள் தொடர்பாக நடைபெற்ற கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்க்கு, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி பரிசுகளை வழங்கினார்.

நலிவுற்றோருக்கு நல உதவிகளையும், முன்னாள் இராணுவ வீரர்களுக்கு உதவிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என். கோவிந்தன் வழங்கினார்.

— கோவை செய்தியாளர்





# இந்தியா- இந்திரா



—பித்துக்குளி முருகதாஸ்

இருபதாம் நூற்றாண்டு செய்த பாக்கியம் பலப்பலவாம்
இந்திராவும் நவம்பர், ஆண்டு 1917ல்
திருமகளாய் ஜவஹர்லால் கமலா நேருவுக்கு வந்துதித்தார்
கருவினிலே திருவுடைய, கருத்தறிவு பெற்றுயர்ந்தாள்.

ராவாய் பகலாய் உழைத்தார் நாட்டை ரட்சித்திடவே ஒருமைப் பாட்டால்
சாவாப் புகழோடு வளர்க்க எண்ணி சாதி மதப் பிரிவுகள் சண்டைகள் தவிர்த்தார்
தீவு, தேசங்கள் நாடுகள் சுற்றி நம் தேசத்தின் திருவளரப் பெருமை சேர்த்தார்
காவாது தேய்ந்த அடிமை நாடுகள் கருணை பெற்று சுதந்திர தேசம் ஆயின.

ஆச்சு என்று அமராமல் தான் அண்டை கூட்டுச் சேரா நாடுகள்
மூச்சுள்ளவரை எங்கள் தலைவி மாதா இந்திரா தான் எனச் சொல்லி
பேச்சு முயற்சி வெற்றிக்கென்று பாரத நாட்டில் கூடிப் பெரும் புகழ் சேர்த்தார்
வீச்சுக்கெல்லாம் பயப்படா அன்னை வரவேற்றார் பல மொழி நாட்டார் டெல்லி சேர்ந்தார்.

சேர்த்தார் புகழும் ஒருமை உணர்வும் சிறந்து உலகத்தார் இந்தியா சூழ
பார்த்தார் வளர்ந்த நாட்டார் அசுகையால் பரதநாட்டு விஞ்ஞான வளர்ச்சியை
கார்கடந்து விண் கடந்து வெளி சுற்றி, கல்வி வளர்ச்சிக்கு கதிர் ஒளி வழங்க
நீர்மேல், வானில், நிலத்தில், நீர்க்குள் நிறைந்த சக்தியெல்லாம் மக்கட்காக.

எத்தனை, எத்தனை ஆசைகள் - இந்திரா எண்ணங்களில் சூழ்ந்திருந்தனவோ
அத்தனையும் சாதித்திடவே - இந்தியர் - அன்னையைக் காக்கத் தவறினரே
உத்தமர் மதிக்கும் வித்தகி - இந்திரா - உலக மக்கள் நெஞ்சில் நிறைந்திருந்தாள்
சித்திகள் செய்தனள், சிறப்புறக் கலைகள் சிறந்த பல விஞ்ஞான வெற்றி நிறைத்து வைத்தார்.

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

## தமிழ்நாடு கனிம நிறுவனம்
### சென்னை-600 005.
( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 செண்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 செண்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : வேதியல் கிரேடு சராசரியாக +91% $CaCO_3$ |
| 3. | வெள்ளைக் கல் (குவார்ட்ஸ்) | : +99.8% $SiO_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : +12% $K_2O$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : +99.7% $SiO_2$ |
| 7. | வெப்பந்தாங்கும் களிமண் | : ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : சராசரியாக 14 மடங்கு கனபரிமாண விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்ஸ் | : சராசரியாக $CaCO_3$ +94% |

தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN
DIPR/1174/MS/88/ARIES

தொழிற்சாலை

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

# ஆதிதிராவிடர்—பழங்குடியினர்க்கான நலப்பணிகள் வளர்ச்சித் திட்டங்கள்



நாட்டு வளர்ச்சித் திட்டங்களின் பயன்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்போரைச் சென்று சேரவேண்டும் என்னும் இலட்சியத்தைச் செயல்படுத்தும் வகையில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றி வருகிறது. காலகாலமாக சமூகத்தின் அடித்தளத்தில் இருந்த ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆகியோரின் சமூக பொருளாதார நிலைகளை உயர்த்தும் வகையில் அமைந்த சில திட்டங்களையும், அவை குடியரசுத் தலைவர் ஆட்சியில் நிறைவேற்றப் பட்டு வரும் விபரங்களையும் இங்கே காணலாம்.

### திட்ட ஒதுக்கீடு

நடப்பு 1988-89 ஆம் ஆண்டு, தாழ்த்தப்பட்டவர் - பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு 199 கோடி ரூபாய். மாநிலத்தின் திட்ட ஒதுக்கீட்டில் இது 13.4%. 1987-88ல் திட்டச் செலவு 162 கோடி ரூபாய். இது அப்போதைய மாநிலத் திட்டத் தொகையில் 11.4% ஆகும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் பேண தனியாக ஒரு துறை தலைமைச் செயலகத்தில் அரசால் ஏற்படுத்தப் பட்டுள்ளது. மாநிலம் முழுவதுமுள்ள ஆதிதிராவிடர் பழங்குடியினரின் நலன் - வளர்ச்சி இவற்றுக்கு இந்தத் துறை பொறுப்பு ஏற்கிறது.

### நலத் திட்டங்கள்

ஏழ்மை, சமூகத் தடைகள் போன்றவைகள் இந்த நலிந்த பிரிவினரின் வாழ்க்கையைப் பரிதாபகரமாக ஆக்கியுள்ளன. எனவே இயற்கையாக நலப்பணிகளின் முக்கிய நோக்கம் தாழ்த்தப்பட்ட இனத்தவர், பழங்குடியினருக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதாக இருக்க வேண்டும்

### வீட்டுமனைப் பட்டாக்கள்

தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி பிப்ரவரி '88 முதல் நவம்பர் '88 வரை 20,295 வீட்டுமனைப் பட்டாக்கள் தாழ்த்தப் பட்ட இனத்தவரின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஏப்ரல் '87 முதல் ஜனவரி '88 முடிய முந்தைய 10 மாதங்களில் இவ்வாறு அளிக்கப்பட்டவை 12,634 மனைப் பட்டாக்கள் மட்டுமே.

இதுதவிர தாழ்த்தப்பட்ட இனத்தவர் - பழங்குடியினருக்கு அரசுப் புறம்போக்கு நிலத்திலிருந்து 82,857 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. முந்தைய 10 மாதங்களில் இவ்வாறு வழங்கப்பட்டவை 73,095 வீட்டு மனைப் பட்டாக்கள் ஆகும்.

### வீட்டு வசதித் திட்டங்கள்

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி-அபிவிருத்திக் கழகம், தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு 5,000 வீடுகளையும் பழங்குடியினருக்கு 27 வீடுகளையும் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது. இவற்றுக்கான மொத்தச் செலவு 303.15 இலட்சம் ரூபாயாகும். இந்த வீடுகளின் கட்டுமானப் பணி நடந்தேறி வருகிறது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடந்த 10 மாதங்களில் 49,665 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 6,113 வீடுகளின் கட்டுமானப் பணிகள் வளர்ந்து வருகின்றன. இவற்றுக்கான மொத்தச் செலவு 6012.09 இலட்சம் ரூபாய். ஏப்ரல் '87 முதல் ஜனவரி '88 முடிய உள்ள முந்தைய 10 மாதங்களில் 11,418 வீடுகள் 1220 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டன.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 34,152 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 4,928 வீடுகள் கட்டும் பணி வளர்ந்து வருகிறது. மொத்தச் செலவு 2644.28 இலட்சம் ரூபாய். முந்தைய பத்து மாதங்களில் 1660 இலட்சம் ரூபாய் செலவில் 13,384 வீடுகள் கட்டப்பட்டன.



### மின்வசதி

இந்த 10 மாதக் காலத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தவர், பழங்குடியினரின் 23,428 குடிசைகள் மின்வசதி பெற்றுள்ளன. இதற்கு முந்தைய 10 மாதங்களில் இவ்வாறு மின்வசதி பெற்றவை 11,072 குடிசைகள் ஆகும். 19 தாழ்த்தப்பட்ட இனத்தவர் காலனிகளும் தற்போது மின்வசதி பெற்றுள்ளன. முந்தைய பத்து மாதங்களில் இவ்வாறு மின்வசதி பெற்றவை 16 குடியிருப்புகள் ஆகும்.

'ஒரு குடிசைக்கு ஒரு மின் விளக்கு' என்னும் திட்டம் நாட்கோவால் கட்டப்பட்ட வீடுகளுக்கும், காமராசர் ஆதிதிராவிடர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ்க் கட்டப்பட்ட வீடுகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. மொத்தம் 63,993 நாட்கோ வீடுகளும், 8,000 காமராசர் ஆதிதிராவிடர் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ்க் கட்டப்பட்ட வீடுகளும் இவ்வாறு இத்திட்டத்தால் பயன்பெற்றுள்ளன.

பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு மின்வசதியளிக்க 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### குடிநீர் வசதி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தாழ்த்தப்பட்ட இனத்தவரின் 597 காலனிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை 324.67 இலட்சம் ரூபாய் செலவில் செய்து தந்துள்ளது. முந்தைய 10 மாதங்களில் 261.60 இலட்சம் ரூபாய் செலவில் 404 காலனிகள் குடிநீர் வசதி பெற்றன.

### 'ஜீவன்தாரா' : பாசனக் கிணறுகள்

தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றின் பணியில் ஒரு பகுதியாக, தாழ்த்தப்பட்ட பழங்குடி விவசாயிகள் பயனடைய பாசனக் கிணறுகள் அமைக்கும் ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள தாழ்த்தப்பட்டவர் பழங்குடியினர் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு இலவசமாக பாசனக் கிணறுகள் அமைத்துத் தரும் இந்தத் திட்டம் ''ஜீவன்தாரா'' எனப்படும். குழும கிணறுகளும், ஒரு எக்டேர் ஆயக்கட்டு அளவு படைத்த தனியார் கிணறுகளும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். இத்துடன் பம்புசெட்டுகள் கிணறுகளுக்கு அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2450 இலட்சம் ரூபாய் செலவு மதிப்பீட்டில் நடப்பாண்டில் 5,000 பாசனக் கிணறுகள் ஏற்படுத்தும் பணி நடந்து வருகிறது. இவற்றில் 610 கிணறுகள் ஏற்கெனவே தோண்டி முடிக்கப்பட்டன. எஞ்சியவை '88 டிசம்பர் இறுதிக்குள் வெட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் பிரபலமான திட்டமாகவும் பெரும் பயன் அளிப்பதாகவும் விளங்கி வருகிறது.

### சிறப்பு நலத் திட்டங்கள்

1988 மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் சிறப்புத் திட்டங்கள் சில அறிவிக்கப்பட்டன.

1988-89ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் 2600 இலட்சம் ரூபாய் கீழ்வரும் சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

### வீட்டுவசதி

காமராசர் ஆதிதிராவிடர் வீட்டுவசதித் திட்டம் என அழைக்கப்படும் இத்திட்டத்துக்காக 800 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வகுப்பு உணர்வு தலைதூக்கும் கிராமங்களில் 8000 தீப்பிடிக்காத வீடுகள், ஒவ்வொன்றும் 10,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் 3960 வீடுகள் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. எஞ்சியவை பல்வேறு நிலைகளில் உள்ளன. இவையும் 1989 ஜனவரி இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

### இணைப்புச் சாலைகள்

தாழ்த்தப்பட்ட இனத்தவரின் காலனிகளுக்கு இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தும் இந்த சிறப்புத் திட்டத்திற்கு 900 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 80 தாழ்த்தப்பட்ட இனத்தாரின் காலனிகள் பயன் பெறும் வண்ணம் மொத்தம் 351.23 கிலோ மீட்டர் நீளமுள்ள 122 சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே 88-89இல் 60 தாழ்த்தப்பட்டவர்கள் காலனிகளுக்கு இணைப்புச் சலைகள் அமைக்கும் பொதுத் திட்டத்திலிருந்து இச்சிறப்புத் திட்டம் வேறுபட்டதாகும்.

### குடிநீர் வசதி

740 தாழ்த்தப்பட்ட இனத்தாரின் காலனிகளுக்கு குடிநீர் வசதி அளிக்க இச்சிறப்புத் திட்டத்தில் கீழ் 600 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 160 காலனிகளில் இப்பணி நிறைவேற்றப்பட்டுவிட்டது. மற்றவற்றில் பணி நடந்தேறி வருகிறது.

### மகளிர் நலம்

கிராமத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட இனத்து மகளிரின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து 300 இலட்சம் ரூபாய் செலவில் 25,000 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலவசத் தையல் இயந்திரங்கள் வழங்குதல், குழந்தை உணவு தயாரிக்கும் கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்துதல், சாக்கட்டி தயாரிப்புச் சங்கள் ஏற்படுத்துதல், சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் ஏற்படுத்துதல், கம்ப்யூட்டர் பயிற்சி வழங்குதல் போன்றவை இந்தச் சிறப்புத் திட்டங்களில் ஒரு சில ஆகும்.

### பொருளாதார வளர்ச்சிக்கு நடவடிக்கைகள்

நலிவுற்ற இனத்தவர் எதிர்நோக்க வேண்டிய எந்தப் பிரச்சினைக்கும் அவர்களின் பின்தங்கிய பொருளாதாரச் சூழ்நிலையே ஏறத்தாழக் காரணமாகிறது. எனவே குடியரசுத் தலைவர் ஆட்சி, கடந்த 10 மாதங்களில் தாழ்த்தப்பட்ட இந்த பழங்குடியினரின் பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கைக்கு முன்னுரிமை தந்துள்ளது.

### சிறப்புக் கூட்டுத் திட்டம்

இந்தச் சிறப்புக் கூட்டுத் திட்டத்தின் கீழ் பிப்ரவரி '88 முதல் நவம்பர் '88 வரை 10 மாதக் காலத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தவரின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக 13,695 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அரசின் பல்வேறு துறைகளின் மூலம் இவை நிறைவேற்றப்பட்டுள்ளன.

சுமார் 1,86,190 குடும்பங்கள் இத்திட்டங்களால் பயன்பெற்றுள்ளன. இதற்கு முந்தைய 10 மாதக் காலத்தில் 7,349 இலட்சம் ரூபாய் செலவில் 1,80,000 குடும்பங்கள் பலன் அடைந்தன.

### சிறப்பு மத்திய உதவி

தாழ்த்தப்பட்ட இனத்தவர் 72,942 பேருக்கு வருமானம் அளிக்கும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக சிறப்பு மத்திய உதவியின் கீழ் 2,170.26 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் வணிக வங்கிகள் மூலம் 1,000 இலட்சம் ரூபாய் அளவுக்கு கடன் வழங்கப்படுகிறது. ஏப்ரல் '87 முதல் ஜனவரி '88 முடிய இவ்வாறு ஒதுக்கப்பட்ட மத்திய உதவித் தொகை 761.49 இலட்சம் ரூபாய் ஆகும். பயனடைந்தவர்கள் 37,024 தாழ்த்தப்பட்ட இனத்தவர் ஆவர்.

### வளர்ச்சித் திட்டங்கள்

பிப்ரவரி '88 முதல் நவம்பர் '88 வரை நிறைவேற்றப்பட்ட பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளில் ஒரு சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தாழ்த்தப்பட்ட இனத்தவர் 37,548 பேருக்கு 349.60 இலட்சம் ரூபாய் செலவில் கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஏப்ரல் '87 முதல் ஜனவரி '88 முடிய இவ்வாறு வழங்கப்பட்டவர்கள் 20,155 பேர்; செலவு 167.89 இலட்சம் ரூபாய்.



பாசனக் கிணறுகள் தோண்டுவதற்காக 852 பேருக்கு 8.67 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. 1440 உழவு மாடுகள் வாங்குவதற்காக 18 இலட்சம் ரூபாய் மானியம் அளிக்கப்பட்டது. ஏப்ரல் '87 முதல் ஜனவரி '88 வரை பயனடைந்த தாழ்த்தப்பட்ட இனத்தவர் 663பேர் ஆகும்.

தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் பொருட்களை மானியச் சலுகையில் வழங்குவதற்காக 58 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. முந்திய 10 மாதங்களில் இவ்வாறு வழங்கப்பட்ட தொகை 42.86 இலட்சம் ரூபாய் ஆகும்.

131.71 இலட்சம் ரூபாய் செலவில் 3,200 செம்மறி ஆட்டு யூனிட்டுகள் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. முந்திய 10 மாதங்களில் இவ்வாறுவழங்கப்பட்ட யூனிட்டுகளின் எண்ணிக்கை 1,200; செலவுத் தொகை 54.37 இலட்சம் ரூபாய்.

சுயவேலை வாய்ப்புத் திட்டங்களுக்காக 20,000 பேர் பலன் பெறும்வகையில் 573 இலட்சம் ரூபாய் ஒதுக்கிடப்பட்டது. 87-88இல் இவ்வாறு உதவி பெற்றோர் 7255 பேராகும்; செலவு தொகை 243 இலட்சம் ரூபாயாகும்.

தாழ்த்தப்பட்ட இன மகளிருக்கு 1500 கிடாரிக் கன்றுகள் 29.92 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது மேற்கொள்ளப்பட்ட புதிய திட்டமாகும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நயினார்கோயில், முவதூர் ஆகிய இடங்களில் விசைத்தறி அமைக்க 45 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

சிறுவணிகம் புரிய உதவிகள் வகையில் 475 தாழ்த்தப்பட்ட இனத்தவர்க்கு 4.75 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இன்னும் 3 மாதங்களில் 650 பேர் பலனடைய 6.50 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். ஏப்ரல் '87 முதல் ஜனவரி '88 முடிய இவ்வாறு உதவி பெற்றோர் 40 பேர்.

21.75 இலட்சம் ரூபாய் கருவிகள் சாதனங்கள் வாங்க 3094 கைவினைஞர்களுக்காக ஒதுக்கப்பட்டது. ஏப்ரல் '87 முதல் ஜனவரி '88 முடிய இவ்வகை உதவி 7.10 இலட்சம் ரூபாய் செலவில் 600 பேருக்கு வழங்கப்பட்டது.

காலணி செய்யும் 1225 கைவினைஞர்களுக்கும் மற்றவர்களுக்கும் இரும்பாலான சிறு பெட்டிக் கடைகள் 101.48 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன. முந்திய 10 மாதங்களில் இவ்வாறு வழங்கப்பட்டவர்கள் 1000 பேர்; வழங்கப்பட்ட தொகை 85 இலட்சம் ரூபாய்.

70 மகளிர் காலணி தயாரிப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 698.10 இலட்சம் ரூபாய் செலவில் 6000 தாழ்த்தப்பட்ட மகளிர் பலன் பெறும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு முந்திய 10 மாதங்களில் செலவிடப்பட்ட தொகை 23.14 இலட்சம் ரூபாய் ஆகும்.

தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் 705 தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக 14.11 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

### பழங்குடியினருக்கான திட்டங்கள்

பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் பழங்குடியினரின் பொருளாதார நிலை மேம்பட 1988-89ஆம் ஆண்டுக்கு 1535 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை 736.57 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 4476 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இதே திட்டத்தின் கீழ் 1987-88ஆம் நிதியாண்டில் 898 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. குறிப்பாக ஏப்ரல் '87 முதல் ஜனவரி '88 முடிய 10 மாதங்களில் செலவிடப்பட்ட தொகை 465 இலட்சம் ரூபாய் ஆகும். பிப்ரவரி '88 முதல் நவம்பர் '88 வரை கடந்த 10 மாதங்களில் பழங்குடியினரின் நலத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் சில பின்வருமாறு:

> தோட்ட வளர்ப்புக்காக 3200 பழங்குடியினர் குடும்பங்களுக்கு 84.16 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ஏப்ரல் '87 முதல் ஜனவரி '88 வரை பயன்பெற்ற குடும்பங்கள் 2709; செலவிடப்பட்ட தொகை 34 இலட்சம் ரூபாய் ஆகும்.
>
> கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 790 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடையும் வண்ணம் 56.35 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. முந்திய 10 மாதங்களில் 31 இலட்சம் ரூபாய் செலவில் 302 குடும்பங்கள் பயனடைந்தன.
>
> பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 390 பழங்குடியினர் பயனடைந்தனர். இத்திட்டத்திற்கு 81 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. முந்திய 10 மாத காலத்தில் 428 குடும்பங்கள் பயன்பெறும் வண்ணம் 28 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.
>
> பழங்குடியினர் பகுதிகளில் பெரிய அளவில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 105.88 இலட்சம் ரூபாய் மூலதனப் பங்கு மானியமாகவும், வட்டி மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

தன்னை அடக்கிப் பழகிக்கொண்டவன் புறத்தேயுள்ள எதற்கும் வசப்படமாட்டான். அவனுக்கு அதன்பின் அடிமைத்தனம் இல்லை. அவனது மனம் விடுதலை பெற்று விட்டது. அத்தகையவனே உலகத்தில் நன்றாக வாழும் தகுதி பெற்றவன்.

—சுவாமி விவேகானந்தர்



காடு வளர்ப்புத் திட்டங்களுக்காகவும் வேறு சில திட்டங்களுக்காகவும் 89.50இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் கிராமங்கள் பயன்பெற 19.98 இலட்சம் ரூபாய் செலவில் 6 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் தேனீ வளர்த்தல் போன்ற கிராமத் தொழில்கள் செய்வதற்காக 41.02 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. முந்திய 10 மாதங்களில் இவ்வாறு செலவிடப்பட்ட தொகை 15.39 இலட்சம் ரூபாய் ஆகும்.

முதுகுடியினர் நலத்திட்டங்களுக்காக [illegible]:71 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

உதகமண்டலத்தில் பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் பழங்குடியினர் பண்பாட்டை விளக்கும் கண்காட்சி ஒன்றை 200 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. முதல் தவணைத் தொகையாக 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியகம் அமைக்கும்பணி 5 ஆண்டுகளில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### கல்வி

நலிவுற்ற பிரிவினரின் நலத்துக்கும், வளத்துக்கும் கல்வியே அடிப்படை. அவரது குழந்தைகள் கல்விச் சிறப்போடு அறிவு மேம்பாடு பெற்று விளங்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து ஆதிராவிடர்-பழங்குடியினர் நலத்துறை அவர்களுக்கு ஒதுக்கும் தொகையில் 50% மேல் கல்வித் திட்டங்களுக்காகச் செலவிடுகிறது. ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்ககம் 1160 பள்ளிகளை தாழ்த்தப்பட்ட இனத்தவர். பழங்குடியினர் நலத்திற்காக நடத்துகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவரின் மொத்த எண்ணிக்கை 2.43 இலட்சம் ஆகும். இவர்களுக்கு இலவச உணவு, உறையுள் வசதிகளைச் செய்துதர அரசு 788 விடுதிகளை நடத்தி வருகிறது. சுமார் 53000 மாணவ மாணவிகள் இந்த விடுதிகளில் தங்கிப் படிக்கிறார்கள். 5.7 இலட்சத்திற்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட இன, பழங்குடி மாணவர்கள் பள்ளி இறுதி தேர்வுக்கு முந்திய கல்விக்காக உதவித்தொகை பெறுகிறார்கள். மேற்படிப்புக்காக 72000 பேர் உதவித்தொகை பெறுகிறார்கள்.

> 1988-89இல் இந்தக் கல்வி நிலையங்களில் அதிகமான மாணவர்கள் கற்கவும் அவர்களின் கல்வித்தரம் சிறப்படையவும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### பள்ளிகள்

இரு தொடக்கப்பள்ளிகள் நடுத்தரப் பள்ளிகளாகவும் இரு நடுத்தரப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், இரு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், 4 மகளிர் உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. இவ்வாறு உயர்த்துவதற்கு ஆன செலவு 35.67 இலட்சம் ரூபாய் ஆகும்.

> பழங்குடியினர் குழந்தையினருக்காக இலவச உணவு, இடம் இவற்றை அளிக்க 10 தங்கிப் படிக்கும் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றால் 500 பழங்குடி மாணவர்கள் பயனடைகிறார்கள். பழங்குடி மாணவர்கள் தங்கிப்பயிலும் 5 தொடக்கப்பள்ளிகள் 127.55 இலட்சம் ரூபாய் செலவில் நடுத்தரப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.
>
> ஆதிதிராவிடர் பழங்குடியினர் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கரும்பலகைகள் வழக்கமாக இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ்வாண்டு முதல் பொதுப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கும், பழங்குடி மாணவர்களுக்கும் இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இதற்கு ஆகும் செலவு 173.2 இலட்சம் ரூபாய். பயன்பெறும் மாணவர் 10 இலட்சம்பேர்.
>
> 8 உயர்நிலைப்பள்ளிகளின் கட்டிடப் பணிகளுக்காக 87.91 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
>
> தாழ்த்தப்பட்ட இனத்தவர் நலப் பள்ளிகள் இன்னும் சிறப்பாகச் செயல்பட மேலும் 75 இடைநிலை ஆசிரியர்களையும், 50 பட்டதாரி ஆசிரியர்களையும் நியமிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இந்தக் கூடுதல் நியமனத்திற்காக ஆண்டுக்கு 18.14 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.
>
> சிதம்பரத்தில் 10.79 இலட்சம் ரூபாய் செலவில் தொழிற்பயிற்சிப் பள்ளி ஒன்றை தாழ்த்தப்பட்ட இன, பழங்குடி மக்களுக்காகவே அரசு திறந்துள்ளது.

### விடுதிகள்

கடந்த 10 மாதங்களில், ஏறத்தாழ 1000 ஆதிதிராவிட பழங்குடி மாணவருக்கு இலவச உணவு, உறையுள் வசதிகள் தரும் வகையில் 15 புதிய விடுதிகள் 17.21 இலட்சம ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன.



மாணவர்களுக்காக 6 விடுதிகளும் மாணவியர்க்காக 11 விடுதிகளும் கட்டும்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றுக்கான மொத்தச் செலவு 264.84 இலட்சம் ரூபாய்களாகும்.

கூடுதலாக 1000 மாணவர்கள் தங்கும்வண்ணம் ஏற்கனவே உள்ள 58 விடுதிகளில் 9.2 இலட்சம் ரூபாய் செலவில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அரசு நடத்தும் இந்த விடுதிகளைத் தவிர ஆதி திராவிடர்களுக்கு 40 விடுதிகளும், பழங்குடியினருக்கு 4 விடுதிகளும் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இவற்றில் தங்கிப் பயிலும் மாணவர்க்கான அரசின் மானியம் மாதம் 40 ரூபாயிலிருந்து 70 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தக் கூடுதல் செலவின் மதிப்பு ஆண்டுக்கு 7.56 இலட்சம் ரூபாயாகும்.

**உதவித் தொகைகள்**

1988-89ஆம் ஆண்டில் உதவித் தொகைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை 821.87 இலட்சம் ரூபாய். நடப்பு ஆண்டில் விடுதியில் தங்கிப் பயிலும் பள்ளியிறுதித் தேர்வுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவித்தொகை விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

| கல்வி | சென்னை நகரம் | கிராமப்பகுதி |
|---|---|---|
| 1. தொழிற்கல்வி | ரூ.75லிருந்துரூ.100 | ரூ. 70-லிருந்துரூ.95- |
| 2. மேல்நிலைப்பள்ளி, கலை, அறிவியல், சட்டம்-பட்டப் படிப்பு | ரூ.70-லிருந்துரூ.95- | ரூ.55-லிருந்து ரூ.80- |
| 3. தொழில்நுட்பக் கல்வி | ரூ.60லிருந்துரூ.85- | ரூ.50லிருந்து ரூ.75- |

இவ்வாறு உதவித் தொகை உயர்த்தப்பட்டதால் ஆகும் கூடுதல் செலவு ஆண்டுக்கு 16.25 இலட்சம் ரூபாய் ஆகும்.

ஆதிதிராவிடர் பழங்குடி மாணவர்கள் தொழிற்கல்வி, பட்ட மேற்படிப்பு போன்ற உயர்கல்வி பெற கடனுதவி வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையோடு விடுதிக் கட்டணம் போன்ற கூடுதல் செலவைச் சமாளிக்க வட்டியில்லாக் கடன் வசதி அளிக்கப்படுகிறது. 20 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் இந்தக் கடன்தொகையின் விகிதங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தொழிற்படிப்பு (மருத்துவம்-பொறியியல் போன்றவை) | ரூ. 970-லிருந்து ரூ. 1500- (ஆண்டுக்கு) |
| பட்ட மேற்படிப்பு | ரூ.900-லிருந்து ரூ. 1,500- (ஆண்டுக்கு) |
| பட்டப்படிப்பு | ரூ.500-லிருந்து ரூ. 750- (ஆண்டுக்கு) |
| எம்.எஸ்சி (வேளாண்மை) | ரூ.1150லிருந்து ரூ. 1500- (ஆண்டுக்கு) |

தாழ்த்தப்பட்ட இன, பழங்குடி மரபைச் சார்ந்த சட்டப் பட்டதாரிகளுக்கு உதவும் பொருட்டு அரசு ஒரு புதிய பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி அனுபவமிக்க புகழ்வாய்ந்த வழக்கறிஞரிடம் பயிற்சியும், பட்டறிவும், தேர்ந்தெடுத்த துறையில் திறமையும்பெற இந்த மாணவர்கள் பயிற்சியாளர்களாக இருப்பார்கள். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 30 பேர் பயிற்சி பெறுவார்கள். பயிற்சிக் காலத்தின்போது ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் 500 ரூபாயும், பயிற்சி அளிப்போருக்கு சன்மானமாக ஆண்டுக்கு 5,000 ரூபாயும் வழங்கப்படும்.

இதற்காகும் செலவு ஆண்டுக்கு 1.81 இலட்சம் ரூபாய்.

ஐ.ஏ.எஸ்., வங்கிகள் போன்றவற்றுக்கான போட்டித் தேர்வுகளில் பங்கு பெறும் 2620 மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இந்தப் பயிற்சித் திட்டங்களுக்காக 8.96 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது.



**எதிர்காலத்திற்கான திட்டம்**

தமிழ்நாட்டில் 20 இலட்சம் ஆதிதிராவிடர் பழங்குடியினர் குடும்பங்கள் உள்ளன. இவர்கள் அனைவரும் வறுமைக்கோட்டைக் கடக்க உதவுவதும், அடிப்படை வசதிகளான வீட்டுவசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், மின்சாரம், நலவாழ்வு, சத்துணவு, கல்வி வசதிகள் ஆகியவற்றைப் பெற்று மகிழ்ச்சியாக வாழச் செய்வதும் அரசின் குறிக்கோள் ஆகும். இந்தக் குறிக்கோளை அடுத்துவரும் சில ஆண்டுகளுக்குள் அடையும் வகையில், மாநிலத்தில் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



# களக்காடு உயிரினம் சரணாலயம்



தடிமரம், மென்மரம் மற்றும் பல வனப் பொருட்களையும், பல மறைமுக நன்மைகளையும் அளிப்பதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள மரம், செடி, கொடி முதலியவற்றைக் கொண்ட நிலத்தை "காடுகள்" என்று குறிப்பிடுகிறோம். குழந்தைப் பருவத்தில் தேவையான தொட்டில் முதல், மனிதன் மரணம் அடைந்தால் தேவைப்படும் பெட்டி வரை பல பயன் தரும் பொருள்களைக் காடுகள் அளித்திடுகின்றன. நமக்கு நன்மையளித்திடும் நல்லபல தாவரங்கள், விலங்கினங்கள் போன்றவற்றையும், மண், நீர், காற்று போன்ற இயற்கைச் செல்வங்களை சுத்தமாக வைத்திருக்கவும் காடுகள் உதவுகின்றன. நம் நாட்டில் மொத்த நிலப் பரப்பில் சுமார் 22.7% காடுகள் தான் உள்ளன. ஆனால் ரஷ்யாவில் 40.6 சதவீதமும் கனடாவில் 44.4 சதவீதமும், ஜப்பானில் 69.1 சதவீதமும் காடுகள் உள்ளன. இதிலிருந்து நம் நாட்டின் வனவளம் மிகவும் குறைவு என்பது தெளிவு.

தமிழ் நாட்டில் மொத்த நிலப்பரப்பு 1,30,069 சதுர கிலோ மீட்டர். ஆனால் காடுகள் 20,910 சதுர கிலோ மீட்டர். அதாவது சுமார் 16 சதவீதம் தான். இதில் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பசுமை மாறாக்காடுகளும், ஈரப் பசையுள்ள இலையுதிர்க் காடுகளும், உலர்ந்த இலையுதிர்க் காடுகளும், புதர்க்காடுகளும் காணப்படுகின்றன. இக்காடுகளிலிருந்து பல ஆறுகள் உற்பத்தியாகின்றன. மனித சமுதாயத்திற்குத் தேவையான பல வகை மரங்களும், வனப் பொருள்களும் இக்காடுகளிலிருந்து கிடைக்கின்றன. தேனீக்கள், பல விதப் பூச்சிகள் முதல் பெரிய யானை வரை இக்காடுகளில் வசிக்கின்றன.

**வனங்களும், வன விலங்குகளும்**

தாவரமும், விலங்கும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புள்ளவை. ஒன்றின்றி மற்றொன்றில்லை. ஒரு காலத்தில் மத்தியகிழக்கு நாடுகளில் அடர்ந்த காடுகளும், அரிய பெரிய விலங்குகளும் இருந்தன. ஆனால் காடுகள் அழிக்கப்பட்டதால் விலங்குகளும் அழிந்து, இன்று அது வறண்ட பாலைவனமாகக் காட்சியளிக்கிறது.

மண் வளமும், நீர் வளமும் மிகவும் அவசியம் இவை நன்கு உள்ள இடங்களில் நல்ல தாவரம் காணப்படும். இத்தாவரத்தை நம்பி விலங்குகள் இருக்கும். புற்கள் அதிகம் உள்ள இடங்களில் மான்களும், மூங்கில், பிரம்பு, புற்கள் மற்றும் மரங்கள் உள்ள இடங்களில் யானையும், அடர்த்தியான காடுகளில் புலியும் வாழும்.

**வன விலங்குகளின் பயன்**

நமது இதிகாசங்களிலும், புராணங்களிலும் மான், குரங்கு, பருந்து, யானை, முதலை, மீன், பன்றி போன்ற பல மிருகங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். நாம் யானை, சிங்கம், புலி, மயில், நந்தி, நாகம் போன்ற பல விலங்குகளை கடவுளுடன் இணைத்து வழிபட்டு வருகிறோம். புலியின் பராக்கிரமம், சிங்கத்தின் ஏறு நடை, யானையின் பலம், மான்களின் மருட்சி, கிளியின் வண்ணம், குயிலின் குரல், நரிகளின் தந்திரம் போன்ற பல விலங்குகளின் குணங்களைப் பற்றி பல கதைகள் படித்துள்ளோம். கவிஞர் பலர் கவிதைகள் பல எழுதியுள்ளனர். இது தவிர

விலங்குப் பொருட்களான தந்தம், தோல், மாமிசம் பற்கள், தேன், அரக்கு, பட்டு போன்றவைகளின் விற்பனை மூலமும், விலங்குகளைக் காணவரும் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மூலமும், விலங்குகளின் விற்பனை மூலமும், நமக்கு வருவாய் கிடைக்கிறது. விவசாயத்திற்கு கேடு விளைவிக்கும் பலவித பூச்சிகளையும், வண்டுகளையும் உணவாகக் கொண்ட பறவைகள் பல உள்ளன.

உதாரணமாக 'கருநீல ஈப்பிடிப்பான்' என்ற பறவை தனது நிறைக்கு சமமான எடையுள்ள பூச்சிகளை ஒரு நாளில் தின்ன முடியும். 'கருமைனு' குடும்பம் ஒருநாளில் 350 கம்பளிப் புழுக்களையும், வண்டுகளையும், நத்தைகளையும் கொன்று ஒழிக்கிறது. மற்ற பறவைகள் தவிர்க்கும் மயிரடர்ந்த 100 கம்பளிப் புழுக்களை குயில் ஒரு மணி நேரத்தில் தின்று விடும். ஆந்தை போன்ற ஊன் உண்ணும் பறவைகளும் நம்மால் கண்டவுடன் அடிக்கப்படும் பாம்புகளும் விவசாயத்திற்கு பெரும் கேடு விளைவிக்கும் சுண்டெலிகள், வயலெலிகள் போன்றவற்றை வேட்டையாடி அழிக்கின்றன.

### வேட்டையின் காரணம்

பலர் பெருமைக்காக வேட்டையாடினார்கள். ஆனால் வேறு சிலர் விலங்குப் பொருட்களை விற்பனை செய்வதற்காக வேட்டையாடினர். மென்மயிர்த் தோலுக்காக எலிகளும், நீர் நாய்களும் தோலுக்காக பல்வகை மான்களும், கஸ்தூரிக்காக கஸ்தூரி மான்களும், கொம்பிற்காக காண்டா மிருகங்களும், தந்தத்திற்காக ஆண் யானைகளும், மருந்திற்காக முதலைகளும், கருமந்திகளும் வேட்டையாடப் பட்டன.

### தேசியப் பூங்காக்களும், சரணாலயங்களும்

இயற்கை வனங்களையும், அதிலுள்ள இயற்கைச் செல்வங்களையும் காப்பதற்கென நம்நாடு



கொண்டைப் பருந்து — களக்காடு

முழுவதும் பல இடங்களில் 1972ம் வருடத்திய இந்திய வன உயிரினப் பாதுகாப்புச் சட்டத்தின் படி. தேசியப் பூங்காக்களும், சரணாலயங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

### தட்பவெப்ப நிலையும், மண்ணும்

இச்சரணாலயப் பகுதி, மலைகளையும், மலைமடிப்புகளையும், பள்ளத்தாக்குகளையும் கொண்டது. 100 மீட்டர் சமவெளியிலிருந்து 1675 மீட்டர் உயரமுள்ள மலைகளைக் கொண்டது. உயரத்திற்கேற்றாற் போல வெப்பநிலை 24° செ. முதல் 44° செ. வரையிலும் மழையளவு 350 மி. மீ. முதல் 3000 மி. மீ. வரையிலும் வேறுபடுகிறது. ஜூன் முதல் ஆகஸ்ட் வரை தென்மேற்குத் திசையிலிருந்து அதிக வேகத்துடன் காற்று வீசும். பாறைகளுடன் கலந்த கடின மண் முதல் ஆழமான நல்ல மண் வரை வேறுபடுகிறது.

களக்காடு காடுகளிலிருந்து பச்சையாறு, நம்பியாறு, கொடுமுடியாறு, நெட்டேரிக்கால் ஆகிய





ஆறுகள் கிழக்கு நோக்கியும்; கீழ் மணிமுத்தாறு, குளிராட்டியாறு, குசுங்கிலியாறு போன்ற ஆறுகள் மேற்கு நோக்கியும் பாய்கின்றன.

ஆங்காங்கு உள்ள மலைகளின் உயரம், மழையின் அளவு, மண்ணின் தன்மை ஆகியவற்றிற்கேற்ப பல்வகைக் காடுகள் காணப்படுகின்றன.

### விலங்கினங்கள்

விலங்குகள் நம்மைத் தேடி வராது. நாம் தான் விலங்குகளைத் தேடிச் செல்ல வேண்டும். எனவே சரணாலயத்திற்குள் சென்று விலங்குகள் ஏதும் பார்க்கவில்லையென்று வருத்தப்படக் கூடாது. பார்வையாளர்கட்கு அதிர்ஷ்டம் இருந்தால்தான் விலங்கினங்களை காண இயலும். இவ்விலங்கினங்களும் காடுகளின் தன்மையைப் பொறுத்துதான் வசிக்கும். களக்காடு சரணாலயத்தில் கீழ்க்கண்ட விலங்குகள் உள்ளன.

பசுமை மாறாக்காடுகளின் உயர்ந்த மரங்களின் உச்சியில் ஒய்யாரமாக வாழும் சிங்கவால் குரங்கு; இலையுதிர்க் காடுகளில் கிளைக்குக் கிளை தாவி உங்களை உற்சாகப்படுத்தும் கருமந்திக் கூட்டம்.

### இயற்கைத் தடங்கள்

இத்தகைய இனிய இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்திட இயற்கைத் தடங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன, இத்தடங்கள் யாவும் பழைய காலத்திய ஒற்றையடிப் பாதைகளைப் பின்பற்றி, தீரம் மிக்கவர்களும், திறன் படைத்தவர்களும், வெவ்வேறு வயதினரும் நடந்து செல்வதற்கென்று அமைக்கப்பட்டுள்ளன. அவரவர்கள் திறனுக்கும், சக்திக்கும் ஏற்ப இத்தடங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து இப்பாதைகள் மூலம் நடக்கலாம். கீழ்க்கண்ட அறிவுரைகளைத் தெரிந்து கொண்டு, அவற்றின்படி நடந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

### எச்சரிக்கை அறிவுரைகள்

1. நடந்து செல்லுவதற்கு முன் வானிலை அறிக்கை பற்றி தெரிந்து கொள்ளுங்கள். மழை வரும் போலிருந்தால் நடக்க வேண்டாம்.
2. உங்களது சக்திக்கும், திறனுக்கும் ஏற்றாற் போல் தடத்தைத் தேர்ந்தெடுங்கள்.
3. எப்போதும் வனத்துறையின் வழிகாட்டியை அழைத்துச் செல்லுங்கள்.
4. வெள்ளை உடையில் செல்லாதீர்கள்.
5. உங்களது உணவையும், தண்ணீரையும் எப்போதும் எடுத்துச் செல்லுங்கள்.



தலையணை, துயிலகம்



சிங்க வால் குரங்கு (களக்காடு)



## முண்டன்துறை வன விலங்கு உய்விடம்

| | | |
|---|---|---|
| இடம் | : | திருநெல்வேலி மாவட்டம் |
| பரப்பளவு | : | 567 ச.கி. மீட்டர். |
| வனவகை | : | வறண்ட இலையுதிர் காடுகள். |
| காணக்கிடைக்கக் கூடிய விலங்குகள்: | | புலி, குரங்குகள், குரங்குகள் (Langurs) ஸ்லெண்டர் லோரிஸ் (Slender loris) ஸ்லாத் பேர், கடமான் வகை, புள்ளிமான் வகை காட்டு நாய் முதலியவைகள், பறவைகளைப் பார்ப்பதற்குச் சிறந்த பகுதி. |
| மழை அளவு | : | 1200 மி. மீ. |
| அருகிலுள்ள இரயில் நிலையம் | : | அம்பாசமுத்திரம்-45 கி.மீ. |
| சிறந்த பருவம் | : | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |

6. புகை பிடிக்காதீர்கள். தீக் கொளுத்தாதீர்கள்.
7. அமைதியாகச் செல்லவும். சப்தம் போடக் கூடாது. உங்கள் சப்தம் விலங்குகளைத் தொந்திரவு செய்யும்.
8. சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருங்கள்.
9. வனத்திலிருந்து செடிகளையோ, விலங்குப் பொருள்களையோ சேகரிக்கக் கூடாது.
10. வழியில் உள்ள பெயர்ப் பலகைகளையும் அடையாளப் பலகைகளையும் பார்த்து நடந்து கொள்ளவும்.
11. எந்த விலங்காயினும் அதன் அருகே செல்லாதீர்கள்.
12. கரடியைப் பார்த்தால் அதன் அருகில் செல்லாதீர்கள். அது ஆபத்தில் முடியும்.
13. தனி ஆண் யானையைக் கண்டால் எச்சரிக்கையாயிருங்கள். அது உங்களைத் தாக்கும்.
14. யானை துரத்தினால் பள்ளம் நோக்கி ஓடுங்கள். யானைகள் மேட்டில் வேகமாக ஏறும் பள்ளங்களில் ஓட அதற்கு பயம்.
15. எந்த விலங்குகட்கும் தீனி போடாதீர்கள்.





# கார்ட்டூன் கலை



கார்ட்டூனிஸ்ட் ராஜு

கார்ட்டூன் கலை என்பது நம் இந்திய நாட்டின் பழம்பெரும் கலை என்பது ஆராய்ச்சியின் மூலம் கண்டறிந்த உண்மை.

கார்ட்டூன் என்பது மேலை நாட்டுக் கலை என்றே நம்மில் பெரும்பாலானோர் கருதுகிறோம். கார்ட்டூன் நம் நாட்டின் மிகப் பழம்பெருங் கலை, அது எப்படி என்று பலர் நினைப்பர். இதற்குப் பல உதாரணங்களைக் காட்டலாம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு 'மணிமேகலை' என்ற நூலில் காணப்படும் "புனையா ஓவியம்" என்பது நமது நாட்டில் கார்ட்டூன் கலை பழங்காலத்திலேயே இருந்ததென்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.

கார்ட்டூன் : இதனை ஸ்டிக் டிராயிங் (Stick Drawings) என்று கூறலாம். ஸ்டிக் டிராயிங் என்பதே கார்ட்டூன். கார்ட்டூன் முழு உருவங்களை முழு வடிவில் வரைவதற்கு முதன் முதலில் ஒருவர் கற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அவர்கள் ஸ்டிக் டிராயிங் மூலம் கற்றுக் கொண்டால்தான், கார்ட்டூனில் பலவித அசைவுகளை (actions) வரைவதற்கு மிகச் சுலபமாகப் பழக முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

நான் ஒரு தமிழ் ஆசிரியரிடம் கார்ட்டூன் என்ற ஆங்கில வார்த்தையை மொழி பெயர்க்கும்படி வினவியதற்கு அவர், புனையா ஓவியம் என்றும், கேலிச் சித்திரம், கருத்துப்படம், சிரிப்புப் படம் என்றும் பலவிதமாக மொழிபெயர்த்துக் கூறினார். ஆனால் எந்தச் சொல்லுமே தற்சமயம் நம் மக்களுக்குப் புரியவைக்க உதவாது. ஆகையால் உலக மக்கள் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரே வார்த்தையான (cartoon) கார்ட்டூன் என்பதையே பயன்படுத்திப் பல விவரங்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

நம் ஓவியக்கலை ஆரம்பமானது கார்ட்டூன் வடிவில்தான். அக்கால குகை மனிதன் முதன் முதலில் வரையத் தொடங்கியதும் கார்ட்டூன் வடிவில்தான். அதாவது புனையா ஓவியம் என்ற முறைப்படி வரைந்துள்ளான் என்று தெரிய வருகிறது. அடுத்து, புனையா ஓவியத்திலிருந்துதான் படிப்படியாக மனிதன் நல்லமுறையில் சிறந்த ஓவியங்களை வரையப் பழகினான் என்பது சரித்திரத்தின் மூலம் தெரிய வருகிறது. அப்படிச் சிறந்த முறையில் ஓவியங்களையும், சிற்பங்களையும் மனிதன் படைக்கும் பொழுது அவன் தன் கற்பனா சக்தியின் மூலம் ஒரு சில உருவங்களை மிகைப்படுத்தியும் (exagerated) வேடிக்கையான முறையிலும் உருவாக்கியுள்ளான். அப்படிப்பட்ட ஒரு சில உருவங்களை நாம் ஏன் கார்ட்டூன் உருவங்கள் என்று சொல்லக்கூடாது?

உதாரணமாக, நம் பழம்பெருப் கோவில்களில் உள்ள கோபுரங்களில் செதுக்கப்பட்டுள்ள ஒரு சில சிற்பங்களைக் கவனித்தால் அதில் பூத கணங்கள், யாளி என்ற கார்ட்டூன் வடிவ உருவங்களை வேடிக்கையான கற்பனை உருவங்களாக அக்காலத்துச் சிற்பிகள் செதுக்கியுள்ளது தெரியும். இதைத் தவிர தமிழ் நாட்டிலுள்ள பழம்பெரும் கோவில்களிலுள்ள வாகனங்களில் (அதாவது திருவிழாக்களில் கடவுள்களைப் பல்வேறுபட்ட உருவ அமைப்புள்ள வாகனங்களின் மேல் அமர வைத்தல்) அனைத்தையும் உற்று நோக்கும் போது அவ்வாகனங்களின் கண் அமைப்புகளையும், உருவங்களின் அமைப்புகளையும் மிகைப்படுத்தி கார்ட்டூன் வடிவங்களில் உருவாக்கித் தந்துள்ளனர் என்று தெரிய வருகிறது. மற்றும் திருவிழாக் காலங்களில் இறைவன் பவனிவரும் தேர்களில் யாளி, குதிரை போன்ற உருவங்களைக் கார்ட்டூன் வடிவில் தான் உருவாக்கியிருக்கிறார்கள். இம்மாதிரி கார்ட்டூன் உருவங்கள் பொது மக்களைக் கவர்ந்திழுக்க முடியும் என்பதை அக்கால ஓவியர்களும், சிற்பிகளும் உணர்ந்திருக்கிறார்கள்.

பல கோவில்களில் பலவித கார்ட்டூனைச் சித்திரங்களாகவும், சிற்பங்களாகவும் வடிவமைத்திருப்பதை இன்றும் நாம் காணலாம். யானை, சிம்மம், ரிஷபம், மயில், பூதம், ஆடு, சூரன் போன்ற வாகனங்களில் கண்கள் அமைப்பை மிகைப்படுத்திப் பொதுமக்களைக் கவரும்படி செய்திருக்கிறார்கள். மாமல்லபுரத்திலும் ஒரு சில சிற்பங்களைக் கார்ட்டூன் வடிவில் செதுக்கி, மக்களின் மனத்தைக் கவரும் வகையில் செய்துள்ளனர்.

சிங்க உடலும் மனிதத் தலையும் இணைத்துச் சிற்பமாக்கிக் கார்ட்டூன் வடிவங்களைத் தந்துள்ளனர். மண்டபங்களின் கீழ்ப்பகுதிச் சுவர்களிலும் ஒரே விதமான பூத கணங்களின் கால், கை அசைவுகளைக் கார்ட்டூன் வடிவில் மிக அழகாகச் சிற்பிகள் செதுக்கியுள்ளனர். அவற்றினை நாம் சாதாரண சிற்பங்கள் என்ற வகையில்தான் கண்டு மகிழ்ந்து வருகிறோம். ஆனால் என் ஆராய்ச்சியின்படி அம்மாதிரி ஒரு சில சிற்பங்களைக் கார்ட்டூன் உருவங்கள் என்று ஏன் பிரித்துக்கூறக்

கார்ட்டூன் படங்களை முதன்முதலில் பத்திரிகை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஆல்பெர்ட் லங்காண்டர். டெய்லி எக்ஸ்பிரஸ் என்ற செய்திப் பத்திரிகையில் அவரது கார்ட்டூன்கள் இடம் பெற்றன. தமிழகத்தைப் பொறுத்த அளவில் கார்ட்டூன் படங்களைப் பத்திரிகை உலகில் பவனி வரச் செய்த பெருமை மகாகவி பாரதியாருக்கு உண்டு. கார்ட்டூன் கலை வளர்ந்த வரலாறு இங்கே விவரிக்கப்படுகிறது.

கூடாது? எனத் தோன்றுகிறது. மேலும் மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மஹாலிலுள்ள தூண்களில் சிங்கமும், யானையும் ஒன்றுசேர்ந்த ஒருவிதமான யாளியின் உருவங்களை இப்பொழுதும் காணலாம்.

அவை கற்பனையில் அக்காலச் சிற்பிகள் செதுக்கிய கார்ட்டூன் சிற்பங்கள்தான் என்று இப்பொழுது தெரிய வருகிறது. அக்காலச் செப்புத் தகடுகளில் இடம்பெற்ற இம்மாதிரியான கார்டடூன் வடிவ யாளிகளின் உருவங்களை இன்றும் சிற்பிகள், முன்னோர்கள் கடைப்பிடித்த முறையில் செய்து வருகிறார்கள்.

உதாரணமாக சென்னையிலுள்ள திருமயிலை கபாலீஸ்வரர் ஆலயததிலுள்ள அருள்மிகு சனி பகவான் சன்னிதானத்தில் முகப்பில் இரண்டு கார்ட்டூன் யாளிகள் (செப்புத் தகடுகளில்) உள்ளன. இப்படியாக நம் நாட்டில் கார்ட்டூன் கலைச் சித்திரங்கள் மற்றும் சிற்பங்களின் வடிவங்களைப் பழம்பெரும் கோவில்களில் உருவாக்கித் தந்துள்ளனர் என்று அறிய முடிகிறது. நம் நாட்டுச் சித்திரக் கலையும், சிற்பக் கலையும் கோவில்கள், மண்டபங்கள் போன்றவைகளின் மூலமாகத்தான் நம்நாட்டுக் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்துள்ளன. பொதுவாக நமது பழம்பெரும் மன்னர்களின் மேற்பார்வையில்தான் இம்மாதிரியான கலைகள் நன்கு வளர்க்கப்பட்டு வந்துள்ளன என்று வரலாற்றுச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. அக்காலச் சித்திர, சிற்ப சாஸ்திரங்களில்கூட கார்ட்டூன் வடிவங்களை அமைக்கும் முறை இருந்திருக்கின்றது என்பது இப்பொழுது நமக்குத் தெளிவாகிறது.

கார்ட்டூன் வரைவது மிக எளிது. அதைக் கற்றுக் கொள்வதும் மிக எளிது. அக்காலத்திலிருந்து இக்காலம் வரை, பெரும்பாலும் தமிழ்நாட்டில் பூசணிக்காய் மேல கண், மூக்கு, வாய், காது போன்றவைகளை, வரையத் தெரியாதவர்கள்கூட, அடுப்புக் கரி, மஞ்சள், குங்குமம், காகிதத்தாள் போன்ற அன்றாட உபயோகத்திலிருக்கும் பொருட்களை வைத்துத் தமக்குத் தெரிந்த வகையில் பல உருவங்களை அவர்களே தமக்குத் தோன்றும் வகையில் வரைந்து தங்கள் வீட்டின் முன் (கண்திருஷ்டி படாமல் இருக்க) இன்றும் பயன்படுத்தி வருகிறார்கள். மேலும் சிறிய பானைகளைப் பயன்படுத்தி அதில், மனிதனின் முகத்தைக் கார்ட்டூன் வடிவில் வரைந்து, அதற்கு மூங்கில்களையும், வைக்கோல்களையும் உபயோகப்படுத்தி 'சோளக்கொல்லை பொம்மை, (அல்லது)' சோளக்காட்டுபொம்மை,



உருவாக்கித் தோட்டங்கள், தோப்புகள் மற்றும் வயல்வெளிகளில் நிறுத்தி வைப்பர். இப்பொம்மையைப் பார்த்துப் பறவையினம் அப்பகுதிக்கு வராமல் இருக்கும். இதுபோன்ற கார்ட்டூன் படங்கள், சிறுவர் முதல் பெரியவர்கள் வரை எவர் வேண்டுமானாலும் வெகு விரைவில் உருவாக்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டு. ஆனால் கார்ட்டூன் வடிவங்களை உருவாக்கும் பலவித முறைகளை தமது கற்பனைத் திறத்திற்கேற்ப எவர் எவர் வெளிக் கொணர்கிறார்களோ அவர்களை கார்ட்டூன் கலைஞர்கள் (cartoonist ) என்று கூறலாம்.

இம்மாதிரி பழங்கால கார்ட்டூன் கலை, சிறிது, சிறிதாக வளர்ந்து இப்பொழுது பத்திரிகைகளின் மூலம் இன்னும் அதிகமாக வளர்ச்சியடையத் தொடங்கி விட்டது. இன்னமும் ஒரு சிலர் கார்ட்டூன் கலை, மேல்நாட்டுக் கலை என்று கூறி வருகிறார்கள். அது மிகவும் தவறு. நான் முதலில் கூறியபடி நம்நாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நம் நாட்டுப் பாணியில் கார்ட்டூன் வடிவ உருவங்கள் கோவில்களிலும், மண்டபங்களிலும், கல்தூண்களிலும், பாறைகளிலும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நாம் அதனை நன்கு வளர்க்காமல் சாதாரண சித்திர-சிற்பக் கலை என்று எண்ணி பழமை சாஸ்திர முறைப்படி இன்னமும் பணியாற்றி வருகிறோம்.

ஆனால் மேலை நாடுகளில் (அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மன், ஜப்பான் போன்ற நாடுகளில்) மிகவும் நல்ல முறையில் கல்வித் துறை, செய்தித் துறை, திரைப் படத்துறை, குழந்தை நலத் துறை, விளம்பரத் துறை போன்ற எல்லாத் துறைகளிலும் காரட்டூன் வடிவங்களைப் புகுத்தி, அவர்கள் தங்கள் நாட்டு முறைப்படிப் புதுமையான முறையில் நாளுக்கு நாள் வளர்த்து கொண்டே இருக்கிறார்கள். நாம் இப்பொழுதுதான் கார்ட்டூன் கலையை நம் நாட்டின் முறைப்படி ஆரம்ப நிலையிலிருந்து படிப்படியாக வளர்க்கத் தொடங்கியிருக்கிறோம். இக்கலை இன்னும் சிறப்பாக வளர்வதற்கு அதி வேகமாகச் செயல்பட்டால்தான் முடியும். இந்தக் கார்ட்டூன் கலையை வேக





மாக வளர்க்க ஆரம்பித்தால்தான் நாம் புதுமையான முறைகளில் படைப்புகளைப் படைத்து மேல் நாட்டவரையும் வியக்கும் வண்ணம் உருவாக்க முடியும்.

மேலை நாடுகளில் சிறு குழந்தைகளுக்குப் பாடங்களை முதன் முதலில் கார்ட்டூன் வடிவங்களைத்தான் கற்றுக் கொடுக்கிறார்கள். மேலும் பலவிதமான அனிமேஷன் கார்ட்டூன் திரைப்படங்களையும், கார்ட்டூன் அனிமேஷன் திரைப் படங்களையும் புதுமையான முறையில் அவர்களது அரசாங்கத்தின் உதவியுடன் பெருமளவில் தயாரிக்கிறார்கள். அதுபோல் நம் நாட்டிலும் இம்மாதிரி கார்ட்டூன் படங்கள் வெளிவரத் துவங்கியுள்ளன. ஆனால் நம் வளர்ச்சி இன்னும் அதிகம் தேவை. ஆகையால் இந்தப் பழமையான கார்ட்டூன் கலையை நாம் வளர்க்க முன் வர வேண்டும். ஓர் ஓவியரோ, ஒரு சிற்பியோ கார்ட்டூன் வடிவங்களை உருவாக்கினால் அந்த கார்ட்டூன் வடிவங்கள் மிகவும் நேர்த்தியாகவும், பொது மக்களைக் கவரக் கூடியதாகவும் அமையும். சாதாரண ஓவியக் கலையைப் பயிலாதவர்கள்கூட கார்ட்டூன் உருவங்களை உருவாக்கலாம். ஆனால் அந்தக் கார்ட்டூன் உருவங்களில் அவ்வளவு கவர்ச்சி இருக்காது. கார்ட்டூன்களுக்கும் ஒரு அனாட்டமி (anatomy) உண்டு. அதன்படி, கார்ட்டூன் உருவங்களை ஓவியப் பயிற்சி பெற்றவர்கள் வரைந்தால் கார்ட்டூன் 'அனாட்டமி' மிக நல்ல முறையில் அமையும்.

நம் நாட்டில் கல்வித் துறை, திரைப்படத் துறை, குடும்பநலத் துறை, விளம்பரத் துறை போன்ற பலவிதத் துறைகளில் கார்ட்டூன் அவசியம் தேவைப்படுகிறது. புதுமையான முறையில் கார்ட்டூன் உருவங்களைக் கற்பனை முறையில் உருவாக்கினால் சிறுவர் முதல் முதியவர்கள் வரை விரும்பிப் பார்த்து ரசிக்கும்படி செய்யலாம். நவீன உலகத்திற்குக் கார்ட்டூன் கலையின் வளர்ச்சி மிகவும் அவசியம்.

**கார்ட்டூன் வகைகள்**

பத்திரிகைகளில் துணுக்குகளுக்கான கார்ட்டூன்கள் 'பார்த்திருப்பீர்கள். இதனை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை வருமாறு:

1. துணுக்குகளை எழுதி அதற்கு ஏற்றபடி கார்ட்டூன் படங்கள் வரைவது,

2. கார்ட்டூன் படங்களை வரைந்து அதில் துணுக்குகளை எழுத்தின் மூலம் எழுதுவது,

3. எந்தவிதமான வார்த்தைகளும் இல்லாமல் கார்ட்டூனிலேயே மக்களைச் சிரிக்க வைப்பது, அதாவது படிப்படியாக வரைந்து காட்டிச் சிரிக்க வைக்கலாம். மற்றும் பத்திரிகைகளில் சிறுவர்கள் கதைகளுக்கு மனிதன், மிருகம், பறவை,



மரம், செடி, புதிர் போன்ற பல விதங்களில் கார்ட்டூன் வடிவம் உருவாக்கிக் குழந்தைகளை மகிழ்விக்கலாம். மேலும் படக்கதைகளை கார்ட்டூன் வடிவில் உருவாக்கி அதாவது காமிக்ஸ் (comics) மூலம் குழந்தைகளை மகிழ்விக்கலாம்.

அடுத்து தினசரிப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள் போன்றவற்றில் அரசியல் கார்ட்டூன்களை வரைந்து மக்களுக்கு அரசியல் விவரங்களை மிக எளிமையான முறையில் உணர்த்தலாம்.

**கல்வித் துறைகளில் கார்ட்டூன் எப்படி உதவி புரியும்?**

பள்ளிகளில் கல்வி பயில நுழையும் குழந்தைகளுக்கு வேடிக்கையான முறையில் கற்றுக் கொடுத்தால்தான் குழந்தைகள் கல்வியின் மீது அதிக நாட்டம் ஏற்படும். அதன்படி எல்.கே.ஜி., யு.கே.ஜி. படிக்கும் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்களையும், கார்ட்டூன் உருவங்களாக்கிக் குழந்தைகளுக்கு மகிழ்ச்சி ஏற்படும் நிலையை ஏற்படுத்தலாம். பின்னர் படிப்படியாக தமிழ், கணிதம், சரித்திரம், புவியியல், விஞ்ஞானம் போன்ற பாடங்களிலும் கார்ட்டூனைப் புகுத்தலாம்.

நம்மில் ஒரு சிலருக்கு இது ஆச்சரியமாக இருக்கும். ஆனால் இதனை நடைமுறைப்படுத்தி விட்டால் வெற்றி அடைவது நிச்சயம். இதனை நிறைவேற்றும் முதல் படிக்கல்லாக இந்த ஆண்டு தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவன ஒத்துழைப்புடன் முதல் வகுப்புக் கணித நூலை கார்ட்டூன் வடிவில் வெளியிட்டுள்ளார்கள். அம்முயற்சிக்குக் கல்வித் துறையில் நல்ல வரவேற்பும் பாராட்டும் கிடைத்துள்ளன.

இதுபோன்றே எல்லாப் பாடங்களிலும் கார்ட்டூன் உருவங்களைப் புகுத்திக் குழந்தைகளின் கல்வித் தரத்தை நவீனமுறையில் மேல் நாட்டவரைப்போல் உயர்த்தலாம்.

குழந்தைகளுக்கான கார்ட்டூன் திரைப்படங்களை இந்திய நாட்டு முறைப்படி தயாரித்தல், தொலைக் காட்சி போன்றவைகளிலும் கார்ட்டூன் உருவங்களை உபயோகப் படுத்தலாம்.

கார்ட்டூன் முகமூடிகளை மாணவர்கள் அணிந்து கொண்டு பலவித நீதி நாடகங்களை நடத்தி, மாணவர்களை நல்லமுறையில் வாழச் செய்யலாம். இப்படி கல்வித் துறைகளில் பலவிதத்தில் கார்ட்டூன் கலை மிகவும் உதவியாக இருக்கும்.

ஒரு சிலர் கார்ட்டூன் கலை வெறும் குழந்தைகளுக்கு மட்டும்தான் உதவும் என்று தவறாக எண்ணுகிறார்கள். பெரியவர்களுக்கும் மிகவும் உதவியாக இருக்கிறது இக் கார்ட்டூன் கலை. குடும்ப நலத் திட்டம், விளம்பரத்துறை போன்ற வெவ்வேறு துறைகளில் கார்ட்டூன் கவர்ச்சி தரக்கூடிய கலையாக விளங்குகிறது. பழங்காலப் பொம்மலாட்டங்கள், பொய்க்கால்குதிரை, புலிவேடம் போன்ற பொழுது போக்கு விளையாட்டுகளுக்கும் கார்ட்டூன் வடிவங்கள்தான் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆகவே, கார்ட்டூன் கலைஎன்பது மிகப் பழமையான கலை; அடுத்து இது நம் நாட்டில் பழமையான கலை. இக்கலை நம் நாட்டின் முன்னேற்றத்திற்கும் கலை-கலாச்சார முறைக்கும் மிகவும் ஏற்றது ஆகும். நம் நாட்டிலுள்ள எல்லாத்துறைகளுக்கும் உதவக் கூடிய முன்னோடியான ஒரு கலை. இனி வரும் காலச் சமுதாயத்தைப் பெருமளவுக்கு முன்னேற்றும் உன்னதக் கலை.

# படமும் செய்தியும்



சென்னை மாநகர ஷெரீபாக நியமிக்கப்பட்ட திரு முகமது அப்துல் அலி அவர்களுக்கு மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 21.12.88 அன்று ஆளுநர் மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.



பரங்கிமலை புகைவண்டி நிலையம் அருகே வாகன போக்குவரத்துக்கென அமைக்கப்பட உள்ள சுரங்கப் பாதைக்கு அரசு தலைமைச் செயலர் திரு எம்.எம். இராஜேந்திரன் அவர்கள் தலைமையில், மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 10.12.88 அன்று அடிக்கல் நாட்டினார்.

பெல்ஜியம் நாட்டின் தூதர் திரு பாரன் ஏ.டி. வைரன் அவர்கள் 16.12.88 அன்று தலைமைச் செயலகத்தில் அரசு தலைமைச் செயலாளர் திரு எம். எம். இராஜேந்திரன் அவர்களைச் சந்தித்துப் பேசினார்.





பிரதமரின் ஆர்மேனிய நிலநடுக்க நிவாரண நிதிக்கு மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர்அவர்களிடம், 21.12.88 அன்று காஞ்சி மடத்தின் சார்பில் ரு. 90,000 வழங்கப்பட்டது.

பல்கலைக் கழகத் துணைவேந்தர்களின் கூட்டம் 19.12.88 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன் அவர்களும், அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம். இராஜேந்திரன் அவர்களும் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
127072
சென்னை-600 008.



தமிழ்நாடு சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் குழுவின் 16வது கூட்டம் 15.12.88 அன்று தலைமைச் செயலகத்தில் மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.





# பிணி தீர்க்க உதவும் அகத்திக் கீரை

டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

தொன்றுதொட்டு, மூதாதையர் காலத்திலிருந்து சித்த மருத்துவத்தில் பச்சிலைகளுக்கு அதிக முக்கியத்துவம் இருந்து வருகிறது. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அவை பற்றிக் காணப்படுகின்றன. பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும் சத்துணவாகப் பயன்படுவது மட்டுமின்றி, பிணி தீர்க்கும் மருந்தாகவும் உபயோகப்படுத்தப்படுகிறது. கீரைகளும் பச்சிலை வகையைச் சார்ந்தவைதாம். அவற்றில் குறிப்பிடத்தக்கது அகத்திக் கீரை ஆகும்.

அகத்தியில் காணப்படும் இலை, காய், பூ, பட்டை, வேர் ஆகிய அனைத்தும் மருத்துவத்தில் கையாளப்படுகின்றன.

## தீரும் வியாதி

பித்தம், உஷ்ணம், தோல் நோய் சொறி-சிரங்கு, அரிப்பு, குடல் ரணம், தொண்டையில் ரணம், இரத்தப் பித்தம், இரத்தக் கொதிப்பு, உட்காங்கை, மலச்சிக்கல், ஜலதோஷம் மூளைக்கோளாறு, கண் கோளாறு, ஐம்பொறி நோய், அடிபட்ட வீக்கம், தலைவலி, சிறுநீர் நோய் ஆகியவைபோம்.

## செய்முறை-உபயோகம்-விளக்கம்

அகத்திக் கீரையை சமையலில் பயன்படுத்துகிறார்கள். பொதுவாக இக்கீரையை வேக வைத்துத் துவட்டலாகச் செய்து உண்பதுண்டு; கடைந்தும் சாப்பிடுவதுண்டு. மற்றும் கீரையுடன் தேங்காய் துருவல் சேர்த்துத் தாளிதம் செய்து சாப்பிடலாம். தவிர, பருப்புடன் சேர்த்து வேகவைத்துச் சாப்பிடுவதுண்டு. இதனைக் குழம்பாகவும் செய்து சாப்பிடலாம். மிளகு நீர் செய்தும் உண்ணலாம்.

தாய்ப் பால் இல்லாத பெண்கள் இக்கீரையைச் சாப்பிட்டு வரலாம். மற்றும் மூளை சம்பந்தமான நோய்கள் உள்ள பிணியாளர்களும் அகத்திக் கீரையைச் சாப்பிடும் பட்சம் நல்ல பயன் பெறலாம்.

## வாய் ரணம் நீங்க

கீரையை எடுத்துச் சுத்தம் பார்த்துச் சமையலில் தேங்காய் துருவல், மிளகு இவைகளைச் சேர்த்துப் பொரியல் செய்துவைத்துக்கொள்ளவும். சூடான சாதத்தில் இப்பொரியலைச் சேர்த்துச் சாப்பிட வேண்டும். தொடர்ந்து மூன்று நாட்கள் சாப்பிட வாய் ரணம் நீங்கும்.

## அடிபட்ட வீக்கம், தலைவலி நீங்க

அடிபட்ட வீக்கங்களுக்கு அகத்திக்கீரையை அரைத்துப் பிறகு அதைச் சூடு பண்ணிப் பற்றாகப் போட்டால் குணம் காணலாம். மற்றும் இலையினுடைய சாற்றை நெற்றியில் தடவி ஆவி பிடிக்கும் பட்சம் தலைவலி நீங்கும்.

## அகத்திக் கீரையிலிருந்து சூரணம் செய்யும் முறை

தீரும் வியாதி: மார்புவலி, வாந்தி, வயிற்றுவலி

தேவையான, அகத்திக் கீரையை கொண்டுவந்து, சுத்தம் செய்து வெயிலில் காய வைக்க வேண்டும். நன்றாகக் காய்ந்து முறுவலாக இருக்கும் பொழுது, எடுத்து, அம்மியில் வைத்து இலேசாக அரைத்து, அதை மெல்லிய துணியில் வடிகட்டி எடுத்தால், இக்கீரையினுடைய சூரணம் ஆகும். இச்சூரணத்தை இரண்டு கிராம் அளவில் காலை-மாலை இருவேளையும் சாப்பிட்டு இளஞ்சூடான தண்ணீர் அருந்த மார்புவலி நீங்கும். மேற்படி சூரணத்தை வாயில் போட்டு, சுடு தண்ணீர் அருந்த, வாந்தி நிற்கும்; வயிற்றுவலி மறையும் (இருவேளை)

## மலச்சிக்கல் போக்குவதற்கு

மலச்சிக்கலினால் அவதிப்படுகிறவர்கள் இக்கீரையைச் சமையல் மூலம் பயன்படுத்தி நன்மை பெறலாம்.

## நீர்க்கோவை

அகத்திக்கீரை, நாம் உண்ணும் உணவு நன்றாக ஜீரணிக்க உதவுகிறது. நீர்க்கோவை காரணமாகத் தோன்றும் தும்மல் போன்ற பிணிகளுக்கு அகத்திக்கீரையின் சாற்றையும், அகத்திக்கீரைப்பூவின் சாற்றையும் சம அளவு கலந்து மூக்கில் இரண்டு சொட்டு விட்டு வந்தால் பிணி நீங்கும்.

பொதுவாக, நீர்க்கோவைக்கு அகத்தி இலைச் சாற்றுடன் சம அளவு தேன் கலந்து அருந்த நல்ல குணம் காணலாம்.

வெயிலில் சுற்றி அலைபவர்கள், தேயிலை, காப்பி போன்ற பானங்களைப் பருகிப் பித்தம் அதிகம் உள்ளவர்கள், மலச்சிக்கல் உள்ளோர், அகத்திக் கீரையை வாரம் ஒருமுறை சாப்பிடுவது நல்லது.

அகத்திக் கீரையை இரண்டு வாரத்திற்கு ஒரு தரம் சாப்பிடலாம். பொரியல் செய்து சாப்பிடல் உத்தமம். ஆனால், அடிக்கடி உண்ணும் பட்சத்தில் வாய்வு உண்டாகும். வாயுக் கோளாறு உள்ளவர்கள் இக்கீரையைச் சாப்பிடாமல் இருப்பது உத்தமம்.

மூளைக் கோளாறு உள்ளவர்கள் உண்ணும் தருணம் மூளைக் கோளாறு நீங்கி நலம் கிடைக்கும். மேலும், பத்தியத்தை முறிக்க வல்லது. எனவே மருந்துண்ணும் காலங்களிலோ, பத்தியம் இருக்கும் போதோ அகத்திக் கீரையைச் சாப்பிடக்கூடாது என்று மூதாதையர்கள் சொல்வதுண்டு. மருத்துவ சாஸ்திரங்களும் கூறுகிறது. மேலும் இரவில் இக்கீரையைச் சாப்பிடக் கூடாது.





## நெஞ்சில் நிழலாடும் நினைவுகள்

இந்தியா என்றதும் என் நெஞ்சில் ஏதேதோ நினைவுகள் நிழலாடுகின்றன. கிராமம் கிராமமாகக் களைகட்டியிருக்கும் அகன்ற கழனிகள்; நான் கண்டு களித்த நகரங்கள்; வறண்டு, உலர்ந்து போன வயல்களுக்கு வாழ்வு தந்து, பச்சைப் பசுமையூட்டும் ரம்மியமான மழைச் சிதறல்கள்; மாநதிகள், துள்ளியோடும் அருவிகள்; சீதளமான சூழ்நிலையில் கம்பீரமாய் அமைந்திருக்கும் கைபர் கணவாய்; இந்தியாவின் எழிலார்ந்த தென்கோடி இந்திய மகன் ஒருவனின் முகவிலாசம்; பாரத சமுதாயத்தின் ஒப்பற்ற தோற்றம்-இவையெல்லாவற்றுக்குமேலாக, பனிமுடி தரித்து பவித்திரமாக விளங்கும் இமாலயம், ஆழ ஆழமாய் இருக்கும் அதன் பள்ளத்தாக்குகள், வசந்த ருதுவில் மிளிரும் காஷ்மீர், வண்ண மலர்கள் விகசிக்கும் அதன் பூங்காக்கள்-இவையெல்லாம் என் நெஞ்சில் உயிரோவியமாய் ஒளிகாட்டுகின்றன.

—பண்டித நேரு.

## இலையின் சாறு

தொண்டை ரணம், தொண்டையில் வலி, இவைகளுக்கு அகத்திக் கீரையைச் சுத்தம் பார்த்துச் சிறிதளவு பச்சையாக மென்று அதன் சாற்றை உள்ளே விழுங்க இப்பிணி நீங்கும். மற்றும் நீர்க்கோவை அதிகரித்து அதன் காரணமாக வரும் தும்மல், ஜலதோஷம் போன்ற பிணிகளுக்கு, இக்கீரையின் சாற்றையும், இதன் பூவின் சாற்றையும், சம பாகமாகக் கலந்து மூக்கில் சில சொட்டுகள் விட்டு வந்தால், பிணி நீங்கும். பொதுவாக நீர்க்கோவைக்கு அகத்தி இலைச் சாறுடன் சம பாகத்தில் நல்ல தேன் கலந்து அருந்த நல்ல குணம் கிடைக்கும்.

''மலேரியா'' போன்ற முறைச் சுரமுள்ள பிணி உள்ளவர்கள் அகத்தி இலைச் சாற்றை ஒரு நாளில் ஒரு தடவை இரண்டு துளிகள் மூக்கில்விட ஜுரங்களின் சக்திகள் குறைந்து நலமடையும்.

பாடல்.1

மருந்திடுதல் போகுங்காண் வன்
கிரந்தி வாய்வாந்
திருந்த வசனஞ் செறிக்கும்-
வருந்தச்
சுகத்திலழு பித்தமது சாந்தி
யாம்நாளும்
அகத்தியிலை தின்னு மவர்க்கு
— ப.கு.வி.

பாடல் 2:

வாய்ப் புண் ஆறும் அகத்திக்
கீரையின்
வேரோடு பித்தம் வீழ்ந்துவிடும்
பாயில் கிடத்தும் நோய்களைச்
சுருட்டிச்
சாக்கடை நீரில் போட்டுவிடும்.

## கண் பார்வைக் குறையைப் போக்க

அகத்திப் பூவினுடைய சாற்றை உபயோகப்படுத்துகிறார்கள். அகத்தியினுடைய இளம் பூவும்., மொட்டுகளும் உணவாகச் சமைக்க உதவுகின்றன. ஆனால், தமிழகத்தில் இவ்வாறு செய்வதாகத் தெரியவில்லை. இருந்தாலும் மார்வாடி சேட் இவர்களது இல்லங்களில் பூவைத் தனியாகச் சமைத்துச் சாப்பிடுகின்றனர்.

## பட்டை

''வைசூரி நோய்'' என்று சொல்லப்படுகிற பெரியம்மை இந்த நோயின் வேகத்தைத் தணிப்பதற்கு மருந்துவர்களின் விதிப்படி, குடிநீர் செய்து கொடுப்பதுண்டு.

## வேர்

அகத்தி வேர் ஒரு சிறப்புமிக்க மருந்தாகத் தென்படுகிறது. மேலும் அகத்தி வேரும் இதன் பட்டையும் கிரமப் பிரகாரம் குடிநீர் செய்து அருந்த ஐம்பொறிகளின் எரிவு ஆகியவை நீங்கும்.

## அகத்திக் கீரையிலிருந்து தைலம் செய்முறை

தேவையான அகத்திக் கீரையைக் கொண்டுவந்து அதை அம்மியில் அல்லது உரலில் இடித்து 672 மில்லி லிட்டர் சாறு எடுத்துக் கொண்டு மண்பாண்டத்தில் ஊற்றி வைக்கவும். அதனுடன் 672 மி.லிட்டர் பசுவின் பாலும், 672 மி.லிட்டர் நல்லெண்ணெய்யும் அம்மண்பாண்டத்தில் கூட்டி, பிறகு 35 கிராம் கோஷ்டம் வாங்கி, தூள் செய்து அச்சட்டியில் போட்டு அனலில் வைத்துக் காய்ச்ச வேண்டும். எண்ணெய், மருந்து சிவந்து வரும் தருணம் சட்டியை இறக்கி வைத்து, ஆறிய பின் இவற்றை வடிகட்டி எடுத்தால் அகத்தித் தைலம் கிடைக்கும். இத் தைலத்தை ஒரு பாத்திரத்தில் சேமித்து வைத்துக் கொண்டு தேவையானபொழுது அதைக்கொண்டு ஸ்நானம் செய்து வந்தால், உடலில் காணும் பித்தம், தணிந்து, மயக்கம், கண் எரிவு, புகைச்சல் ஆகியவை நீங்கி நலமடையும்.

இக்கீரையில், இரும்பு, சுண்ணாம்புச் சத்தும், வைட்டமின் 'ஏ' சத்தும் இருக்கின்றன. அதாவது நம் உடலின் எலும்புகளுக்கும் பற்களின் உறுதிக்கும் வளர்ச்சிக்கும் இது ஏதுவாகிறது.

மேலும், அகத்திக் கீரையில் 63 வகைச் சத்துக்கள் அடங்கியுள்ளதாக சித்தர்கள் கூறியிருக்கின்றனர், பொதுவாக இந்தியாவிலும், குறிப்பாகத் தென்னாட்டிலும் விரதம் இருப்பது ஒரு கோட்பாடாகக் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு விரதம் இருந்து முடிப்பவர்கள் உண்ணும் உணவில், முதல் ஒரு கைப்பிடி அளவிலேயே நூறு விதச் சத்துக்கள் அடங்கிய உணவை உண்ண வேண்டும் என்று மருத்துவ நூல்கள் குறிப்பிடுகின்றன.

# இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு. பா. சிவந்தி ஆதித்தன்



இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் பதவிக்கு, தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகத் தலைவரும், தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத் தலைவருமான திரு பா. சிவந்தி ஆதித்தன் பெருத்த ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவில் உள்ள அனைத்து அகில இந்திய விளையாட்டுக் கழகங்களின், நிர்வாகிகள், மாநிலங்களின் ஒலிம்பிக் சங்க நிர்வாகிகள் இத்தேர்தலில் வாக்களித்தனர்.

கடந்த ஓராண்டுக்காலமாக இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவராகச் செயல்பட்டுவரும் திரு பா. சிவந்தி ஆதித்தன், தற்போதைய வெற்றியின் காரணமாக மேலும் 4 ஆண்டுகள் இப்பதவி வகிப்பார்.

விளையாட்டுத் துறையில் உலக அளவில் பல்வேறு மதிப்பு மிக்க பதவிகளை வகிக்கும் திரு சிவந்தி ஆதித்தன் அவர்கள், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டது, தமிழக விளையாட்டுத் துறைக்குக் கிட்டிய தனிக் கௌரவம் என்று கருதப்படுகிறது.

---

ஒரு கைப்பிடி உணவில் நூறுவிதச் சத்துக்களைப் பெறும் வழியை மருத்துவ சாஸ்திரம் கீழ்க்கண்டபடி தெரிவிக்கிறது.

1. அகத்திக்கீரை 63 சத்துக்கள்
2. கண்டைக்காய் 30 ,,
3. வாழைக்காய் 3 ,,
4. கொத்தவரை 1 சத்து
5. அரிசிச்சோறு 1 ,,
6. பருப்பு 1 ,,
7. நெய் 1 ,,

100

இந்த ஏழு உணவுப் பொருட்களிலும் நூறுவிதச் சத்துக்களும் அடங்கி விட்டதைக் காணலாம். அகத்திக் கீரை முதல் கீரையாக நின்று அறுபத்து மூன்று வகை சத்துக்களைப் பெற்று விளங்குவதைக் காணலாம்.

## கால்நடைகளுக்கு உதவும் தீவனம்

இக்கீரை. கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும் நல்ல தீவனமாகிறது. கோழிக்குஞ்சுகளுக்கு, கோழி உணவோடு காய்ந்த அகத்திக் கீரையைச் சேர்த்துத் தீவனமாகக் கொடுத்தால் குஞ்சுகள் நன்கு வளர்ச்சி பெறுகின்றன.

கால்நடைகளுக்கு இக்கீரையைத் தீவனமாகக் கொடுத்தால் அதிகமாகப் பால் கறக்கின்றது. இக்கீரையைத் தின்று கொண்டிருக்கும் கறவை மாட்டின் பாலில், உடலுக்கு நன்மை தரும் அநேக நற்குணங்கள் காணும். இப்பாலை அருந்துவதால், அகத்திக் கீரையை உண்பதால் உண்டாகும் பயன்கள் அனைத்தும் கிடைக்கும்.

இவ்வளவு பெருமை உடையதும் மருத்துவப் பயனுடையதுமான இக்கீரையை அடிக்கடி சாப்பிட்டாலோ நாள் தவறாமல் சேர்த்துக் கொள்வதாலோ நன்மைக்குப் பதில் தீமையே ஏற்படவல்லது. இவ்வாறு சாப்பிடுவதால் உடலினுள்ள நல்ல இரத்தத்தை எல்லாம் முறித்து வாய்வைப் பெருக்கி சோகை, பாண்டு முதலியபிணிகளை உண்டாக்கக் கூடியது.

மேலும், அகத்திக் கீரையை அதிகம் சாப்பிட்டால் கடுவலும், வாயுவும் உண்டாகும். அகத்திக் கீரை பத்தியத்தை முறிக்க வல்லது. எனவே, மருந்துண்ணும் காலங்களிலோ பத்தியமிருக்கும்போதோ அகத்திக் கீரையைச் சாப்பிடக் கூடாது.

அகத்திக் கீரை மற்றும் அதன் பட்டை ஆகியவற்றிலிருந்து எடுக்கும் சாற்றினை மீனவர்கள் தங்கள் வலைகளுக்கு உறுதியளிப்பதற்காகப் பயன்படுத்துகிறார்கள். இதனுடைய பட்டை, தோல் பதனிடவும், சாயம் உண்டாக்கவும் உபயோகப்படுகிறது. பட்டையினுள்ளிருக்கும் நாரானது மிகவும் பயனுள்ளது. இந்த நாரின் நீளம் சராசரி 2·7 மில்லி மீட்டர் இருக்கும். ஆதலால் இந்நார், கயிறு செய்யப் பயன்படுகிறது.

அகத்தி மரத்தின் பட்டையை நீக்கினால் அதன் தண்டு வெண்மையாகவும், மென்மையாகவுமிருக்கும். இத்தண்டு வெடிமருந்து செய்யப் பயன்படுகிறது. விளையாட்டுப் பொம்மைகள் செய்யவும் பயன்படுகிறது.

மூங்கில் கிடைக்காத இடங்களில் தற்காலிகக் கூரை வேய உதவும்

குறுக்குச் சட்டங்களுக்கு இந்த மரத்தைப் பயன்படுத்துவர். இதற்கு நீண்டு வளர்ந்த, கணுவு குறைந்த அகத்தி மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நம் நாட்டில் பெரும்பாலும் அகத்தியைத் தனியாகப் பயிரிடுவதில்லை. வெற்றிலைக் கொடிக் கால்களில்தான் இதனை மிகுதியும் பயிரிடுகின்றனர்.

அகத்திக் கீரையில் 73 விழுக்காடு நீரும், 8.4 விழுக்காடு புரதமும், 1.4 விழுக்காடு கொழுப்பும், 3.1 விழுக்காடு தாதுப்புக்களும் இருக்கின்றன. இதில் 2.2 விழுக்காடு நார்ச் சத்தும் இருக்கின்றது. மாவுச் சத்து 11.8 விழுக்காடு இந்தக் கீரையில் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

சக்தியைக் கொடுக்கும் ஆற்றல் இக்கீரையில் அதிகம் இருப்பதைக் காணலாம். 93 கலோரி சக்தியைக் கொடுக்க வல்லது. நூறு கிராம் கீரையில் 1,130 மில்லி கிராம் சுண்ணாம்புச் சத்தும், 80 மில்லி கிராம் மணிச் சத்தும், 3.9. மில்லி கிராம் இரும்புச் சத்தும் அடங்கி இருக்கின்றன.

இக்கீரை உயிர்ச்சத்துக்கள் நிறைந்த கீரையாகும். உயிர்ச்சத்தான வைட்டமின் 'ஏ' நூறு கிராம் கீரையில் 9,000-10 உள்ளது. தயாமின் சத்து 0.21 மில்லி கிராமும், ரைபோபிளேவின் சத்து 0.09 மில்லி கிராமும், நிக்கோடினிக் அமிலம் 1.2 மில்லி கிராமும், வைடமின் 'சி' 169 மில்லி கிராமும் இருக்கின்றன.

## பொதுப் பலன்கள்

அகத்திக்கீரை நல்ல ஜீரண சக்தியைத் தரவல்லது: பித்த சம்பந்தமான அனைத்துப் பிணிகளை நலமாக்கும். மலச்சிக்கலுக்கு ஏற்றது இக்கீரை. நீரில் சளியை அகற்றும்.



# இந்தியா

● இந்தியாவின் நிர்வாக-பிரதேசப்பாகுபாடு பற்றிய புதிய சட்டம் 1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ஆம் தேதி நடைமுறைக்கு வந்தது. 14 புதிய மாநிலங்களும் மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் 6 பிரதேசங்களும் அமைக்கப்பட்டன.

● 1806இல் வேலூரில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த சிப்பாய்ப் புரட்சி, பிரிட்டிஷ் இராணுவத்தில் தோன்றிய முதல் புரட்சியாகும்.

● 'ஜெய்ஹிந்த்' என்னும் தாரக மந்திரத்தைத் தந்தவர், I.N.V. என்ற இராணுவத்தை வெளிநாட்டில் நிறுவி, வெள்ளையரோடு போராடி, நேதாஜி சுபாஷ் சந்திரபோசுக்கு முன்னோடியாய்த் திகழ்ந்த விடுதலைப் போராட்டப் புரட்சித் தமிழ் வீரர் டாக்டர் செண்பகராமன்.

● கவி ரவீந்திரநாத் தாகூர் 18.2.1915 அன்று தாம் எழுதிய கடிதத்தில் முதன்முதலாக அண்ணல் காந்தியடிகளை மகாத்மா என்று அழைத்தார்.

● 'வந்தே மாதரம்' என்னும் தாரக மந்திரத்தைத் தந்தவர் இலக்கிய மேதை பங்கிம் சந்திரர்; வளர்த்தவர் விபின்சந்திரபால். இதே பெயரில் பத்திரிகை ஒன்றையும் அவர் நடத்தினார்.

● இந்தியாவை இரண்டு டொமினியன்களாகப் பிரிக்கும் மவுண்ட்பேட்டன் திட்டம் 1947 ஜூலை 3ஆம் நாள் பிரகடனம் செய்யப்பட்டது. 1947 ஆகஸ்டில் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இத்திட்டத்தை இந்திய சுதந்திரச்சட்டமாக உறுதிப்படுத்தியது. அதே ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள் இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது.

● 18ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்தவை எல்லாவற்றிலும் செல்வம் மிக்கதாகத் திகழ்ந்தது ஆங்கிலேயக் கம்பெனி. சோழமண்டலக் கரையில் வட்டார மன்னன் ஒருவனிடம் ஆங்கிலேயர்கள் 1639-1640ஆம் ஆண்டில் ஓர் இடத்தை விலைக்கு வாங்கி, 17ஆம் நூற்றாண்டின் மத்தியில் அங்கே செயின்ட் ஜார்ஜ் கோட்டையையும் துறைமுகத்தையும் நிறுவினார்கள்.

● நமது தேசிய கீதமான 'ஜனகண மன' கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் "இந்தியாவின் வைகறைப் பாடல்" என்ற தலைப்பைக் கொண்ட பாடல் தொகுப்பினில் உள்ள ஐந்து பாடல்களில் முதல் பாடலாகும். இது முதன் முதலில் 1911ஆம் ஆண்டு கல்கத்தா நகரில் கூடிட காங்கிரஸ் மாநாட்டில் பாடப்பட்டது. 1912ஆம் ஆண்டு தத்துவ போதினி எனும் பத்திரிகையில் வெளிவந்தது.

● நமது இந்திய தேசிய கீதத்தை முழுதும் பாடுவதற்கு ஆகும் நேரம் 52 நொடிகள்.

● இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் 26.1.1950. அப்போது முதல் இந்த நாள் குடியரசுத் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவின் புதிய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் 1951 ஆம் ஆண்டு செய்யப்பட்டது.

● நமது தேசியக் கொடியின் மூவண்ணத்தை நிர்ணயித்தவர் விஜயவாடாவைச் சேர்ந்த பிங்கலி வெங்கையா என்பவர். இவர் மகாத்மா காந்தியின் அனுமதியுடன் மூவண்ணத்தை நிர்ணயித்தார்.

● இந்தியாவின் அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கான செலவு ரூ.64 இலட்சம். எடுத்துக்கொண்ட காலம் 2 ஆண்டு 11 மாதம் 18 நாள். உருவாக்கிய உறுப்பினர்கள் 308.

● நமது தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரத்தில் 24 கம்பிகள் (Spokes) உள்ளன.

● நமது தேசிய சின்னத்தின் கீழே எழுதப்பட்டுள்ள 'சத்யமேவ ஜயதே' (வாய்மையே வெல்லும்) என்ற சொற்கள் முண்டக உபநிஷத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

● இந்தியா விடுதலை பெற்றபோது சென்னை மாகாணத்தின் முதல்வராயிருந்தவர் திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியார்.

● ராஜாராம் மோகன்ராய் தோற்றுவித்த 'பிரம்ம சமாஜம்' தான் 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் இந்து மதத்தவரிடையே பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்த மதச் சீர்திருத்தவாத இயக்கமாகத் திகழ்ந்தது. ஒரே கடவுள் எனும் கோட்பாட்டைப் பிரச்சாரம் செய்து, உருவ வழிபாட்டை மறுத்த பிரம்ம சமாஜத்தினர் பலதார மணத்தை எதிர்த்தனர், விதவை மறுமணத்திற்காகப் போராடினர்.

● பர்மாவிலும், பிற தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் போர்க் கைதிகளாக இருந்த பிரிட்டிஷ் இந்தியத் துருப்பினரைக் கொண்டு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அமைத்ததுதான் இந்திய தேசிய இராணுவம்.

தொகுப்பு : வி. இராவணன்

# அம்மா

—கவிஞர் முருகுவண்ணன்

நம்மைப் பெற்றவள் அம்மா! - பெற்ற
நலனைப் பெற்றவர் அப்பா
அன்பை ஊட்டுவாள் அம்மா - கல்வி
அறிவைக் கூட்டுவார் அப்பா!

'அம்மா' என்பது முதற்சொல் - மொழி
அனைத்தும் கண்ட முதற்சொல்!
அம்மா-அப்பா கூறும்-மொழி
அனைத்தும் வாழ்க்கைப் பாடம்!

தெய்வம் உண்டு நம்பு! - ஒன்றே
தெரிந்து கொண்டு வணங்கு!
மெய்யும் ஒழுங்கும் தொண்டும் - புகழ்,
மேன்மை எல்லாம் வழங்கும்!

உடன் பிறந்த பிறப்பு - தெய்வம்
உதவிய நிதிக் குவிப்பு!
கடமை உணக்கிலவை சொன்னேன்! - கல்வி
கற்றென்றும் வாழ்க கண்ணே!





## உலகின் முதலாவது இளம் விமானி

ஒற்றை எஞ்ஜின் கொண்ட விமானத்தை ஓட்டிச் சென்று அட்லாண்டிக் கடலைத் தாண்டிப் பறந்து சாதனை புரிந்திருக்கிறான் 11வயது அமெரிக்கச் சிறுவன் ஒருவன். அவனது பெயர் கிறிஸ்டொபர் லீ மார்ஷல்.

"பூமியிலிருந்து வானத்திற்குப் பறப்பதென்பதே ஒரு பரவச மூட்டும் அனுபவம்தான். அது எனக்கு மிகமிகப் பிடிக்கிறது" என்கிறான் மார்ஷல். கலிபோர்னியாவில் ஓஷியானோ பகுதியில் வசிக்கும் இச்சிறுவன் 5-ம் வகுப்பு படிக்கிறான்.

1927-ம் ஆண்டில் சார்லஸ் லின்ட்பர்க் என்னும் 25 வயது அமெரிக்க இளைஞர் அமெரிக்காவிலிருந்து பாரிஸ் நகருக்கு ஒற்றை எஞ்ஜின் விமானத்தில் தன்னந்தனியே பறந்து உலக சாதனை நிகழ்த்தினார். அதே பாதையில்தான்இந்தப் பதினோரு வயது சிறுவனும் இப்போது பயணமானான்.

கிறிஸ்டொபருக்குத் துணையாக ராண்டி கன்னிங்ஹாம் என்னும் விமானி ஒருவரும் அந்த விமானத்தில் இருந்தார். ஆனால், பயண நெடுகிலும் விமானம் ஓட்டியது என்னமோ கிறிஸ்டொபர்தான்.

தனது கரடி பொம்மையைக் கையில் இறுக்கியவாறு பாரிஸ் நகரின் லெ பூர்கே விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது, பெருமை பிடிபடவில்லை கிறிஸ்டொபருக்கு. "எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. அதே சமயம், களைப்பாகவும் இருக்கிறது" என்று நிருபர்களிடம் கூறினான் அவன்.

மாணவர் பக்கம்

## அறிவுச் சுடர்

கடலில் கலக்காத நதி எது?

—யமுனை.

ஒரு நிமிடத்தில் இருதயம் எத்தனை தடவை துடிக்கிறது?

—72 தடவை.

கடல் அலைகள் உண்டாகக் காரணம் என்ன?

—சந்திரன் மற்றும் சூரியன், புவி, ஈர்ப்பு விசை.

வங்கிகள் தேச உடைமையாக்கப் பட்ட ஆண்டு எது?

—1969.

ஸ்பெயின் நாட்டுத் தேசிய விளையாட்டு எது?

—மாட்டுச் சண்டை

எந்த மலைத் தொடரிலிருந்து காவேரி நதி உற்பத்தியாகிறது?

—மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து

இந்தியாவின் சுவிட்சர்லாந்து என அழைக்கப்படுவது எது?

—காஷ்மீர்

எல்லாப் பொருட்களையும் விடக் கடினமானது எது?

—பிளாட்டினம்

ஏலச்செடி எத்தனை ஆண்டுகளுக்குப் பலன் தரும்.?

—40 ஆண்டுகளுக்கு

—தொகுப்பு: 'கிரிஜா'



# கிறிஸ்துமஸ் வரலாறு

தெரிந்து கொள்ளுங்கள்!

கிரிஸ்டெஸ் மாஸஸ் என்ற பழங்கால இங்கிலிஷ் கிறிஸ்ட்ஸ் மாஸ் என்று ஆகி, கிறிஸ்துமஸ் என்று சுருங்கி உள்ளது. கிறிஸ்துமஸ் பற்றிய வரலாறு நீண்டது. சுவையானது.

டிசம்பர் 25-ஆம் தேதி கொண்டாடப்படும் கிறிஸ்துவத் திருவிழா, ஏசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுகிறது. மிகவும் பிரபலமான விழாவாகும் இது.

ரோமானிய கால விரவரலாற்றின்படி கிறிஸ்துமஸ் ரோமில் கிறிஸ்துவுக்குப்பின் கி.பி.336-இல் கொண்டாடப்பட்டது. ரோமானிய சாம்ராஜ்யத்தின் கிழக்குப் பகுதியில் ஏசு கிறிஸ்துவின் பிறப்பையும், அவருக்கு ஞானஸ்நானம் வழங்கப் பட்டதையும் சேர்த்து, ஜனவரி 6-ஆம் தேதி கொண்டாடினார்கள். ஜெருசலம் நகரில் ஏசு கிறிஸ்துவின் பிறந்தநாளை மட்டும் கொண்டாடினார்கள். நான்காம் நூற்றாண்டில் பெரும்பாலான கிழக்கிந்திய தேவாலயங்கள் டிசம்பர் 25-ஆம் தேதி ஏசு கிறிஸ்துவின் பிறப்பை மட்டும் கொண்டாடத் தொடங்கின

### கிறிஸ்துமஸ் அட்டை

கிறிஸ்துமஸ் சமயத்தில், வாழ்த்து அட்டை நல்லெண்ணத்தின் அடையாளமாக தபால்மூலம் அனுப்பப்படுவது வழக்கம். இந்தப் பழக்கம் எல்லா ஆங்கில நாடுகளிலும் கடைப்பிடிக்கப்படுகிறது. பிற நாடுகளிலும் வளர்ந்து வருகிறது. அமெரிக்காவிலும் விரிவாகப் பரவி வருகிறது. மதம் தொடர்பான சித்திர வேலைப் பாடுகள் அடங்கிய மரப்பலகை கிறிஸ்துமஸ் அட்டையாக 1843இல் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இத்தகைய 1000 பிரதிகள் லண்டனில் விற்பனைக்கு வந்தன. மரப்பலகையில் இருந்த வேலைப்பாடு ஒரு குடும்ப விருந்தை சித்திரித்தது. அதன் கீழ் 'மகிழ்ச்சிகரமான கிறிஸ்துமஸ், உங்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கள்' என்று எழுதப்பட்டிருந்தது. 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நியூயார்க் நகரில் இருந்த பியாசேயின் வெரைட்டி ஸ்டோர் என்ற கடை, கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களைத் தயாரித்தது.

### கிறிஸ்துமஸ் மரம்

வாடாத பால்சம் அல்லது டக்ளஸ் ஃபிர் மரம் விளக்குகளாலும், மற்ற அலங்காரப் பொருள்களாலும் கிறிஸ்துமஸ் அலங்கரிக்கப்படுபடும். வாடாத மரங்கள், மலர் வளையங்கள்; மலர் மாலைகள் முடிவடையாத வாழ்க்கையின் அடையாளமாக எகிப்தியர்கள், சீனர்கள் ஹீப்ருக்களின் பழங்காலத்தில் கருதப்பட்டது. கிறிஸ்துவ மதத்துக்கு மாறாத ஐரோப்பிய பழங்குடியினர் ஸ்காண்டிநேவிய மரபுப்படி புதுவருடத் தினத்தன்று பிசாசுகளை விரட்டவும், பறவைகள் வந்து தங்கவும், வீட்டையும் தானியத்தையும் வாடா பச்சைமரம் செடிகொடிகளால் அலங்கரித்தனர். இந்த முறை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது. ஜெர்மனியில் குளிர்கால மத்தியில் வரும் விடுமுறை நாட்களில், பூமரத்தை வீட்டு முகப்பிலோ அல்லது வீட்டின் உள்ளேயோ வைப்பது வழக்கமாகும்.

நவீன கிறிஸ்துமஸ் மரம், மேற்கு ஜெர்மனியில் தோன்றியது. இடைக்காலத்தில் ஆதாம் ஏவாள் பற்றிய நாடகங்களில் ஏடன் தோட்டத்தைக் குறிக்குமவகையில் சொர்க்க மரமாக ஆப்பிள்கள் தொங்கும் ஃபிர் மரம் நிறுத்தப்பட்டது. ஜெர்மானியர்கள் டிசம்பர் 24-ஆம் தேதி தங்கள் வீடுகளில் சொர்க்க மரத்தை நிறுவினார்கள். டிசம்பர் 24ஆம் தேதி ஆதாமுக்கும் ஏவாளுக்கும் உரிய மதத் தொடர்பான விருந்து நாளாகும். அவர்கள் சிவப்பு முந்திரைக் காகிதங்களை அந்த மரத்தில் தொங்கவிட்டனர். இது கிறிஸ்தவ மதத்தில் மீட்பின் அடையாளமாகக் கருதப்படுகிறது. பல் வேறு வடிவ மிட்டாய்கள் விருந்தளிப்பவர்களாகக் கருதப்பட்டன. மெழுகுவர்த்திகள் ஏசுவின் அடையாளமாகக் கருதப்பட்டது.

கிறிஸ்துமஸ் பாடல் (கரோல்) என்ற வார்த்தை பிரபலமான கிறிஸ்துமஸ் பாடலைக் குறிப்பதாகும். இப்பொழுது எல்லாக் கிறிஸ்துமஸ் பாடல்களையும் குறிக்கிறது. லத்தீன் மொழியில் எழுதப்பட்ட முதல் கிறிஸ்துமஸ் பாடல்கள் 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.



### விளையும் பயிர்

சென்னை வில்லிவாக்கத்திலுள்ள சிங்காரம்பிள்ளை பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவி அகதா இன்பரஜிலா. இவர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதிலும் கதை, கட்டுரைகள் எழுதுவதிலும் ஆர்வம் உள்ளவர்.

கடந்த டிசம்பர் திங்களில் தஞ்சாவூரில் நடைபெற்ற 20-வது மாநில அளவிலான பொங்கல்விளையாட்டுப் போட்டியில் சென்னை மாவட்டத்தின் சார்பாக கலந்துகொண்டு 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்திலும் 4 X 100 மீட்டர் ரிலே பந்தயத்திலும் முதலிடத்தைப்பெற்றார்.

### அறிவெனப்படுவது

தனக்குத் தெரிந்ததைத் தெரியுமென்றும், தெரியாததைத் தெரியாதென்றும் கூறுவது எதுவோ அது தான் அறிவாகும்.

— கன்பூஷியஸ்

துறையிலும் தன்னிறைவைப் பெற்றுள்ளது. இதற்கு அடிப்படையாய் அமைந்துள்ளவை நிலவளமும் நீர்வளமும் ஆகும். இவ்வளர்ச்சிகளுக்குக் காரணம் இம்மாவட்டத்தில் பெய்யும் பருவமழையும், நீர் நிலைகளும், மக்களின் அயராத உழைப்புமே ஆகும். இவைகளைப் பயன்படுத்தி வேளாண்மையில் பெரியார் மாவட்டம் தன்னிறைவைப் பெற்று, நெல், கரும்பு, மஞ்சள் பருத்தி பயிர்கள் உற்பத்தியில் முன்மாதிரியாகத் திகழ்கிறது.

கீழ்பவானி மற்றும் உள்ளடங்கிய கிணற்றுப் பாசனப் பகுதியில் சுமார் 36,000 எக்டரில் தற்போது நெல் சாகுபடி செய்யப்பட்டு பல்வேறு வளர்ச்சிப் பருவங்களில் பயிர் நன்றாக உள்ளது. கரும்பு சுமார் 5,000 எக்டரிலும், பருத்தி சுமார் 245 எக்டரிலும், தீவனச்சோளம் சுமார் 13,600 எக்டரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

கீழ்பவானி பாசனப் பகுதியில் கஸ்பாபேட்டை அவல்பூந்துறை, அரச்சலூர், வடுகப்பட்டி, விளக்கேற்றி எழுமாத்தூர், மொடக்குறிச்சி, நடுப்பாளையம் மற்றும் வேலம்பாளையம் ஆகிய பகுதிகளில் மட்டும் சில இடங்களில் நெற்பயிரில் 'கதிர்' உறை அழுகல் நோய் காணப்பட்டது. தக்க பயிர்ப் பாதுகாப்புப் பரிந்துரைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இந்நோய் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

காளிங்கராயன் பாசனப் பகுதியில் இரண்டாம் போக நெல் சாகுபடியாக, இதுவரை சுமார் 4,000 எக்டேரிலும், நடவுப்பணி முடிந்துள்ளது. இப்பகுதியில் சுமார் 800 எக்டேர் பரப்பில் முதல் போகத்தில் எக்டேருக்கு 9 டன் நெல் உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டப் பகுதிக்கு உட்பட்ட பாசூர், ஒளாம்பாடி ஆகிய இரு கிராமங்களில் நடைபெற்ற பயிர் அறுவடை பரிசோதனைகளில் அதிகபட்ச மகசூலாக எக்டேருக்கு 9.9 டன்னும், சராசரியாக எக்டேருக்கு 9 டன்னும் மகசூல் பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இப்பகுதியில் சுமார் 1,372 எக்டேரில் மஞ்சளும், சுமார் 358 எக்டரில் கரும்பும், 450 எக்டரில் வாழையும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

நடப்பன்னி - அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் நடப்பு சம்பாப் பருவத்தில் சுமார் 6750 எக்டரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஏறக்குறைய 95 சதப் பரப்பில் ஐ. ஆர். 20 நெல் ரகம் மட்டும் சாகுபடியில் உள்ளது. கரும்பு சுமார் 1840 எக்டரிலும், மஞ்சள் 150 எக்டரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மேட்டூர் மேற்குக் கரைப் பாசனப் பகுதியில் சுமார் 1400 எக்டரில் நெல்லும், கரும்பு சுமார் 2100 எக்டரிலும், மஞ்சள் சுமார் 350 எக்டரிலும் சாகுபடியில் உள்ளன.

பெருமுகை-அத்தாணி பாசனப் பகுதியில் கதிர் முற்றும் தருணத்தில் சுமார் 160 எக்டரில் நெல் நல்ல நிலையில் உள்ளது. அறுவடை முடிந்துள்ள சுமார் 40 எக்டர் பரப்பில் எக்டருக்கு 6.1 டன் மகசூல் பெறப்பட்டுள்ளது.

வரட்டுப்பள்ளம் பாசனப் பகுதியில், மஞ்சள் சுமார் 100 எக்டரிலும், கரும்பு 120 எக்டரிலும் சாகுபடியில் உள்ளன.

பழைய அமராவதி பாசனப் பகுதியில் மொத்த பாசனப் பரப்பான 3176 எக்டரில், நெல் மட்டும் இதுவரை சுமார் 3070 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலங்களில் பெருமளவில் கரும்பும் சில இடங்களில் மஞ்சளும், வாழையும் சாகுபடியில் உள்ளன.

புதிய அமராவதி பாசனப் பகுதியில் மொத்த பாசனப் பரப்பான 4000 எக்டரில் ஏறக்குறைய 3000 எக்டரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு, நடவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனப் பகுதியில் சுமார் 240 எக்டரில் நடைபெற்ற நெல் அறுவடையில் எக்டருக்கு 6 டன் முதல் 9 டன் வரை மகசூல் பெறப்பட்டுள்ளது. சுமார் 1500 எக்டரில் நரிப்பயறு மற்றும் கொள்ளும் விதைக்கப்பட்டுள்ளது. மானாவாரியாக, சுமார் 325 எக்டரில் பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நெல் விதைகள் சுமார் 34 டன்னும், சிறுதானியங்கள் சுமார் 27 டன்னும், பயறு வகை விதைகள் 30 டன்னும், பருத்தி 5 டன்னும், அரசு வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன

மாவட்டத்தில் உள்ள பல்வேறு உர விநியோக மையங்களில் சுமார் 5750 டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. 45 டன் தூள் வடிவத்திலும், 3700 லிட்டர் திரவ வடிவத்திலும், பூச்சி பூஞ்சான மருந்துகளும் வேளாண் மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மஞ்சள் சாகுபடியில் உலக அரங்கில் பெயர் பெற்ற இம்மாவட்டம். பிற பயிர்கள் உற்பத்தியிலும், தன்னிகரற்று விளங்குகிறது. பல்வேறு நீர்நிலைகளைக் கொண்டு, அரசின் திட்டங்களைச் செவ்வனே செயலாற்றி வருகிறது வேளாண்மைத் துறை.

**நா. தில்லை கோவிந்தன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெரியார் மாவட்டம்.**

## மதுரை மாவட்டம்

மதுரை சொக்கிகுளத்தில் ரூ. 16.20 இலட்சம் செலவில் ''தாட்கோ'' மூலம் ஆதிதிராவிட வகுப்பைச்சேர்ந்த கல்லூரி மாணவிகளுக்கென தங்கும் விடுதி கட்டப்பட்டுள்ளது.

இந்த மாணவியர் தங்கும் விடுதியின் திறப்பு விழா சொக்கிகுளத்தில் 30.11.88 அன்று நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தேவராஜ் தலைமை தாங்கினார். விழாவில் மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் மாணவியர் விடுதியைத் திறந்துவைத்துப் பேசினார். தமது உரையில் ஆளுநர் அவர்கள் தெரிவித்ததாவது:

''ஆதிதிராவிட மாணவியர்களுக்கான தங்கும் விடுதித் திறப்புவிழாவில் கலந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

''வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கும் மேலாக ரூ. 199 கோடி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதில் 50 சதவிதம் கல்விக்காகச் செலவிடப்படுகிறது. காரணம், என்னவென்றால் நாட்டு முன்னேற்றம் என்பது மக்கள் கல்வி அறிவு பெறுவதன் மூலமே அடைய முடியும். கல்வி அறிவு இருந்தால்தான முழுப்பயனையும் அடைய முடியும்.

''கல்வியில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட உயர்ந்து இருக்கிறது. இருந்தாலும் கிராமப்புறங்களில் உள்ள பின்தங்கியவர்கள் குறிப்பாக ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களில் கல்வி அறிவு பெற்றவர்களின் விகிதம் குறைவாக இருக்கிறது.

''1981-ஆம் ஆண்டு புள்ளிவிவரத்தின்படி தமிழ்நாட்டில் கல்வி அறிவு உடையவர்கள் 33 சதவிதம் பேர். ஆனால் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களில் 30 சதவிதம் பேர்களே கல்வி அறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். அதிலும் பெண்கள் 5 சதவிதம் பேர்களே. இந்த இனத்தில் கல்வி அறிவு உடையவர்களாக இருக்கிறார்கள்.

''ஆரம்பப் பள்ளியில் சேரும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆனால் இடைநிலைப் பள்ளிக்கு வருகிற போது மாணவ-மாணவியரின் எண்ணிக்கை 70 சதவிதம் குறைந்து விடுகிறது. அதிலும் படிப்பைப்பாதியில் நிறுத்தும் மாணவ-மாணவியர் ஆதிதிராவிடர்கள், பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள்.

''ஆதிதிராவிடர்கள் இனத்தைச் சேர்ந்த மாணவ-மாணவிகள் படிப்பைப் பாதியில் நிறுத்துவதைத் தடுப்பதற்காக, அவர்களுக்கு அரசு வழங்கும் கல்வி உதவித்தொகையை அதிகரித்து இருக்கிறோம்.

''தமிழ்நாட்டில் 788 மாணவ-மாணவிகள் தங்கும் விடுதிகள் இருக்கின்றன. இந்த விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவிகள் குடும்பக் கவலைகளை மறந்து படிப்பில் கவனம் செலுத்தமுடியும். இதுபோன்ற மாணவ-மாணவியர் தங்கும் விடுதி கட்ட அதிகத்தொகை செலவிடத் திட்டம் வகுக்கப்பட்டு இருக்கிறது.

''பல நூற்றாண்டுகளாக இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் பல துன்பங்களை அனுபவித்து வந்து இருக்கிறார்கள். கல்வி அறிவைப் பெறுவதன் மூலம் அடுத்த 20 ஆண்டுகளின் மற்ற சமுதாயத்தினர் அளவிற்கு உயர்ந்து விடுவார்கள்.

''இங்கு கூடி இருக்கும் மாணவிகளுக்கு ஒன்று சொல்கிறேன். உங்கள் பெற்றோர் ''படிப்பை நிறுத்திவிட்டு திருமணம் செய்து கொள்'' என்று சொன்னால் அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது. உங்கள் பெற்றோர்களிடம் சொல்லி உங்கள் படிப்பைப் பாதியில் நிறுத்தாமல் நிறைவு செய்ய வேண்டும்.''

நலிவடைந்த பிரிவினருக்கு அரசு சார்பில் நல உதவிகளை ஆளுநர் அவர்கள் வழங்கினார். உடல் ஊனமுற்ற 5 பேர்களுக்கு மூன்று சக்கர வண்டியும் 2 பேருக்குச் சக்கர நாற்காலியும் விதவைப் பெண்களின் மகள் திருமணத்திற்கு 5 பேருக்குத் தலா ரூ. 1000 மானியமும் 10 மாணவ மாணவிகளுக்குச் சீருடைகளும் வழங்கப்பட்டன. நேரு நூற்றாண்டு விழாவை யொட்டி நடைபெற்ற மாணவ-மாணவியருக்கான பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கினார்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆடு வளர்த்தல், மாட்டு வண்டி, பெட்டிக்கடை வைக்க 11 பேர்களுக்கு ரூ. 38 ஆயிரத்து 400 வழங்கப்பட்டது. இதில் ரூ. 12 ஆயிரத்து 800 அரசு மானியம் ஆகும். 7 விவசாயிகளுக்கு ஆயில் என்ஜின் வாங்க தலா ரூ. 8 ஆயிரம் வங்கிக் கடன் வழங்கப்பட்டது. கனரா வங்கியின் ''ஊரி கல்யாண்'' திட்டத்தையும் ஆளுநர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தாட்கோ நிர்வாக இயக்குநர் திரு டி. பிரபாகர்ராவ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரு எஸ். தேவஇரக்கம் நன்றி கூறினார்.

**ரெ. இராவணன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**மதுரை மாவட்டம்**

## கன்னியாகுமரி மாவட்டம்

கண்கவரும் கைவினைப் பொருள் கண்காட்சி ஒன்று மக்கள் பார்வைக்கென 23.11.88 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

1989 ஜனவரி 31 வரை நடைபெறும் இக்கண்காட்சியைத் தமிழ்நாடு கைத்திறன் தொழில் வளர்ச்சிக் கழகமும், பூம்புகார் கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையமும் இணைந்து நடத்துகின்றன.

இக்கண்காட்சியில் காண்போர் விழிகளைக் கவரும் வகையில் பல்வேறு பொருட்கள் இடம் பெற்றுள்ளன. ஒரு ரூபாய் முதல் பல ஆயிரம் ரூபாய மதிப்புள்ள சிறிய மற்றும் பெரிய கைத்திறன் கலைப் பொருட்களும், ஒளி சிந்தும் தீபங்கள், அருள்வழங்கும் விக்கிரகங்கள், அழகு மிளிரும் சிற்பங்கள், வனப்பூட்டும் மர ஓவியங்கள், மாதர்களின் மனமகிழ் அணிகலன்கள், வண்ண நார் பைகள், குளுமையான கோரைப் பாய்கள், மெருகூட்டும் புடவைகள், கலை அம்சமுள்ள, காகித பொம்மைகள், மணம்கமழும் சந்தன பொருட்கள், சங்கு சிப்பிப் பொருட்கள், தஞ்சாவூர் தஞ்சை கலைத் தட்டுகள், துணிப் பதுமைகள் மற்றும் எண்ணற்ற வண்ண நட்சத்திரக் கூடம் போன்ற கலை அழகு மிளிரும் ஆயிரக் கணக்கான கை விணைப் பொருட்கள் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

ரூ. 100ற வரை விலையுள்ள பொருட்களுக்கு விற்பனை வரிச் சலுகையும் அளிக்கப்படுகிறது. மேலும் கைத்திறன் பொருட்கள் விற்பனையை ஊக்குவிக்க சிறப்புத் தள்ளுபடியும் அளிக்கப்பட்டிருக்கிறது.

தொகுப்பு:

**கு. தாணப்பா**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**நாகர்கோவில்.**



# வட ஆர்க்காடு மாவட்டம்



வான்வழி விதை தெளித்து வனங்கள் உருவாக்கும் முறை இந்தியாவில் குஜராத், மத்தியப் பிரதேசம், உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், ஒரிசா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வெற்றியும் கிட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் முதன்முறையாக வான்வழி விதை தூவும் திட்டம் தற்போது வடார்க்காடு மாவட்டம் வேலூர் வனத்தோட்டத்தில் பரிச்சயிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் இத்திட்டத்தை அமுல்படுத்தப்படுத்துவதற்கு முன் மாதிரி திட்டமாக வடார்க்காட்டில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் செயல்படுத்த பள்ளி கொண்டா காப்புக்காடு மொத்த பரப்பளவு 1,577 எக்டேரில் 1000 எக்டேர் மட்டும் விதை தெளிப்பதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

பன்னிரண்டு மர இன விதைகளும், இரண்டு புல்வகை விதைகளுமாக மொத்தம் 10,000 கிலோ விதைகள் 'பீவர்' விமானம் மூலம் வானிலிருந்து தூவப்பட்டன. சித்தா, சிறுமூங்கில், உசில், வாகை, சிலவாகை, கொடுக்காபுளி, புங்கன், வெள்வேலன், பரம்பை, புளி, சந்தனம், பாலை ஆகிய மர இனங்கள் இதில் அடங்கும்.

தேர்வுசெய்யப்பட்ட பரப்பு முழுவதும் நீளமான ஆழமில்லாத குழிகள் தோண்டப்படும். இதன்மூலம் விதைகள் தரையை அடைந்து முளைத்து வளர்வதற்குத் தேவையான சூழ்நிலை உருவாக்கப்படும்

மழைநீர் விரயமாவதைத் தடுப்பதற்கு ஆங்காங்கே 100 சிறு கல் அணைகள் மற்றும் 8 கசிவுநீர்க் குட்டைகள் எழுப்பப்படும். இதன் மூலம் சேமிக்கப்படும் நீர் சுற்றுப்புற கிராம விவசாயத்திற்குப்பயன் படுத்தப்படும்.

காப்புகாட்டின் எல்லையோரத்திலும், குழிகளின் உள்பகுதியிலும் கற்றாழை நட்டு வளர்க்கப்படும். இவை வளர்ந்து மண் அரிப்பைத் தடுக்கப் பயன்படுவதுடன் குடிசைத் தொழிலுக்குத்தேவையான மூலப் பொருளை வழங்கும்.

திட்டப்பரப்பில் 500 எக்டேர் பகுதி கம்பிவலை வேலி கொண்டு பாதுகாக்கப்படும். மீதி பாதிப் பகுதியில் உண்டாகும் மர உற்பத்தியை கணக்கிட்டு இப்பாதுகாப்பின் பலனை ஆய்வுசெய்து ஒப்பிட்டு பார்க்கப்படும். சுற்றுப்புற கிராம கால்நடைகளுக்கு ஏற்படும் தற்காலிக மேய்ச்சல் வசதி இழப்பினை ஈடுசெய்யும் பொருட்டு அவைகளுக்கு இலவசமாக தீவனம் வினியோகம் செய்யும் திட்டமும் இதில் அடங்கும்.

இத்திட்டத்தின் மூலம் குழி வெட்டுதல், கற்றாழை நடுதல், கல்லணை, குளம் கட்டுதல் ஆகிய பணிகளில் சுற்றுப்புற கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். பிற்காலத்தில் திட்டப்பகுதியிலிருந்து புல் வளர்ச்சியை இலவசமாய் விவசாயிகள் வெட்டி எடுத்துச் செல்லவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

தேர்வுசெய்யப்பட்ட 1,000 எக்டேர் நிலப்பரப்பு 22,000 மக்கட் தொகையும், 12,000 கால்நடைகளும் உள்ளடங்கிய 14 கிராமங்களாகும். மேற்கண்ட திட்டப்பணிக்காக அரசு ரூ. 18 இலட்சம் மதிப்பீட்டில் ரூ 8 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழகத்தில் முதன்முறையாகச் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு ஐதராபாத்தில் இருந்து 'பீவர்' என்ற குட்டி விமானம் 2 விமானிகளுடன் வரவழைக்கப்பட்டது. இத்திட்டத் தொடக்கவிழா 18.11.88 அன்று வேலூர் அப்துல்லாபுரம் விமானதளத்தில் நடைபெற்றது.

தேசிய தரிசு நில அபிவிருத்தி வாரிய துணைத்தலைவர் திரு திலீப் மத்தாய் தலைமையில் விழா நடைபெற்றது. வேலூர் வனப்பாதுகாவலர் திரு சி.கே.ஸ்ரீதரன், இ.வ.ப., கோவை வனப்பாதுகாவலர் (ஆராய்ச்சி) திரு.ஆர். சுந்தரராஜன் இ.வ.ப. மாவட்ட வன அலுவலர் திரு டி.சேகர் இ.வ.ப., ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர்.

50 அடி உயரத்தில் விமானம் பறந்து விதைகளைத் தூவியது. 2 நாட்கள் விதைகள் தூவிய இவ்விமானத்தின்மூலம் ஒரு தடவைக்கு 600 கிலோ வீதம் 10 ஆயிரம் கிலோ விதைகள் தூவப்பட்டன. விதைகளில் பூச்சிமருந்து கலந்து தூவப்பட்டன.

தூவப்பட்ட விதைகள் மழை பெய்த உடன் முளைக்கத் தொடங்கும். மழை இல்லாமல் இருந்தாலும் விதைகள் நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கும் வகையில் நவீன மருந்துகளுடன்கலக்கப்பட்டுள்ளன இந்த விதைகளை கோயம்புத்தூர் வனமரபியல் ஆராய்ச்சிக் கழகம் சேகரித்து அனுப்பியது.

**எம். கலைமணி**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு)**
**வேலூர், வடஆர்க்காடு மாவட்டம்.**





# ஊரக வளர்ச்சிக்கு உயரிய பணிகள்

கிராமங்களின் பொருளாதாரம் மற்றும் சமூக நிலையை உயர்த்தி கிராம மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து, அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி, வாழ்க்கையில் அவர்களுக்கு ஊக்கமூட்டும் பெரும் பணியை அரசின் ஊரக வளர்ச்சித் துறை நிறைவேற்றி வருகிறது.

கிராமத்தின் மொத்தத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த பின்பு, கிராம மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் வகையில் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வாட்டும் வறுமையை வழியனுப்ப ஏழையர் வாழ்வை ஒளிமயமாக்க எளியவர் முகத்தில் மகிழ்ச்சியையும் அகத்தில் நம்பிக்கையையும் உண்டாக்கும் விதத்தில், மைய அரசும், மாநில அரசும் இணைந்து சிறப்புத் திட்டங்களை உருவாக்கின. மக்களை வாழவைக்கும் அத்தகைய மகத்தான திட்டங்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் என்பனவாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமானது தனிநபர் குடும்பப் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு தீட்டப்பட்டது. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டமும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டமும் கிராம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டவை.

தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஊரக வளர்ச்சிக்கு ஆற்றப்பட்ட உயரிய பணிகள் பற்றிய விவரங்களை இங்கே காணலாம்.



## ஊரக வளர்ச்சித் துறை:

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் இவை மூன்றும் ஊரக வளர்ச்சித் துறையால் நிறைவேற்றப்படும் முக்கிய திட்டங்களாகும். வறுமைக் கோட்டுக்குக் கீழே வாடும் கிராமப் புறமக்கள் பயன்பெற வேண்டும் என்னும் இலட்சியத்தோடு இந்த ஆண்டில் இவை மிகத் தீவிரமாகச் செயல்படுத்தப் படுகின்றன.

## தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு ரொக்கமாக 6112 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 822.24 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 47,120 மெட்ரிக்டன் உணவு தானியங்கள் வழங்கப்பட்டன. மொத்த ஒதுக்கீடு 6934.24 இலட்சம் ரூபாயாகும். ஜீவன்தாரா கிணறுகள், சமூகநலக்காடுகள், கிராமக் கழிப்பறைகள் பள்ளிக் கட்டடங்கள் ஆகியவற்றை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டது.

30.10.'88 வரை 5247.735 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 277.09 லட்சம் மனித நாட்கள் வேலை உருவாக்கி தரப்பட்டுள்ளது. 35,089 வீடுகளும், 341 ஜீவன்தாரா கிணறுகளும், 339 கிராமக் கழிப்பறைகளும், 180 பள்ளிக்கூடங்களும், 1929 சாலைகளும், சாலைப்பாலங்களும், 4539 ஏனைய பணிகளும் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன.

## ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்:

இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை 5000 இலட்சம் ரூபாய் மேலும் 606.65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 17,382 மெட்ரிக்டன் உணவு தானியங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. கையிருப்பு உணவு தானியத்தையும் கணக்கிலே சேர்த்தால் இவ்வாண்டுக்கான ஒதுக்கீட்டுத் தொகை மொத்தம் 5780.36 இலட்சம் ரூபாயாகும்.

கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித்தரும் நோக்கோடு, பொதுப்பணித்துறை, வேளாண்மைப் பொறியியல்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் அலுவலகம் ஆகியவை போன்ற பல்வேறு துறைகளுக்கும், ஒதுக்கீடு செய்யப்பட்ட இத்தொகை பிரித்துத் தரப் பட்டுள்ளது.




பண்டித நேரு அவர்களின் செயலாளராக இருந்தவர் திரு எச்.வி.ஆர்.அய்யங்கார். ஓயாது உழைத்த களைப்பில் ஒருநாள் தன்னையும் மீறி நெஞ்சின் மீது தலையைத் தாழ்த்தி உறங்கிவிட்டார் நேரு அவர்கள். பின் விழித்தெழுந்த நேரு. அய்யங்காரிடம் கூறினார்: "நான் இரவில் ஐந்து மணிநேரம்தான் தூங்குகிறேன். ஆறு மணி நேரமாவது தூங்க வேண்டுமென்ற ஆசைதான். அது சரி, நீங்கள் எவ்வளவு நேரம் தூங்குவீர்கள்?" எனக் கேட்டார் நேரு. அதற்கு அய்யங்கார் "ஏழு அல்லது எட்டுமணி நேரம்" என்றார். நேரு சொன்னார்: "ஆறு மணிநேரம் தூங்கவேண்டியது அவசியம். ஏழு மணிநேரம் தூங்குவது அனாவசியம். எட்டு மணிநேரம் தூங்குவது பெரிய பாவம்."

31.10.'88 முடிய 3095 இலட்சம் ரூபாய் இப்பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. உருவாக்கப்பட்ட வேலை நாட்கள் 172.93 இலட்சம் மனித நாட்களாகும். 21,740 இந்திரா அவாஸ் யோஜனா வீடுகளும், 405 கிராமச் சுகாதாரக் கழிப்பறைகளும் 250 ஜீவன்தாராக் கிணறுகளும், 144 வேளாண்மைப் பணிகளும், 129 ஏனைய பணிகளும் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்தன. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் இவற்றின் மூலமாக 5000 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.







## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:

1988-89 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட ஒதுக்கீடு 4697.52 இலட்சம் ரூபாய். இதன்கீழ் 2,24,928 குடும்பங்கள் பயனடையும். இவற்றில் பழைய குடும்பங்கள் 1,42,680; புதிதாகப் பயன்பெறுபவை 82,248 குடும்பங்கள்.

### ஜீவன்தாரா விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்பு

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டங்களின் மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியைச் சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகள் பாசன வசதி பெறும் வகையில் பாசனக் கிணறுகள் அரசால் அமைத்துத் தரப்படுகின்றன. இவை "ஜீவன்தாரா" கிணறுகள் என அழைக்கப்படுகின்றன. 1988-89ஆம் ஆண்டில் ஒவ்வொரு கிணற்றிற்கும் ரூ. 25,000 மதிப்பில் 5,000 கிணறுகள் அமைத்துத் தரப்படும்.

இத்தகைய கிணறுகள் அமைத்துத் தரப்பட்ட விவசாயிகள் தங்கள் கிணற்றிலிருந்து பாசனத்திற்கு நீரை வெளியே கொண்டுவருவதில் உள்ள சிரமங்களை அரசு பரிவுடன் பரிசீலனை செய்தது. இத்தகையோருக்கு மின்சார மோட்டார் அளிக்கவும், பெருநோக்கு விவசாய உற்பத்தித் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இவர்கள் தங்கள் மின்சாரப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு பெறும் பொருட்டு அரசு தக்க ஆணை வெளியிட்டுள்ளது. அதன்படி 1988-89 மற்றும் 1989-90 ஆம் ஆண்டுகளில் "ஜீவன் தாரா" பாசனக் கிணறுகளுக்குச் சிறப்பு முன்னுரிமை அளித்து மின்சார இணைப்புகள் வழங்கப் படும்.

இத்தகைய ஒட்டுமொத்தமான உதவிகளின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியைச் சார்ந்த விவசாயிகள் உடனடி, முழுமையான பயனைப் பெற்றுவருகின்றனர்.

இவ்வாண்டு 31.10.'88 வரை அடைந்த முன்னேற்றம், 1987-88 இல் 31.10.'87 வரையடைந்த முன்னேற்றத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தால் அதிகம் ஆகும்.

3025.73 இலட்சம் ரூபாய் மானியம் 1,61,056 குடும்பங்கள் பயன்பெறும் வண்ணம் செலவிடப்பட்டுள்ளது. (குடும்பங்கள் - பழையவை 56,322 புதியவை 1,04,734) இக்குடும்பங்களில் ஆதிதிராவிடர் பழங்குடியினர் குடும்பங்களின் எண்ணிக்கை 77,957 ஆகும். கிராமப்புற இளைஞர்க்குச் சுய வேலைவாய்ப்பு வழங்கப் பயிற்சியளிக்கும் திட்டத்தின் இந்த ஆண்டு குறியீடு 13,230 ஆட்கள். ஆனால் இது வரை 11,923 ஆட்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

கிராமப்பகுதிகளில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 585 மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு உதவியளிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதுவரை 242 மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு உதவி வழங்கப்பட்டுள்ளது.

தேசத்தின் இதயமாக விளங்கும் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதும், கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழி செய்து அவர்களை வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்து மேலே உயர்த்துவதும் கிராமப்புற இளைஞர்க்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதும், கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு வாழ்வளிக்கும் திட்டங்களை வகுத்து அவற்றை நிறைவேற்றுவதும், நாட்டு முன்னேற்றத்துக்கு இன்றியமையாதவை. அந்த நலப்பணிகளையும் வளர்ச்சித் திட்டங்களையும் கடந்த 10 மாதங்களில் தமிழ்நாடு அரசு சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

# சர். சி. வி. இராமன்

காரை. க. கலையரசன்



இந்தியாவின் அறிவியல் வளர்ச்சியில் எத்தனையோ அறிவியல் அறிஞர்கள் தங்கள் அயராத உழைப்பால் பங்கெடுத்துள்ளார்கள். அவர்கள் வரிசையில் சிறந்து விளங்குபவர் : அறிவியல் அறிஞர் பேராசிரியர் சர் சந்திரசேகர வெங்கடராமன், அதாவது சர்.சி.வி. இராமன் தான். இவரது நூற்றாண்டினைக் கொண்டாடும் நாம் இவரைப் பற்றித் தெரிந்து கொள்வது இளைஞர்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

திருச்சி மாவட்டம், திருவானைக்காவல் எனும் சிற்றூரில், நவம்பர் திங்கள் 7ஆம் தேதி 1888ஆம் ஆண்டு ஒரு பௌதிக மற்றும் கணித ஆசிரியரான சந்திரசேகரன் என்பவருக்கும் பார்வதி அம்மாள் என்பவருக்கும் மகனாகப் பிறந்தவர் சர்.சி.வி. இராமன்.

ஓர் அறிஞர் உருவாவதற்குக்காரணம் அவரது சுற்றுப்புறச் சூழ்நிலையும் ஒரு பெருங்காரணம் என்பது அறிவியல் உண்மை. சர்.சி.வி. இராமன் தனது இளவயது பருவத்தைப் பெரும்பாலும் கடற்கரையிலேயே கழித்தார். காரணம் இவர் தந்தை விசாகப் பட்டினத்தில் பணியாற்றிய காலத்தில்இவரது இல்லம்கடற்கரையையொட்டியே இருந்தது. இராமன் தமதுசிறுவயதில் கடலின் நிறத்தைக் கண்டும், சூரிய உதயத்தினைக் கண்டும் வியந்தார். இவ்ரை வங்காள விரிகுடாக் கடல் பெரிதும் கவர்ந்தது. இந்த ஆழ்ந்த பற்றுதலே பின்பு கடலின்நிறம் நீலமாக இருக்கக் காரணம் என்ன? என்ற கேள்வியைக் கேட்கத் தூண்டியது.

தனது 16ஆவது வயதில் நிறப்பிரிகைமானி (spectrometer) எனும் கருவியின்மூலம் முப்பட்டகத்தின் கோணம்(angle of the prism) கண்டுபிடிக்கும் ஒரு சாதாரண சோதனையின் போது ஓரிரண்டு கோணிய ஒளிக் கற்றைகள் (diffraction bands)கிடைத்ததைக் கொண்டு தனது முதல் ஆய்வுக் கட்டுரையாக 'நீள்சதுர வட்டத்திற்குள் செல்லும் ஒளியில் காணப்படும் சீர்மையற்ற ஒளிப்பட்டைகள்' (Unsymmetrical diffraction bands due to a rectangular aperture) என்ற தலைப்பில் பல பேராசிரியர்களின் நகைப்புக்கிடையில் அனுப்பினார். அது 1906 ஆம் ஆண்டு தத்துவஇதழ் ( the philosophical magazine ) (London) என்ற இதழில் ஆய்வுக் கட்டுரையாக வெளிவந்தது. இது இவரது கண்டுபிடிப்புகளுக்கு ஒரு திருப்புமுனையாகவும் அமைந்தது.

பின்னர் தனது ஆசிரியர்களின் அறிவுரைப்படி1907இல் நிதித்துறையில் ( financial department) தேர்வு எழுதி அதிலும் முதலாவதாகத் தேறினார். அதன்படி அப்பணியைத் தொடர்ந்தார்.

இவர் 1928ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28ஆம் நாள் ஆய்வின்மூலம் ஒரு உண்மையைக் கண்டுபிடித்தார். அதாவது ''ஒளிச்சிதறலின்போது (scattering) கிடைக்கும் நிறமாலையில் (spectrum)சில கோடுகள் கிடைத்தன. இவை பாதரச விளக்கொளியில் கிடைக்கும் நிறமாலையில் இல்லாது இருந்தன''. இந்தப் புதிய ஒளிக்கதிர் விரிசல்தான் (New Light Radiation)பின்பு இராமன் விளைவுதன்(RamanEffect)என்று அழைக்கப்பட்டது. இதற்காக 1930ஆம் ஆண்டு இவருக்கு உலகின் மிக உயரிய பரிசான ''நோபல் பரிசு'' இயற்பியலுக்காகக் கிடைத்தது.

1933ஆம் ஆண்டு பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தில் (Indian Institute of Science) இயக்குனராகவும் பேராசிரியராகவும் பணி புரிந்தார். அங்கும் இவர் தனது ஆய்வினைத் தொடர்ந்தார். பின்பு பலஅறிவியல் நிறுவனங்களில் இயக்குனராக (director) பணிபுரிந்துள்ளார்.

1948இல் தனது நோபல் பரிசு மூலம் பெற்ற பணத்தையும் மற்றும் நன்கொடையாகக் கிடைத்ததையும் கொண்டு இராமன் அவர்கள் இராமன் ஆராய்ச்சி நிறுவனம் (Raman Research Institute)என்ற அமைப்பினை நிறுவினார். இதன் மூலமும் தனது கண்டுபிடிப்புகளை அணு விஞ்ஞானம், விண்ணியல், மரபியல், வேளாண் அறிவியல், உளவியல் (nuclear science,radio astronomy, genetics, agricultural science, Neuropsychology) என்பன போன்ற பலதரப்பட்டதலைப்புகளிலும் வெளியிட்டுள்ளார்.

இவர் ஒளியின்அணுச்சிதறல் (Molecular diffraction of light) (1022), புதிய இயற்பியல் The New physics (1951) என்பன போன்று ஆறு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இப்படியெல்லாம் தமிழகத்தின் புகழை இவ்வுலகிற்குப் பரப்பிய மாமேதை சர்.சி.வி. இராமன் அவர்கள் 1970ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 2ஆம் நாள் 'காந்திஜெயந்தி' உரையை ஆற்றினார். இதுவே இவருக்குக் கடைசி உரையாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. 1970ஆம்ஆண்டு நவம்பர்த் திங்கள்21ஆம் தேதி 82 வருடம் 14 நாட்கள் இவ்வுலக வாழ்விற்குப் பிறகு உயிர்நீத்தார்.

நன்றி: கலைக்கதிர்





# அவனி புகழ் ஆன்மீக நெறியாளர்

புலவர் தமிழ்ப்பித்தன்

வங்க மாநிலத்தின் தலைநகரான கல்கத்தாவில், வழக்குரைஞராக வாழ்ந்துவந்த விசுவநாததத்தர், புவனேஸ்வரி மாதா ஆகியோரின் 3வது குழந்தையாக 1863 ஜனவரி 12ஆம் நாளில் தோன்றினார் விவேகானந்தர்.

ஏற்கனவே இரு பெண்மக்களைப் பெற்றிருந்த தம்பதியர், ஆண் மகவைப் பெற்றதன் காரணமாக மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் மிதந்தார்கள். பிள்ளைக்கு நரேந்திரநாதன் என்று பெயர் சூட்டினார்கள்.

பிஞ்சுப் பருவத்திலேயே சாதுக்களிடமும் எளியவர்களிடமும் நரேந்திரனுக்கு மிகுந்த அனுதாபம் இருந்தது. இரவலர்கள் எவரேனும் அவர்களது இல்லத்தை நாடி வநது விட்டால் போதும், கிடைத்த பொருள்கள்ளயெல்லாம் அவர்களுக்கு வாரி வழங்கி ஆனந்தம் கொள்வான் நரேந்திரன்.

அன்னை புவனேஸ்வரி, தனது அரும்பெறல் மைந்தனுக்கு இலக்கிய அறிவையும், இறை உணர்வையும் முறையாகப் புகட்டிவந்தார்.

நரேந்திரனின் கல்வித்திறம், நினைவாற்றல் ஆகியவை - அவனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்களையே வியப்பில் ஆழ்த்தின. சமஸ்கிருத நிகண்டாகிய அமரகோசத்தை வெகுவிரைவில் மனனம் செய்தார்.

உயர்நிலைப்பள்ளிக் கல்வியின் போது ஆங்கில மொழி கற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அது அயல் நாட்டு மொழி என்று கருதி அதனைக் கற்க மறுத்த நரேந்திரன், பின்னர் அதன் இன்றியமையாமையை உணர்ந்து ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்தார.

பிரம்ம சமாஜம்என்னும் அமைப்பில் உறுப்பினர் ஆன நரேந்திரன், தட்சணேஸ்வரத்தில வசித்துவந்த ராமகிருஷ்ண பரமஹம்சர் என்னும் மகானைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவரைத் தமது சற்குருவாக ஏற்றுக்கொண்டார். குருதேவர் தியானம், தாரணம் ஆகியவற்றை நரேந்திரனுக்குக் கற்றுத் தந்தார்.

கல்லூரிப் பேராசிரியர்கள் வியக்கும்வகையில் பி.ஏ.தேர்வில்வெற்றி பெற்ற நரேந்திரன், பின்னர் வழக்குரைஞர் தொழிலுக்குரிய கல்வியைக் கற்க முனைந்தார்.

அந்தச் சமயத்தில் தந்தையார் மரணம் எய்தியதால் நரேந்திரனின் சட்டக் கல்விக்கு இடையூறு ஏற்பட்டது. குடும்பத்தில் வறுமை நிலையும் தலைகாட்டியது. குருநாதரின் அருளாசியின் காரணமாக வறுமைநிலை கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது.

எதிர்பாராமல் நோய்க்கு ஆளான குருநாதர் மறைவெய்தினார். அவரது சீடர்கள் பலரும் ஒருங்குகூடி, தங்களது குருநாதரின் பெருவாழ்வைப் பின்பற்றிப் புனித வாழ்வு வாழ வேண்டுமெனத் திட்டமிட்டனர். அவர்கள் அனைவருக்கும் தலைவர் ஆனார் நரேந்திரன். உலகப்பற்று அனைத்தையும் நீத்ததற்கு அடையாளமாக அவர்கள் காவியுடை அணிந்துகொண்டனர்.

மடத்தில் அடங்கிக்கிடப்பது பயன்தராது என்பதை உணர்ந்த நரேந்திரன நாடெல்லாம் சென்று, இறையுணர்வைப் பரப்ப வேண்டும் என முடிவு செய்தார். இமாலய யாத்திரையைத் தொடங்கினார். ஆபு மலைக்குச்சென்றார். அச்சமயம் அங்கு வந்திருந்த கேத்ரி மகாராஜா நரேந்திரனின் பெருமையை அறிந்து, அவரது சீடரானார். பின்னர் பல சுதேச மன்னர்களின் சமஸ்தானங்களுக்கும், பம்பாய் நகருக்கும் சென்று, பின்னர் புனாவை அடைந்தார் அங்கே இந்தியநாட்டின் விடுதலை வேள்வியில் ஈடுபட்டிருந்த பால கங்காதர திலகரைச் சந்தித்து - நாட்டின் முன்னேற்றம் குறித்துக் கலந்துரையாடினார்.

தென்திசை நோக்கிப் புறப்பட்டார். பெங்களூர் வந்து சேர்ந்த அவர், மைசூர் மன்னர் ஸ்ரீசாமராஜேந்திரரைச் சந்தித்தார்.

"அமெரிக்காவில் நடைபெற இருக்கும் அனைத்துச்சமய மாநாட்டுக்கு நீங்கள் சென்றுவர வேண்டும். அதற்குரிய பொருளுதவியை நான் வழங்கச் சித்தமாக இருக்கிறேன்'' என்று மைசூர் மன்னர் தெரிவித்தார்.

'தெய்வ சங்கற்பப்படி ஆகட்டும்' என்று கூறியபடி அங்கிருந்து புறப்பட்ட நரேந்திரர், கொச்சி, திருவனந்தபுரம், மதுரை, ராமநாதபுரம், ராமேஸ்வரம் ஆகிய ஊர்களுக்குச் சென்றார். ராமநாதபுரத்தில் சேதுபதி மன்னரின் தொடர்பு நரேந்திரனுக்குக் கிடைத்தது.

**விவேகானந்தரின் நூற்றிருபத்தைந்தாவது பிறந்தநாளையொட்டி இக்கட்டுரை இடம்பெறுகிறது**

"சுவாமிகள் அமெரிக்காவுக்குச் சென்று அனைத்துச் சமய மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆகும் செலவை நானே ஏற்றுக் கொள்கிறேன்" என்று சேதுபதி மன்னரும் தெரிவித்தார்.

நரேந்திரர் இதற்கு மறுமொழி எதுவும் தெரிவிக்காமல், அங்கிருந்து புறப்பட்டு கன்னியாகுமரிக்குச் சென்றார். அங்கே முக்கடல்களும் சங்கமமாகும் இடத்தில் ஒரு பாறையில் அமர்ந்து ஆழ்நிலைத் தியானம் செய்தார். அப்போது அவரது மனத்தில் பற்பல நல்லெண்ணங்கள் உதித்தன. ஞானம் பிறந்தது. இந்தியாவின் வெவ்வேறு விதமான பாங்குடைய மக்கள், மொழிகள், பழக்க வழக்கங்களுக்கிடையே உள்ள ஒற்றுமை அவருக்குப் புலப்பட்டது. சனாதன தர்மத்தின் மேன்மைகளை எடுத்துக் கூறி இந்திய நாட்டை ஒழுங்குபடுத்த எண்ணினார். தனது பெயரையும் விவேகானந்தா என மாற்றிக் கொண்டார்.

பின்னர் சென்னையை அடைந்த நரேந்திரருக்கு மாபெரும் வரவேற்பை நல்கினார்கள். சென்னை நகர மக்கள் 'ஆங்கிலம் பேசும் சாமியார்' என்று அவரை அழைத்தனர். மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் அவரைச் சந்தித்தனர். அமெரிக்காவில் நடைபெறவுள்ள அனைத்துச் சமய மாநாட்டில் அவர் கலந்து கொள்வதற்கான பொருளை நிதிவசூல் மூலமாகத் திரட்டித்தந்தனர். சென்னையில் அவர் தங்கியிருந்த இடம் விவேகானந்தர் இல்லம் என்று இன்றும் வழங்கப்படுகிறது.

1893 மே மாதம் 31ஆம் நாள் இறைவனின் திருப்பெயரை உச்சரித்தவாறு பம்பாய்த் துறைமுகத்திலிருந்து பெனின்சுலார் என்ற கப்பலின் மூலம் பயணத்தைத் தொடங்கினார். கொழும்பு, பினாங்கு, சீனா, ஆங்காங், ஜப்பான் வழியாகச் சென்ற அந்தக் கப்பல் அமெரிக்காவை அடைந்தது. அங்கு கனடா நாட்டைச் சேர்ந்த வான்கூவர் என்னும் இடத்தை அடைந்தார். பின்னர் சிகாகோ போய்ச் சேர்ந்தார்.

அனைத்துச் சமய மாநாடு நடைபெறுவதற்கு இன்னும் இரண்டு மாதங்கள் உள்ளன என்ற தகவலைத் தெரிந்து கொண்ட விவேகானந்தர் பாஸ்டன் நகருக்குப் புறப்பட்டார். பயணத்தின் போது சந்தித்த மூதாட்டி ஒருத்தியின் மூலம் ஜே.எச்.ரைட் என்னும் பேராசிரியர் ஒருவரின் அறிமுகம் கிடைத்தது. பேராசிரியர், விவேகானந்தரின் பெருமையை உணர்ந்தார். சிகாகோ மாநாட்டில் இந்து சமயத்தைக் குறித்துப் பேச வேண்டும் என்று அவர், விவேகானந்தரைக் கேட்டுக் கொண்டார்.

1893 செப்டம்பர் 11ஆம் நாளன்று சிகாகோவில் நடைபெற்ற அனைத்துச் சமய மாநாட்டில் விவேகானந்தர் கம்பீரமாக முழங்கினார்.

"சீமாட்டிகளே! சீமான்களே' என்று பொது மக்களை விளிக்கும் பண்புள்ள நாட்டில் விவேகானந்தர் மேடையேறி, 'சகோதரிகளே' சகோதரர்களே' என்று அழைத்தவுடன், மக்கள் மன்றம் வியப்பில் ஆழ்ந்தது. அவரைப் பாராட்டிப் போற்றியது. அவரது சொற்பொழிவு அனைவரையும் கவர்ந்தது. இந்து சமயத்தின் பெருமையை எல்லாரும் உணர்ந்தனர். பலர் அவரைப் பின்பற்றத் தொடங்கினர். பல இடங்களில் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டார். அந்நாட்டில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள, நூல வடிவமும் பெற்றன. அவரது உரையின் விளைவால் அமெரிக்க நாட்டில் பல இடங்களில் வேதாந்தச் சங்கங்கள் தோன்றலாயின.

இங்கிலாந்திலிருந்தும் அவருக்கு அழைப்புகள் வந்தன. அங்கே சென்று சொற்பொழிவாற்றினார். அங்கே மார்கரெட் நோபிள் என்னும் பெண்மணி "நீங்கள் சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை" என்று சொல்லிய போது, "இன்று புரியாவிட்டாலும் நாளை புரியும்" என்று பதிலளித்தார் விவேகானந்தர். அந்தப் பெண்மணி, விவேகானந்தரின் தத்துவ முழக்கத்தால் கவரப்பட்டு, மக்கள் தொண்டில் ஈடுபட்டார். சகோதரி நிவேதிதை என்று விவேகானந்தரால் பெயர் சூட்டப்பட்ட அந்தப் பெண்மணி, இந்தியாவுக்கு வந்து நாட்டுத் தொண்டு புரிந்து நற்பெயர் பெற்றார். இவரைத் தனது குருநாதராக மகாகவி பாரதியார் கருதியதும், இவர்மீது புகழ் மாலை சூட்டியதும் நாடறிந்த செய்திகள்.

மேலைநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு 1897 ஜனவரி 15ஆம் நாளன்று இலங்கை வந்தார் விவேகானந்தா. அங்கு அவருக்கு அமோகமான வரவேற்புக் கிடைத்தது. பற்பல சொற்பொழிவுகளை நிகழ்த்திவிட்டு, இந்தியாவுக்குத் திரும்பிய விவேகானந்தர் இராமநாதபுரத்திற்கு வந்துசேர்ந்தார். விவேகானந்தரின் சீடராக விளங்கிய ராஜா பாஸ்கர சேதுபதி விவேகானந்தரின் வெளிநாட்டுப் பயண வெற்றியின் நினைவாக வெற்றித் தூண் ஒன்றினை நிறுவினார்.



பின்னர், தமிழகத்தில் பற்பல நகரங்களுக்கும் சென்று சொற்பொழிவாற்றினார் விவேகானந்தர். ஆங்குச் சொற்பொழிவு ஆற்றிய போதும் நாட்டு முன்னேற்றம், நாட்டு விடுதலை ஆகியவற்றையும் அவர் எடுத்துரைத்தார்.

சுற்றுப்பயணத்தை முடித்து, வங்கம் சென்றடைந்த விவேகானந்தர் 1897 [illegible] திங்களில் ராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர்கள் அனைவரையும் ஒருங்குகூட்டி, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் என்னும் அமைப்பை நிறுவினார். தவம், சாத்திர ஆராய்ச்சி, தியான சாதனைகள், பிறர்க்குதவி என்னும் நெறிகளின் மூலமாக வாழ்க்கையை மேம்படுத்துவது அச்சங்கத்தின் குறிக்கோள் ஆயிற்று.

1902 ஆம் ஆண்டு ஜூலை நாலாம் நாள். விவேகானந்தர் திருமடத்து உள்ள ஆலயத்தின் உள்ளே சென்று [illegible] கதவுகளையெல்லாம் தாளிட்டார். நான்கு மணி நேரம் ஆழ்நிலைத் தியானத்தில் ஈடுபட்டார். பின்னர் வழக்கத்திற்கு மாறாக அவர் அமுதுபாகம் தயாரித்துச் சீடர்களுக்குத் தமது திருக்கரத்தால் பரிமாறினார். மாலையில் குருசகோதரர் ஒருவருடன் உலாவி வந்தார்.

மாலைவேளை - கோயில் தீபாராதனை நடைபெற்றது. தம்மைச் சூழ்ந்திருந்த சீடர்களை ஆலயத்திற்கு அனுப்பிவிட்டு, தமது அறைக்குள்ளே ஆழ்நிலைத்தியானம் புரியத் தொடங்கினார்.

கிழக்கு முகமாக அமர்ந்து தியானத்தில் ஈடுபட்ட அவரது புலன்கள் சிறிதுசிறிதாக ஒடுங்கின. சுவாசப் போக்குவரவும் சிறிதுசிறிதாக ஒடுங்கியது. அவரது ஆன்மா இயற்கையில் கலந்தது. அவர் அமரத்துவம் எய்தினார்.

இந்திய நாட்டின் இறையுணர்வையும் ஒழுக்க வாழ்க்கை முறைகளையும் பற்றி அந்நிய நாட்டுக்கு எடுத்துரைத்து அவர்களை வியப்பில் ஆழ்த்தியதுடன் இந்து சமயத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்த பெருமை விவேகானந்தருக்கு உண்டு.

'உலகை வெறுத்து ஓடுபவன் துறவியல்ல. சமுதாயத்தில் ஆக்கமும் சீரும் சிறப்புற்றிருக்கையில், இவை யாவற்றிற்கும் உயர்ந்தது பாரமார்த்திகம் என்றறிந்து, அதை ஆழ்ந்து நாடுபவனே உண்மையான துறவி! என்று கூறிவந்த விவேகானந்தர் இந்திய நாட்டில் தோன்றிய ஆன்மிக நெறியாளர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.





# தஞ்சையில் அபூர்வக் கல்வெட்டு கண்டுபிடிப்பு

தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டிய மாமன்னன் இராஜராஜன் காலத்து அபூர்வக் கல்வெட்டொன்று அண்மையில் டிசம்பர் 88 தஞ்சை சீனிவாசபுரம் அருகே கண்டெடுக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு தொல்பொருளாய்வுத் துறையின் தொல்பொருள் அலுவலர் திரு சொ.சாந்தலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

சீனிவாசபுரத்தில் தனியார் ஒருவர் வீடு கட்டுவதற்காகக் கடைக்கால் தோண்டும்போது, கல்வெட்டுக்களோடு கூடிய அழகிய தூண் ஒன்று கிடைத்தது. இதன் வரலாற்று முக்கியத்துவத்தை அறியாத, இடத்தின் சொந்தக்காரர் அந்தத் தூணைத் துண்டு துண்டாக உடைப்பதைப் பார்த்த வரலாற்று உணர்வு கொண்ட தஞ்சாவூர் 'இந்து' நாளிதழ் செய்தியாளர் உடனே தஞ்சையிலுள்ள தொல்பொருள் ஆய்வுத்துறை அதிகாரிகளிடம் இத்தகவலைக் கூறினார்.

தஞ்சை அதிகாரி மூலம் செய்வதறிந்து, தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் பொறுப்பு வகிக்கும் திரு நடன.காசிநாதன் உடனடியாக அக்கல்வெட்டுத் தூணை இராஜராஜன் அருங்காட்சியகத்திற்குக் கொண்டு சென்று காட்சியில் வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கூறியதற்கொப்ப, இக்கல்வெட்டு தற்பொழுது இராஜராஜன் வரலாற்றுக் காட்சிக் கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இத்தூணில் மூன்று கல்வெட்டுகள் எழுதப்பட்டுள்ளன. மூன்று கல்வெட்டுக்களும் மாமன்னன் முதலாம் இராஜராஜனின் வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்துரைக்கின்றன. பொதுவாக வடமொழிக் கல்வெட்டுகள் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கும். ஆனால் இத்தூணில் வடமொழியைத் தமிழ் எழுத்துக்களில் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே, புதுமுறையில் உள்ள இக்கல்வெட்டு இராஜராஜனின் பெருமைக்கு மேலும் புகழைச் சேர்ப்பதாக அமைகிறது.



## இலங்கையின் முதல் தமிழ் மாநில முதல்வர்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக உருவாக்கப்பட்டுள்ள இலங்கையின் முதல் தமிழ் மாநில அரசான வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சராக திரு அ.வரதராஜப்பெருமாள் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். கொழும்பிலுள்ள இலங்கை ஜனாதிபதி மாளிகையில் 9.12.88 அன்று பதவிப் பிரமாணமும் இரகசியக் காப்புப் பிரமாணமும் எடுத்துக் கொண்டு புதிய முதல்வராகப் பொறுப்பேற்றார்.



தமிழ்நாடு அரசு, செய்தி மக்கள் தொடர்புத் துறையில் 30 ஆண்டுகள் பணியாற்றி, 'தமிழரசு' உதவி இயக்குநராக ஓய்வு பெற்ற செல்வி ஆர். இராசலட்சுமி பாரதி அவர்களுக்கு, வழியனுப்பு விழா 30.11.1988 அன்று சென்னை அரசினர் தோட்டத்தில் தமிழரசு அலுவலகத்தில் நடைபெற்றது. செல்வி ஆர். இராசலட்சுமி பாரதி அவர்களுக்கு, 'தமிழரசு' சார்பில் தமிழக அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ண பாரதி அவர்கள் நினைவுப் பரிசு அளித்து வாழ்த்துரை வழங்கினார்.

# பார்த்தோம் படித்தோம்



1.12.88 இதழில், மூதறிஞர் இராஜாஜி, மகாகவி பாரதியின் திருவுருவப்படம் மற்றும் கருத்துரைகள் என் மனத்தை மிகவும் கவர்ந்து விட்டன.

—கே. செந்தில்,
வையப்பமலைத் தொட்டியம்பட்டி.

பாரதியார், இராஜாஜி வாழ்க்கைக் குறிப்புகள் பயனுள்ளவையாக இருந்தன.

—என். பிரபாகரன்,
மேல்பாளைத்தல்.

'மாணவர் பக்கம்' பாதுகாக்கப் படவேண்டிய பகுதி.

—மோகன்,
தொட்டியம்பட்டி.

''மூதறிஞரின் பொன்மொழிகள்'' மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

—எல். முத்து; எல். பழனி
ஊத்தங்கரை

தேசத் தியாகிகளின் வாழ்க்கை வரலாறு படம்பிடித்துக் காட்டப் பட்டுள்ளது.

—க. வெற்றிவேல்,
உதயமார்த்தாண்டபுரம்.

தமிழ்நாட்டில் பிரதமர் சுற்றுப் பயணம்-நடுப்பக்கப் படங்கள் கண்ணைக் கவர்ந்தன.

—என். கதிர்காமன்,
பி. வேலாங்குளம்

'தமிழரசு' ஏட்டில் தலைவர்கள் வாழ்க்கைக் குறிப்புகள் தேதிகளுடன் வெளியிடப்பட்டு வருவது பெரிதும் பாராட்டற்பாலது; சிறந்த பயன் தருவதாகும். 1.12.88 தமிழரசு இதழில் மூதறிஞர் இராஜாஜி வாழ்க்கைக் குறிப்பு தேதிகளுடன் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு முக்கியமான நிகழ்ச்சி விடுபட்டுள்ளது. அது, அவர் 1940 தனிப் பட்டோர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு, ஓராண்டு தண்டனை பெற்று திருச்சி சிறையில் இருந்த நிகழ்ச்சி. அதுபோது நானும் சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவனாக, அவருடன்கூட இருந்தேன்.

—தியாகி. எஸ். கிருஷ்ணசாமி பாரதி
தஞ்சாவூர்.

'போர் முரசு கொட்டிய கவி முரசு' கட்டுரை அருமை.

—ஜி. மகேந்திரன்,
கற்பகநாதன்குளம்.

பாரதி, இராஜாஜி வாழ்க்கைக் குறிப்புகள் மற்றும் இந்த இதழில் (1.12.88) இடம் பெற்றுள்ள செய்திகள் பயனுள்ளவையாக இருந்தன.

—பி. ஈஸ்வரநாதன்,
கீழைப்பெருமழை.

இராஜாஜியின் வாழ்க்கைக் குறிப்பு—நாட்டுப்பற்றை ஊட்டும்.

—எம். எஸ். செந்தில்ராஜ்,
செக்காரப்பட்டி

'அச்சமும் வெறுப்பும் அறவே இல்லாத மனிதர்' கட்டுரை நேருவின் வாழ்க்கைச் சிறப்புக்களை எடுத்துக் காட்டியது

—ப. ஷேக் அலாவுதீன்,
திருநெல்லிக்காவல்.

பண்டித நேருவைப் பற்றிய கட்டுரை சிறப்பு

—வி. கே. வீரசேகரன்,
விக்கிரபாண்டியம்.





# அல்லிக்குளத்தில் அங்காடி வளாகம்

சென்னையில் மிகவும் பிரபலமான இடமாக விளங்கி வந்தது மூர்மார்க்கெட். எல்லாவிதமான பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கும் வகையில் இந்த மார்க்கெட் அமைந்திருந்தது.

வெளியூர்களில் இருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் சென்னை வரும் சுற்றுலாப்பயணிகள் மூர் மார்க்கெட்டுக்குச் செல்லாமல் திரும்பிச் செல்வது கிடையாது.

இந்தப் பிரசித்தி பெற்ற மூர் மார்க்கெட் கடந்த 1985ஆம் ஆண்டு மே மாதம் திடீர்த் தீ விபத்தில் அடியோடு நாசமாகியது.

மூர்மார்க்கெட் இருந்த இடம் ரெயில்வே நிர்வாகத்துக்குச் சொந்தமானதால், அந்த இடத்தில் ரெயில்வே டிக்கட்டுகள் ''பதிவு'' செய்யும் 10 மாடிக் கட்டடம் கட்டப்பட்டது. இதனால் எரிந்து போன மூர்மார்க்கெட்டில் கடை வைத்திருந்த வியாபாரிகள் சிரமப் பட்டனர்.

அப்போது முதலமைச்சராக இருந்த டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் மூர்மார்க்கெட், வியாபாரிகளை அழைத்துப் பேசினார். அவர்களுக்குப் புதியதாகக் கடைகள் கட்டித்தரப்படும் என்ற உறுதி மொழியையும் தந்தார்.

மூர்மார்க்கெட் அருகே பயன்படாமல் இருந்த அல்லிக்குளத்தில் வியாபாரிகளுக்குக் கடைகள் கட்டித் தரும்படியும் உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து அல்லிக் குளத்தில் கடற்கரை மணலைப் போட்டு மூடி, சமப்படுத்தினார்கள்.

குடியரசுத்தலைவர் ஆட்சி தமிழ் நாட்டில் அமலுக்கு வந்த பிறகு மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர், அந்த அல்லிக் குள வளாகத்தில் புதிதாக மூர்மார்க்கெட் அமைப்பதற்கான அடிக்கல் 14.3.'88 அன்று நாட்டினார்.

எரிந்து போன மூர்மார்க்கெட்டில் கடை வைத்திருந்த 857 வியாபாரிகளின் மறுவாழ்வினைக் கருத்தில் கொண்டு, அல்லிக்குள வளாகத்தில் புதிய மூர்மார்க்கெட் கட்டடத்தைச் சென்னை மாநகராட்சி வடிவமைத்துள்ளது. இந்த மூர்மார்க்கெட் வடிவமைப்பும் அனைத்து கட்டுமானப் பணியும் தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் முழுதுமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அல்லிக்குள வளாகத்தில் மீண்டும் புதிய மூர்மார்க்கெட் கட்டும் பணி 4.12.88 அன்று தொடங்கியது. நவீன கட்டடக் கலைக்கு எடுத்துக் காட்டாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடம் 4 மாடிகளைக் கொண்டதாகும். கட்டடத்தின் அடித்தளத்தில் 20 வாகனங்கள் நிறுத்தும் வசதியும், ஒரு சிற்றுண்டிச் சாலையும் அமைக்கப்பட உள்ளது.

கட்டடத்தின் மையப் பகுதியில் எல்லா மாடிக்கும் உரிய ஒளி கிடைக்கும் வகையில் திறந்த வெளியாக அமைக்கப்படுகிறது. இந்த திறந்த வெளியைச் சுற்றி வாடிக்கையாளர்கள் எல்லா மாடிகளுக்கும் எளிதில் செல்லும் வண்ணம் சுற்று நடைபாதை அமைக்கப்படுகிறது. போதுமான தீயணைப்பு வசதிகளுடன் கட்டட வடிவமைப்பு சீர் செய்யப்பட்டு உள்ளது. கட்டடத்தின் மொத்தப் பரப்பளவு 12,500 சதுரமீட்டர் ஆகும்.

பழைய மூர்மார்க்கெட் இருந்த இடத்திற்கு அருகிலேயே அமையும் புதிய மூர்மார்க்கெட் கட்டடத்தின் முகப்புத் தோற்றம் பழைய கட்டடத்தின் கட்டடக் கலையை பிரதிபலிக்கும் வண்ணம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் கட்டட வேலை முடிவடைந்துவிடும். 1991-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் புதுப்பொலிவுடன் அழகுபடுத்தும் புதிய மூர்மார்க்கெட்டாக இது அமையும். புதிய மூர்மார்க்கெட்டின் மொத்த கட்டுமான திட்ட மதிப்பீடு ரூ. 6 கோடியே 23 இலட்சமாகும்.



# சென்னைக் குடிமதிப்பு

"சென்னை" என்னும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு சென்னையில் முதன்முதலாக 1871-ஆம் ஆண்டு இறுதியில் நடைமுறைக்கு வந்தது. இதனையொட்டி, சென்னை மக்களுக்குத் தெரிவித்த அறிவிப்பு ஒன்று பழம்பெரும் மாத பத்திரிகையான "ஞானபானு" 1871ஆம் ஆண்டு ஆகஸ்டு மாத இதழில் (பிரசோற்பத்தி ஆவணி மாதம்) வெளியானது. அது அப்படியே இங்கு வெளியிடப்படுகிறது.

இங்கிலாண்டு மகாராணி விக்டோரியா அவர்கள் பூமண்டலத்தில் தமது துரைத்தனம் நடந்துவருகிற எல்லா ஸ்தானங்களிலும் இருக்கிற குடிகளின் தொகை இவ்வளவென்று ஏற்படுத்தித் தெரிந்து கொள்ள அபேக்ஷித்தார்கள். அவர் கட்டளையின்படி இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இன்னும் கடலிலுள்ள தீவுகள் இவ்விடங்களிலெல்லாம் நானது 1871 மே மாதத்தில் குடித்தொகை கண்டறியப்பட்டது. இங்கிலாண்டு தேசத்தில் இந்த மாதிரியாகப் பத்து வருஷத்துக்கு ஒருமுறை நடந்து வருகிறது. ராணியவர்கள் இப்பொழுது இங்கிலாண்டில் நடந்து வருவது போலவே தாம் ஆளுகின்ற எல்லா இடங்களிலும் குடித்தொகை எடுக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்கள். இப்படிச்செய்வது குடிகளைத் தாம் எப்படி ஆளுவது தகுந்திருக்குமென்று தெரிந்து கொள்வதற்கும், அவர்களுக்குச் சுகமுண்டாவதற்கும், அவர்கள் அசவுக்கியத்திறகேற்ற காரியங்களை நடத்துவதற்கும் அனுகூலமாகயிருக்குமென்பது அவருடைய உத்தேசம். சென்ற மே மாதம் மிகு வெய்யற்காலமானதால் இவ்வாறு குடித்தொகை எடுக்கப் படவில்லை.

இப்போது ராணியவர்களின் பிரதிநிதியான கவர்னர் ஜெனரலவர்கள் வருகிற நவம்பர் மாதத்தில் இந்தக் குடித்தொகை எடுக்கும்படி உத்தரவு செய்திருக்கிறார். ஆகையால் அந்த மாதத்தில் அதற்காக நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்கள் வீடுதோறும் வந்து அதில் இருக்கும் ஜனம் இத்தனையென்று கண்டு குறித்துக் கொள்வார்கள். இந்தப் பட்டணத்திலே இராணியவர்களுடைய கட்டளைப்படி, குடித்தொகை எடுப்பதில் இது முதல் தடவையாகையால், சர்க்கார் கணக்கில் எள்ளளவும் பிசகில்லாதிருக்க வேண்டுமென்று மிகவும் ஆவல் கொண்டிருக்கிறார்கள். படிப்பும் விவேகமும் இல்லாத ஜனங்கள் சர்க்கார் உத்தரவுகள் இன்னவையென்று அறியாமலும், கட்டளைப்படி நடவாமலும் இருப்பவர்கள் அலேகருண்டென்பது நன்றாய்த் தெரிந்த விஷயமாகையால்

> **இந்தியாவில், மக்கள் தொகை கணக்கெடுப்பு முதன் முதலில் 1881-ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது. அப்போது இந்தியாவின் மக்கள் தொகை 21 கோடி.**

இந்தக் குடித்தொகை இரண்டு தரமெடுப்பது அவசியமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

இப்படிச் செய்வதனால் முதல் தடவையில் கணக்கெடுப்பதில் நேரிடும் பிசகு இரண்டாம்தரம் திருத்தப்படும். ஆகையால் இதற்காக நேமிக்கப்படும் உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு வீட்டிலும் முதல் தடவை செப்டம்பர் மாதத்திலும், மறு தடவை நவம்பர் மாதத்திலும் வருவார்கள். முனிசிபல் கமிஷனர் என்கிற நகர விசாரணைச் சபையார் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்கள். சில ஜனங்கள் இக்குடித்தொகை எடுப்பதினால் தலைக்கட்டு வரியோ, இன்னும் ஏதாவொரு கெடுதியோ சம்பவிக்குமென்று நினைப்பதாய்த் தோன்றுகிறது. அப்படி நினைப்பவர்கள் தெரியாதவர்கள்.

இப்படிக் கணக்கெடுப்பதெல்லாம் நன்மைக்கே காரணமாம். அதெப்படி என்றால் "குசஸ்தலை" ஆற்றிலிருந்து சுத்தமான ஜலம் விசேஷமாய்க் கொண்டு வரப்போகிறார்கள். அதைக் குடிப்பவர்கள் இத்தனை பேர்களென்று தெரிந்து கொண்டாலல்லவா தகுந்த நலம் கொண்டு வரலாம். இப்போது அசங்கியமாயிருக்கிற ஜலதாரைகளையொழித்து நூதனமாய் நல்ல மாதிரியான ஜலதாரைகளைக் கட்டப்போகிறார்கள். அவைகளில் இத்தனை ஜனங்கள் கையாளும் தண்ணீர் விழுமென்று அறிந்து கொள்ளாவிட்டால் அவைகளைத் தக்கபடி கட்டுவதெப்படி?.... இனி ஏழைப் பிள்ளைகள்கூட கல்வியில் தேறும்படி பாடசாலைகள் ஏற்படுத்தப் போகிறார்கள். அவைகளில படிப்பிக்கவேண்டிய பிள்ளைகள் இத்தனையென்று அறிவதற்கு முன்பின பாடசாலைகள் எப்படிக் கட்டலாம்? ஆங்காங்கே தரும வைத்தியசாலைகள் இருப்பதினால் ஜனங்களுக்கு உபகாரமுண்டென்பது தெரிந்த விஷயமானதால், இத்தனை பேர் வியாதி அடைந்து வைத்தியம் செய்து கொள்ளுவார்களென்று தெரிந்தால்தானே, வேண்டியமருந்துகளை அமைத்து வைத்து அவைகளை விருத்தி செய்ய வகை தெரியும்.

ஆகையால் முதலில் ஊரிலிருப்பவர்கள் இத்தனை பேரென்று தெரிந்தால் இக்காரியங்களெல்லாம் சரியாய் நடத்தப்பட்டு எல்லோருக்கும நன்மையுண்டாகும். இதுபற்றி விவேகமுள்ளவொருவரும் குடித்தொகையெடுக்க உதவி செய்ய வேண்டும். இத்தொகை எடுக்க வரும்போது அவரவரும் தன் வீட்டிலிருப்பவர் இத்தனை பேரென்பது, அவர்கள் வயது எத்தனையென்பதும், அவர்களில் படிக்கத்தெரிந்தவர் இத்தனை பேரென்பதும், பிசகில்லாமல் சொல்ல வேண்டும். இப்படிச் செய்வதால் எல்லாம் நன்மையாய் முடிந்து சீக்கிரத்தில் ஜனங்களே குடித்தொகையெடுப்பது சரியான சாயமென்றும், பேசத் தலைப்படுவார்கள். விஷயத்தைக் கண்டறிய இஷ்டமில்லாதவர்களாயும், தங்களுக்கு நன்மை இன்னதென்றுகூடத் தெரிந்து கொள்ளாத பேதைகளாயும் சிலர் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்குத் தண்டனை இருக்க வேண்டியது. ஆகையால் எவனாவது குடித்தொகையெடுக்கும் உத்தியோகஸ்தர் கேட்ட கேள்விக்கு உத்தரவு சொல்லாமல்போனாலும், பிசகாய்ச் சொன்னாலும், வீணாய் அவர்களைச் சாவகாசப்படுத்தினாலும் அல்லது மோசஞ்செய்யப் பிரயத்தனப்பட்டாலும் அவர் மாஜிஸ்திரேட்டுக்கு முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு ரூபாய் 200 வரை அபராதம் விதிக்கப்படுவார்.

தொகுப்பு: ரகமி



# நூல் நயம்

**காமராஜ் வரலாறு**
ஆசிரியர்: மு.நமசிவாயம்
வெளியீடு: தென்னிந்திய தமிழ்ச் சங்கம்,
விற்பனை உரிமை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 154, டி.டி.கே. சாலை, சென்னை-18.
விலை ரூ. 50 பக்கம்: 608

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் இளமைப்பருவம், தொண்டுப் பருவம் ஆகிய இரு கட்ட வாழ்க்கை வரலாற்றைச் சுவைததும்பும் வகையில் எழுதியிருக்கிறார் திருபர்-எழுத்தாளர் மு.நமசிவாயம்.

விருதுநகரில் நாட்டாண்மைக்காரர் ஒருவரின் மகள் வயிற்றுப் பேரனாகப் பிறந்த காமராஜ், தாய்நாட்டுப் பற்றின் காரணமாகவும், காந்தியடிகள் மீது கொண்ட பக்தியின் விளைவாலும், மாபெரும் தொண்டராக மாறி, பலருக்கும் வழிகாட்டியாக விளங்கி, பல்லாயிரக்கணக்கானவர்களின் நெஞ்சங்களில் இடம்பெற்ற மாபெரும் தலைவராகப் பரிணமித்த செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

கத்தாழம் பழம் சாப்பிட்டு, உயிருக்கு மன்றாடிய சிறுவனுக்கு கிராமத்து வைத்தியரின் மூலம் தக்க சமயத்தில் சிகிச்சை அளித்து, அவனைக் காப்பாற்றியது (பக்கம் 113), நண்பன் ஒருவனைத் தாக்கவந்த எருமையிடமிருந்து அவனைக் காத்தது (பக்கம் 122), பக்காத் திருடனைப் பிடித்தது (பக்.176), செங்கற்சூளையில் விபத்துக்கு ஆளாக இருந்த ஒரு நண்பனின் உயிர் காத்தது (பக்.198), மாரியம்மன் கோவில் திருவிழாவில் காணப்பட்ட ஜாதி வேற்றுமைச் செயலை எதிர்த்துப் போராடியது (பக்.207), மருளூத்து கிராமத்தில் வீடுகளில் சூழ்ந்த தீயை நண்பர் குழாத்துடன் துணிச்சலாகச் சென்று அணைத்தது (பக்.257), பிள்ளை பிடிக்கும் ஒருவன் பிடித்துச் சென்ற சிறுவனைச் சாமர்த்தியமாக மீட்டது(பக்.262), தனது சக மாணவனுக்கும் சேர்த்து வீட்டிலிருந்து உணவுகொண்டுவந்து அவனுக்குக் கொடுத்து மகிழ்ந்தது(பக்527), ஜல்லிக்கட்டு மாட்டினிடமிருந்து பள்ளிச் சிறுவன் ஒருவனைக் காப்பாற்றியது (பக்552), ஒரு நண்பன், வழக்கின் காரணமாக இழக்க இருந்த வீட்டைச் சமரச முயற்சியால் காப்பாற்றிக் கொடுத்தது (பக்.575), பெற்றோரே தொட அஞ்சும் நிலையிலிருந்த குஷ்டநோயாளி நண்பனை, தானே தூக்கிச் சென்று, சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து, அவனது நோய் நீங்கச் செய்தது (பக்.583), திருவனந்தபுரத்தில் வேலை பார்க்கச் சென்ற சமயத்தில் அங்கே ஒரு மரத்தில் தூக்குப் போட்டுக்கொள்ள முயன்ற ஓர் இளைஞனைக் காப்பாற்றி அவனுக்கு அறிவுரைகூறி, மேற்படிப்புக்கு வசதி செய்து கொடுத்தது (பக்.404)...

—இப்படி எண்ணற்ற நிகழ்ச்சிகளின் மூலம், இளம பருவத்திலேயே காமராஜரிடம் நட்பு, தயை, அன்பு, ஆற்றல், விசுவாசம், துணிவு நியாய உணர்வு, கொள்கை உறுதி, பெரியோரிடம் மரியாதை ஆகிய அரும் பண்புகள், வீர தீர சாகசச் செயல்கள் செய்யும் திறன் செறிந்திருந்தன என்பதை நூலாசிரியர் தெளிவாகத் தெரிவிக்கிறார்.

அந்நிய ஏகாதிபத்தியம் நமது இந்தியநாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற கருத்தை மக்கள் மன்றத்தில் காமராஜர் வலியுறுத்திய விதம் அருமை; அற்புதம்.

"நம்ம வீடு இருக்கு! பக்கத்து வீட்டுக்காரர் நம்ம வீட்டுக்குள்ளே வந்து அதிகாரம் செய்தா நீங்க விடுவீங்களா என்ன! இப்படித்தான் ஆறாயிரம் மைலுக்கப்பாலே இருக்கிற ஊரில இருக்குற வெள்ளைக்காரன் நம்ம நாட்டுக்கு வந்திருக்கான்"

—முதல் மேடையிலேயே இவ்வாறு வாதத்திறனுடன் எளிமையாகப் பேசியிருக்கிறார் காமராஜர் என்பதை உணரும்போது—ஒரு வழக்குரைஞரின் திறம் அவரிடம் குடிகொண்டிருந்தது என்பது புலனாகிறது.



'காமராஜர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் எப்படி விளங்கினார் என்பதையும் இந்நூலின் தொடக்கத்திலேயே (பக்கம் 1-51) நூலாசிரியர் எழுதியுள்ளார். காமராஜரின் மனித நேய உணர்வு, தொண்டர்களை மதிக்கும் பண்பு, அரசியல் நாகரிகம், ஆங்கிலமொழி ஆற்றல் ஆகியவை இந்தப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

காமராஜரின் வாழ்க்கை நிகழ்ச்சி ஒவ்வொன்றையும் பற்றி நூலாசிரியர் எழுதியுள்ள பாணி அந்த நிகழ்ச்சிக்குரிய காட்சியை நமது மனக்கண் முன்னே திழலாடச் செய்துள்ளது. ஆசிரியர், நூலாக எழுதியுள்ளார் என்று சொல்வதைவிட, தமது எழுத்துத்திறமையால், காமராஜரின்வாழ்க்கையைத்திரைப்படக் காட்சியாக உருவாக்கியிருக்கிறார் என்று கூறுவது பொருந்தும்.

—தமிழ்ப்பித்தன்

**வட்டிக்குப் பணம் கொடுத்தல் பற்றிய புதிய சட்டங்கள்**

ஆசிரியர்: டாக்டர் சோ.சேசாசலம்
வெளியீடு: நர்மதா பதிப்பகம்,
16, ராஜா பாதர் தெரு,
தியாகராயநகர்,
சென்னை-17.

விலை ரூ.6 பக்கம்: 80

கடன் வாங்குவது கூடாது என்பதை நமது முன்னோர் வலியுறுத்தி வந்த போதிலும், அந்தக் கொள்கையை எல்லோராலும் கடைப்பிடிக்க முடியாது போய் விடுகிறது. 'மக்கள் சில சமயங்களில் அசையும் சொத்து (நகை, வாகனம்) அசையாச் சொத்து(நிலம், வீடு) போன்றவற்றை அடகு வைத்துக் கடன் பெற்றுக் கடனாளிகளாக ஆவதுண்டு. சில சமயங்களில் கடன் கொடுத்தோர், கடன் பெற்றோரை மிகுந்த தொல்லைக்கும் துன்பத்துக்கும் ஆளாக்குவதும் உண்டு. இதனை உணர்ந்த மத்திய அரசும் மாநில அரசுகளும் அவ்வப்போது தேவைப்படும் கடன் நிவாரணச் சட்டங்களை இயற்றி, நடைமுறைப்படுத்திக் கடனாளிகளுக்குக் கதிமோட்சம் அளிக்கின்றன.

கடனாளிகளின் நலன்காப்பதற்கு அறிமுகமான சட்டங்கள், அவற்றால் விளைந்த நன்மைகள், மேற்படி சட்டங்களைக் குறித்த விரிவான செய்திகள், வட்டி விதிக்கப்படவேண்டிய விகிதங்கள் ஆகியவை குறித்து இந்நூல் விளக்கம் செய்கிறது.

வட்டிக்கடை வைப்போர் பின்பற்றவேண்டிய விதிகள், தமது உரிமத்தை அடுத்தவருக்கு மாற்ற விரும்பினால் அதற்குரிய வழிமுறைகள், ஆகியவற்றையும் நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

மீள வகை தெரியாது தவிக்கும் கடனாளிகள் மீட்சிக்கு எந்தச் சட்டத்தைத் துணைக்கொள்ளலாம் என அறிந்து கொள்ள இந்நூல் உதவுகிறது.

**இளைஞர்களே உங்களுக்கு வரதட்சணை வேண்டுமா?**

ஆசிரியர் : எஸ். குலசேகரன்,
வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம்
15, முத்துப்பிள்ளை
தெரு,
வ.உ.சி.நகர், வேலூர்-
வடார்க்காடு
மாவட்டம்-632 001.

விலை : ரூ. 9.75. பக்: 104.

சமுதாயத்தில், தீண்டாமைக் கொடுமைக்கு அடுத்தபடியாக, கொடுமை விளைவிப்பது 'வரதட்சணை'யாகும். வரதட்சணைக் கொடுமையின் காரணமாகப் பெண்கள் பலர் வாழ்விழந்து, துன்புற்று, உயிரிழக்கும் சூழ்நிலையும் ஏற்படுகிறது.

வரதட்சணை சமுதாயத்திலிருந்து அகற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தப் பல்வேறு செய்திகளையும்,அறிவுரைகளையும் நூலாசிரியர் தெரிவித்திருப்பது பாராட்டுக்குரியது. முற்காலத்தில் வரதட்சணை வாங்கும் பழக்கம் தமிழகத்தில் கிடையாது என்னும் உண்மையைக் கல்வெட்டுகளின் மூலமும் சான்று காட்டி நிறுவியிருப்பது ஆசிரியரின் பரந்த அறிவைப் பறைசாற்ற உதவுகிறது. இளைய தலைமுறையினர்க்கு இந்நூல் வழிகாட்டியாக விளங்குகிறது என்று சொல்லலாம்.

—எஸ்.எஸ். சுந்தரம்

**கூடி வாழ்வோம்!**

ஆசிரியர் : பூங்கோவன்

வெளியீடு: நிர்மல் பதிப்பகம்,
17, சுப்பராயப்
பிள்ளைத் தெரு,
கொண்டியம்பதி,
சென்னை-600 079.

விலை : ரூ. 6/50. பக்: 80.

'கூடிவாழ்ந்தால் கோடி நன்மை' என்ற பழமொழிக்கு ஏற்ற வகையில் உயர்ந்த பல கருத்துக்களைக் குழந்தைகள் மனங்களாகிய பெட்டகத்தில் பதிய வைக்கின்றார் ஆசிரியர் பூங்கோவன்.

சாலை விதிகளைக் கற்றுத் தெளிதல் வேண்டும், மனிதருள் மாணிக்கம், காகத்தின் ஒற்றுமை இயல்பு, நன்றியுள்ள நாய், சுறுசுறுப்பான சிட்டுக் குருவி போன்றவை பற்றிய இனிய எளிய பாடல்கள் நூலுள் இடம் பெறுகின்றன.

---

**நூலகம் பகுதிக்குப் புத்தகம் அனுப்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டுகிறோம்.**

**—ஆசிரியர்**

---

'முயன்றால் முடியாதது இல்லை' என்ற கருத்து, இளம் உள்ளங்களில் அழகுறப் பதிய வைக்கப்படுகின்றது.

குழந்தைகள் அன்பாய்ப் பழகி, அறிவை வளர்த்து புன்னகை தேக்கி, தன்னலம் நீக்கி, அல்லவை போக்கி, அறநெறி போற்றி, சொன்ன சொல் காத்து,நலம் பெற வேண்டும் என்ற கருத்துடைய 'அன்பாய்ப்பழக வேண்டும்' என்றபாடல் செறிவான கருத்தமைந்த பாடல்.

சின்னஞ்சிறு குழந்தைகளின் வாழ்க்கை சீரும் சிறப்புமாகஅமைந்திட வழி வகுத்திடும் கருத்தமைந்த பாடல் மலர்கள் பூத்துக் குலுங்கும் கவிதைப் பூங்கா இந்த நூல். நூலின் தலைப்பே ஏற்றம் தருகின்றது நூலிற்கு.

— மா.ரா.சி.

**மேயர் எம். ராதாகிருஷ்ணப் பிள்ளை**

ஆசிரியர் : கருப்பையா
வெளியீடு: அகிம்சை நூலகம்
மனை எண். 1076,
19-வது பிரதான
சாலை. அண்ணா நகர்
மேற்கு, சென்னை-40.

விலை: ரூ. 10 பக் : 134

சென்னை மாநகராட்சி உறுப்பினராகவும், மேயராகவும் 23 ஆண்டுகள் பதவி வகித்தவர் திரு. எம்.ராதாகிருஷ்ணப் பிள்ளை. பல துறைகளிலே தொண்டாற்றிப் பெரும் - புகழ் பெற்றார் அவர். அவரின் வாழக்கை வரலாற்றை அரசியல், சமூகம், இலக்கியம்' சமயம், கல்வி ஆகிய 5 பிரிவுகளாகப் பிரித்து இந்நூல்ல் தொகுத்துத் தந்துள்ளார் ஆசிரியர்.

சென்னை மாநகராட்சி மேயராகப் பதவி வகித்தபோது ஆற்றிய சீரிய பணிகளும், பச்சையப்பர் அறநிலைய ஆட்சிக் குழு உறுப்பினராயிருந்து ஆற்றிய பணிகளும், வைணவ சமயத்தில் ஈடுபாடு கொண்டு அவர் ஆற்றிய சமயப் பணிகளும் வெகுவாக நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

ராதாகிருஷ்ணப் பிள்ளை எழுதிய 22 நூல்களில், இருநூல்களை எடுத்துக் காட்டி அவை ஆய்வு நூலாகக் கருதத்தக்கவை என்று கூறுகிறார் ஆசிரியர். 'ராதாகிருஷ்ணப் பிள்ளை மணிவிழாவில் பிரமுகர்கள் சிலர் ஆற்றிய உரைகளும் நூலில் இடம் பெற்றுள்ளன.

வாழ்க்கை வரலாற்று நூல் வரிசையில் இடம் பெறத் தகுதி வாய்ந்த நூல்களில் ஒன்று இந் நூல்.

—வி. இராவணன்

**மதன காமராஜன் கதைகள்**

தொகுத்து எழுதியவர்: முல்லை
பி.எல்.முத்தையா.
வெளியீடு: நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41-பி,சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600098.

விலை: ரூ.30 பக்கம்:437

கதைகள் என்றால், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கேட்கவோ படிக்கவோ ஆசைப்படுவார்கள். அதுவும் ராஜா ராணிக் கதைகள், பழங்காலக் கதைகள் என்றால் கேட்கவேண்டுமா என்ன?

மதன காமராஜன் கதைகள் சுவையும் பயனும் நிறைந்த கதைகளாகும். கற்பனை ஊற்றும், கவின்மிகு காட்சிகளும் மனத்தைக் கவரும்.

இந்தக் கதைகளை, புதிய அமைப்போடு எழுதியுள்ளார், ஆசிரியர். மூலக் கதைக்குள் கதைகள் இணைந்த பாங்கில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எல்லாரும் படித்து மகிழலாம்.

இவ்வளவு பெரிய நூலில், சில படங்களைச் சேர்த்திருக்கலாம்.

**டாக்டர் ஹாப்கின்**

ஆசிரியர்: வைத்தண்ணா
வெளியீடு: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்,
பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600098.

விலை: ரூ.10 பக்கம்: 118

ஹாஃப்கின், காலரா, பிளேக் போன்ற கொடிய நோய்களைத் தடுப்பதற்குப் புதிய மருந்துகளைக் கண்டுபிடித்தவர். மக்களை,காலரா பிளேக் நோய்களிலிருந்து காப்பாற்றியவர். அவரது வாழ்க்கை வரலாற்றைக் குழந்தைகள் தெரிந்துகொள்ளும் வண்ணம் எளிய தமிழில் எழுதியுள்ளார் ஆசிரியர்.

நமது நாட்டில் இந்நோய்கள் இன்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதற்குக் காரணமே டாக்டர் ஹாஃப்கின் அவர்களே. அவர் நினைவாக பம்பாயில் உள்ள பாக்டீரியாவியல் ஆய்வுக் கூடத்துக்கு 1925இல் ஹாஃப்கின் ஆராய்ச்சி நிறுவனம் என்று பெயரிடப்பட்டுள்ளது என்பதையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். பெரியவர்களும் படித்துத் தெரிந்து கொள்ளக் கூடிய நூல்.

— பி.வி.கிரி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பட்டு வகைகள்



100% உன்னதமான பட்டு
சுத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது
வண்ணங்கள்... அவைகளின் அழகு
ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க
பட்டு வகைகளில் உங்களுக்குக்
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

● புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு ● ஷர்ட்டிங் ● சூட்டிங் ● ஃபர்னிஷிங்
● பெட்ஷீட்கள் ● டவல்கள் ● வேட்டிகள் ● லுங்கிகள், இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-











மறைந்த முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களின் முதலாண்டு நினைவு நாளான 24.12.88 அன்று நினைவகத்தில் அரசு சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்.

# தமிழரசு

16-1-1989



பொங்கல் சிறப்பிதழ்



சென்னையில் 15-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியை 6-1-1989 அன்று ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் திறந்து வைத்தார்.



வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித் திருநாடு!

பொங்கல் நன்னாளில்
எங்கள் இதயங் கனிந்த
நல்வாழ்த்துக்கள்!

நா. கிருஷ்ணபாரதி,
ஆசிரியர்: 'தமிழரசு'
இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை
தமிழ்நாடு அரசு.





தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2020
விபவ - தை 3
மலர்: 19 இதழ்: 14
16-1-1989 ரூ. 1

# இந்நாள் பொன்னாள் ஈடிலாத் திருநாள்

விழா இல்லாத வாழ்க்கை நறுமணப் பூ பூக்காத முல்லைக்கொடி போன்றது. சோர்ந்து சலிப்புற்றுச் சரியும் நெஞ்சத்தை விழா, ஊக்கம் தந்து மகிழ்ச்சியால் தூக்கி நிறுத்த முயல்கிறது. குடும்பத்தில் நடக்கும் விழா, உறவினருக்கு மட்டுமே உவகை தரும். ஊரில் நடக்கும் தனி விழா அந்தப் பகுதிக்கு மட்டும் களிப்பை நல்கும். நாட்டில் நடக்கும் விழா; அனைத்து மக்களுக்கும் இனிமை பயக்கும்.

விழாக்கள் பெரும்பாலும் சமயத்தின் அடிப்படையில் நடக்கின்றன. அரசியலை ஒட்டிப் பிறப்பனவும் உண்டு. இலக்கியம், கலை பற்றி வருபவை மிகவும் குறைந்தது.

பொதுவாகப் பண்டிகைகளெல்லாம், சமயங்களின் பேரால், புராணங்களின் போதனையால் கொண்டாடப்படினும், அந்தப் பண்டிகைகளைத் தொடக்கி வைத்ததற்கான அடிப்படைக் காரணம் பொருளாதாரம்தான். பணம் ஒரு சிலரிடையே தேங்கி விடாமல் நாடு முழுவதும் பரவலாகச் சுற்றி வரும்படிச் செய்வதற்காகத்தான் நம் முன்னோர்கள் பண்டிகைகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்று டாக்டர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தெரிவிக்கிறார். (கட்டுரைக் களஞ்சியம் ப: 20). இந்தக் கருத்தை அரண்செய்யும் வகையில் அமைந்து இன்றளவும் நெறி மாறாமல் இருக்கும் ஒரு பெரும் விழா பொங்கல் தான்.

''வேற்றுமை இல்லாமல் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து மதபேதம் ஒன்றும் இன்றித் தமிழின் பெயரால், தமிழர்கள் தங்கள் இலக்கியம் தோன்றிய நாளாக இந்தத் திருநாளைக் கொண்டாடுகிறார்கள். ஒரு சமரச, சமதர்ம, சமநிலைத் திருவிழா இது. சிங்கப்பூர் மலேசியாவிலும் இது கொண்டாடப்பெறுகிறது'' என்று பொங்கலை உலக விழாவாகப் போற்றுகின்றார் டாக்டர் தெ. பொ.மீ. அவர்கள். (தமிழும் பிற பண்பாடும், ப.103).

காலத்தின் புழுதியால் இடையில் மங்கிக் கிடந்த பொங்கலுக்குப் புத்துயிர் தந்து. மக்கள் மத்தியில் தமிழர் திருநாளாகப் பொங்கலை உயர்த்தி வைத்தார் தமிழ்ப் பேராசிரியர் வள்ளல் கா. நமச்சிவாய முதலியார்.

''பசியும் பிணியும்
பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென''

வாழ்த்துவது பழந்தமிழ் மரபு. இந்த இனிய மரபுக்கு நினைவுத் துணையாக அமைகிறது பொங்கல் திருநாள். இது போகி, பெரும் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என்று நான்கு நாட்களாக மணம் பரப்புகிறது.

போகி என்பது இந்திரனைக் குறிக்கும். இந்திரனை மக்கள் வணங்குவதற்காக இந்த நாள் அமைக்கப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. 'இந்திர விழாவிற் பூவின்ன' என்ற சங்க இலக்கியத் தொடரும் (ஐங் 62-1) சிலம்பின் வரும் இந்திரவிழவூரெடுத்த காதையும் பழந்தமிழர் இந்திரனைப் போற்றி விழா எடுத்தனர் என்பதற்குச் சான்று காட்டுகின்றன.



உழவு. மருதநிலத்திற்கு உரியது. எனவே 'வேந்தன் மேய தீம்புனல் உலகமும்' என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி (தொல். பொருள், அகம் 5) உழவர்கள் மழைவளம் தரும் இந்திரனை வழிபட்டு வந்தனர் என்று சிலர் கூறுவர். 'இந்திர விழா, அகத்தியன் சொற்படி தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் அரசனால் தொடங்கப்பட்டு வருடந்தோறும் காவிரிப்பூம்பட்டினத்தின் சோழப் பரம்பரையோரால் இந்திரனுக்கு நடத்தப்பட்ட விழா'' என்று மணிமேகலை கூறும். (மணிவிழா வறை காதை 3-9) 'கண்ணன் தான் அவதரித்த காலத்தில் இதனை (வழிபாட்டை) தமக்கு செய்யக் கட்டளையிடக் கேட்ட இந்திரன் சினந்து மழை பொழிவிக்கக், கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து மழை தடுக்க, செருக்கடங்கிய இந்திரன் பணிய, இத மாதத்திற்கு முன்னாள் உனை உலகம் பணிய எனக் கட்டளையிட்டபடி இந்திரனைப் பூசிக்கு நாள் என்ப'' எனக் கூறுவார் அறிஞர் சிங்காரவேலு முதலியார். (அபிதான சிந்தாமணி ப. 1217)

இந்திரவிழா சித்திரைத் திங்களில் சித்திரையும் நிறைமதியும் கூடிய நாளில் நடைபெற்றதாக நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் கூறுவர். (சிலம்பு ந.மு.வே. உரை-ப. 100) ஆனால் போகி மார்கழி மாத இறுதியில் வருகிறது.

போகி அன்று, இந்திரனை வணங்கும் சடங்கு நடைபெறவில்லை. அந்தநாளில் வீட்டெதிரில் பழைய பாய், துணி, உடை, முறம் ஆகியவற்றை எரித்துப் போக்கி விடுவதால், (பயன்படாப் பழம் பொருளைப்) போக்கும் பொங்கல் என்று சொல்லப்பட்ட தொடர் இடைக் குறையாகிப் போகிப் பொங்கலாயிற்று என்றும் சொல்லப்படுகிறது. ஆடி முதல், உழைத்த உழவர் விளைச்சல் கண்டு தம் களைப்பைப் போக்கிக் கொள்ளும் நாள் இது. அதனால் போக்கிப் பொங்கல், போகிப் பொங்கலாயிற்று என்றும் கருதப்படுகிறது.

பெரும் பொங்கலன்று, புது அரிசி. கரும்பு, மஞ்சள், வள்ளிக் கிழங்கு ஆகியவை உணவில் இடம் பெறும். மக்கள் புத்தாடை அணிவார்கள். வெள்ளையடிக்கப்பட்ட வீடு, மேலும் அழகு பெறும். பூவும் புகையும் பொங்கலும் கொண்டு கதிரவனை மக்கள் வழிபட்டுப் 'பொங்கலோ பொங்கல்' என்று பேரொலி எழுப்புவர்.

அடுத்து வரும் மாட்டுப் பொங்கல். அன்று சலங்கை போட்டு மாலைசூட்டி, கொம்புகளில் வண்ணம் தீட்டி, மாடுகள் கொண்டாடப்பெறும். மாட்டின் உதவியால் கிடைத்த அரு உணவு அவற்றிற்கே ஊட்டப்படும். 'பட்டி பெருக' பாலை பொங்குக' என்று கொங்கு நாட்டின் குரல் எழுப்பும் பழக்கம் இருக்கிறது. பாட்டுப் பொங்கலன்று வைகறையில் முதல் நாள் அரிசி கழுவிய கழுநீரை எடுத்துச் சென்று. கழனியில் தெளித்து 'பொங்கலோ பொங்கல்' என்று மகிழ்ச்சிக்குரல் எழுப்பும் பழக்கமும் சில பகுதிகளில் இருக்கிறது.

பொங்கலில் நான்காம் நாளுக்குப் பல பெயர்கள் உண்டு. காணும் பொங்கல், கன்றுப் பொங்கல், கனுப் பொங்கல், கன்னிப் பொங்கல என்று இது கூறப் படுகிறது. கொங்கு மண்ணில் இது பூப்பொங்கல் என்று மாறு பெயர் பெற்றுள்ளது. அன்று சிறியோர்,





## தீரமிக்க நேதாஜி

— பண்டித நேரு

சுபாஷ்சந்திரபோசும், நானும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில 25ஆண்டுக் காலம் இணையாக இருந்தவர்கள். அவர் என்னை விட இளையவர். என்றாலும் எங்கள் இருவரிடையே நெருங்கிய உறவும் மேன்மையான பாசப்பிணைப்பும் இருந்தன. அவரை நான் எனது இளைய சகோதரராகவே நடத்தி வந்தேன். அரசியல் பிரச்னைகளில் எங்கள் இருவருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் சுபாஷ் சந்திர போஸ் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தீரமிக்க மாவீரர் என்பதை நான் ஒரு கணமும் மறக்க மாட்டேன்.

நேதாஜிக்கு ஏற்பட்டது போன்ற நெருக்கடியும் சோதனையும் எனக்கு ஏற்பட்டிருந்தால் நானும் அவரைப் போல் நடந்து கொண்டிருப்பேனா என்பதை என்னால் சொல்ல முடியவில்லை.

என்றாலும் தங்கள் நாட்டவர் வீரமுடன் களம் காணும்போது அத்தகைய வீரர்களை எல்லா இந்தியர்களும் பாராட்டியே தீர்வார்கள். எனவே நெருக்கடியானதொரு கட்டத்தை நேதாஜி எதிர்கொண்ட முறை போற்றுதலுக்குரியது. நமது உற்சாகத்தைத் தூண்டவல்லது.

பண்டித ஐவகர்லால் நேரு
(1946 ஜனவரி 23இல் புதுடில்லியில் பேசியது)

(ஜனவரி 23-நேதாஜி பிறந்தநாள்)

பெரியோரைக் கண்டு வாழ்த்துப் பெறுவார்கள். கன்றுகள் பெரு நிலை பெறும். கன்னிகள் இந் நாளைச் சிறப்பாகக் கொண்டாடு வார்கள். சங்க காலத்தில் கன்னி கள் தைந் நீராடல் ஒரு சமுதாயச் சடங்காக நடைபெற்றது. இதைத் ''தவத் தைந்நீராடல்'' என்று பரி பாடல் குறிக்கும் (பரி 11-9) இன்று கன்னிப் பொங்கல் என்ற தொட ருக்கும் இச்சடங்கிற்கும் - உற விருக்கலாம். இளமை நிலைக் குரிய இன்ப நாளாக இந்த நிறைவு நாள் கொள்வதற்குரியது.

இந்தப் பொங்கல் திருநாளுக்கு மற்றொரு சிறப்பையும் சேர்த்திருக் கிறார் தமிழ்க் கடலாகிய மறை மலை அடிகளார். ஏசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமேயே தைத் திங்களில் மங்காப் புகழ் பெற்ற மாமேதை திருவள்ளுவர் தமிழ கத்தே தோன்றினார், என்று அவர் ஆய்ந்து கூறினார். அதன் சார்பாக தமிழக அரசு, பொங்கலுடன் திரு வள்ளுவர் திருநாளைக் கொண்டா டும் வாய்ப்பினை நாட்டின் பண் பாகக் கூட்டியிருக்கிறது.

உலகின் பல பாகங்களில் வயல் விளைச்சலுக்குப் பின் ஒரு விழா நடைபெறுகிறது. அது வெறும் அறுவடை விழாதான். ஆனால் பொங்கல் திருவிழா பல்வேறு விதத் தில் சிறப்புடைய பெருவிழா. அது வியர்வையைப் போற்றும் உழைப் புத் திருவிழா. உத்வாய் பழை மையைப் போக்கும் புதுமை விழா. உழவன் துணை நின்ற மாட்டி னைப் போற்றும் கூட்டுறவு விழா.

கதிரோனுக்கும் இயற்கைக்கும் நெஞ்சுவந்து கூறும் நன்றி விழா. 'உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி' என்ற உண்மையை, நாடு நகரங் களுக்கு நினைவூட்டு விழா; மக்கள் வாழ்வை மலர்த்தும் பொரு ளாதார விழா. இன்பம் சேர்த்து நன்மைக்கு ஊக்கம் நல்கும் இளமை விழா. பெரியோர், வளரும் உள் ளங்களை வாழ்த்தும் விழா. கதிர வன் திசையாற்றத்தினைக் குறிக் கும் விழா.

தை பிறப்பதால் வழி பிறக் கும் என்று மண வயது மனங் கள் போற்றும் விழா. மாமேதை யின் அடிச்சுவட்டை முடிகுடும் புனித விழா. இந்தப் பொங்கல் விழாவுக்கு இணையான விழா, பொங்கல் விழாதான்!





சென்னையில் உள்ள இராணிமேரி மகளிர் கல்லூரியில் (16-12-88) கோவை அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ராஜம்மாள் ப. தேவதாஸ் அவர்கள் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தினார்.



கோவையில் பாரதியார் பல்கலைக்கழகத்தில் 13.12.'88 அன்று நடைபெற்ற பாரதி பிறந்தநாள் விழாவின்போது தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் ம. பொ. சி. அவர்கள், பாரதியார் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்தார். கோவை மாவட்ட ஆட்சியாளர் திரு. என். கோவிந்தன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. ஈ. கிருஷ்ணபாரதி ஆகியோர் உடன் உள்ளனர்.

# தமிழ்நாட்டில் வாக்களிக்கும் பணி

# அமைதியுடன் நடைபெற

# அனைவரும் பாடுபடுவோம்!

கடந்த பொதுத்தேர்தல் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சட்டமன்றத்திற்கும் பாராளுமன் றத்திற்கும் சேர்ந்து நடைபெற்றது. தற்போது 1989ஆம் ஆண்டு ஜன வரியில் 234 சட்டமன்ற தொகுதி களுக்கான தேர்தல் நடக்கவிருக கிறது.

தமிழ்நாடு முழுவதும் சுமார் 3 கோடியே 54 லட்சம் வாக்காளர் கள் உள்ளனர். தமிழ்நாட்டில் 42 ஆயிரத்திற்கும் மேல் வாக்குச் சாவடிகள் உள்ளன. எந்த ஒரு வாக்காளரும் வாக்களிக்க 2 கி.மீக்கு மேல் செல்ல அவசியமிருக்கக் கூடாது என்ற அடிப்படையின்படி வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட் டுள்ளன.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 3 லட் சம் அரசு ஊழியர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு தேர்தல் பணி, வாக்கு எண்ணும் பணி ஆகியவற் றுக்காக அமர்த்தப்படுகிறார்கள். அரசு ஊழியர்களுக்கு இதற்கான பயிற்சி இன்னும் ஒரு நாளில் தொடங்கும். இத்தேர்தல் பணிக் கான பயிற்சி ஆழமானதாகவும், அனுபவமிக்க அதிகாரிகளின் விளக்க வுரைகளுடனும் இதற்கான காட்சி விளக்கத் திரைப்படங்களுடனும் அமைந்திருக்கும்.

ஒரு பொதுத் தேர்தல் நடத்து வது என்பது, மாவட்ட அளவில் நிர்வாகத்தினரும், காவல் துறையி னரும் பல மாதங்களாக தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, கடினமாக உழைத்து தேர்தலுக்கான முறை யான திட்டங்களை வகுத்து எல்லா துறையிலும் ஆயத்த நிலைக்கு தங்களை ஈடுபடுத்திக் கொள்வ தாகும். இந்த ஆயத்த நிலை ஏற் பட்டு விட்டது.

அரசு அளிக்கும் இப்பயிற்சிகளும் முன்னேற்பாடுகளும் சுதந்திரமாக, எவ்வித இடையூறுகளும் இன்றி, சமூகமாக தேர்தல் நடைபெற உறுதி செய்வதற்கே ஆகும். அமைதி யான முறையில் தேர்தல் நடை



**எம். எம். இராஜேந்திரன்**
*தலைமைச் செயலாளர்,*
*தமிழ்நாடு அரசு.*

பெறுவது என்பது தமிழ்நாட்டின் நீண்ட காலப் பாரம்பரியச் சிறப்பு ஆகும். இச்சிறப்பான பாரம்பரியத் திற்கு நமது திறமையும் நேர்மை யும் மிக்க அரசு ஊழியர்களும், இதற்கு இணையாக அமைதியை விரும்பும் தமிழ்நாட்டு மக்களின் ஒத்துழைப்புமே முழுமுதற்காரணம் ஆகும். மேலும், கடந்த காலங் களில் அரசியல் கட்சிகளும், தேர்த லில் பங்குகொள்ளும் வேட்பாளர் களும் அளித்த ஒத்துழைப்பும், நேர்மையாகவும் தங்குதடையின்றி யும் தேர்தல் நடைபெறச் சிறப்புக் காரணமாக அமைந்தது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக தங்கள் கருத்துக்களை பொதுமக்க ளுக்கு எடுத்துச் சொல்வதற்கு ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் சமூகமாக நடைபெற உதவும் வகையில் போதிய அளவி லான காவற்படையினருக்குப் பயிற்சி அளித்துள்ளோம். வாக்களிப் பதற்கு எவ்வித இடையூறும் இராது என்று உறுதி கொள்ளலாம். உங்கள் வாக்கினை அச்சமின்றியும், தங்கு தடையின்றியும் அளிக்க, அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள் ளோம். இனி, வாக்காளப் பெரு மக்களாக, போட்டியிடும் வேட்பா ளர்களாக, அரசியல் கட்சியினராக உள்ள உங்களிடமே, ''தமிழ்நாட் டில் வாக்களிப்பது சமூகமாக அமைதியாக நடைபெற்றது'' என் னும் நமது பாரம்பரியப் பெருமை யைத் தொடர்ந்து காக்கும் பொறுப்பு உள்ளது என்று கூறிக் கொள்கிறேன்.

(தேர்தல் பணிகள் குறித்து தலை மைச் செயலாளர் 28.12.88அன்று வானொலியில் ஆற்றிய உரை.)

## கரும்பு விலை

சர்க்கரை ஆலைகள் மற்றும் கரும்பு உற் பத்தியாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து 8.5 சதம் அல்லது அதற்குக் கீழும் சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்புக்கு 1988-89-ஆம் ஆண் டுக்குக் குறைந்தபட்ச விலையாக, டன் ஒன்றுக்கு ரூ. 220 வீதம் (ரூபாய் இருநூற்று இருபது மட்டும்) கொடுக்க சர்க்கரை ஆலைகளுக்குத் தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

8.5 சத. சர்க்கரைக் கட்டுமானத்திற்கு [illegible] கூடுதலாகக் கிடைக்கும் ஒவ்வொரு [illegible] திற்கும் (குவிண்டாலுக்கு 25.8823 கா[illegible] பிரீமியமாக வழங்கப்படும்.

# அகில இந்திய சுற்றுலா - தொழில் பொருட்காட்சி

பதினைந்தாவது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி, சென்னைத் தீவுத் திடலில் 5.1.1989 அன்று தொடங்கியது.

செய்தி, சுற்றுலாத் துறை சிறப்பு ஆணையர், செயலர் திரு செ.ராம் தாஸ் இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டார்.

''இந்தப் பொருட்காட்சியின் சிறப்பு அம்சமாக, மேதகு ஆளுநர் அவர்கள், ஆறு குட்டிச் சுற்றுலா நவீனப் பேருந்துகளைத் தொடங்கி வைக்கிறார்கள். இவற்றில் ஐந்து குளிர்சாதன வசதியும், ஒவ்வொன்றும் 19 இருக்கைகளும் கொண்டவை. இன்னொன்றில் 21 இருக்கைகள் இருக்கும். இதில் குளிர்சாதன வசதி தவிர, மற்ற எல்லா சௌகரியங்களும் உண்டு.

"இந்தச் சுற்றுலாப் பேருந்துகள் ஏழு நாள் தமிழ்நாடு சுற்றுலா, ஏழு நாள் தென்னிந்தியச் சுற்றுலா, நவசக்தி திருப்பதிச் சுற்றுலா போன்றவைகளுக்காகப் பயன்படுவன. கட்டண விகிதங்கள் மிக நியாயமான அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன.''

திருமதி அக்கம்மா அலெக்சாண்டர் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்தார்.

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவகம் வடிவமைப்பு செய்தவர்களுக்குப்



பாராட்டி, சுற்றுலாப்பேருந்துகளை இயக்கி வைத்தும், விழா வைத் தொடங்கி வைத்தும் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''1988-இல் தமிழ்நாடு பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து இருக்கிறது. குறிப்பாக, சிறு தொழில்களுக்குச் சலுகை அளித்து ஊக்கப்படுத்தியதால், சிறுதொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. சிறு தொழில் அதிபர்களின் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு இருக்கின்றன. சிறுதொழில் வளர்ச்சியில் உன்னத நிலையை அடையும் அளவுக்கு வந்துவிட்டோம். 1988-ஆம் ஆண்டில் மின்சார உற்பத்தி 20 சதவீதம் அதிகரித்து இருக்கிறது.

''சுற்றுலாப் பயணிகளைக் கவருவதில் சென்னை 3-வது இடத்தை வகிக்கிறது. முதலிடத்தில் டெல்லியும், 2-வது இடத்தில் பம்பாய் நகரமும் இருக்கின்றன. உலகிலேயே அழகிய கடற்கரை, சென்னை மெரினா கடற்கரை. அத்தகைய இந்த இயற்கைக்கடற்கரை, கடவுள் நமக்கு அளித்த வரப்பிரசாதம். சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவரக்கூடிய இந்தக் கடற்கரையின் சுற்றுப்புறச் சூழ்நிலை கெடாமல் வைத்துக் கொள்ள வேண்டும்.

''சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரக் கூடிய மற்றோரு இடம் மாமல்லபுரம். மாமல்லபுரத்துக்குச் செல்லும் சாலை புதுப்பிக்கப்பட்



டது. அதிகப் போக்குவரத்துக் காரணமாக அந்தச் சாலை மறுபடியும் பழுதடைந்து விட்டது. எனவே, மாமல்லபுரத்துக்குச் செல்ல இப்போது இருக்கும் சாலைக்கு துணையாகப் புதிய சாலை போடப்படும். இதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

''இந்தச் சாலை வந்துவிட்டால், போக்குவரத்து நெரிசல் இல்லாமல் சுற்றுலாப் பயணிகள் எளிதாக மாமல்லபுரம் சென்று வர ஏதுவாக இருக்கும். உலக அளவில் பார்க்கும் போது இந்தியா வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. இந்தியா முழுவதும் சுற்றுலா மையங்களை மேம்படுத்த வேண்டும்.

''என்.வி.என்.சோமு எம்.பி. இங்கே பேசும்போது, ''பொருட்காட்சியில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு நுழைவுக் கட்டணம் இல்லை என்று இருக்கிறது. இதை 12 வயது வரை என்று மாற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டார். இதை நான் ஏற்றுக்கொண்டு, 12 வயதுவரை உள்ள சிறுவர் சிறுமிகளுக்கு நுழைவுக் கட்டணம் இல்லை என்று அறிவிக்கிறேன்.''






திரு என்.வி.என்.சோமு எம்.பி. பேசுகையில், சென்னை மூர்மார்க்கெட்டில் பார்க்பேர் கண்காட்சி முன்பு மக்களை மகிழ்வித்தது என்றும், அது இல்லாத குறையை இப்பொருட்காட்சி நிவர்த்திக்கிறது" என்றும் கூறினார். மேலும் அவர் பேசுகையில், ஐந்து வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்குக் கட்டணம் இல்லை என்பதைப் பன்னிரண்டு வயதுக்குட்பட்டு இருந்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

திரு டாக்டர் கலாநிதி எம்.பி. பேசுகையில், மாமல்லபுரம் செல்லும் பாதையைச் செப்பனிடவேண்டும், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் உள்ளது போல் சுற்றுலாத்துறை இங்கேயும் செயல்படவேண்டும் என்று கூறிய அவர், சாலைவசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும், சுற்றுலாப் பயணிகளுக்குப் போதிய வசதிகள் செய்துதரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நிர்வாக இயக்குநர் திரு அசோக்ஜோஷி இ.ஆ.ப. நன்றி கூறினார்.

... நூற்றாண்டு விழாவை ...டு திருமதி சந்திரா ... புதபாணி குழுவினரின் நேரு வரலாறு நாட்டிய நாடகம் நடந்தது.





5.1.89 அன்று சென்னையில் நடைபெற்ற 15-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி தொடக்க விழாவில், மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள், டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம் வடிவமைப்பு செய்யும் போட்டியில் வெற்றி பெற்ற கட்டடக்கலை வல்லுநர்கள் திரு டி. ரஞ்சன் மற்றும் திரு கே. ரகுராமன் ஆகியோருக்கு முதல் பரிசு ரூ. 50,000 வழங்கினார்.

இந்த ஆண்டுப் பொருட்காட்சி முந்தைய ஆண்டுப் பொருட்காட்சிகளைவிட அழகமான மேம்பாடுகளுடன், முற்றிலும் மாறுபட்ட வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொருட்காட்சியின் அமைப்பு, அரங்கங்களின் தோற்றம், காட்சிப் பொருட்கள் போன்ற அனைத்து வகையிலும் இவ்வாண்டுப்பொருட்காட்சி முற்றிலும் புதுமையானதாக, பொருட்காட்சியினைக் காணவரும் மக்களின் மனத்தில் நிலைத்து நிற்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் துறையில் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றியும், தமிழ் மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றியும் மக்களுக்கு எடுத்துக்கூறி, மக்களை தமிழ்நாட்டின் தொழில் துறை முன்னேற்றத்தில் பங்கேற்கச் செய்வதுதான் இப்பொருட்காட்சியின் முதன்மைக் குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களை, தமிழ் மக்கள் மட்டுமல்லாது, வெளிநாட்டவரும், அயல் மாநிலத்தவரும் அறிந்து கொண்டு அத்தலங்களுக்கு வருகை தந்து அதன் மூலம் சுற்றுலா வாணிபம் செழித்து வளரும் வகையிலும், அவ்வகையில் தமிழ்நாடு பொருளாதார மேம்பாடு அடையும் வகையிலும், இப்பொருட்காட்சியில் சுற்றுலாத்துறைக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

இப்பொருட்காட்சி தொடர்ந்து 75 நாட்களுக்கு நடத்தப்பட இப்போதைக்கு திட்டமிடப்பட்டுள்ளது. முந்தைய பொருட்காட்சி தொடர்ந்து 114 நாட்கள் நடத்தப்பட்டது.

நம் நாடு சுதந்திரம் பெற்ற 41 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளதையும், நவயுகச் சிற்பி பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் நூற்றாண்டு விழாவையும் குறிப்பிடும் வகையிலும், இப்பொருட்காட்சியின் முகப்பு நவீன பாணி முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவக வடிவமைப்பு பரிசு பெற்றோர்**

டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவகம் அமைக்க வடிவமைப்பு அமைத்துக் கொடுத்துப் பரிசு பெற்றவர்கள்:

முதற் பரிசு: ரூ.50 ஆயிரம்; சென்னையைச் சேர்ந்த திரு டி. ரஞ்சன், திரு கே.ரகுராமன்.

இரண்டாம் பரிசு: ரூ. 30ஆயிரம்; டெல்லியைச் சேர்ந்த திரு டி. சந்தர் மோகன். திரு சுசில் அகர்வால், திரு சுனில்ஷயானி.

ஆறுதல் பரிசு: ரூ.20 ஆயிரம்; டெல்லியைச் சேர்ந்த திரு குல்கர்னி தம்பதியர், திரு அபிமன்யூ தலால்.

திருமதி இந்திரா காந்தியின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவில், குழந்தைகள் விளையாடி மகிழும்போதே கல்வியறிவு பெறும் வண்ணம் புதியதாக மூன்று இலட்சங்கள் செலவில் நவீன விளையாட்டுச் சாதனங்கள் வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. உடல் ஊனமுற்ற குழந்தைகளும் விளையாடி மகிழும் வண்ணம் விளையாட்டுச் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன.

குழந்தைகள் மனதில் வீர உணர்வுகளை விளைவிக்கும் வகையில், வீர விளையாட்டுக்கான கராத்தே, ஜூடோ, குத்துச்சண்டை, சிலம்பாட்டம் ஆகியவைகளும் தினசரி இப்பூங்காவில் நடத்தப்படவுள்ளன. மேலும், இப்பூங்காவில் யானையேற்றம், குதிரைச் சவாரி ஆகியவற்றிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பொருட்காட்சியில் முதன்முறையாகப் பங்கேற்கும் மத்திய அரசு நிறுவனமான சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனத்தினர், அன்னை இந்திரா காந்தி சிறுவர் பூங்காவின் அருகே பிஞ்சு நெஞ்சங்களில் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவியலை பதியச் செய்யும் நோக்கத்துடன், எளிதான விஞ்ஞான செயல்முறை கருவிகள் கொண்ட அழகிய அரங்கம் ஒன்றினை நிறுவியுள்ளனர்.

# இனிப்பான செய்தி



'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற சொல்லுக்கு இலக்கணமாய் திகழ்கிறது நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மயிலாடுதுறையில் இருந்து 12 கி.மீ. தொலைவில் 100.94 ஏக்கர் பரப்பளவில் இந்தச் சர்க்கரை ஆலை அமைந்துள்ளது. இந்த ஆலை அமைப்பதற்கு அரசு அனுமதித்ததோ ரூ. 1,177 லட்சங்கள். திறமையான நிர்வாகத்தினால் ரூ. 1,173 இலட்சத்திற்குள்ளாகவே குறித்த காலத்தில் ஆலை கட்டி முடிக்கப்பட்டது.

அதேபோன்று 25-1-87-இல துவங்கியது முதல் அறவை பருவத்தில் 2 இலட்சத்து 37 ஆயிரம் மெட்ரிக் டன் கரும்பு அறவை செய்துள்ளது. முதலாண்டு உற்பத்தியான 2113.50 குவிண்டால் சர்க்கரையின் மதிப்பு ரூ. 983.09 இலட்சம் ஆகும்.

இரண்டாவது ஆண்டு 1987—88 அறவைப் பருவத்தில் 3 இலட்சத்து 55 ஆயிரம் மெட்ரிக் டன் கரும்பு அரைக்கப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட 31 இலட்சம் குவிண்டால் சர்க்கரையின் மதிப்பு சுமார் ரூ.1531 இலட்சம் ஆகும்.

புதிதாகக் கட்டப்பட்டு இயங்குகின்ற எந்த ஆலைகளுமே சில ஆண்டுகள் நஷ்டத்தில் ஓடும். ஆனால், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மட்டும் இதற்கு விதிவிலக்காக [illegible]ந்து நிற்கிறது.

[illegible]ஆலை [illegible] கூட்டுறவு அமைப்பி[illegible] இருந்து பெற்ற கடனுக்காக இந்த நவம்பர் கட்ட வேண்டிய தொகையைக் கட்டிவிட்டு அடுத்த ஆண்டு மே மாதம் கட்ட வேண்டிய தொகையான ரூ. 78.79 இலட்சத்திற்கு இப்பொழுதே 68.10 இலட்சம் கட்டிவிட்டதுடன், ரூ 224.53 இலட்சம் மதிப்புள்ள சர்க்கரையை இருப்பு வைத்துள்ளது. பெற்ற கடனை ஆண்டுக்கு முன்பாகவே திருப்பிச் செலுத்தி வருகின்ற பெருமை இந்த ஆலைக்கு இருப்பதற்குக் காரணம் விவசாயிகள் தொழிலாளர்களின் ஒத்துழைப்பும் நிர்வாகத் திறனும் ஆகும்.

இவ்வாண்டு ரூ. 6 கோடி அளவில் நவீனப்படுத்தி உற்பத்தியை இருமடங்காக உயர்த்தப் போவதாக இந்தச்சர்க்கரை ஆலையின் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

நவீனப்படுத்துவதால் மேலும் 5 ஆயிரம் ஏக்கர் கரும்பை அரவை செய்ய முடியும். அரசு அனுமதித்துள்ள எரிபொருள் இரசாயனப் பொருட்கள் அளவுக்குட்பட்ட செலவு செய்வதன் மூலம் தொழிற்சாலை இயங்கி வருகிறதென்றால் அதற்குத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பும் ஒரு முக்கியமான காரணமாகும். அதனால்தான் இந்தஆலையின் திறன் ஆண்டுதோறும் 174 சதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது

உற்பத்தி ஊக்கத் தொகையாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு மாத ஊதியம் அளிக்கப்பட்டுள்ளது. இது மொத்தம் ரூ. 4.5 இலட்சம் ஆகும். விவசாயிகளுக்காகக் கரும்பு உற்பத்தி பற்றி சிறப்புக் கூட்டங்களும் வீடியோ காட்சிகளும் நடத்தப்படுகிறது. விவசாயிகளுக்காக டிராக்டர் வாங்க ரூ. 50 இலட்சத்திற்கு மேல் கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிக் கட்டடத்தை விரிவுப்படுத்த ஒரு நுண்ணுயிரியல் ஆராய்ச்சி நிலையம் ரூ. 3 இலட்சம் செலவில் அமைக்கப்படவிருக்கிறது. விவசாயிகளின் வசதிக்காகக் கொண்டல் கிராமத்திலிருந்து தலைஞாயிறு வரை ரூ. 33 இலட்சம் மதிப்பீட்டில் சாலை போடும் பணி ஆலையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுறவின் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்ற நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி சர்க்கரை ஆலைக்கு, தமிழக அரசு சிறந்த ஆலைக்கான 2-வதுபரிசை வழங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

**எஸ். நடராஜன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தஞ்சாவூர்.**

மேலும், மாறுதல் மேம்பாட்டுத் துறை மற்றும்சென்னை என்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஆகியோர் இணைந்து தயாரித்துள்ள ''புகையில்லா அடுப்பு'' ஒன்றும் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது. கிராமப்புற எளிய மக்களுக்கு இவ்வடுப்பு பயனுள்ளதாக இருக்கும்.

சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட சுவையான உணவு வகைகள், ''தமிழ்நாடு ஓட்டலில்'' பொருட்காட்சியைக் காண வரும் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்ணா கலையரங்கில் தினசரி நடனம், நாடக நிகழ்ச்சிகள் நடை[illegible] பெறும்.

நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்து கொண்டுவந்து குவிக்கப்பட்டிருக்கும் வண்ண வண்ணத் துணி மற்றும் ஆயத்த ஆடை வகைகள், கைவினைப் பொருட்கள், விளையாட்டுச் சாதனங்கள், பொருட்காட்சியில் அமைந்துள்ள சுற்றுலா விற்பனை அங்காடியில் மக்களுக்குக் கிடைக்கும்.

இந்த ஆண்டு புதுமையான மின்னியல் சாதனங்களுடன் கூடிய கேளிக்கை மையம் அமைக்கப்பட்[illegible] [illegible]ல்லி ''அம்பு-கார்'' [illegible] போன்ற இக்கேளிக்கை [illegible] அனைவரையும் கவ[illegible] வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

இவைதவிர வழக்கமான அம்சங்களான, வண்ண மீன்களின் அருங்காட்சியகம், இசைக்கேற்ப நடனமாடும் வண்ண நீரூற்று, திரையரங்கு, பாம்புப் பண்ணை, நாய்க் கண்காட்சி, உணவுக் கண்காட்சி, தோட்டக்கலைக் கண்காட்சி ஆகியவைகளும் இப்பொருட்காட்சியில் இடம் பெறுகின்றன.

இப்பொருட்காட்சி வேலை நாட்களில் மாலை 3 மணியிலிருந்து இரவு 10 மணி வரையிலும், விழாக் காலங்களிலும், விடுமுறை தினங்களிலும் காலை 10 மணியிலிருந்து இரவு [illegible] மணி வரையிலும் திறந்[illegible]

—நமது செய்தியாளர்



# 'தை' இது ஒரு தமிழ் நாகரிகம்





ஆங்கில நாகரிகத்திற்கும் தமிழ் நாகரிகத்திற்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உண்டு. உயர்ந்த சிறந்த வரவேற்பை வெப்பத்துடன் தொடர்புசெய்து 'Warm welcome' என்பது மேலை நாகரிகம்.

நாம், குளிரக் குளிர வரவேற்றார் என்போம். 'மனம் குளிர' என்று பாராட்டுவோம். காரணம் உண்டு. குளிர் பூமியில் வெப்பம் வரவேற்கப்படுகிறது. வெப்ப பூமியில் குளிர் வரவேற்கப்படுகிறது. எனவே வரவேற்கும் வார்த்தையில் இவை சம்பந்தம் கொள்கின்றன.

இயல்பான வெப்பம் மிகுந்த தமிழ் மண்ணில் மார்கழி, தை இருமாதங்களும் குளிர்ச்சி காரணமாகச் சிறப்பிக்கப் பெற்றன.

சைவ உணர்வுடையோர் மண்ணகக் கயிலை என்னும் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரையும், வைணவ வாழ்வியலார் கோயில் எனச் சிறப்பிக்கும் திருவரங்கத்தில் வைகுண்ட ஏகாதசியும் கொண்டாடுவர். இதுவே மார்கழி மாதத்தின் சமயச் சிறப்பாகும்.

அதிகாலை துயில் எழுதல், குளிர் நீராடல், நோன்பு நோற்றல், மழை வேண்டல், நல்ல கணவனை வேண்டி இறையருளைத் துதித்தல் என்று மக்களின் பொதுப் பிரச்சினைகள், தனிப் பிரச்சினைகள் மார்கழி வழிபாடாகின்றன.

அகிசிவம்



அத்தகைய நோன்பின் நிறைவோடு தை பிறக்கிறது. வீட்டுத் தேவைகளும் நாட்டுத் தேவைகளும் நிறைவேறும் என்று தை மாதத்தின் முதல் விடியல் தன்னம்பிக்கை தருகிறது. அதுவே பெரும் விழாவாக மக்கள் சமூகத்தால் கொண்டாடப் பெறுகிறது.

ஆறுமாத காலத்தின் அயராத உழைப்பு அறுவடையாவதால், வீட்டு முற்றங்களில் மகிழ்ச்சி பொங்கல் இடுகிறது. இது ஓர் உணர்ச்சியுள்ள விழா—உயிர்ப்புள்ள விழா.

விண்வெளிக் கோள்கள் மீது மிக ஆர்வம் காட்டிய மண் தமிழ்மண். இயல்பான பாடல்களில் கூட 'வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று' என்று கோள்கள் நிலையைக் கோடிட்டுக் காட்டுவது தமிழ்க் கவிதை.

நிறை நிலவு நாட்களையெல்லாம் இறைவிழவு நாட்களாகக் கொண்டாடியது இம்மண்ணின் மன முதிர்ச்சியின் அடையாளம். மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம் என்று பௌர்ணமி நாட்களில் விழித்திருந்து விழா நிகழ்த்தியவர் தமிழர்.

நிலா என்ற கோள் மீது கவனம் செலுத்தியே விழா என்பதை அமைத்தனர் நம் முன்னோர். மாதம் முழுவதும் நிலவை மையப்படுத்தி விழா எடுத்தவர்கள் ஆண்டுக்கு ஒருமுறை சூரியனைச் சிறப்பிக்கும் விழா எடுத்தனர். அதுவே தைப்பொங்கல். எப்படியோ, மண்ணில் வாழ்ந்தாலும் விண்ணில் நிகழும் கோள்களின் இயக்கங்களில் நம் முன்னோர் கவனம் செலுத்தினர் என்பது மகிழ்வுக்குரியது.

சூரியனை ஒரு நட்சத்திரம் என்று விஞ்ஞானம் தெளிவுபடுத்தினாலும், உலகின் வாழ்வு இயக்கம், மழை, பயிர், வளர்ச்சி எல்லாமே சூரியனையே நம்பி இருப்பதால் அவனைத் தெய்வமாக எண்ணினர் நம் முன்னோர்கள். சூரியனார் என்றும், சூரிய நாராயணர் என்றும் தெய்வமாக்கி, கோயில் எடுத்து வணங்கினார்.

விவசாயம் என்ற பயிர் வாழ்வு இம்மண்ணின் உயிர் வாழ்வாக அமைந்து போனதால் பயிர் வாழ்வுப் பண்டிகையைச் சூரிய இயக்கத்துடன் தொடர்பு படுத்தி இப்பெருவிழாவை அமைத்து விட்டனர். உயர்திணை மனிதன், திணை கடந்த தெய்வத்திற்கு விழாக்காணும்போது அஃறிணை மாட்டையும் சேர்த்து நினைத்தது ஓர் ஆச்சரியம்தான்!

ஒவ்வொரு விழாவும் அந்தச் சமூகத்தின் பண்பாட்டுக்கு ஓர் உன்னதமான அடையாளம். தைப் பொங்கல்; தமிழ் நாகரிகத்தின் வெளிப்பாடு ஆகும்.

உயர்ந்த சூரியன் - உயரமுயலும் மனிதன்-உயர்வுக்கு ஏங்காத விலங்கு. மூன்றும் இவ்விழாவில் இணைப்புறுகின்றன. உலகின் இயக்கத்துக்கு மூன்றும் இணைந்திருப்பதே வெற்றி தருகிறது என்பது இந்த விழாவின் ரகசியம்.

தன்னிலும் மேம்பட்ட சூரியனை வணங்கும் போதே, தனக்கு நிகர் ஆகாத மாடு என்ற விலங்கையும் இணைத்து வழிபாடு செய்ய நினைத்த தமிழன் பண்புள்ளவன்; பாராட்டத்தக்கவன்; நாகரிகம் மிக்கவன்.

நன்றி காட்டுவது என்பது நாகரிகத்தின் அடையாளம். உதவி செய்தவர்க்கு நன்றி எண்ணுவது. நன்றி சொல்லுவது, நன்றிகாட்டுவது என்பது பண்பின் முதிர்ச்சி. நன்றியைச் சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தாதவரை நாகரிகம் அற்றவர்கள் என்பது பலரது முடிவு.



தனக்கு, தன் வாழ்வுக்கு உதவிய சூரிய ஒளியை, வெப்பத்தை நன்றியுணர்வோடு வணங்குகிறோம். அதே நேரத்தில் உழவனுக்கு முன் நடந்து சேற்றில் அவனுக்கு வழிகாட்டிய ஜீவனையும் வணங்குகிறோம்; வீட்டில் உழவன் மனைவிக்குப் பதிலாக அவன் வீட்டுச் சிசுவுக்குப் பால் ஊட்டிய தாய்மையின் மலிவுப் பதிப்பான பசுவையும் வணங்குகிறோம்.

நம்மில் உயர்ந்தோரை வணங்குவது பெரிய நாகரிகம் இல்லை. அது திணிக்கப்படுகிறது. தவிர்க்க முடியாதது. ஆனால் நம்மில் குறைந்தாரை நன்றியுடன் நினைவுகூர்வது உயர்ந்த நாகரிகம். பண்பின் அடையாளம்.

மே மாதம் முதல் நாளை உழைப்பாளர் தினம் என எண்ணுகிற நாம், இந்த மண்ணைப் பொறுத்த வரை இதையே உன்னதமான உழைப்பாளர் தினமாக எண்ண வேண்டியுள்ளது.

'ஞாயிறு போற்றுதும், 'ஞாயிறு போற்றுதும்' என்ற பழைய நினைப்போடு 'உழவர் போற்றுதும், உழைப்பாளர் போற்றுதும்' என்ற புதிய நினைவும் சேர்ந்து இந்த விழாவைச் சிறப்பிக்கட்டும்.

பட்டணத்துக் கவர்ச்சியில் இன்னும் மயங்காமல் கிராமத்து மண்ணில், வேர் பிடித்து நிற்கிற தலைமுறை உழவர்களைத் தலை வணங்கிப் பாராட்டுவோம்.

'பயிர் வாடினால், உயிர் வாடும்' என்பதறிந்து பயிருக்கு உயிரூட்டி, வியர்வை உப்பை விளைநிலத்து உரமாக்கும் உழைப்பாளர்களை வணங்க வேண்டியது படித்தவர்களின் நாகரிகத்திற்கு ஓர் அடையாளம்.

'தை' — இது ஒரு தமிழ் நாகரிகம்.



# வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி

திருக்குறளார் வீ. முனிசாமி
இயக்குநர்,
திருக்குறள் நெறிபரப்பு மையம்.

மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற உறுதியுடன் வாழ்ந்து வருபவனுக்குத் தெய்வமும் தன்னுடைய ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு துணைபுரியும் என்று கூறப்பட்டது.

மக்களுக்குச் செய்கின்ற தொண்டு அவ்வளவு சிறப்பானது என்று நல்ல குறிப்புடன் உணர்த்தப்பட்டது. தெய்வம் என்கின்ற ஒன்று உடை உடுத்திக் கொண்டு இருப்பதாகவும், அந்தத் தெய்வம் குடிமக்களுக்குத் தொண்டு செய்பவனைப் பார்த்து வேகமாக வந்து துணைபுரியும் என்கின்ற சிந்தனை வலியுறுத்தப்பட்டது.

''மடி தட்டிக்கொண்டு வருகிறான்'' என்று உலக வழக்கில் பேசுவதுண்டு. அதாவது தாமாகவே விரைந்து வந்து பணிபுரிகின்ற காலங்களில் இவ்வாறு சொல்வதுண்டு.

குடிமக்களுக்குத் தொண்டு செய்கின்ற இன்றியமையாத் தன்மையைப் பற்றி 'குடி செயல்வகை' என்ற அதிகாரமே சிறப்பாக விளக்கம் செய்து வருகிறது.

பொதுத் தொண்டு செய்பவர்கள் பிறர் குறை கூறி, குற்றம் சொல்வதற்கு இடம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது மக்கள் தொண்டு செய்பவர்களின் மீது எளிமையாகக் குற்றம் கண்டு சொல்லுபவர்கள் மிகுதியாக இருப்பார்கள் என்பது உலகியல் இயற்கையாகும். ஆதலால் குடிமக்களுக்குத் தொண்டு செய்பவர்கள் தங்கள் மீது குற்றங்கள் வாராதபடி மிகவும் உன்னிப்பாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது குறிப்பான செய்தியாகும்.

மக்களுக்குத் தொண்டு செய்து வருபவர்களை உலக மக்கள் அனைவரும் எக்காலத்திலும் பாராட்டுவார்கள் என்பது சிறந்த செய்தியாகும். பாராட்டுவார்கள் என்று சொல்வதைவிட, மக்களுக்குத் தொண்டு செய்கின்ற தலைவர்களை உலக மக்கள் எப்பொழுதும் சூழ்ந்து கொண்டே இருப்பார்கள் என்று சொல்கின்ற முறையில், ஆசிரியர் திருவள்ளுவனார் குறட்பா அமைத்துக் கூறுகின்றார்.

''குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு'' — (குறள்: 1025)

இந்த அருமையான குறட்பாவில் ஐம்பெரும் உண்மைகளை ஆசிரியர் உணர்த்திக் காட்டுகிறார். மக்களுக்குத் தொண்டு செய்பவர்கள் தங்கள்மீது குற்றங்கள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அடுத்து, மக்கள் தொண்டனாக இருத்தல் வேண்டும். தன்னுடைய வாழ்க்கையினையே மக்கள் தொண்டுக்காக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அப்படிப்பட்டவர்களைப் பொதுமக்கள் எப்பொழுதும் சூழ்ந்து கொண்டேயிருப்பார்கள் என்பதும், தன்னுடைய நாட்டைச் சேர்ந்த மக்கள் மட்டுமல்லாமல் உலக மக்களே அத்தகைய தலைவர்களைப் போற்றுவார்கள் என்ற உண்மையும் குறிக்கப்பட்டது.

மக்கள் தொண்டு செய்பவர்களுக்கு இயற்கையே முன்னின்று உதவும் என்பது அறிந்து கொள்ள வேண்டிய செய்தியாகும். மக்களுக்குச் செய்கின்ற தொண்டு அவ்வளவு சிறப்பானது என்று உணர்த்தப்பட்டது.

எளிமையாக விளங்க வேண்டும் என்ற கருத்தினை உட்கொண்டு கற்பனை நயம் தோன்றத் தெய்வமும் மடிதட்டிக்கொண்டு முன்னே நின்று மக்கள் தொண்டனுக்கு ஆதரவு தரும் என்ற உண்மை அழகாகக் கூறப்பட்டது.

''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்''— (குறள்: 1023)

இக்குறட்பாவில் ''ஒருவற்கு'' என்ற சொல் பன்முறையும் சிந்தனை செய்து அறிய வேண்டியதொன்றாகும். யார் ஒருவர் இந்தப் பொதுமக்கள் தொண்டிலே முற்றிலும் அமைத்துக் கொண்டார்களோ அவர்களுடைய பெருமை சிறப்பாகவும் குறிப்பாகவும் கூறப்பட்டது.

இந்த உலகம் ஐந்து பெரிய இயற்கைப் பிரிவுகளினால் இயங்கிக் கொண்டிருப்பதாகும். அவைகளையே நிலம், நீர், தீ, காற்று, விண் என்று ஐந்தாகக் குறிப்பிட்டுக் கூறுவார்கள். மகான் தாயுமான சுவாமிகள் ''ஐவகையெனும் பூதம் ஆதியை வகுத்து'' என்று குறிப்பிட்டுப் பாடியிருப்பது சிந்தனைக்குரியதாகும். ஆசிரியர் திருவள்ளுவனாரும், ''பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்'' (271) என்று குறித்திருப்பதும் சிந்தனைக்குரியதாகும்.

உலகத்தில் இயற்கைப் பிரிவுகளாக உள்ள இந்த ஐந்து அமைப்புகளையும் அடிப்படையாக வைத்து அவைகளின் ஆற்றல்களையெல்லாம் தெய்வீக சக்திகளாகவும் தெய்வங்களாகவும் உலக மக்கள் போற்றி வருகின்ற பழக்கம் வந்துவிட்டது.

கடவுள் வழிபாடு, இறைவன் வழிபாடு என்று சொல்லப்படுவதற்கும் தெய்வம் என்ற சொல்லினால் குறிப்பிடப்படுவதற்கும் சம்பந்தமில்லை என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆதலால்தான் ஆசிரியர் திருவள்ளுவனார் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் ''தெய்வம்'' என்ற சொல்லினையே சொல்லாமல் விட்டுவிட்டார்.

ஊழ் என்ற அதிகாரத்தில் "உலகத்து இயற்கை" என்று ஆசிரியர் திருவள்ளுவர் குறிப்புக் காட்டுகிறார்.

தலைசிறந்த உரையாசிரியரான பரிமேலழகர், நீதி, ஊழ், பாழ், முறை, உண்மை, தெய்வம், விதி என்கின்ற சொற்களெல்லாம் ஒரே பொருளைத்தான் குறிக்கும் என விளக்கம் தருகிறார்.

திருக்குறளில் ஆறு குறட்பாக்களில் மட்டும்தான் தெய்வம் என்ற சொல் காணப்படுகின்றது.

தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை.—(1) (குறள்: 43)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்—(2) (குறள்: 50)

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை—(3) (குறள்: 55)

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்—(4) (குறள்: 619)

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல் (5) (குறள்: 702)

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்—(6) (குறள்: 1023)

இந்த ஆறு குறட்பாக்களிலும் தெய்வம் என்ற சொல் எந்தப் பொருளினைக் குறித்துக் காட்டுகிறது என்ற உண்மை தெளிவாக்கப்பட்டது. இயல்பாக ஆறறிவு படைத்த மனித ஆற்றலுக்கு மேலாக ஆற்றல் ஒன்று உண்டு என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதனைத்தான் தெய்வீக ஆற்றல் என்றும், இயற்கை ஆற்றல் என்றும் உலக வழக்கில் சொல்வதுண்டு. மனித முயற்சியோடு, இயற்கையும் சூழ்நிலையும் இணைந்து வந்தால் மிகப் பெரிய வெற்றியினைப் பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மக்கள் தொண்டு செய்பவர்கள் பலவிதமான துன்பத்திற்கும் கொடுமைகளுக்கும் ஆளாக வேண்டி வரும் என்ற உண்மை பலரறிந்த செய்தியாகும். உலக வழக்கில் "அடி, உதை" என்று சொல்லப்படுவதும் உண்டு. இந்தக் கால வழக்கில் சிறைத்தண்டனை அனுபவிப்பதும், உடம்பு படுகின்ற துன்பங்களும் கண்டும் கேட்டும் வருபவைகளாகும்.

குடிமக்களுக்குத் தொண்டு செய்பவர்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வருகின்ற ஆசிரியர் திருவள்ளுவனார், தொண்டனுடைய உடம்பு அடைகின்ற துன்பங்களை ஒரு குறட்பாவில் சொல்லிக் காட்டுகிறார்.

"இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு"— (குறள்: 1029)

தான் வாழ்ந்து வருகின்ற மக்கள் கூட்டத்தினை-சமுதாயத்தினைக் குடி என்றும் குடும்பம் என்றும் சொல்லி வைக்கின்றார்.

"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள்: 381)

நாட்டிற்குத் தலைவனாக இருக்கக் கூடிய மன்னனுக்கு அமைந்துள்ள ஆறு அமைப்புகளைக் குறிப்பிடுகிற பொழுது, மக்கள் கூட்டத்தினைக் குடி என்று சொல்லி விளக்கம் செய்தார். [illegible]

திருக்குறளில் காலம் அறிதல் என்று ஒரு அதிகாரம் உண்டு. அந்த அதிகாரத்தில் [illegible] செய்ய வேண்டிய அருமையினையும், மற்றும் காலத்தினால் மிகப் பெரிய சாதனைகளை முடிக்க முடியும் என்ற உண்மையினையும் கூறுகின்றார். "பருவத்தோடொட்ட ஒழுகல்" என்பது போன்ற குறிப்பெல்லாம் 'காலமறிதல்' என்ற அதிகாரத்தில் கூறப்படுகின்றன.

மக்களுக்குத் தொண்டு செய்பவனுக்கு அறிவுரைகளைச் சொல்லிக் கொண்டு வருகிற ஆசிரியர் திருவள்ளுவனார், மக்களுக்குத் துன்பம் வருகின்ற நேரங்களிலெல்லாம் உடனுக்குடனே தீர்த்து வைக்க வேண்டும் என்றும், காலம் என்ற பருவத்தினைப் பார்த்துக் கொண்டு அதற்காகக் காத்துக் கொண்டு இருக்கக் கூடாது என்றும் கூறுகிறார்.

பொதுத்தொண்டு செய்பவர்களுக்கு நேரம் காலம் இல்லையென்று உணர்த்தப்பட்டது.

"குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்" — (குறள்: 1028)

இந்தக் குறட்பாவில் பொதுத்தொண்டு செய்பவர்கள் பருவம் என்ற காலத்தினைப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது என்று மட்டும் சொல்லாமல் அவர்கள் மானம் என்பதையும் மனதில் வைக்கக்கூடாது என்கிறார். மானம் என்பதைப் பற்றித் தனியாக ஒரு அதிகாரம் திருக்குறளில் இருக்கிறது.

[illegible] தனிப்பட்ட முறையில் பொதுநலக் காரியங்களைச் செய்கின்றபொழுதுதான், மானம் மரியாதை என்பதை எல்லாம் [illegible] பொதுமக்களுக்குத் தொண்டு செய்பவர்கள் அதையும் கவனித்துக்கொண்டிருக்கக்கூடாது என்பதை உணர வைத்தார்.

## அன்னை மொழி அமுத மொழி

—துளவை இளங்குமரன்

அன்னைமொழி, அமுதமொழி,
அழகுமொழி தமிழாம்!
முன்னைமொழி, மூத்தமொழி,
முழங்கும்மொழி தமிழாம்!

கன்னிமொழி, காக்கும்மொழி,
கலையின்மொழி தமிழாம்!
பொன்னிமொழி, பொருகைமொழி,
பொதிகைமொழி தமிழாம்!

தென்றல்மொழி, தெற்குமொழி,
தெளிந்தமொழி தமிழாம்!
மன்னர்மொழி, மக்கள்மொழி,
மழலைமொழி தமிழாம்!

கன்னல்மொழி, கனிவுமொழி,
கவிதைமொழி தமிழாம்!
இன்பமொழி, இனியமொழி,
இயற்கைமொழி தமிழாம்!

அன்புமொழி, அருமைமொழி,
அறிவுமொழி தமிழாம்!
பண்புமொழி, பாகுமொழி,
பழகும்மொழி தமிழாம்!





# தஞ்சை மாவட்டத்தின் அருங்காட்சியகங்கள்

கி.ஸ்ரீதரன்
தொல்பொருள் ஆய்வுத்துறை
[illegible] 23.

'தமிழகத்தின் நெற்களஞ்சியம்' எனத் தஞ்சை மாவட்டத்தைப் போற்றுகிறோம். இங்கே பல கலைகள் தோன்றி இன்றும் வாழ்ந்து வருகின்றன. தமிழ்நாட்டிற்குப் பெருமை அளிக்கும் பல அழகிய சிற்பங்கள் அடங்கிய கோயில்கள் இம்மாவட்டத்தில் அதிகம் உள்ளன.

ஒரு நாட்டின் பண்டைய வரலாறு, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ள உதவுவது அருங்காட்சியகங்களே. அருங்காட்சியகங்கள் இல்லாத நாடே இல்லை எனலாம். இந்தியாவின் பல இடங்களில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் வரலாற்றைப் புத்தகத்தில் படித்துத் தெரிந்து கொள்வதைவிட, இக்காட்சியகங்களின் மூலம் அறிந்து கொள்வது எளிமையாகும். இம்மாவட்டத்தில் எட்டுக் காட்சியகங்கள் உள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள அருங்காட்சியகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் தனிச்சிறப்பு உடையது. ஒரு சில காட்சியகங்கள் ஒரு குறிப்பிட்ட கோயில்களின் வரலாறு, அவற்றைக் கட்டிய மன்னர்களின் வரலாறு, அக்கோயில்களின் கலைச் சிறப்பு ஆகியவைபற்றி எடுத்துரைக்கின்றன. சோழமன்னர்களின் வரலாறு, சோழமன்னர்களின் ஆட்சி முறை, தமிழகக் கலை, சமய வளர்ச்சிக்கு செய்த தொண்டுகள் பற்றி ஒரு காட்சியகம் விளக்குகிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடந்த வரலாறு, அயல்நாட்டுடன் தமிழகம் கொண்டிருந்த வாணிபத்தொடர்பினைப் பற்றியும் ஒரு காட்சியகம் எடுத்துரைகிறது.



இனி ஒவ்வொரு காட்சியகத்தின் சிறப்பினையும் காண்போம்.

### கோயில் காட்சியகங்கள்

### பெரிய கோயில், தஞ்சாவூர்

தஞ்சைப் பெரிய கோயில் முதலாம் இராசராச சோழனால் கட்டப்பட்டதாகும். கல்வெட்டுக்கள் இக்கோயிலை 'இராசராசேச்சரம்' எனவும், இங்குள்ள இறைவனை 'இராசராச ஈசுவரமுடையார்' எனவும் வழங்குகின்றன. இக்கோயில், சோழர்கால கட்டடக்கலை, ஓவியக் கலை, சிற்பக்கலைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இக்கோயிலின் தொன்மைப் பாதுகாப்புப் பொறுப்பு மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாது



தஞ்சைப் பெரியகோயில் காட்சியகம்

காக்கும் பணி செய்யும் பொழுது கிடைத்த பொருட்கள், கோயிலி லுள் கிடைத்த வழிபாட்டில் இல் லாத சிறபங்கள், கல்வெட்டுகள் ஆகியவை காட்சியகத்தில் வைக்கப் பட்டுள்ளன. இக்கோயிலை மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறை ஏற்பதற்கு முன் எவ்வாறு இருந் தது, ஏற்ற பின்னர் எவ்வாறு பாதுகாககப்பட்டுள்ளது என்பன நிழற்படங்களாக வைக்கப்பட்டுள் ளன. கோயில் விமானத்தின் உட் புறத் தோற்றம், சோழர் காலச் செப்புத் திருமேனிகள், சிற்பங்கள் ஆகியவைகளின் நிழற்படம் வைக் கப்பட்டுள்ளன. இககாட்சியகத்தில் ஒரே கல்லில் குடையப்பட்ட செவ் வக வடிவிலான கருங்கல் தொட்டி உள்ளது. இதுபோன்ற தொட்டி, அம்மன் சந்நிதியிலும், சுப்ரமணியர் சந்நிதியிலும் உள்ளது. காட்சியகத் தொட்டியின் விளிம்பில் 'யடியவு, என்ற எழுத்துக்கள் காணப்படுகின் றன. அத்தொட்டியில் 13 கலம் 1 பறை அளவு தண்ணீர் அல்லது எண்ணெய் போன்றவை நிரப்பக் கூடியவை என அறிய முடிகிறது. அமமன் சந்நிதியில் இருப்பது 10 கலம். 12 மரக்கால் 7 நாழி அளவு கொண்டது. இக்கோயிலின் கரு வறை உட்திருச்சுற்றில் உள்ள சோழர்கால, நாயக்கர் கால ஓவி யங்கள் மற்றும் சிவபெருமானின் ஆடும் 108 நடன கரணங்களையும் ஒளிப்படமாக (Slides) எடுத்து அவற்றை பெரிய வடிவில் பார்க்கும் வண்ணம் அமைத்திருக்கிறார்கள்; இடைக்கால சோழர் வரலாறு, கலைச்சிறப்பு, தஞ்சைப் பெரிய கோயிலின் தொன்மைச் சிறப்புப் பற்றி அறிந்துகொள்ள இக்காட்சி யகம் உதவும்.

**தாராசுரம் காட்சியகம்**

தாராசுரம் ஐராவதீசுவரர் கோயில் குடந்தையிலிருந்து 6கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக் கோயில் இரண்டாம் இராசராச சோழனால் கட்டப்பட்டது. கல் வெட்டுகளில் இக்கோயில் 'இராஜ ராஜேஸ்வரம்' என அழைக்கப்படு கிறது. பழையாறைநகர் இவன் காலத்தில் சோழர் தலைநகரமாக மாற்றப்பட்டது. இராசராசனைப் போற்றும் வகையில் ஒட்டக்கூத்தர் 'இராசராசன் உலா' இயற்றினார். சைவ சமயத் தொண்டர்களாக 63 நாயன்மார்களின் வரலாறு இங்கு தொடர் சிற்ப வடிவில் அமைந்துள் ளது ஒரு சிறப்பம்சமாகும். கோயி லின் சுவரில் இறைவனின் திருவுரு வங்கள் மற்றும் பெண்கள் பல்வேறு வாத்தியங்களுடன் ஆடும் நடன சிற்பங்கள் காணப்படுகின்றன. எனவே இக்கோயிலை ஒரு சிற்பக் களஞ்சியம் எனலாம்.

இக்கோயிலின் நடராசர் மண்ட பத்தில் காட்சியகம் வைக்கப்பட் டுள்ளது. நடராசர் மண்டபமே ஒரு சிற்பக் கருவூலமாகும். அதன் விதா னம், தூண் ஒவ்வொன்றும் சிற்ப அழகுடன் காட்சி தருகின்றன. காட்சியகத்தில் சப்த மாதர்கள், சூரியன், சங்கநிதி, கண்ணப்பன், நாகராசன் மற்றும் பல சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சில துண்டு கல்வெட்டுகளும் உள் ளன. 63 நாயன்மார்களின் வரலாற்றுச் சிற்பங்கள் ஒளிப்படமாக (Slides) அமைக்கப்பட்டு வைக் கப்பட்டுள்ளன. சிற்பங்களைத் தெளிவாகப் பார்க்க இத்தகைய அமைப்பு உதவும். இக்கோயிலைப் பற்றியும், அம்மன் கோயிலைப் பற்றியும் ,கோபுரங்கள் பற்றிய குறிப்பும், தஞ்சாவூர்-கங்கை கொண்ட சோழபுரம் - தாராசுரம்- திரிபுவனம் ஆகிய நான்கு கோயில் களுக்கு இடையே உள்ள கட்டட அமைப்பில் ஒற்றுமை, வேற்றுமை கள் பற்றிய குறிப்புகளும் காணப்படு கின்றன. தாராசுரம் கோயிலைப் பழுதுபார்க்கும் பணிகள், ஆங்கு காணப்படும் பல்வேறு வகையான படிகள் (Steps) பற்றிய புகைப்பட தொகுப்பும் சீரிய முறையில் வைக் கப்பட்டுள்ளன. பிற்கால சோழர் கலையை அறிந்து கொள்வதற்கு இக்காட்சியகம் மிகவும் உதவியாக இருக்கும். மேற்குறிப்பிட்ட இரு காட்சியகங்களும் மத்திய தொல் பொருள் ஆய்வுத்துறையின் நிர் வாகத்தின் கீழ் உள்ளன.

**தஞ்சைக் கலைக்கூடம்**

தஞ்சை நகருக்கு பெருமை சேர்ப் பதில் கலைக்கூடமும், சரஸ்வதி மகால் நூலகமும் ஒரு தனி இடம் பெறுகிறது. சோழர் காலத்தில் கலைச்சிறப்பு எத்தகைய மேன்மை யான இடத்தைப் பெற்றிருந்தது என்பதை அறியவும், சிற்பங்கள், செப்புத் திருமேனிகள் பற்றி அறிந்துகொள்ள விரும்புவோர் அவ சியம் பார்க்க வேண்டியதும் தஞ் சைக் கலைக்கூடமாகும்.

தஞ்சைக் கலைக்கூடம், தஞ்சை அரண்மனை





இராசராசன் காட்சியகம் - காட்சிப் பேழை விளக்குகளின் தோற்றம்.



இராசராசன் காட்சியகம்



சரசுவதி மகால் நூலகம்

இக் கலைக்கூடம் 1951ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியாளராக இருந்த திரு டி.கே.பழனியப்பன் அவர்களால் துவங்கப்பெற்றது. 'வாகீச சிவன்' என அழைக்கப் படும் நான்கு தலை கொண்ட சிவ பெருமானின் சிற்பம் முதலில் கண் டெடுக்கப்பட்டு நுழைவு வாயிலின் அருகில் காணப்படுகிறது. இது போன்ற சிற்பம் வேறுமாவட்டங் களில் காண்பது அரிது. இம்மாதிரி யான சிற்பங்கள் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், கண்டியூர் செந்தலை கோயில் களிலும் காணப்படுகின்றன. இது போன்ற சிற்பங்கள் சில மேல் நாட்டுக் காட்சியகங்களில் காணப் படுகின்றன. முற்காலச் சோழர் காலம் முதற் துவங்கி பிற்காலச் சோழர் காலம் வரையிலான கால சிற்பங்கள் இக்கூட்டத்தில் உள்ளன. அவற்றுள் செந்தலை, திருவலஞ்சுழி, தாராசுரம் சிற்பங்கள் குறிப்பிடத் தக்கனவாகும். தாராசுரம் சிற்பங் களில் யானை வடிவில் வந்த அரக் கனை இறைவன் கிழிப்பது போன்ற சிற்பம் தமிழர் சிற்பத் திறனுக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது. இதன் அருகிலே திரிபுரம் எரித்த இறைவன் சிற்பமும், அரசன் அரசி சிற்பங்களும் உள்ளன. மேலும் தாராசுரத்திலிருந்து எடுத்துவரப் பட்ட ஒரு துவாரபாலகர் சிற்பம் ஒரு தனிச்சிறப்பு உடையதாகும். அச்சிற்பத்தின் பீடத்தில் 'ஸ்வஸ் திஸ்ரீ' உடையார் ஸ்ரீ விசய ராசேந் திரத் தேவர் கல்யாணபுரம் எறிந்து கொண்டு வந்த துவாரபாலர் என்று கல்வெட்டாகப் பொறிக்கப் பட்டுள்ளது. முதலாம் இராசேந் திரனின் மகன் முதலாம் இராசாதி ராசன் பெருவீரனாய் திகழ்ந்தவன். இவன் பாண்டியர், சேரர், சிங்கள வர், சாளுக்கியர் ஆகியோரை வென் றான். சாளுக்கியர்களின் தலைநக ரான கல்யாணபுரத்தை வெற்றி கொண்டதின் அடையாளமாக அங் கிருந்து துவாரபாலகர் சிலை யொன்றை முதலாம் இராசாதி ராசன் எடுத்து வந்திருக்கிறான். சிற்ப அமைப்பும் சாளுக்கியர் பாணியை ஒத்து காணப்படுகிறது. வரலாற்று சிறப்புமிக்க சிற்பம் இது.

இக்கூடத்தில் நாயக்கர் தர்பார் மண்டபம் எனப்படும் இடத்தில் தமிழகத்தின் பெருமையைப் பேசும் பல செப்புத் திருமேனிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. நடராஜர் வடிவத்தில் எவ்வளவு வகை? பார்க்க வேண்டுமா? இக்காட்சி யகத்தைப் பார்த்தாலே போதும்! இது போன்று விநாயகர், சோமாஸ் கந்தர், திரிபுராந்தக மூர்த்தி, வீணாதர தட்சிணாமூர்த்தி, அப்பர், ஞானசம்பந்தர் மற்றும் திருமால், ஸ்ரீதேவி ஆகிய வடிவங்களையும் காணலாம். இவற்றில் தனிச்சிறப்பு வாய்ந்தது தஞ்சை மாவட்டம் திரு வெண்காட்டிலிருந்து எடுத்து வரப் பட்ட சுந்தரமூர்த்தி நாயனார், பரவை நாச்சியார், முருகன், வள்ளி, தெய்வயானை, பைரவர், பிச்சதேவர், கல்யாணசுந்தரர், திரு ஞானசம்பந்தர், கண்ணப்பன், அப்பர், நந்தி, ஆகிய செப்புத்திரு மேனிகள் ஆகும். இவற்றில் சில வெளிநாட்டுக் கண்காட்சிகளில் பார்வைக்கு வைக்கப்பட்டு தமிழ கத்திற்குப் பெருமைதேடித்தந்தன. எல்லோரும் கண்டு மகிழ வேண்டிய கலைக்கூடம் இது.

**சரஸ்வதி மகால் நூல் நிலையம்**

இதுவும் தஞ்சை அரண்மனையின் ஒரு பகுதியில் அமைந்துள்ளது. இங்கு ஏராளமான சுவடிகள் பாது காக்கப்பட்டு வருகின்றன. இது ஒரு நூலகம் போன்று விளங்கினாலும் இதில் உள்ள சுவடிகளும் மற்ற ஆவணங்களும் தொன்மையான கலைப்பொருளைப் போன்றே விளங்குவதால் இதனைக் காட்சி யகம் என்று கூறுவதில் தவறில்லை.

சோழர்காலத்தில் கோயில்களில் சரஸ்வதி பண்டாரம் என்ற பெய ரில் நூலகங்கள் அமைந்திருந்ததாக கல்வெட்டுகள் கூறுகின்றன. மராட் டிய மன்னர்கள் காலத்தில் இந் நூலகம் அமைக்கப்பட்டது. குறிப் பாக சரபோஜி மன்னர் காலத்தில் பலமொழிச் சுவடிகள், பலமொழி களில் வெளியிடப்பட்ட புத்தகங் கள் நூலகத்தில் சேர்க்கப்பட்டன. இந்நூலகத்தில் சுமார் 80,000 சுவடிகள் உள்ளன. இதைத் தவிர இங்கு பொதுமக்கள் கண்டு மகிழ ஓலைச்சுவடிகள், மராட்டிய மொழி ஆவணங்கள், மராட்டிய செப்பேடு கள், ஓவியம் தீட்டப்பட்டுள்ள புத் தகங்கள், சுவடிகள் முதலியன காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்காட்சியகத்தை ஒரு வரலாற்றுக் களஞ்சியம் என்றே அழைக்கலாம். மேற்குறிப்பிட்ட இரண்டும் தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகிறது.

**இராசராசன் அருங்காட்சியகம்**

இராசராசன் 1000 வது முடி புனை விழாவினை ஒட்டி 1984ஆம் ஆண்டு இக்காட்சியகம் அமைக்கப் பட்டது. கலைக்கூடத்தின் ஒரு பகுதியில் இது அமைக்கப்பட்டுள் ளது. சோழர்கால வரலாற்றின் சிறப்புகளை அறிந்துகொள்ளும் வண்ணம் - குறிப்பாக இராசராச சோழனின் சிறப்பு இயல்புகளை அதிக அளவில் அறிந்து கொள்ளும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. காட்சியகத்தில் சிற்பங்கள், விளக் கப்படங்கள், கல்வெட்டுப் படிகள், செப்பேடுகள், விளக்குகள், பரி கலன்கள், இசைக்கருவிகள், சோழர் கால தலை நகரங்களான பழை யாறை, கங்கை கொண்ட சோழ புரம் ஆகிய இடங்களில் நடை பெற்ற அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த தொல்பொருட்கள் ஆகிய பிரிவுகள் அடங்கியுள்ளன.

இராசராசன் காட்சியகம் - உட்புறத் தோற்றம்





தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை காட்சியகம்

இராசராசன் சிறப்புக்களை, அதாவது தஞ்சைப் பெரிய கோவி லைக் கட்டியது, கடல் கடந்து படையெடுத்தது, பெரிய கோயில்ல் 400 ஆடல் மகளிரை நியமித்தது. முதன் முதலில் நில அளவை செய் தது. நாகப்பட்டினத்தில் புத்த விகாரம் அமைக்க உதவியது. குறுநில மன்னர்கள் அவனிடத்தில் திறை செலுத்தியது, தில்லைக் கோயிலில் மறைந்து கிடந்த தேவா ரப்பதிகங்களை வெளிக் கொணர்ந் தது ஆகிய வரலாற்றுச் செய்திகள் ஒளி-ஒலிக் காட்சியில் தானாகவே கூறும் வண்ணம் அமைக்கப்பட்டுள் ளன. இராசராசன், இராஜேந்திரன் ஆகியோரின் ஆட்சிபபரப்பின் வரை படமும் உள்ளது. பல சோழர்கால கற்சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. இதில் ஒன்று வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இராசராசன் தேவியர்களில் ஒருவ ரான லோகமாதேவி திருவலஞ்சுழி யில் 'சேத்திரபாலபிள்ளையார்க்கு' கோயில் ஒன்றைக் கட்டினார். இக் கோயிலுக்குப் பின்னர் வந்த அனைத்துச் சோழ மன்னர்களும் தானமளித்ததாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஆனால் இக்கோயில் இன்று வழிபாட்டில் இல்லை. இதிலிருந்து எடுத்து வரப்பட்ட 'சேத்திரபாலபிள்ளையார்' சிற்பம் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள் ளது மிகவும் சிறப்பாகும்.

தஞ்சைப் பெரிய கோயிலின் கல் வெட்டுக்களில் சில படியெடுக்கப் பட்டு வைக்கப்பட்டுள்ளன. தமிழ கத்தில் ஊராட்சி தேர்தல் முறை எவ்வாறு நடந்தது எனக் கூறும் புகழ்பெற்ற உத்திரமேரூர் கல் வெட்டின் படி உள்ளது. தஞ்சைப் பெரிய கோயிலைப் போன்றே கரு வறை அமைக்கப்பட்டு அங்குள்ள ஓவியங்களைப் போன்றே ஓவியம் தீட்டப்பட்டு மாதிரி அமைப்பு வைக்கப்பட்டுள்ளது. சோழர்கால வரலாற்றைக கூறும் பள்ளன் கோயில் சுந்தரசோழன் செப்பேடு, பராந்தகசோழன் வேலஞ்சேரி செப் பேடு ஆகியவை காட்சியில உள்ளன. கங்கை கொண்ட சோழபுரம், பழை யாறை ஆகிய சோழர் தலைநகரங் களில் தொல்பொருள் ஆய்வுததுறை அகழ்வாராய்ச்சி செய்தது. ஆய்வு களில் கிடைத்த தொன்மைச்சிறப்பு வாய்ந்த சுடுமண் பொம்மைகள், சீனநாட்டுப்பானை ஓடுகள், மணி கள், விளக்குகள் முதலியன காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளன. தமிழ கத்தை ஆண்ட சோழமன்னர்களின வரலாற்றுச் சிறப்பினை அறிந்து கொள்ள இக்காட்சியகம் உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**மராட்டியர் காட்சியகம்**

தஞ்சை 17-18 ஆம் நூற்றாண் டுவில் மராட்டிய மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டது. தஞ்சை நகரில் உள்ள அரண்மனை மராட் டிய மன்னர்களால் கட்டப்பட்ட தாகும். இதைத்தவிர தஞ்சை மாவட்டத்தில் பல சத்திரங்கள் அமைத்தும், பாலங்கள் அமைத்தும் பெரும் சமூகத்தொண்டு செய்திருக் கின்றனர். சிறப்பு வாய்ந்த மாராட் டிய மன்னர்களின் வரலாறு, அவர்கள் கலைக்கு ஆற்றிய தொண்டு முதலியவற்றை விளக்கும் காட்சியகம் ஒன்றினை அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதற்காக கலைப்பொருட்கள் வரலாற்றுக் குறிப்புகள் ஆகியவை சேகரிக்கும் பணி நடந்து வருகிறது.



**டேனிஷ் கோட்டை காட்சியகம், தரங்கம்பாடி**

மயிலாடுதுறையிலிருந்து பொறையார் வழியாக நாகப்பட்டினம் செல்லும் வழியில் அமைந்துள்ளது தரங்கம்பாடி என்ற ஊர். இவ்வூர் 'சடங்கன்பாடி' • 'குலசேகரப்பட்டினம்' 'தரங்கை' என பல்வேறு பெயர்களிட்டு அழைக்கப்படுகிறது. தரங்கம்பாடி கி.பி.1620 முதல் டேனிஷ்காரர்களின் வணிகத் தலமாகவும், தொடர்ந்து ஆங்கிலேயர்களின் வணிகத் தலமாகவும் 19ஆம் நூற்றாண்டு வரை திகழ்ந்து வந்துள்ளது. 17ஆம் நூற்றாண்டு துவக்கத்தில் வாணிபத்தின் பொருட்டு தமிழகம் வந்தடைந்தடேனிக வர்த்தகக் கம்பெனியைச் சேர்ந்த 'ஓவ்ஜெட்டி' (Ovegedde) என்பவர் தஞ்சை அரசர் இரகுநாத நாயக்கரின் அனுமதி பெற்று கி.பி.1620ல் தரங்கம்பாடியில் டேனிக கோட்டையை நிறுவினார். கோட்டையில் இருக்கும் ஒரு கல்வெட்டில் கீழ்க்கண்ட வாசகம் காணப்படுகிறது.

"The Dansborg built by ovegedde commander in the Royal Danish Navy Circa 1620" இக்கோட்டையை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை புராதனச் சின்னமாக பாதுகாத்து வருவதோடு இதில் காட்சியகம் ஒன்றையும் அமைத்துள்ளது. இககாட்சியகத்தில் டேனிக அரசன் கிறிஸ்டியன் என்ற மன்னனின் உருவப் படம் வைககப்பட்டுள்ளது. தரங்கம்பாடிப் பகுதியில் இருந்துகொண்டு வியாபாரம் செய்வதற்கு தஞ்சை நாயக்க மன்னரிடம் அனுமதி கேட்டனர். அவர் அதற்கு சில நிபந்தனைகள் இட்டு ஒப்பந்தம் செய்து கொடுத்தார். அந்த ஒப்பந்தம்



முழுவதும் ஒரு தங்கத் தட்டில் எழுதப்பட்டு அதன் இறுதியில் ரகுநாத நாயக்கன் தெலுங்கில் கையெழுத்திட்டிருக்கிறான். பனை ஓலைச் சுவடி போன்ற இத்தகடு, தற்பொழுது டென்மார்க் நாட்டின் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதன் புகைப்பட

மராட்டியர் அரண்மனை- உட்புறத் தோற்றம்
தஞ்சாவூர்



பிரதி ஒன்று இங்கு வைக்கப்பட்டுள்ளது. மற்றும் அக்கால முத்திரைகள், டேனிக கொடியின் வரைபடங்கள், பயன்படுத்திய பீரங்கிகள் இரும்பு போர்க்கருவிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. தரங்கம்பாடியில் நிர்வகித்து வந்த கவர்னர்கள் (1624-1845) யார் யார் என்ற பெயர் விபரமும், இக்கோட்டைக்கு வந்த சென்ற கப்பல்களின் பெயரும் இங்கே விளக்கப் பலகையாக வைக்கப்பட்டுள்ளன. இங்கு வந்துசென்ற சில கப்பல்களின் பெயர்கள் பின் வருமாறு:

David, Elephant, Christian, Slip oldenberg, Queen Anna Sophia, Crown priace of Denmark. டேனிக காசுகள் ஒரு பெட்டிக்குள் வைக்கப்பட்டுள்ளன. டேனிக கம்பெனியினர் தரங்கம்பாடியிலேயே காசுகளை வெளியிட்டனர். இவற்றில் ஒருபுறம் டேனிக அரசர் பெயரின் முதல் எழுத்தும், மறுபுறம் டேனிக கிழக்கிந்தியக் கம்பெனி Dansk Ostinsk Compagni யின் முதல் எழுத்துக்களான Dos என்ற எழுத்து காணப்படும். டேனிக காசுகள் பற்றிய விரிவான விபரப்பலகையும் உள்ளது. டேனிக நாட்டுடன் தமிழகம் கொண்டிருந்த வணிகத் தொடர்பு குறித்து அறிந்து கொள்வதற்கு இக்காட்சியகம் உதவியாக இருக்கும். மேற்கண்ட மூன்று காட்சியகங்களும் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழ் உள்ளன.

**தமிழ்ப் பல்கலைக் கழகக் காட்சியகம்**

தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் ஒரு காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பல விதக் கலைப் பொருட்கள், ஆடை வகைகள், இசைக்கருவிகள், ஓவியங்கள், போர்க் கருவிகள், வீட்டுப்பொருட்கள், தெய்வத் திருவுருவங்கள், மர பொம்மைகள் போன்றவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. வல்லம், கொடுமணல் போன்ற இடங்களில் அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப் பெற்ற தொலபொருட்கள் ,காசுகள் போன்றவையும் காட்சியில் உள்ளன. தமிழகத்தின் சிறப்பை பல்வேறு கோணங்களில் எடுத்துக் காட்டும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது இக்காட்சியகம்.

அருங்காட்சியகங்கள் ஒரு நாட்டின் வரலாற்றைச் சான்றுகளுடன் எடுத்துரைக்கும் இடங்களாக அமைகின்றன. புத்தகங்களைப் படித்து அறிந்து கொள்வதை விட, இங்கு சென்றால் மேலும் எளிதாக அறிந்து கொள்ளலாம். மாணவர்கள் அருங்காட்சியகங்களுக்குச்சென்று அறிந்து கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். தமிழக வரலாற்றின் ஒரு பகுதியை எடுத்துக்கூறுவதில் தஞ்சை மாவட்ட அருங்காட்சியகங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.





# எழுவாய் தைப்பாவாய்

## கவியரசர் கண்ணதாசன்

காளை மணியோசை
களத்துமணி நெல்லோசை
வாழை இலையோசை
வஞ்சியர்கை வளையோசை
தாழை மடலோசை
தாயர்தயிர் மத்தோசை
கோழிக் குரலோசை
குழலியர்வாய்த் தேனோசை
ஆழி அலையோசை
அத்தனையும் மங்கலமாய்
வாழிய பண்பாடும்
மாமொழி கேட்டிலையோ!
தோழியர் கைதாங்கத்
தூக்கியபொன் வடிநோக
மேழியர்தம் இல்லத்து
மேலெழுவாய் தைப்பாவாய்!

எங்கள் சமுதாயம்
ஏழை அரசாண்டு
திங்கள்போல் வளர்ந்து
செங்கதிர்போல் ஒளிவீசக்
மங்காத போர்க்களத்தும்
மாளாத வீரர்படை
கங்குல் அகமென்றும்
காலைப் புறமென்றும்

பொங்கி விளையாடிப்
புகழேட்டிற் குடியேறி
தங்கி நிலைத்துத்
தழைத்திருக்கும் காட்சியினைக்
கண்காண வந்த
கலைவடிவே நித்திலமே
பொங்கற்பால் பொங்கிப்,
பூரிப்பாய் தைப்பாவாய்!

பொங்கும்பால் பொங்கும்
புகழ்பொங்கும்! மங்களமே
தங்குங்கால் தங்கும்
தகைதங்கும் தலைவரெலாம்
சிங்கங்காண் சிங்கம்!
தெளியரேல் சாந்தங்கம்!
எங்குங்காண் கின்றோம்
எந்தமிழர் மாட்சியினை!
இங்கெங் கோனாட்சி
இறையாட்சி வாழ்கவென
பொங்கற்பூத் தூவி
புத்தாடைத் தொட்டிலுக்குள்
தங்கத் தேரோட்டும்
தாயமலர் மேனியர்பால்
தங்கித் தாலாட்டு
தனிக்கொடியே தைப்பாவாய்!



# தை மகளுக்கு ஒரு தமிழ்க் கவிதை!

வெண்பகலின் எல்லைகளை விரிக்கும்-கதிர்
வெள்ளைநிறப் பூவெனவே சிரிக்கும்-அந்தப்
பஞ்சையரின் உள்ளெலும்பை வந்துவந்து மெல்லுகின்ற
பாவியெனும் மார்கழியை ஒறுக்கும்!-நீராய் உருக்கும்!

தைபிறக்கும் போது வழி பிறக்கும்-அத்
தைமகளும் கண்ணுறக்கம் மறக்கும்-வானத்
தெய்வமகன் செம்பரிதி தென்திசைக்கு வந்துவிட்ட
திங்களில்தான் வந்த இருள். பறக்கும்-ஒளி சிறக்கும்!

வீதியெல்லாம் செங்கரும்புச் சாறு-ஏழை
வீட்டினிலும் உண்டு சம்பாச் சோறு-தங்கள்
காதலியர் கைப்பிடிக்கக் காளைகளை வந்தடக்கும்
காளைகளோ பாய்ந்துவரும் ஏறு-என்ன வீறு!

மஞ்சளுடன் இஞ்சிவந்து கொழிக்கும்-வான
மங்கலங்கள் மண்ணில்வந்து செழிக்கும்-இனிப்
பஞ்சமெனும் சொற்களுக்குப் பஞ்சமன்றி வேறுவகைப்
பஞ்சமில்லை என்று பொங்கல் விளக்கும்-வாழ்வைத்
துலக்கும்!

வானகத்தை வையமுடன் இணைப்போம்-தேவ
வாழ்க்கையுடன் மானுடத்தைப் பிணைப்போம்-எந்தக்
கானகத்துப் பூங்குயிலும் காதல்கொளும் ஓர்கவிதை
காசினிக்குத் தையினிலே அளிப்போம்-உளம் களிப்போம்!

கவியரசர் இளந்தேவன்







மனிதன் பிறந்தான்; இருந்தான்; மறைந்தான். அண்மையில் இருந்தான் என்ற இடைக்காலத்திற்கே வருவோம். இருந்தவன் சுவையுள்ள உணவைச் சுவைத்து உண்டான். உலகில் உள்ள இயற்கையின்பாற்பட்ட எழில்களையெல்லாம் கண்டான். இவைகளில் எல்லாம் அவனது அவா அடங்கவில்லை. ஏன்? வாய்க்கு இன்ப உணவு கிடைத்துவிட்டது. கண்களுக்கு இயற்கை எழில் கிடைத்துவிட்டது. காதுக்கு இன்பம் என்பது கிடைக்கவில்லை. அந்த இன்பம் எங்கே கிடைக்கும் என்று தேடித் தேடியலைந்தான். தேடியலைந்த போது இயற்கை வளம் வாய்ந்த மலைகளின் பக்கம் சென்றான். அங்கே ஓர் ஓசை; ஓம் என்ற ஒலி போல வந்து கொண்டிருந்தது.

மலைகளின் ஊடே சென்றவன் நாம் தேடியலைந்த இந்த ஓசை காதுக்கு இனிமை தரும் ஓசையாக இருக்கின்றதே; இந்த ஓசை எங்கிருந்து வருகின்றது என்று மேலும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு நிற்கும் போது, எதிரே உள்ள மரத்தில் ஒரு வண்டு துளைபோட்டுமரத்தின் உள்ளே போவதும், வருவதுமாக இருந்ததைக் கண்டான். இந்த ஓம் என்ற ஓசை வண்டினிடமிருந்து வருகிறதா? அல்லது மரத்திலிருந்தே வருகின்றதா? என்று ஐயங் கொள்ளலானான். மரத்திலிருந்த வண்டு வெளியே சென்றுவிட்டது.

வண்டு வெளியே சென்றாலும் ஓம் என்ற ஓசை மாத்திரம் நிற்காமல் வந்து கொண்டிருக்கின்றதே என்று நினைத்து மரத்தின் சமீபத்தில் நெருங்கினான். அங்கிருந்தே ஓசை உண்டாகின்றது என்றறிந்தான். இன்னும் ஆராயலானான். இது மரமல்லவா! அதிலும் வண்டு துளை போடக்கூடிய மென்மையுள்ள மரமாக அல்லவா இருக்கின்றது!. இந்த மரத்திற்கு என்ன மரமென்று பெயர் கொடுக்கலாமென்று எண்ணலானான். மலைக்காட்டில் வளர்கின்ற பெரும்புல் போன்றிருந்ததனால் இம்மரத்திற்கு மூங்கில் என்றே பெயர் கொடுத்தான். இந்த மரம் உள் துளையுடையதாக இருந்ததனாலே தான் இம்மரத்தை வண்டுகளால் துளைக்க முடிந்தது என்று அறிந்தான். வண்டுகள் துளைத்தவாயின் வழியாகக் காற்று உள்ளே நுழைந்து வெளியே வருவதினாற்றான் இந்த ஓம் என்னும் ஓசை எழுகின்றது என்று பின்னர் அறிந்தான்.

பற்பல இயற்கையில் அமைந்துள்ள ஓசையின் பெருமையை மனிதன் தான் முதலில் கண்டுபிடித்தான் என்ற அகமகிழ்ச்சியால் ஆனந்தக் கூத்தாட ஆரம்பித்துவிட்டான். அப்பொழுது ஆனந்தக் கூத்தாடிக் கொண்டே மலைகளிலும் பல திசைகளிலும் சென்றான். எங்குச் சென்றாலும் ஓம் என்ற ஓசையே இவனது காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. இவன் உண்மையான ஓசையை அறிந்து கொண்டவனாதலால் ஓசை வந்த இடங்களுக்கெல்லாம் சென்றான். ஆயினும் மூங்கில் மரங்களில் சிலவற்றிலிருந்து குறைவான ஓசையும், சில மூங்கில் மரங்களிலிருந்து மிகுதியான ஓசையும் ஒலிப்பதைத் தனது உணர்வால் அறிந்தான். சரி, இன்னும் ஆராய்வோம் என்று எண்ணமிட்டு, அம் மூங்கில் மரத்திலிருந்து வந்த ஓசைகளை எல்லாம் ஓர் முறையாக அமைக்க அவாக் கொண்டான். அவ்வாறு அமைத்தால்தான் அவனுக்கும் அவனைப் போன்ற மற்றையமக்களுக்கும் இன்பந் தரக்கூடியதாயிருக்கும் எனஎண்ணி, எந்த மூங்கில் மரத்திலிருந்து ஓசை வந்ததோ, அதே மூங்கில் மரத்தை வெட்டியெடுத்தான். அதனைச் சிறிய தாக்கி வரிசையாகத் துளைசெய்து அதைத் தன் வாயினாலேயே ஊதி ஓசையை உண்டாக்கினான். அதிலிருந்து பலவகையான ஓசைகள் ஒன்றிற்கு ஒன்று பொருத்தமாகவும் கேட்பதற்கு இனிமையாகவும் உண்டாகிவிட்டன. இந்த ஓசைகட்குப் பெயர் கொடுக்க முனைந்தான்.

சரிகம பதநியென்
றேழெழுத்தாற் றானம்
வரிபரந்த கண்ணினாய் வைத்துத்-
தெரிவரிய
ஏழிசையும் தோன்றும் இவற்றுள்ளே
பண்பிறக்கும்
சூழ்முதலாம் சுத்தத் துளை!

என்று இசைத் தமிழ் ஆசிரியரால் கூறப்பட்டதுபோல் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என ஏழு ஓசைக்குப் பெயர் கொடுத்தும், தான் புதிதாகக் கண்டுபிடித்த இந்த இசைக் கருவிக்கு மலையில் உள்ள காடுகளில் பெரும்புல் என்று சொல்லப்பட்ட மரத்திலிருந்து உண்டானதால் "புல்லாங்குழல்" என்றும் பெயர் திட்டினான். கிளி, குயில், தும்பி, பூவை முதலிய உயிர்களிடத்தும் இன்ப ஓசையைக் கண்டான். இசையினாலேயே எவ்வுயிர்களிடத்தும் இரக்கங் கொண்டான். இசையினாலேயே இறைவனை வழிபாடு செய்தான். இசையினாலேயே மக்களின் வாழ்க்கையைச் செம்மைப் படுத்தினான். இசையின் இன்பத்தைத் தானும் நுகர்ந்து உலகமும் இசையின் இன்பத்தை நுகரட்டும் என்ற பெருநோக்கங்கொண்டான். ஓம் எனும் ஓசையையும், அதில் பிறந்த ஒலிகளையும், வாழ்த்தி ஓம் எனும் ஓசைபோலவே அழியாப்புகழ் எய்தி விட்டான். அவனது ஊக்கத்தினாலும் அறிவினாலும் ஆராய்ச்சித் திறத்தினாலும், கண்டுபிடிக்கப்பட்ட ஏழு ஓசைகளும் மக்களால் போற்றி வளர்க்கப்பட்டு வருகின்றன. அவனது நினைவின் அறிகுறியாகவே வாழையடி வாழையாக இசைவாணர்கள் எல்லோரும் இன்றும் இசையரங்குகளிலே, 'சரிகமபதநி' என்ற ஏழிசையினாலேயே இசைத்து இன்புற்று வாழ்கின்றார்கள்.

—இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் எழுதிய 'தமிழ் இசைக் கட்டுரைகள்' என்ற நூலிலிருந்து

# வளம் சேர்க்கும் பொங்கல்

புலவர் தமிழ்ப்பித்தன்

அழுக்கினைப் போக்க ஓர்நாள்
அறுவடை போற்ற ஓர்நாள்
உழுதிடும் காளை தன்னை
உவப்புடன் போற்ற ஓர்நாள்
முழுமதித் தமிழர் இந்த
முறையினில் பொங்கல் கண்டார்
பழுதிலாப் பொங்கல் நாளில்
வளமெலாம் நாட்டிற் சேரும்!

இல்லத்தில் மகிழ்வு துள்ளும்
இனிமையே எங்கும் தோன்றும்
உள்ளத்தில் அருளே மின்னும்
உழைப்புக்கு வாழ்த்துக் கிட்டும்
பள்ளத்தை நோக்கி ஓடிப்
பயன்படும் நீரைப் போலே
நல்லன நம்மை நாடும்
நாடெலாம் இன்பம் பாயும்!

பொங்கலின் முழக்கம் எல்லாம்
பொலிந்திடும் ஊர்கள் தோறும்!
பொங்கலின் இனிமை பாலே
புன்னகை நிறையும் எங்கும்!
தங்களை உழவர் மக்கள்
தனிப்பெரும் தொண்டராய் நாளும்
பொங்கலே பொங்கல் என்றே
முழங்குவோம்! வாழ்க பொங்கல்!



பொங்கல் வந்தது! பொங்கல் வந்தது!
பொலிவாம் நன்னாளே!
எங்கும் இன்பம் பெருகிடச் செய்யும்
இங்கர்ள் பொன்னாளே!

தித்திக் கின்ற கரும்பும் கனிகளும்
சேரும் திருநாளாம்
புத்தா டைகள் அணிந்தே மகிழும்
பொங்கல் பெருநாளாம்!

மாடும் கன்றும் மகிழ்ந்திட வைக்கும்
மங்கலப் பொங்கலிது!
தேடும் செல்வம் வீடுகள் தோறும்
திரண்டே விளங்கிடுமே!

வெள்ளை படித்து வீட்டை அழகாய்
விளக்கிடும் நாளிதுவே!
உள்ளம் கவரும் வாழ்த்து மடல்கள்
உலவிடும் தமிழ்நாளே!

மஞ்சளும் இஞ்சியும் மங்கலப் பொருள்களும்
மல்கிடும் பொங்கலிலே
கொஞ்சும் சிறுவர் கூடிக் கூடிக்
குலவியே மகிழ்வாரே!

உழவும் தொழிலும் பயனைக் காணும்
உயர்ந்த தைத்திருநாள்
பழகிடும் அன்பால் யாவரும் சேர்ந்தே
பாரினில் வாழ்ந்திடுவோம்!



— பாக்கிய மணாளன்



ஆண்டெல்லாம் உழைத்திட்ட உழவ ரெல்லாம்
அகமகிழச் செய்கின்ற இந்தை நாளில்
வேண்டுகின்ற நலமெல்லாம் வேண்டு மென்று
விழைவுடனே வைக்கின்றார் இன்பப் பொங்கல்!
காண்கின்ற வயலெல்லாம் நிலைத்துநிற்க
களங்குவித்து விட்டேறும் உழைக்கும் மக்கள்
தூண்டுகின்ற இன்பத்தின் உந்த லாலே
தூய்மையுடன் வைக்கின்றார் இன்பப் பொங்கல்!

வீடெல்லாம் திருத்தியதில் வண்ணந் தீட்டி
வேண்டாத பழம்பொருளை ஒதுக்கித் தள்ளி
கேடெல்லாம் மறைந்தோடப் போகி நாளில்
கூடியிங்கே வைக்கின்றார் இன்பப் பொங்கல்!
மாடெல்லாம் திருத்தியதில் கழனி யாக்கி
காலமெல்லாம் உதவிட்ட மாட்டுக் கெல்லாம்
நாடெல்லாம் எழுந்திங்கே நன்றிக் கடாய்
நலமுடனே வைக்கின்றார் இன்பப் பொங்கல்!



# பொங்குக பொங்கல் பொங்கலோ பொங்கல்!

கவிஞர் சு. இராஜாராம்

மார்கழி கழிந்தது! மங்களம் பிறந்தது!
சூழ்கலி அகன்றிடும் சுந்தரத் தையினில்!
கன்னலைப் போலே கவினுறும் வாழ்வு!
செந்நெலைப் போலே செழித்திடும் வளங்கள்!
மின்னலைப் போலே மறைந்திடும் துயர்கள்!
இன்னல் அகன்று பன்னலம் பெருகிடும்!
பாலும் நெய்யும் பருமணி அரிசியும்
மேலும் மேலும் இனிக்கும் வெல்லமும்
தீஞ்சுவை திராட்சை முந்திரிப் பழங்களும்
ரஞ்சித மாகவே ரசித்திடும் வகையில்
பொங்கல் அமுதாய் ஆவது போலே
அன்பும் அறனும் அமைந்தால் உழைப்பும்
பின்னும் பின்னும் பெருகிடும் செல்வமும்
பொங்கும் மகிழ்ச்சியும் பொன்றா இன்பமும்
பாங்குடன் பொருந்திப் பல்கும் வகையில்
மங்கள வாழ்வு நாட்டினில் மலர்கவே!

# மனைகள் மகிழ்ந்தே பொங்கட்டுமே!

கவிஞர் பாட்டாளி பழனியப்பன்

புதுமைகள் மலரட்டும் பூமியிலே!
புன்னகை பூக்கட்டும், முகங்களிலே!
பதுமைகள் எல்லாம் பேசட்டுமே!
பஞ்சம், வறுமைகள், தொலையட்டுமே!
எதுமெய் அதுவே வெல்லட்டுமே!
இழிவுகள், ஏக்கங்கள் ஏகட்டுமே!
மது, பொய் எங்கும் மடியட்டுமே!
மனைகள், மகிழ்ந்தே பொங்கட்டுமே!

வல்லரசுக் கொடுமைகள் நீங்கிடவே
வல்லவாறு அமைதியே நிலவட்டுமே!
கொல்லும் சூழ்ச்சிகள் ஒழியட்டுமே,
கோதிடும் அறியாமை நீங்கட்டுமே!
செல்லும் வழியெல்லாம் சிறக்கட்டுமே!
சேதிகள் நல்லதாய்ப் பிறக்கட்டுமே!
வெல்லும் நீதிகள் விழிக்கட்டுமே!
விலங்குகள் ஒடிந்தே விழட்டுமே!

நாட்டில் மக்கள் மகிழ்வெய்தவே
நன்றாய் நிலங்கள் விளைந்திடவே!
கூட்டின் கிளிகள் பறந்திடவே!
கூடியே மக்கள் மகிழ்ந்திடவே!
ஏட்டில் புதுமைகள் ஏறிடவே
ஏற்றமாய்ப் பொதுமையும் வீறிடவே!
பூட்டிய மனங்கள் திறக்கட்டுமே!
பொன்னாம் உலகம் பிறக்கட்டுமே!

# ஆசை

**பி.வி.கிரி**

"பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு. குழந்தையைச் சீக்கிரம் அழைச்சி கிட்டுப் போ பாட்டி!" என்று சமையலறையிலிருந்து குரல் கொடுத்தாள் செல்வியின் அம்மா.

"இதோ, போறேம்மா!" என்றாள் பாட்டி.

செல்வி சீருடை அணிந்துகொண்டு வெளியே வந்தாள். பாட்டி, புத்தகங்கள் திணிக்கப்பட்ட பையையும், வாட்டர் பேக்கையும் எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டாள். ஒரு கையால் குழந்தையின் கையை அன்புடன்பற்றிக்கொண்டுபள்ளிக்கு அழைத்துச் சென்றாள் பாட்டி.

இது, அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சி. பள்ளிக்குக் குழந்தையை அழைத்துச்செல்லும் போதெல்லாம் செல்வி 'வெடுக்வெடுக்'கென்று பேசிக்கொண்டே வருவாள். பாட்டியை ஏதாவது கேட்டுத் துளைத்துக் கொண்டே இருப்பாள். பள்ளிக்குப் போகும்போது மட்டுமல்ல, வீட்டிலும்கூட அவள் சும்மா இருப்பதில்லையே! அதனால் அவளை 'வாயாடி' என்றே அவள் அம்மா செல்லமாக அழைத்தாள்.

வழக்கம்போல் செல்வியைப் பாட்டி பள்ளிக்கு அழைத்துக் கொண்டு போனாள்.

"பாட்டி! நீ எத்தனையாவது வரை படிச்சிருக்கே?" செல்வி கேட்டாள். அந்தக் கேள்வி பாட்டிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

'நானா? நெறைய படிச்சிருக்கேனே" என்றாள் வறட்டுச் சிரிப்புடன் பாட்டி.

## மாணவர் பக்கம்

"அப்படீன்னா, உனக்கு இங்கிலீஷ் தெரியுமா?" செல்வியின் அடுத்த கேள்விக் கணை இது. ஆம், பாட்டி அவள் கேட்டதைக் கணையாகவேதான் கருதினாள்.

பாட்டி கண்களை லேசாகத் துடைத்துக்கொண்டு, "எனக்கு ஒண்ணுந் தெரியாது. கண்ணு... நான்தான் பள்ளிக்கூடத்துக்கே போகலியே...." "பாட்டியின் குரல் தழதழத்தது.

"ஐயையே! உனக்குப் படிக்கவே தெரியாதா?" செல்வி, பாட்டியை ஏறெடுத்துப் பார்த்துக் கேட்டாள்.

"ஆமாம் பாப்பா! எங்க அம்மா என்னைப் பள்ளிக்கூடத்துக்கே அனுப்பலே. வந்து.. எனக்குப் படிக்கத்தெரியாதுன்னு யார் கிட்டேயும் சொல்லிடாதே பாப்பா! என்ன?" பாட்டி, செல்வியிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

"சரி பாட்டி! நான் யார்கிட்டேயும் சொல்லமாட்டேன். நீ கவலைப் படாதே!"



பள்ளிக்கூட மணி ஒலிக்கவே செல்வி ஓட்டமும் நடையுமாகப் பள்ளிக்குள் நுழைந்தாள்.

செல்வியைப் பள்ளியில் விட்டுவிட்டு, பாட்டி தன் குடிசைக்கு வந்தாள். செல்வியின் வீட்டுக்குப் பக்கத்தில்தான் அந்தக் குடிசை இருந்தது.



அன்று ஞாயிற்றுக்கிழமை.

செல்வி, தன் வீட்டிலிருந்தபடியே "பாட்டி! பாட்டி!" எனக் கூப்பிட்டாள்.

பாட்டி, குடிசையைவிட்டு வெளியே வந்து, "என்னம்மா?" என்று கேட்டாள்.

"பாட்டி! நான் சொல்றபடி கேப்பியா?"

"சொல்லும்மா.. நிச்சயம் கேக்கறேன்!"

"பாட்டி! இன்னையிலேயிருந்து உனக்கு நான் படிப்பு சொல்லித் தரப் போறேன். வர்றியா?" என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

பாட்டிக்குப் பல் இருந்தால், எல்லாப் பல்லுமே தெரிந்திருக்கும்.. அவ்வளவு சந்தோஷம் அவளுக்கு. "இதோ வர்றேம்மா!" என்று தன் குடிசைக்குள் ஓடினாள் பாட்டி. உடையையும், தலையையும் சரி செய்துகொண்டு, வெளியேவந்தாள்.

பாட்டிக்கு ஒரு மனக்குறை, பல காலமாக இருந்தது. "நாம படிக்கலியே...." என்கிற குறை தான் அது!

"சின்னக் குழந்தைகளைப் பள்ளிக்கு அழைச்சிகிட்டுப் போற நாம, அறுபது வயசாகியும் படிக்காம போனோமே.." என்கிற மன உறுத்தல் பாட்டிக்கு இருந்தது.

பள்ளிக்குப் போகிற குழந்தைகளைப் பார்க்கிறபோதும் சரி, பள்ளிக்கூடங்களைப் பார்க்கிறபோதும் சரி, பாட்டி ஒரு கணம் அப்படியே நின்று விடுவாள்.

ஊரிலிருந்து கடிதம் வந்தபோது அதைப் படிக்கத் தெரியாம, ஒரு பையனைப் படிக்கச் சொல்லித் தெரிந்துகொண்ட நிகழ்ச்சியும், அவள் கண்முன் அப்போது வரும்.

அன்றைய தினம் செல்வி,படிப்பு சொல்லிக் கொடுக்கஅழைத்தபோது அவளது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சிறு குழந்தை மாதிரி துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடி வந்தாள்.

செல்வி, பாட்டியைத் தன் பக்கத்தில் உட்காரும்படிச் சொன்னாள். பாட்டியும் மாணவியைப் போல அடக்கமாக உட்கார்ந்து கொண்டாள்.

"பாட்டி! உம் பேரு என்ன?"

"சரஸ்வதி!"

"இந்த நோட்டுக்லே உம் பேரை எழுது பார்க்கலாம்?"

பாட்டி தயங்கினாள். அவள் கண்கள் கலங்கின. நோட்டுப் அட்டையில் இருந்த சரஸ்வதி படம் மங்கலாகத் தெரிந்தது.

"என்ன பாட்டி,ஏன் அழுறே? உம் பேரைக்கூட எழுதத் தெரியாதா?" செல்வி பரிதாபமாகக் கேட்டாள்.

"ஊஹும்..." என்று பாட்டி தலையாட்டிவிட்டு, "இப்படித்தான் நான் கையெழுத்து போடுவேன்.." என்று தன் கட்டை விரலை நோட்டுப்புக்கில் அழுத்திக் காட்டினாள்.

கட்டை விரலில் மை தடவிக் காகிதத்தில் பதிய வைப்பதுதான், அவள் வழக்கமாகப் போட்டு வந்த கையெழுத்து!

"பாட்டி! கவலைப் படாதே... உனக்குக் கையெழுத்துப் போட மட்டும் இல்லே, கடிதம் படிக்கவும் கூட நான் கத்துத்தர்றேன். அதுக்கு முன்னே, நான் சொல்றபடியெல்லாம் நீ கேக்கணும். என்ன?" செல்வி டீச்சர் மாதிரி கண்டிப்புடன் சொன்னாள்.

பாட்டி, தன் கண்களைத் துடைத்துக் கொண்டு தலையசைத்தாள்.

செல்வி, அரிச்சுவடியைப் பாட்டிக்குக் காட்டி, அ, ஆ சொல்லிக்



கொடுத்தாள். அதை எழுதும்படிச் சொன்னாள். பிறகு க, கா, கி, கீ சொல்லிக் கொடுத்தாள். இப்படி ஒவ்வொரு நாளும் ஓய்வு நேரத்தில் பாடம் சொல்லிக் கொடுத்தாள்.

நாள், மாதம் என்று நாட்கள் நகர்ந்தன.

வழக்கபோல் அன்றைக்கும் பாடம் நடந்தது.

அணில், ஆடு, இலை, ஈ என்று படத்தைப் பார்த்து, எழுத்தைக் கூட்டிப் படித்தாள் பாட்டி. அவள் தவறு இல்லாமல் படிக்கப் படிக்க செல்விக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

செல்வி, அந்த ஆண்டு ஆறாவதிலிருந்து ஏழாவது தேர்வு பெற்றாள். பாட்டியும், கொஞ்சங் கொஞ்சமாகப் படிக்கக் கற்றுக் கொண்டாள். இப்போது பாட்டிக்குக் கையெழுத்துப் போடக்கூடத் தெரியும். கடிதமும் கொஞ்சம் படிக்கத் தெரியும். செல்வி அம்மா, பாட்டிக்குப் பாடம் சொல்லிக் கொடுத்ததைத் தடுக்கவில்லை. தானும் ஓய்வு நேரத்தில், பாட்டியின் சந்தேகத்தைப் போக்கினாள்.

செல்வியை அழைத்துக் கொண்டு பள்ளிக்குப் போகும்போதெல்லாம் புத்தகப் பையையும், வாட்டர் பேக்கையும் தோளில் மாட்டிக் கொண்டு, தான் பள்ளிக்குச் செல்வதுபோலவே மகிழ்ச்சி அடைந்தாள்.

ஒருநாள் இரவு, பாட்டிக்குக் கடுமையான காய்ச்சல். குடிசையிலிருந்து முனகல் சத்தம் வந்தது. செல்வி, ஜன்னல் வழியே குடிசையைப் பார்த்தாள். 'ஆ, அம்மா....!' என்று பாட்டி முனகிக் கொண்டிருந்தாள்.

செல்வி, தான் படித்துக்கொண்டிருந்த பாடப் புத்தகத்தை அப்படியே மூடி வைத்துவிட்டு, அம்மாவைப் போய் எழுப்பினாள். அப்போது இரவு மணி பதினொன்று. தூக்கத்திலிருந்த அவள் அம்மா 'என்ன? என்ன?' என்று கேட்டுக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள்.

''பத்து... பாட்டிக்கு ஜுரம்... பாவம்! வாம்மா போய்ப் பார்க்கலாம்!'' செல்வி அவள் சேலையின் தலைப்பைப் பற்றி இழுத்தாள்.

செல்வியும், அவள் அம்மாவும் குடிசைக்குள் நுழைந்தார்கள்.

ஒரு அறுந்துபோன கயிற்றுக் கட்டிலில் பாட்டி படுத்துக் கொண்டிருந்தாள். ஒரு கந்தல் புடவையைத் தலை முதல் கால்வரை போர்த்திக் கொண்டிருந்தாள். உடல் லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது.

''பாட்டி! பாட்டி! செல்வி வந்திருக்கேன்.. கண்ணை திறந்து பாரு'' கவலையுடன் கூப்பிட்டாள் செல்வி.

செல்வியின் அம்மா போர்வையை விலக்கி, பாட்டியை உற்றுப் பார்த்தாள். மங்கலான ராந்தல் விளக்கு வெளிச்சத்தில் அவள் முகம் வாடி வதங்கி இருந்தது தெரிந்தது. செல்வியின் அம்மா, பாட்டியைத் தொட்டுப் பார்த்தாள். உடல் நெருப்பாய்ச் சுட்டது.

''கொஞ்சம் இருங்க பாட்டி! மாத்திரையும், காப்பியும் கொண்டு வர்றேன்'' என்று செல்வி அம்மா சொல்லும்போதே, ''வேண்டாம்மா ...நான் பொழைக்கமாட்டேன்'' என்றாள் பாட்டி ஈனக்குரலில். மங்கலான மண்ணெண்ணெய் விளக்குபோல, அவள் குரலும் மங்கியது.

செல்வியின் கண்களில் முத்து முத்தாய்க் கண்ணீர்த் துளிகள். சோகமே உருவாய் அவள் பாட்டியின் கைகளைப் பற்றிக் கொண்டு, ''பாட்டி, என்னை விட்டுப் போகாதே, அப்புறம் என்னை யாரு பள்ளிக்கூடத்துக்கு அழைச்சிட்டுப் போவாங்க?'' என்று 'ஓ' வெனக் கதறி அழுதாள். அதைப் பார்த்துச் செல்வியின் அம்மாவும் கண் கலங்கினாள்.

''செல்வி! அழாதேம்மா... நீ நல்லா படிக்கணும்.. நீ பெரியவளா ஆனதும், எல்லாருக்கும் படிப்பு சொல்லிக் குடுக்கிற டீச்சரா வரணும். அதுமட்டுமல்ல, என்னை மாதிரி படிக்காத வயசானவங்களுக்கும் நீ படிப்பு சொல்லிக் குடுக்கணும், செய்வியா?'' பாட்டி உருக்கமாகக் கேட்டாள்.

உடனே செல்வி, ''நிச்சயமா செய்யறேன் பாட்டி!'' என்று அவள் கையைப் பிடித்துச் சத்தியம் செய்தாள். அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

''அப்பாடா.... இனிமே நான் நிம்மதியா சாவேன். சாவறதுக்குள்ளே, எப்படியாவது நாலு எழுத்துப் படிக்கத் தெரிஞ்சிக்கணுங்கிற ஆசை மனசிலே இருந்துகிட்டே இருந்தது. அந்த ஆசை இப்ப நிறைவேறிப் போச்சு...'' என்று இருமிக் கொண்டே பாட்டி மேலும் தட்டுத் தடுமாறிப் பேசினாள்.

''ஓர் எழுத்துக்கூடப் படிக்கத் தெரியாம போறதைவிட, நாலு எழுத்தையாவது படிக்கத்தெரிஞ்சிக்கிட்டோமே என்று நிம்மதியா போகணும், இல்லையா?'' என்று பாட்டி சொன்னபோது செல்வி 'ஓ' வென அழுதேவிட்டாள். செல்வியின் அம்மா அவளைத் தேற்றினாள்.

பாட்டிக்கு என்ன வந்ததோ தெரியவில்லை. தலையைச் சற்று மெல்லத் தூக்கி, தலையணைக்கு அடியில் இருந்த ஒரு புத்தகத்தைத் தேடி எடுத்தாள். பரக்கப்பரக்க அதைப் பிரித்தாள்.

அணில், ஆடு, இலை, ஈ என்று படித்துவிட்டு, ''செல்வி! எனக்குப் படிக்கத் தெரியும். நான் படிக்காதவள் இல்லே. வந்து கையெழுத்துக் கூடப் போடத் தெரியும்....'' என்று மகிழ்ச்சியுடன் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டு இருந்தாள். அந்த மகிழ்ச்சியிலேயே அவள் தலை சாய்ந்தது.

---

* முள் நிறைந்த செடியில்தான் வனப்பும் மணமும் உடைய ரோஜா மலர்கிறது. அதுபோலச் சொல்லொணாத் துயரங்களுக்கும் தாங்க முடியாத எதிர்ப்புகளுக்கும் இடையில்தான் உண்மை பூத்து மலர்கிறது.

மகாத்மா காந்தி

* எந்த மனிதனும் நியாயமானதைச் செய்வதற்குத் தான் உரிமை உண்டே, தன் விருப்பம் போல் செய்வதற்கு உரிமையில்லை.

— [illegible]

* மனித வாழ்க்கையில் உள்ள சுக துக்கங்களுக்கு மூலம் மனிதனுடைய எண்ணம் செயல். ஆகையால், விதியை ஆக்குவதும் நீக்குவதும் மனிதனே.

[illegible]

---

# தமிழில் எழுத்து சொல் தொடர் பிழைகள்

## - ஓர் ஆய்வு

க. தில்லைவனம்
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
தாகூர் கலைக் கல்லூரி, புதுவை.

"*To err is human*" - என்பது ஆங்கிலப் பழமொழி. மொழியைக் கற்கின்ற விதத்திலும், அதைக் கற்பிக்கும் முறையிலும் இன்றைய கல்வி நிலையில் பிழைகள் மலிந்து கிடக்கின்றன. மொழிப் பாடம் பயிலுவதன் அடிப்படை நோக்கமே தமிழைப் பிழையின்றிப் பேசவும், படிக்கவும், எழுதவும் ஆகிய மூன்று முக்கிய காரணங்களுக்காகவே!

ஆனால் தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி வரை மொழிப் பாடத்தைப் பயின்று வரினும், மாணவரிடையே தமிழைப் பிழையின்றி எழுதும் பெற்றி இன்னும் கைவந்தபாடில்லை. இந்நிலை மாணவர்க்கு மட்டுமின்றி, எம். பில்., பி.எச்.டி., ஆய்வேடுகள் சமர்ப்பிக்கும் ஆய்வாளர் வரை தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. இக்குறைபாடு மாணவ நிலையில் எத்தகைய சூழல்களில் ஏற்படுகின்றது? அதற்குரிய காரணங்கள் யாவை? அவற்றை நீக்குவதற்குரிய வழிமுறைகள் எவை?-என்பன பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### மொழி பயில் கோட்பாடுகள்

போலச் செய்தலினாலும், வலியுறுத்தப்படுவதாலும் - அதாவது பிழையைத் திருத்தி அதைச் சரியான துவங்கலுக்குத் தொடர்புபடுத்துவதாலும் மொழி கற்கப்படுகின்றது என்கிறார் ஸ்கின்னர் (*Skinner*). ஆனால் சோம்ஸ்கி (*Chomski*) என்னும் மொழியியல் அறிஞரோ, 'மொழி பயில்தல் என்பது விதிகளால் கட்டுப்படுத்தப்பட்ட ஓர் உருவாக்கச் செயற்பாடு' என்கிறார். மாணவர்கள் மொழி கற்கும்போது அம்மொழி விதிகளைப் பற்றித் தமக்குள்ளேயே சில கருதுகோள்களை உருவாக்கி மொழி கற்கும் செயற்பாடுகளை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். இத்தகு மொழி பயில் கோட்பாடுகளில் மாணவர்கள் தமக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் கருதுகோள்கள் தவறாகும்போதும், அத்தவறுகளைத் திருத்தாமையினாலும் பிழைகள் தொடர்ந்து செய்யப்படுகின்றன.

### கற்றலும், பயில்தலும்

ஒரு குழந்தை தன் தாய் மொழியை இயற்கையான,மொழிச் சூழலில், ஓர் ஆசிரியரின் துணையின்றிக் கற்றுக் கொள்வது 'கற்றல்' (*Acquisition*) என்பதாகும். அதே குழந்தை ஒரு மொழியை இரண்டாம்/அயல்மொழியாக வகுப்பறையில் பயில்வது 'பயில்தல்' (*Learning*) ஆகும். தாய்மொழியைக் கற்பது மனிதனின் வாழ்வுக்குத் தேவையானது. பிறிதொரு மொழியைப் பயில்வது அவரவரின் சிறப்புச் சூழ்நிலையையும், தேவையையும் பொறுத்ததாகும். ஆனால் கற்றல், பயில்தல் இரண்டையும் வேறுபாடு அறியாமல் நாம் ஒரே சூழ்நிலையிலேயே பயன்படுத்தி வருகின்றோம். கற்றல் அல்லது பயில்தல் இரண்டிலும் மாணவர்கள் எடுத்துக் கொள்கின்ற அணுகுமுறைகளிலும், செயற்பாடுகளிலும் பிழைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

### பொதுவான பிழைகள்

எழுத்துப் பிழைகள், ஒற்றுப் பிழைகள், சந்திப் பிழைகள், சொல் தொடர் பிரிப்புப் பிழைகள், ஒருமை, பன்மை மயக்கங்கள், குறியிடுதல் பிழைகள், வேற்றுமை மயக்கப் பிழைகள், உடம்படுமெய்ப் பிழைகள் முதலியன பொதுவான பிழைகளாகக் கருதப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் மேலும் சில புதிய பிழைகளும் உருவாக்கப் படுகின்றன.

மாணவர் ஒருவரின் பேச்சிலோ, எழுத்திலோ சில வழுக்கள் ஒழுங்கில்லாமல் இருக்கும். ஒரே சொல் அல்லது அமைப்பு சில இடங்களில் சரியாகவும், சில இடங்களில் தவறாகவும் அமையலாம். எனவே, ஒழுங்கற்றவைகளைத் 'தவறுகள்' என்றும், ஒழுங்கான வழுக்களைப் 'பிழைகள்' என்றும் பிரித்துக் கொள்ளலாம்.

தவறுகளுக்குப் பயில்பவருடைய ஞாபக மறதி, உடல் களைப்பு, மனநிலை, மனப்பான்மை போன்ற பல காரணங்களாகின்றன. பிழைகளை, அவற்றைச் செய்பவருடைய எண்ணிக்கையைப் பொறுத்து, தனி மாணவரின் பிழை

என்றும், குழுப்பிழை என்றும் தனித்தனியாகப் பிரித்து ஆராய்வது நன்று. ர, ற/ல, ள/ந, ண, ன/வேறுபாடு அறியாத தடுமாற்றமும், இவற்றை எப்படி வேறுபடுத்தி உச்சரிப்பது என்ற குழப்பமும், வலிமிகுமிடம் எது? வலிமிகா இடம் எது என்ற தடுக்கமும் பல மாணவரிடையே பொதுவாகக் காணப்படுவதால் இவற்றைக் குழுப் பிழை என்ற பிரிவில் அடக்கலாம்.

ஒரு சிலர் பத்தியமைப்பு பற்றியும் கவலைப்படுவதில்லை. பேசுவது போலவே எழுத முற்படும்போது அது மற்றவர்க்குப் புரியுமா, புரியாதா என்பது பற்றியும் பொருட்படுத்துவதில்லை. சிலர் தமிழில் எழுதினாலும், தாம் என்ன எழுதினோம் என்பது தமக்கே புரியாமல் எழுதும் கலையில் தேர்ச்சி பெற்றவராய் உள்ளனர்.

**பிழைகள் —தோற்றம், காரணங்கள்**

தொல்காப்பியர் திணை, பால், இடம், வினா, விடை, மரபு என்னும் ஆறினும் தோன்றும் வழுக்களையும், வழு அமைதியையும் கூறுகின்றார். (தொ. கா.- சொல்; கிளவியாக்கம்) நன்னூலார் தொல்காப்பியர் கூறும் செய்திகளைத் தொகுத்து,

'திணைபால் இடம் பொழுது
வினாவிறை
மரபாம் ஏழும் மயங்கினாம்வழுவே
(நன்: 375)

என்று கூறுகின்றார். தொல்காப்பியர் குறிப்பிடாத 'காலவழு' பற்றியும் நன்னூலார் கூறுகின்றார். ஆனால் இவர்கள் யாருமே அவ்வழுக்கள் தோன்றக் காரணங்கள் எவை.என ஆராய்ந்து கூறவில்லை. வழு அமைதியைக் காரணத்துள் ஒன்றாக ஏற்றுக்கொள்ள இயலாது.

பிழை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் . கீழ்க்காணும் காரணங்களால் பிழைகள் ஏற்படுகின்றன எனப் பாகுபாடு செய்துள்ளனர்.

1. ஒப்புமையாக்கம் (*over generalization*) (எழு-எழுந்தேன்/அழு-அழுந்தேன்)

2. பயில்மொழி விதியைத் தவறாகப் பயன்படுத்துதல். (*over extension of target language rule*) (மரம்-மரத்தில்/வார்-வாரத்தில்)

3. வளர் மொழி இடையீடு (*Inter language interference*) (பேச்சுத் தமிழின் தாக்கம் எழுத்துத் தமிழில் இடம் பெறுதல்) /ரொம்ப,இருக்குது. பார்த்திட்டிரு!

4. எளிதாக்கல் பிழைகள் (*Simplified*) (ன்ற/ன்ட/ந்த-3சுழி-ன, 3சுழி-ண, நாப்-ற)





தேகம் வளைந்து நாற்று நடுகிறோம்- இந்த
தேசம் நிமிர்வதற்காக...

5. சூழல் தூண்டு பிழைகள் (*Induced Errors*) (ஆசிரியர் கூறுகின்ற விளக்கத்தினாலோ ; ஒரு சொல் வழுகின்ற சூழலினாலோ ஏற்படும் பிழைகள்) (*to start*- புறப்படு - தொடங்கு - ஆரம்பி- சினிமா புறப்பட்டது/ரோஜா மலர் மலர்ந்தும் மலர்ந்தாமலும்/ தொடரியல் பிழை).

6. பயிலாமை (*nil learning*) சரியாகக் கற்பிக்கப் படாமையாலும், சரியாகக் கற்கப்படாமையாலும் பயிலாமை பிழைகள் ஏற்படுகின்றன. பயிலப் படாமையால் பிழை நேரின் மாணவனுக்கு அது திருப்பிச் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். மாணவரின் தவிர்ப்பு முறையையும் கண்டறிந்து, அவனுக்கேற்படும் சிக்கலைத் தெளிவு படுத்த வேண்டும்.

இவை தவிர மேலும் பல காரணங்களாலும் பிழைகள் நேர்கின்றன. தொடக்க நிலைக் கல்வியில் மொழிப் பாடம் பயிற்றுவித்தலில் பார்த்தெழுதுதல், சொல்வதெழுதல் பயிற்சிகள் தரப்படுகின்றன. எழுத்துப் பிழைகளின் தோற்றமும் இங்கேதான் தொடங்குகின்றது. ஆரம்ப நிலைகளில் கட்டிக்காட்டித் திருத்தப்படாத தவறுகள், இடை நிலை வகுப்புகளில் கட்டுரைப் பயிற்சி, வினா-விடைப் பயிற்சியின் மூலம் வளர்கின்றது. நிரந்தரப் பிழைகளாக மாணவர் மொழியறிவில் ஐக்கியமாகி விடுகின்றன. இதில் மாணவரின் கவனக்குறைவு மட்டுமின்றி ஆசிரியரின் சோம்பேறித்தனமும் ஒரு காரணமாக அமைந்து விடுகின்றது. பெரும்பாலான ஆசிரியர்கள், மாணவர் தம் எழுத்துப் பயிற்சியில் ஏற்படும் தவறுகளை ஒட்டு மொத்தமாகத் திரட்டி, அவற்றைக் கரும் பலகையில் செம்மைப்படுத்திச் சுட்டிக்காட்டுதல் இல்லை.

தனியார் பள்ளிகளில் மாணவர்களைக் கசக்கிப் பிழியச் செய்யும் கட்டுரைப் பயிற்சியும், மொழிப் பயிற்சியும், ஆசிரியரைக் கண்காணிக்கும் நிர்வாகத் திறமையும் அரசு பள்ளிகளில் இல்லை. ஆனால் சில தனியார் பள்ளிகளில் மேனிலை வகுப்புகளில் நல்ல தேர்ச்சி முடிவுகள் கிடைத்தால் போதும் என்ற நிலையில் தொடக்க நிலைக் கல்வி பற்றிக் கவனத்தில் கொள்வதில்லை.

பயில்மொழி முறையிலும் பிழைகள் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. தமிழ் வழிக்கல்வி பயிலும் மாணவரைவிட ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவரிடையே தான் தமிழ் மொழிப் பாடத்தில் பிழைகள் அதிகம் ஏற்படுகின்றன. தமிழ் வழிக் கல்வியில் மொழிப் பயிற்சி கூடுதலாகப் பெறுவதால், பெருமளவு பிழைகள் தவிர்க்கப்படுகின்றன. ஆங்கிலம் வழிக்கல்வி முறையில் மொழிப் பாடத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. மாறாக, 'தமிழ்தானே, பின்னர் படித்துக் கொள்ளலாம்' என்னும் இழிதகைமையினையும் ஏற்படுத்தி விடுகின்றனர்.சில பெற்றோர்களும், ஆசிரியர்களும்கூட இப்படிப்பட்ட



கட்டு கலம் காணும்
கதிர் - உடிக்கு நெல் காணும்

ஊக்குவிப்பிற்கு உதவியாகத் திகழ்வது வருந்தத்தக்கது.

இடைநிலைக் கல்வியில் இலக்கணத்தை மொழிப்பாடத்திலிருந்து தனியாகப் பிரித்து, ஒரு சுமையாக அறிமுகப்படுத்தி மாணவரிடையே கசப்புணர்ச்சியை ஏற்படுத்தி விடுகின்றனர். மொழிப்பாடம் நடத்தும் ஆசிரியர் இலக்கணத்தை மொழியினூடே - மொழிப் பயிற்சியினிடையே நடத்திச் செல்லும் பாங்கில் இலக்கணம் சுமையாகக் கருதப்படுவதில்லை. இலக்கணம் எளிதாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டுமெனில் நடைமுறைச் சான்றுகளை ஒப்புமைப்படுத்தி நடத்திச் செல்ல வேண்டும்.

தேர்வு மதிப்பீடு செய்யும் ஆசிரியர்கள் எழுத்துப் பிழைகளைப் பொருட்படுத்துவதில்லை. 'போனால் போகிறது' என்ற மனப்பான்மையில் இன்றைய மதிப்பீடு களின் தரம் அமைந்துவிட்டது. அஞ்சல் வழிக் கல்வி தேர்வு மதிப்பீடுகளில், தலைமைத் தேர்வாளரே 'எழுத்துப் பிழைகளைப் பொருட்படுத்த வேண்டாம். மதிப்பெண்களை வாரி வழங்குங்கள்' என்று

விடுதல் பிழைகள் இருந்தால் முழுவதையும் அடித்துவிடும் நிலையினைக் காண்கிறோம். அந்நிய மொழியைப் பாதுகாக்கும் எண்ணத்தில் சிறிதளவேனும் அன்னைத் தமிழைப் பாதுகாக்க இயலாமற் போனது வெட்கப்பட வேண்டிய நிலையே. மேலும், ஆரம்ப நிலைக் கல்வியில் தவறான சொற்றொடர் அமைப்புகளை/அருகில்- அருகாமையில், வலம், இடம் - வலது. இடது/ ஆசிரியர்கள் பிள்ளைப் பிராயத்திலேயே விதைத்து விடுவதால், ஐந்தில் வளையாததை ஐம்பதில் கூட வளைக்க முடிவதில்லை.

**பொதுமக்கள் பங்கு**

அயல் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர் பிழைகளைச் சுட்டிக் காட்டித் திருத்தினால், நல்லாசிரியர் என்கின்றனர். ஆனால் தமிழாசிரியரைப் பொறுத்த வரை, 'குற்றம் கண்டுபிடிப்பதே தமிழாசிரியர் பிழைப்பு' என்பது அவர்கள் மீது இச்சமூகம் கொண்டுள்ள கணிப்பைக் காட்டுகின்றது. எழுத்தறிவில்லா மக்களின் எண்ணிக்கை (48 சதம்) நாளுக்கு நாள் ஏறிக் கொண்டே இருக்கும். இன்றைய சூழ் நிலையில், பாமர மக்களைக்

என் சோதிடத்தின் அடிப்படையில் இன்றைய திரைப்படத் தலைப்புகள் உலா வருவதால் சமுதாயத்தில் எழுத்துப் பிழைகள் ஏற்படுவது இயல்பாகிவிட்டது..

'எனக்கு அவ்வளவாகத் தமிழில் பேச வராது, எழுத வராது' என்று கூறிக்கொள்ளும் தமிழனே, தமிழ் கூறு நல்லுலகில் இன்று உயர் தமிழனாக மதிக்கப்படுகின்றான். அரசியல்வாதிகளும், வணிக எழுத்தாளர்களும் மொழியை ஆதாயத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையைத் தமிழரைத் தவிர வேறு யாரேனும் பொறுத்துக் கொண்டிருப்பாரோ என்பது ஐயமே! தமிழ்க் காவல் குழுக்கள், தனித் தமிழ்க் கழகங்கள் போன்றவை கலப்பு நேராவண்ணம் பற்றிக் கவலைப்படுகின்றதே மொழிய. பிழைகளைப் பற்றிப் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை.

**பிழை ஆய்வும் அதன் பயனும்**

பிழைகளைப் பற்றிய ஆய்வு மேற்கொண்ட ஆய்வாளர்கள் அதனால் உண்டாகும் பயனைக் கீழ்க்காணும், நிலையில் வரிசைப் படுத்தியுள்ளனர்—

(1) மொழி கற்கும்போது,மொழி அமைப்பில் மாணவனுக்கு ஏற்படும் சிக்கலை விளக்க உதவுகின்றது. அச்சிக்கலைப் போக்குவதற்கும், திருப்பிக் கற்பித்துத் தெளிவாக்கவும், அதற்கேற்ப பாடத்தைத் தயார் செய்யவும் உதவுகின்றது.

(2) மொழி கற்கும்போது குறிப்பிட்ட நிலையில் குறிப்பிட்ட அமைப்பு கடினமாகத் தோன்றுவதுண்டு. அவ்வேளையில் அவ்வமைப்பைப் புரிந்து கொள்ள தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது.

(3) பிழை ஆய்வின் முடிவிலிருந்து, பாடங்களை வரிசைப் படுத்திய முறை சரிதானா,அல்லது மாற்றி ஒழுங்குபடுத்த வேண்டுமா என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

(4) மொழி கற்கும் நிலையில் - குறிப்பிட்ட பாடத்தில் செம்மைப் பரிமாற்றத்திற்கு எவ்வெவ்வமைப்புகள் தேவை என்பதைத் தெரிந்து அவற்றின் வழி செயலாற்றலாம்.

(5) பாடத் திட்டத்தின் போதாமை அல்லது நிறைகுறைகள் எவை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

(6) மாணவனின் மொழியறிவு ... எவை என்பதைப் புரிந்து கொள் ... மற்றும் பாடங்களைத் தயாரித்தளிக்கவும் உதவுகின்றது.

(7) மொழி கற்க/பயில மாணவர்கள் எடுத்துக்கொள்ளும் அணுகுமுறைகள், செயற்பாடுகள், உத்திகள் முதலியனவற்றை அறிந்து கொள்ளலாம்.

(8) ஆசிரியரே பிழை ஆய்வு மேற்கொள்ளும்போதுதான் கற்பித்தலில் எப்பகுதியில் பிழை நேர்கிறது என்றாராய்ந்து, அப்பகுதியில் தன்னுடைய கற்பித்தல் உத்தியை மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

(9) தேர்வு முறைகளை மாற்றியமைக்கவும் பிழை ஆய்வு பெரிதும் துணை செய்கின்றது.

**பிழைகள்—நீக்கும் வழிகள்**

நல்லதொரு மொழி கற்பிக்கும் முறையிருப்பின் பிழை செய்வதையே தடுத்துவிடலாம். பிழைகள் செய்யப்படுவதற்குக் காரணம் நம் முறைமை அல்லது உத்தியின் போதாமையே. ஆனால் பிழை செய்தல் என்பது மனித இயல்பு. எனவே, எந்த ஒருமுறைமையினாலும் பிழை செய்யப்படுவதை அறவே தடுத்துவிட முடியாது. அதனால் பிழைகளைத் தொகுத்து அதற்குரிய காரணங்களைக் கண்டறிந்து களைவதே உகந்த வழியாகும்.

எழுத்துப் பிழைகள் வராமல் இருப்பதற்கு மூன்று வழிகளைச் சுட்டுகின்றார் அ.கி.பரந்தாமனார். (1) பிழையற்ற நூல்களைப் படித்தல்; (2) பொருள் நினைவோடு எழுதுதல்; (3) சொல்லின் பகுதி பார்த்து எழுதுதல் - என்பனவாகும். இவை வளர்ந்த நிலையில் திருத்திக் கொள்ளும் வழிமுறைகளாகக் கூறப்படுகின்றன. தொடக்க நிலை கவனக் குறைவைக் களைய இரண்டு வகையான கற்பித்தலை மேற்கொள்ளலாம். (1) திருத்திக் கற்பித்தல் (வகுப்பில் பெரும்பான்மையினர் ஒருகுறிப்பிட்ட திறனைப் பெறுவதில் குறைவுஏற்படும்போது); (2) சீர்படுத்திக் கற்பித்தல் (பின் தங்கிய மாணவர் சிலர் பிழை செய்கின்றபோது, அதன் காரணத்தின் அடிப்படையில் தனித்தனியாகத் தேவைக்கேற்ப கற்பித்தல்) மொழி பயில மாணவர்கள் மேற்கொண்டுள்ள உள்ளெண்ணம் (*Motivation*) மொழியைப் பற்றிய மனப்பான்மை (*Attitude*) ஆளுமைப் பண்பு (**Personality**). கற்றுக்கொள்ளும் ஆர்வம் (**Interest**) முதலிய உளவியல் கூறுகளையும் மொழிப் பாடம் நடத்தும் ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இறுதியாக, இன்றைய நிலையில் பிழைகளைக் கட்டுப்படுத்த உடனடியாக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளாவன. (1) மாணவர்களைப் பிழை செய்யத் தூண்டிவிட்டுப் பின்னர் அவர்களைத் திருத்திக் கொண்டிருப்பதைக் காட்டிலும், அவர்கள் பிழையே செய்யாதபடி ஆரம்பநிலைக் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும். (2) மொழிப் பாடத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற, மொழியியல் அறிந்த மொழி ஆசிரியரையே தொடக்க நிலை வகுப்புகளில் நியமிக்க வேண்டும். (3) உயர்நிலைப் பள்ளிக் கல்வி வரை எந்த ஆசிரியரும் எந்தப் பாடத்தையும் நடத்தலாம் என்ற முறை மாற்றப்பட வேண்டும். (4) முதல் ஐந்து வகுப்புகளில் (எழுத்துப்) பிழைகள் களையப்படும்வரை மொழிப் பயிற்சி மீண்டும் மீண்டும் அளித்துக் கொண்டே இருத்தல் வேண்டும். (5) ஆசிரியர்கள் சரியான முறையில் (மொழிப் பாடத்தில்) மதிப்பீடு செய்கின்றனரா என்று நிர்வாகத்தினரால் கண்காணிக்கப்பட வேண்டும். (6) பிழைகளைக் களைவதிலோ, சுட்டிக் காட்டுவதிலோ பாரபட்சமற்ற முறை பின்பற்றப் பட வேண்டும். கல்வித் துறையில் தகுதிக்கே முதலிடம் வழங்கும் நிலை வரவேண்டும். (7) தமிழ் நாட்டில் தாய்மொழிப் பாடம் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

**பார்வை நூல்கள்**


1. பரந்தாமனார், அ.கி.— நல்ல தமிழ் எழுத வேண்டுமா? பாரி நிலையம், சென்னை, 1984.

2. நடராச பிள்ளை, நா: பிழை ஆய்வு; விமலா, ச : மொழி கற்பித்தலில் ஒரு புதிய பார்வை. தென்னிந்திய மொழிகளின் பயிற்று மையம், மைசூர் 1981.

3. Chomsky, N-Aspects of the Theory of Syntax Mass: Cambridge, 1965.

4, Skinner, B. F.- Verbal Behaviour, 1957.


—நன்றி : 'புதுவைச் செய்திகள்'

# நன்மொழி கேளீர்

நல்லவனும் ஞானியும் சில சமயங்களில் உலகத்தைக் கோபிக்கலாம். சில சமயங்களில் அதற்காக வருந்தலாம். ஆனால் உலகில் தன் கடமையைச் செய்பவன் எவனும் அதனிடம் ஒரு பொழுதும் அதிருப்தி கொள்வதில்லை என்பது மட்டும் உறுதி.

—காதே

அறமே ஆற்றல் என்று நம்புவோமாக. அந்த நம்பிக்கையுடன் நாம் அறிந்த கடமையை ஆற்றத் துணிவோமாக.

—ஆப்ரகாம்லிங்கன்

உன் கடமையைச் செய்ய முயல்க; அப்பொழுதுதான் உன் தகுதியை உடனே அறிந்து கொள்வாய்

—கதே

தன்னுடைய ஆற்றலைப் பயன்படுத்துவதில் மகிழ்ச்சியைக் காணாதவன், மகிழ்ச்சி காணப் போவதேயில்லை.

—கதே

இன்று உன்னால் கூடியமட்டும் நன்றாய்ச் செய். நாளை அதனினும் நன்றாய்ச் செய்யும் ஆற்றலை நீ பெறக்கூடும்.

—நியூட்டன்

உலக அரங்கில், இன்ன வேடம் என்று கவிஞன் நமக்குப்போம் [illegible] கூற இயலாது. கொடுத்த பணிகளைத் திறம்படச் செய்து முடிப்பதே நமது கடமை.

—எபிக்டெட்டஸ்

பிறருக்கு நான் செய்ய வேண்டிய கடமை யாது? பிறரை நல்லவராக்குவதா? நான் ஒருவனைத்தான் நல்லவனாக்க வேண்டும். அவன் நானே. பிறர்க்கு மகிழ்ச்சி அளிப்பதே நான் செய்யக்கூடிய கடமையாகும்.

—ஆர். எல். ஸ்டீவென்சன்

மனித இனம் கடன்பட்டிருப்பது முனைக்கன்று; முயற்சிக்கே. கடவுள் வரங்களை விற்கவே செய்கிறார். முயற்சியே அவற்றின் விலை.

—அடிஸன்

மனிதன் தன் செல்வத்தையும் அறிவதில்லை. தன் ஆற்றலையும் அறிவதில்லை. செல்வத்தை அளவுக்கு மிஞ்சி மதிக்கின்றான். ஆற்றலை அளவுக்குக் குறைத்து மதிக்கிறான்.

—பேக்கன்

தொகுப்பு : மாருலன்





# நேருவின் பொன்மொழிகள்

குழந்தைகளே இந்த நாட்டின் செல்வம்; இந்தச் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கிறது.

கிராமங்களிலுள்ள மண் குடிசைகளிலும் பட்டணங்களில் உள்ள சேரிகளிலும் வாழும் கோடிக்கணக்கான மக்களுக்கு அரசியல் என்றால் உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்க வீடும் அன்றி வேறு யாதாக இருக்கமுடியும்?

வாழ்க்கையே ஒரு விசித்திரமான கதம்பம்தான். நாம், அதை உள்ளது உள்ளவாறே எடுத்துக்கொண்டு, முதலில் அதை அறியவும், பின்னர் அதைச் சீர்திருத்தவும் முயலவேண்டும்.

சாமானிய மக்களின் நலத்தான் மிகவும் முக்கியமானது. ஒரு சிலருக்காக நாம் மிகப் பலரைப் பலி கொடுக்க முடியாது.

உலகம் இருந்த இடத்திலேயே இருப்பதில்லை; நம்மைச் சரித்திரத்தின் குப்பைத் தொட்டியில் தள்ளி விட்டு அது முன்னேறிக் கொண்டே இருக்கிறது.

வெற்றி என்பது, முழுத் தியாகமும் செய்த பின்னரே கிடைக்கக் கூடிய ஒன்று. அது அடிக்கடி நம்மை ஆசைகாட்டி மோசம் செய்யும். கொடிய சோதனைகளுக்கு ஆளாகிய பின்பே அது நமக்குக் கிடைக்கும்.

யந்திரமும் யந்திரக் கைத்தொழிலும் வந்தபிறகு மதத்தின்பால் காட்டப்பட்டு வந்த அலட்சியம் இன்னும் அதிகரித்தது. குருட்டு நம்பிக்கையின் அடிப்படையை விஞ்ஞானம் தகர்த்தெறிந்து விட்டது.

விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்தது மட்டுமின்றி, இயற்கையின்மீது அவன் செலுத்தக் கூடிய ஆதிக்கத்தையும் அதிகரித்தது.

ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வையும் நாகரிகத்தையும் உள்ளவாறு பிரதிபலிக்கும் கண்ணாடி கலையேயாகும்.

வரலாறு என்பது ஒருநாட்டின் சரித்திரம் அல்ல; மக்கள் சமுதாயம் முழுமைக்குமான பொது நிகழ்ச்சியாக இன்றைய வரலாறு மாறியிருக்கிறது. ஏனெனில், இன்றைய உலகம் ஒரு பொது நிதிக்கு [illegible] இயங்குகிறது.

மக்களை ஒன்று சேர்க்கிற காரியங்கள் எல்லாம் நல்லவை. மக்களைப் பிரித்து வைக்கும் காரியங்கள் எல்லாம் கெட்டவை.

நாம் சுதந்திரம் பெற்றதோடு ஒரு யாத்திரை முடிந்து விட்டது; வறுமையை ஒழிப்பதற்காகவும், சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்காகவும் அடுத்த யாத்திரை தொடங்கி விட்டது.

ஒருவன் எதை அளிக்கிறானோ, அதையே திரும்பப் பெறுகிறான். ஒருவன் அன்பை அளித்தால் அந்த அன்பு பல மடங்காகத் திரும்பி வருகிறது; பகைமைக்குப் பதில் பகைமையே திரும்பி வருகிறது.

சமாதானமும் சகிப்புத் தன்மையுமே நமது இலட்சியங்கள். நம்மோடு ஒத்துப்போக முடியாதவர்களையும் அனுசரித்துக் கொண்டு போக நாம் விரும்புகிறோம். அது தான் நம்முடைய மகத்தான போதனை.

சுதந்திரமும் சமாதானமும் ஒன்றையொன்று பிரிக்கமுடியாதவை. எங்கே சுதந்திரம் தட்டிப் பறிக்கப்படுகிறதோ, அங்கே சமாதானத்துக்கு நிச்சயமாக ஆபத்து ஏற்பட்டு விடுகிறது.



# குறைந்த செலவில் அதிக மகசூல்

இந்தியாவில் பயிர்கள் மூலம் பெறக்கூடிய மொத்த உற்பத்தியில் ஒவ்வொரு ஆண்டும்சுமார் 18 சதம் இழப்புபயிர்களில் தோன்றும் களை, நோய், பூச்சிகள், எலி மற்றும் தானிய சேமிப்பில் சேதம் முதலியவற்றாலும் ஏற்படுகிறது. இந்த 18 சத இழப்பில் 33 சதம் களைகள் மூலமும், 26 சதம் நோய்கள் மூலமும், 20 சதம் பூச்சிகள் மூலமும், 6 சதம் எலிகள் மூலமும், 6 சதம் தானிய சேமிப்பில் சேதம் மூலமும் ஏற்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் சுமார் 5,000 கோடி மதிப்புள்ள விவசாயப் பொருட்கள் மேற்குறிப்பிட்ட காரணங்களால் இழக்க நேரிடுகிறது. இந்த இழப்பைச் சரி செய்யும் பொருட்டு நாடு சுதந்திரம் பெற்றபின் பயிர் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு பூச்சி, நோய்களை ஒழிக்கப் பெருமளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு முன்னோடியாக பி.எச்.சி. மற்றும் டி.டி.டி. மருந்துகள் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கும் பெருமளவில் விநியோகம் செய்யப்பட்டன.

உயர் விளைச்சல் ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்கள் பயிரிடப்பட்டு, அதற்குத் தேவையான உரங்களும் பெருமளவில் இடப்பட்டதால் பல ரகப் பூச்சி நோய்கள் பாதிப்பு அதிகம் ஏற்பட்டது. பூச்சி நோய்களின் தன்மைக்கு ஏற்ப அதிக வீரியம் உள்ள பல ரக மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டன, பூச்சி பூஞ்சாண மருந்துகளே பயிரைக் காக்க நல்லதொரு சாதனமாகக் கருதப்பட்டு பெருமளவில் உபயோகப்படுத்தப்பட்டன. மேலும் பூச்சி நோய்களிலிருந்து பயிரைக் காக்கும் நோக்கத்தோடு பயிரின் வளர்ச்சிக்காலத்தில் குறிப்பிட்ட இடைவெளியில் வருமுன் காக்கும் முகமாகப் பூச்சி மற்றும் பூஞ்சாண மருந்துகள் தெளிக்க பரிந்துரை செய்யப்பட்டு மருந்து தெளிக்கும் பணி பெருமளவில் நடைபெற்றது.

இவ்வாறு மருந்துகள் உபயோகம் அதிக அளவில் பெருகியதோடு அதிக வீரியம் மற்றும் செயல்திறன் உடைய அதிக நச்சுத்தன்மை கொண்ட 'சின்தடிக் பைரத்திராய்டு' போன்ற மருந்துகளும் விற்பனை செய்யப்பட்டு பெருமளவில் உபயோகப்படுத்தப்பட்டன.

இவ்வாறு அதிக அளவில் பூச்சி பூஞ்சாண மருந்துகள் கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து உபயோகப்படுத்தப்பட்டதால் பல நிலைகள் தோன்றலாயின.

—இயற்கைச் சூழ்நிலை பாதிக்கப்பட்டு பூச்சி மருந்துகள், காற்று, நீர், மண் முதலியவற்றில் கலந்து நிலை பெருமளவில் ஏற்படுகிறது.





—மருந்துகளின் நச்சுத்தன்மை உணவுப்பொருட்களில் தங்கி, மக்களுக்கும் கால்நடைகளுக்கும் அதிகத் தீங்கு விளைவிக்கிறது. மருந்து தெளிப்பதற்கும் அறுவடை செய்வதற்கும் போதிய இடைவெளி விட்டால்தான் ( Waiting Period ) மருந்தின் நச்சுத் தன்மை உணவுப் பொருட்களில் மறையும். ஆனால் முக்கியமாக காய்கறிகள், திராட்சை முதலிய பயிர்களில் இதனைக் கடைப்பிடிக்காமல் மருந்துத் தெளிப்பு மற்றும் அறுவடை தொடர்ந்து செய்யப்படுவதால் நச்சுப் பொருட்கள் அதிகப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

—இயற்கையான சூழ்நிலையில் பயிரைச் சேதப்படுத்தும் பூச்சிகள் பூச்சிகளைக் கட்டுப்படுத்த வல்ல ஒட்டுண்ணிகள் மறறும் எதிரிப் பூச்சிகள் வயல்களில் அதிக அளவில் இருந்தன. ஆனால் தொடர்ந்து பலவித மருந்துகள் தெளிக்கப்பட்டதால், ஒட்டுண்ணிகள் மற்றும் எதிரிப் பூச்சிகளின் எண்ணிக்கை குறைந்ததோடு பயிரில் அதிகம் சேதம் விளைவிக்காமல் இருந்த சிலவகைப் பூச்சிகள் பெருமளவில் திடீரெனத் தோன்றி சேதப்படுத்த ஆரம்பித்தன.

—மருந்து தெளிக்கும்போது அம்மருந்திலிருந்து தப்பிப் பிழைக்கும் பூச்சிகள், அம்மருந்தின் நச்சுத் தன்மையைத் தாங்கும் சக்தியைப்பெறுவதோடு, அதன் சந்ததிப் பூச்சிகளும் நச்சுத் தன்மையைத் தாங்க வல்ல தன்மை பெறுகின்றன. இதனால் மருந்து தெளிப்பினால் நல்ல முறையில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடிவதில்லை.

—சில வகைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த சில பூச்சி மருந்துகள் தெளித்தால் வேறு வகைப் பூச்சிகள் எண்ணிக்கையில் பெருகிச் சேதம் உண்டாகின்றன. மிதில் பாரத்தியான் தெளித்தால் புகையான் பெருகுவது, மாமரத்துத் தத்துப் பூச்சிகளை ஒழிக்க கார்பரைல் தெளித்தால் சிலந்தி பூச்சி ( Mites ) அதிகம் தோன்றுவது முதலியன இதற்கு எடுத்துக்காட்டுகள்.

—பூச்சி மருந்துகளைத் தெளிப்பதனால் பூச்சி மருந்துகளின் விலை உபகரணம் மற்றும் தெளிக்க கூலி முதலிய உற்பத்திச் செலவுகள் அதிகமாவதால் விவசாயிக்கு நிகர லாபம் குறைகிறது. மேலும் தேவையான சமயத்தில் மருந்தோ, தெளிப்பானோ அல்லது தெளிக்க ஆளோ கிடைக்காவிட்டால் உடன் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க இயலாமல் போய், அதிகச் சேதம் ஏற்படவும் வாய்ப்பு உண்டு.

அத்தகைய நிலைமைகளைத் தவிர்த்து, இயற்கையான முறையில் பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறை தற்போது பெருமளவில் பரிந்துரை செய்யப்படுகிறது.

## ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறை

இயற்கையான முறையில் எல்லா வகைத் தொழில் நுட்பங்களையும் செயல்படுத்தி, பூச்சி நோய்களின் தாக்குதல் பொருளாதாரச் சேத நிலையை அடையாமல் குறைத்து, கட்டுக்குள் வைத்திருக்கும் முறையே ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறை எனச் செயல்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு வகைப் பயிரிலும் பூச்சி மற்றும் நோய் எந்த அளவில் இருந்தால் பொருளாதார ரீதியில் விவசாயிக்கு மகசூல் குறைந்து பொருள் இழப்பு ஏற்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பூச்சி நோய்கள் அந்த அளவைத் தாண்டினால் மட்டுமே தற்போது பூச்சி பூஞ்சாண மருந்து தெளிக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது.

மேலும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறையைச் சிறந்த முறையில் செயல்படுத்த, பயிரைக் கவனமாகக் கண்காணித்து தொடர்ந்து பூச்சி நோயின் நிலவரம் அறிந்து வருதல் மிகவும் அவசியம். சிறிது கவனக் குறைவாகவோ, கண்காணிப்போ குறைந்தால், பூச்சி நோய்கள் பெருமளவில் பெருகி, பயிரைச் சேதப்படுத்தி, பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தி விடும். ஆகவே, பூச்சி நோய் இழப்பு விவரம் அவ்வப்போது கண்காணித்து உடன் தக்க நடவடிக்கை எடுத்தல் மிகவும் அவசியம்.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு தொழில் நுட்பம் பல முறைகளாகப் பிரிக்கப்படுகின்றன:

1. உழவியல் முறை
2. நேரடி முறை
3. உயிரியல் முறை
4. இனப்பெருக்கத் தடுப்புமுறை
5. சட்டமுறை
6. இரசாயனமுறை

## 1. உழவியல் முறை

பூச்சி நோய்களின் தாக்குதல் எந்தப் பட்டத்தில் அதிகம் இருக்கும் என்பதை அறிந்து, அவ்வகை பூச்சிநோய்களைத் தாங்கவல்ல ரகங்களைப் பயிரிட வேண்டும். பின் சம்பா பட்டத்தில் அதிக மழை, குளிர் இருக்கும் நேரத்தில் ஐ.ஆர். 50 நெல் சாகுபடி செய்வதைத் தவிர்த்து, ஐ ஆர்.20 வெள்ளைப் பொன்னி முதலிய ரகங்களைப் பயிரிடுதல் முறையானது இதற்கு எடுத்துக்காட்டுகள்.

பயிர் சுழற்சி முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஒரு பயிரைக் குறிப்பாகத் தாக்கி சேதப்படுத்தும் பலவகைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். உதாரணமாக, நெல்லைத் தாக்கும் பூச்சிகள், பருத்திப்பயிரைத் தாக்குவதில்லை.



ஆகவே, நிலத்தின் தன்மை, பருவ நிலை, நீர்ப்பாசன ஆதாரம் ஆகிய வற்றைப் பொருத்து பயிர் சுழற்சி முறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

பயிரின் அறுவடைக்குப்பின் தாள்கள், இலைகள் முதலியவற்றை அகற்றி தீ வைத்துக்கொளுத்துதல் நல்லது. துங்குரோநோய்க் கிருமிகள் இருந்து பச்சைத் தத்துப்பூச்சி மூலம் அருகிலுள்ள வேறு பயிரைத் தாக்கக் கூடும். அதுபோலவே புகையான் தாக்கிய பயிர்களின் தாள்களில் இருந்து புகையான் பூச்சிகள் பெருகி பரவ வாய்ப்பு உண்டு.

பருவமழை தொடங்கும் முன் கோடையில் உழவு செய்யும்போது நிலக்கடலைப்பயிரைத் தாக்கும் சிவப்புக்கம்பளிப் பூச்சியில்,கூட்டுப்புழுக்களை எடுத்து அழிக்க இயலும். கரும்பின் தோகைகளைப் பரப்புவதன் மூலம் இளம் குருத்துப் பூச்சியின் தாக்குதலைத் தவிர்க்கலாம். கோடை உழவின் மூலம் பல பயிர்களைத் தாக்கும் நூற்புழுக்களை (Nematode) ஓரளவிற்கு அழிக்கலாம்.

ஒரே சமயத்தில் ஒட்டுமொத்தமாக நடவு செய்தால் பூச்சித் தாக்குதல் குறையும். அநேகமாக அறுவடை ஒரே சமயத்தில் வருமாறு பார்த்துக் கொள்ளுதல் அவசியம். பெருமளவில் அறுவடை முடிந்த பின்னும், அறுவடைக்கு வராத பயிரில் அப்பகுதியிலுள்ள அனைத்துப் பூச்சிகளும் தாக்கிப் பெரும் சேதம் விளைவிக்கும்.

சிறிய குறுகலான வரப்புகளைப் பராமரித்தால், எலிகளின் தொல்லையைக் கணிசமாகக் குறைக்கலாம். மேலும் புகையான் தாக்கு







தல் உள்ள பகுதிகளில் இடைவெளி அதிகம் விட்டு நடுதல் நல்லது.

களைகளை அழிப்பது ஒரு முக்கியமான முறையாகும். களைகள் பயிரைத் தாக்கும் பூச்சி நோய்களுக்கு உறைவிடமாகவும், உணவாகவும் அமைந்து விடுகின்றன. ஆகவே, பயிர் இல்லாத காலங்களிலும் பூச்சி மற்றும் கிருமிகள் அழியாமல் இருந்து பயிர் பயிரிடப்பட்ட உடன் பயிரைத்தாக்கி சேதப்படுத்துகின்றன. ஆகவே, களைகள் அழித்தல் மிகவும் முக்கியம்.

தேவையான நேரத்தில் தேவையான அளவு உரமிடுதல் போதுமானது. அதிக பசுமையான செழிப்பான பயிரையே பூச்சி நோய்கள் அதிகம் தாக்குகின்றன. மேலும் நெல் குலைநோய் மற்றும் புகையான் தாக்கும் பகுதிகளில் அதிக அளவில் தழைச்சத்து இடுவதைத் தவிர்க்க வேண்டும்.

நீர்ப் பராமரிப்பும் மிகவும் முக்கியமானது. தேவையான அளவிற்கு அதிகமாக நீர் இருந்து, குளிர்ந்த சீதோஷ்ணமும் இருந்தால் பயிர் பலவகை நோய்களுக்கு உள்ளாக நேரிடும். புகையான் தாக்குதலுக்கு உள்ளான வயலில் அடிக்கடி தண்ணீரை வடித்து விடவேண்டும். இதன் மூலம புகையான் பூச்சியை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தலாம்.

கடலை, புகையிலை ஆகிய பயிர்களில் காணப்படும் புரோடீனியா புழுவைக் கட்டுப்படுத்த வயல்களின் ஓரங்களில் ஆமணக்குப் பயிரிடச் செய்யலாம். புரோடீனியா புழுக்களின் தாய்ப்பூச்சிகள் புகையிலை மற்றும் கடலைப் பயிரைவிட ஆமணக்குச் செடியை விரும்பி அவற்றில் முட்டையிடுவதால் முதலில் ஆமணக்குச்செடிகள் தான் தாக்குதலுக்கு உள்ளாகும். ஆமணக்குச் செடியிலுள்ள புரோடீனியா புழுவின் முட்டை தொகுதி மற்றும் கூட்டமாக உள்ள இளம் புழுக்களையும் எளிதில் எடுத்து அழித்துவிடலாம்.

## 2. நேரடி முறை

இம்முறையில் பூச்சிகளின் முட்டைகள் மற்றும் புழுக்களைக் கையினால் எடுத்து அழித்து விடலாம். மாமரத்தில் தண்டு துளைப்பான் தாக்கியுள்ள பகுதியை அகற்றி அழிக்கலாம். தென்னை மர காண்டாமிருக வண்டை குத்தூசி போட்டு எடுத்து அழிக்கலாம்.

விளக்குப் பொறி அமைத்து, அப்பொறியால் கவர்ந்து இழுக்கப்பட்ட பூச்சிகளை அழிக்கலாம்.

மேலும், இன ஈர்ப்பு பொறி மூலம் ஆண் பூச்சிகளைக் கவர்ந்திழுத்து அழிப்பதால் அப்பகுதியில் பூச்சிகளின் இனப் பெருக்கத்தை ஓரளவிற்குக் குறைக்க முடியும்.

## 3. உயிரியல் முறை

பயிரைச் சேதப்படுத்தும் பூச்சிகளை எதிர்த்து ஒழிக்கும் ஒட்டுண்ணிகள் மற்றும் எதிர்ப் பூச்சிகளைப் பாதுகாக்கவும். அதனை அதிக அளவில் பெருக்கி இயற்கையான முறையில் பயிர்களைக் காக்கவும் இம்முறை பயன்படுகிறது. இம்முறையில் ஒட்டுண்ணிகள் மற்றும் எதிரிப்பூச்சிகளை அதிக அளவில் வயல் வெளிகளில் விட்டுப் பலன் பெறலாம். ஒட்டுண்ணிப் பெருக்கு நிலையத்திலிருந்து கரும்புக் கண்டு துளைப்பான் மற்றும் தென்னைக் கருந்தலைப் புழுவிற்கு ஒட்டுண்ணிகள் வழங்கப்படுகின்றன. மேலும் பருத்திக் காய்ப் புழுவைத் தடுக்கவும் ஒட்டுண்ணி உள்ளது.

ஒட்டுண்ணி விடும் பொழுது எந்தப் பூச்சியை ஒழிக்க விடுகிறோமோ அந்தப் பூச்சி அதிக அளவில் வயலில் இருக்க வேண்டும். மருந்தடித்த வயலில் விடக் கூடாது. அதிக வெப்பம், காற்று, மழை முதலியன இல்லாத சீரான சீதோஷ்ண நிலையில் விடவேண்டும்.

ஒட்டுண்ணி மற்றும் எதிரிப் பூச்சிகளை வயலில் விட்டவுடன் மருந்து தெளிக்கக்கூடாது.



## 4. இனப்பெருக்கத் தடுப்பு முறை

இம்முறையில் ஆண் அந்துப் பூச்சிகள் சேகரிக்கப்பட்டு மலட்டுத் தன்மை ஏற்படக் கூடிய மருந்து கலந்த உணவைக் கொடுத்து வயலில் திரும்ப விடவேண்டும். இதனால் பெண் அந்துப்பூச்சிகள் கருத்தரிக்காத முட்டைகள் இடும். இம்முறை மூலம் இனப் பெருக்கத்தை குறைக்கலாம். இம்முறை இன்னும் விரிவான அளவில் பரிந்துரை செய்யப்படவில்லை. ஆய்வு நிலையில் உள்ளது.

## 5. சட்ட முறை

சில இடங்களில் சிலவகைப் பூச்சிகள் மற்றும் நோய்கள் தோன்றும். அவ்விடத்திலிருந்து விதைப்பொருள்கள் பெறப்பட்டு வேறு இடத்தில் விதைப்பதால் அநோய்கள் வேறு இடங்களில் பரவ வாய்ப்பு உண்டு. ஆகவே, சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து வேறு இடத்திற்கு அப்பயிரின் எந்தப் பொருளையும்எடுத்துச்செல்ல அரசு தடை விதித்து நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துகிறது. நீலகிரி மாவட்டத்தில் தங்க நூற்புழு தாக்கப்பட்ட உருளைக் கிழங்கு விதைக் களுக்கட்டுப்பாட்டைக் கவனிக்கவும்.

## 6. இரசாயன முறை

பூச்சி மற்றும் நோய்கள் பொருளாதாரச் சேத இழப்பைத் தாண்டினால் மட்டுமே பூச்சிமருந்து தெளிக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது. மருந்து தெளிக்கும்பொழுது ஒரு மருந்தையே அடிக்கடி உபயோகிக்கக் கூடாது.பருத்திப்பயிரில் சிந்தடிக் பைரத்திராய்டு தொடர்ந்து அடிப்பதால் வெள்ளை ஈ பெருகுகிறது. ஆகவே, அடுத்து வேறு மருந்து அடிக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது.

மேலும், மருந்து அடிக்கும் பொழுது ஒட்டுண்ணி மற்றும் எதிரி பூச்சிகளை அழிக்காமல் பார்த்துக் கொள்ளுதல் மிகவும் முக்கியம் குருணை மருந்து இடல் இதற்கு எடுத்துக்காட்டு.

இவ்வாறு ஒருங்கிணைந்த முறையில் பயிர்ப் பாதுகாப்பு முயற்சிகள் தொடர்ந்து செயல்படுத்தி வந்தால் நல்ல பலன் கிடைக்கும். ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை விவசாயிகளுக்குச் செய்முறையாகச் செய்து காட்ட தமிழ் நாட்டில் 99 இடங்களில் பாசனப் பயிரில் 40 எக்டேர் பரப்பிலும், மேலும்84 இடங்களில் மானாவாரிப் பயிரில் 40 எக்டேர் பரப்பிலும், ஒட்டு மொத்தச் செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் செயல்படுத்த அவ்வப்போது பூச்சி, பூஞ்சாண நோயின் தன்மை கண்காணிக்கப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு வாரமும் 7124 இடங்களில் எல்லா மாவட்டங்களிலும் புலனாய்வு செய்யப்பட்டு பூச்சி நோய்களின் தன்மைக்கு ஏற்பத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பரிந்துரை செய்யப்படுகிறது.

ஆகவே, விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்து குறைந்த செலவில் அதிக மகசூல் பெறலாம்.



• வன்ன வன்னக் களஞ்செதுக்கி
வாடச் சம்பா கட்டடிச்சேன்
வண்டிக்குத்தான் நெல்லளக்க
வல்லானைத் தேடுறேனே!



# கலை நுட்பம் அறிந்த க.நா.சு

மா. லோ. தாமோதரம்

பகலின் வெளிச்சத்தில் வெப்பம் கூடியிருந்த ஒரு கோடை விடுமுறை நாள். முன்தினம் படிக்க ஆரம்பித்த விநோத ரச மஞ்சரியைக் காலையிலேயே முடித்துவிட்டிருந்தேன். வீட்டில் நானும் அக்காவும்தான். அக்கா சமையல், சாப்பாடு வேலைகளை முடித்துக் கீழகத்தாருடன் பேசப்போய்விட்டாள். பகல்தூக்கம் எங்களுக்குப் பரிச்சயம் இல்லை. அப்பொழுது எனக்கு 15 வயது.

அலமாரியிலிருந்த நான்கு, ஐந்து புத்தகங்களில் ஒன்றை எடுத்து அறைக்குள் இருந்த ஜன்னல் அருகில் உட்கார்ந்தேன். வெப்பக் காற்று முதலில் முகத்தையும் பிறகு உடம்பு முழுவதிலும் தடவிச் சென்றது. வீதியில் பள்ளிப் பிள்ளைகள் ஆடிக் கொண்டிருந்தனர். என்ன விளையாட்டு? மைதானமும் பயிற்சி ஆசிரியரும் இல்லாத பேட்டையில் என்ன விளையாட்டு ஆட முடியும்? இங்கே அங்கே ஓடினார்கள். திடீரென்று ஒரு இரைச்சல். சத்தம், சிரிப்பு. அதுவும் ஒரு விளையாட்டுத் தானா?

கை விரல்கள் புத்தகத்தின் அட்டையைத் திறந்தன.

முதல் அத்தியாயம் ஆரம்பம். பக்கங்கள் புரண்டன.

பொழுது இன்னும் விடியவில்லை. அந்தக் கிராமம் விழித்துக்கொள்ள ஆரம்பிக்கிறது. ஒருத்தி தெருவில் கோலமிட வாசல் கதவைத் திறந்து கொண்டு வருகிறாள். அந்த விதவையின் வாழ்வில்...எதிர் வீட்டு வாசல் பக்கம் சிகரெட் நெருப்பின் ஒளி. உலகம் சுற்றி அனுபவம் நிரம்பிய அந்த மிலிடெரி கதாநாயகன் அந்தக் கிராமத்தில் அதுவரையில் பெற்றிராத விழிப்பைப் பெறுகிற கதை. உலகம் அறியாத தன் மாமி நடத்தும் வாழ்க்கையே பொருளுடைய வாழ்க்கையாக அவனுக்குத் தோன்றுகிறது. அவன் ஹிட்லரின் சாம்ராஜ்யமான ஜெர்மனியிலிருந்து வந்தவன். நமக்கும் அது சரியெனத் தோன்றுகிறது.

புத்தகத்தை மூடிவிட்டு வெளியே பார்க்கிறேன். எதிர்வீட்டு வாசலில் விளக்கு ஏற்றியாகிவிட்டது. பிள்ளைகள் சத்தம் ஓய்ந்துவிட்டது. வண்டிகளின் இரைச்சல் விட்டு விட்டுக் கேட்டது.

அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்ததினால் எனக்குள் ஏற்பட்ட ஒன்றால்-அது ஓர் இலக்கியத்தனமான பாதிப்பு என்று அப்பொழுது எனக்குத் தெரியாது-எதுவுமில்லாத ஒரு வெறுமையால் நிரம்புகிறேன்.

அந்த என் தன்வயம் இழந்த புத்துணர்ச்சிக்குத் தூண்டுகோல் அந்தப் புத்தகம்தான். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. என்ன புத்தகம்? அது ஒரு நாவல். அந்த நாவலை எழுதியவரின் பெயரை அட்டையில் பார்த்தும், ஒரு தடவை படித்து உச்சரித்தும், என் உள்ளத்தில் ஒரு சலனமும் எழவில்லை. ஆனால் அந்த நாவல் எழுப்பிய பாதிப்பு என்னைச் சுற்றி நீண்ட காலமிருந்தது. என் அகத்தில், இதயத்தில், நினைவில், எண்ணத்தில் இப்படி என்னென்ன வார்த்தைகளைச் சேர்க்கலாமோ அத்தனையிலும் அந்த நாவல் புகுந்துகொண்டு நின்றது.

அதன் பிறகு 35 ஆண்டுகளாக அந்த நாவல் இயற்றியவரின் எழுத்தைத் தேடிப்படித்துக்கொண்டு வருகிறேன். அந்த-நான் அன்று படித்த நாவலின் பெயர் 'ஒரு நாள்'. ஆசிரியர் பெயர் இன்று அமரர் ஆகிவிட்ட "க.நா.சு"

ஆங்கில இலக்கிய விமர்சனத்திற்கு இணையாகத் தமிழிலும் விமர்சனக் கட்டுரைகளைத் தரமாக எழுத முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர் க.நா.சு. தமிழிலக்கியத்தைப் பிற இந்திய இலக்கியங்களோடும், உலக மொழி இலக்கியங்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கும் உயர் நோக்கை அளித்தவர் க.நா.சு.

தஞ்சை மாவட்டம் வலங்கைமானில் 31.1.1912ல் பிறந்த இவர் ஒரு பி.ஏ.பட்டதாரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்றவர்.

ஆரம்ப காலத்தில் அவர் எழுதத் தொடங்கியது ஆங்கிலத்தில். கல்லூரியில் படிக்கும்போதெல்லாம் அவர் தமிழில் எழுதுவது பற்றிச் சிந்தித்தது கூடக் கிடையாது. கல்லூரிப் பாடமாக இல்லாவிட்டாலும், விரும்பித் தமிழ் படித்தது உண்டே தவிர, தமிழில் எழுத வேண்டும், தன்னால் எழுதக்கூடும் என்று எண்ணியது கூட இல்லை!

அவருடைய முதல் ஆங்கிலக் கட்டுரை 1928ல் அவர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது வெளி வந்தது. அதிலிருந்து 1934 வரையில், 'எதற்காக எழுதுகிறேன்' என்கிற சிந்தனையே இல்லாமல் ஆங்கிலத்தில் பல கட்டுரைகள், கதைகள் எழுதினார். அனைத்தும் இந்தியப் பத்திரிகைகள் பலவற்றிலும் வெளிநாட்டுப் பத்திரிகைகள் சிலவற்றிலும் வெளிவந்தன.

அவரின் தந்தை தமது வாலிபப் பருவத்தில் எழுத விரும்பியவர்-ஆங்கிலத்தில். அவரின் ஆசை பல காரணங்களால் நிறைவேறவில்லை என்று க.நா.சு. ஒரு கட்டுரையில் சொல்லியிருக்கிறார். தந்தையின் நிறைவேறாத ஆசையைதான் எழுதி நிறைவேற்ற வேண்டும் என்கிற நோக்கமே க.நா.சு. ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் எழுதத் தூண்டுகோலாக அமைந்தது என்றால், அதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் தகப்பனார் விருப்பத்திற்கு [illegible] தமிழில் எழுதி அவரது விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டார்.

1935ல், டி.எஸ். சொக்கலிங்கம் நடத்திக் கொண்டிருந்த 'காந்தி' என்ற பத்திரிகையில் வெளிவந்த வத்தலக்குண்டு எஸ். ராமய்யா என்பவரின் 'வார்ப்படம்' என்கிற கதைதான் முதன்முதலில் அவரைத் தமிழில் எழுத வேண்டும்—அதுமாதிரி எழுத வேண்டும் என்கிற எண்ணத்தை உண்டுபண்ணியது.

சில நாட்களில் 'மணிக்கொடி' அவர் முழுமனத்தையும் கவர்ந்தது. தமிழில் எழுதத் தொடங்கினார். பல நூல்களைப்படிக்கும் பழக்கமும் தொடர்ந்தது. படிப்பு... படிப்பு.. ஓயாமல் படிப்பு-பிரெஞ்சு மொழியைப் பயின்றார். கூடவே, 'ஐரோப்பிய மொழிப் பயிற்சி' என்கிற புத்தகத்திற்கு வெளிநாட்டில் பணம் கட்டி SHORT TERM COURSE—ஆக, ஜெர்மன், நார்வே, இத்தாலியன், ஸ்பானிஷ், ஸ்வீடிஷ், நார்வேஜியன் ஆகிய மொழிகளைப் பயின்றார்.

தெய்வ ஜனனம், அழகி, மணிக்கூண்டு, (சிறுகதைகள்) பசி, அசுரகணம், பொய்த்தேவு, ஏழுபேர், வாழ்ந்தவர் கெட்டால், கோதை சிரித்தாள், நாமல் வந்தார் (நாவல்கள்) உலகத்துச் சிறந்த நாவல்கள், அன்பு வழி, தமிழ்க்கணக்கன், ஒரு நோபல் பரிசு பெற்ற நாவல் ஆகியவை (மொழிபெயர்ப்பு) அவர் இயற்றியவை.

திருவள்ளுவரைப் பற்றி ஆங்கிலத்தில் அவர் இயற்றி இருக்கும் நூல் ஓர் அபூர்வ இலக்கியப்பணியாகும்.

எத்தனை விமர்சனக் கட்டுரைகள் அச்சேறின! தமிழ் எழுத்தாளர்களை— அவர்கள் எழுதிய கதை, நாவல்களை ஆங்கிலத்தில் விமர்சனம் செய்து பிற இந்தியப் பத்திரிகைகளிலும் வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் கட்டுரைகள் வரைந்தார். தமிழில் இலக்கியம் வளரவில்லை என்று அறை கூவினார். புதுமைப்பித்தனையும், மௌனியையும், கு. ப. ராவையும், சண்முகசுந்தரத்தையும், லா.ச.ராவையும் தமிழ் உலகு அறிந்து ஏற்றுக் கொள்ள வழி படைத்தார். பிறகு தான் 'உலகத்துச் சிறந்த சிறுகதைகள்' வரிசையில் மௌனியின் ஒரு சிறுகதையும் ஆங்கிலத்தில் வெளி வந்தது.

இளங்கோவின் இலக்கியம் உலகச் சிறப்புடையது என்று சொன்னபோது, தமிழைப் பூசனை செய்து கொண்டிருந்தவர்களுக்கு கொஞ்சம் திகைப்பு. தாந்தேயையும், ஜேம்ஸ் ஜாய்ஸையும், ஜான் டாஸ்பாஸ்லேவையும் இளங்கோவோடு சேர்த்து விமர்சனம் செய்துள்ளார். 'வழக்குரை காதையை எத்தனை முறை நான் படித்தாலும் உணர்வு பெறுகிறேன்', என்கிறார் க.நா.சு.

ஆங்கிலத்தில் எழுதினால் அவருக்கு நிறையப்பணம் கிடைத்தது. ஆனாலும் அதே போன்ற தரமான வற்றைத் தமிழில் பணம் பெறாமலும் எழுத அவர் ஆர்வமாக இருந்தார். குங்குமம், தினமணி (செய்தி) முத்தாரம் ஆகியவற்றில் அவர் எழுத்துக்கள் சமீப காலத்தில் நிறையவே வெளியிடப்பட்டன. அவை முன்பைவிடப் பல வாசகர்களைச் சென்று அடைந்தன. அப்பொழுதுதான், அவரின் தமிழ்ப்பற்றும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆர்வம் நிறைந்த பணியும் காலதாமதமாகத்தான் தெரிய வந்தது.

சம காலத்தவர்கள் எழுத்தை அவர் பாராட்டாமல்விட்டதில்லை. வ.வே.சு.ஐயர், வ.ரா., ந.சிதம்பர சுப்பிரமணியம், ராமையா, அழகிரிசாமி, தருவன், சண்முகசுந்தரம், அசோகமித்திரன், சா.கந்தசாமி, ஜெயகாந்தன் இப்படி எத்தனை எத்தனை பேர்கள். இவர்களில் கடைசியாக இருந்தாலும் தனி விசேஷம் பெற்றவர் 'வீடுபேறு' இயற்றிய மா.அரங்கநாதன். பலரின் எழுத்துக்களை ஆர்வமுடன் படிப்பதற்கு க.நா.சு.வின் விமர்சனப் பாங்கும் ஒரு காரணம்.

[illegible] நா. பார்த்தசாரதி எழுத்துக்களை விமர்சித்துப் பல கட்டுரைகள் எழுதினார். [illegible] கோ.வி.மணிசேகரன் நூல்களையும் படித்துத் தன் கருத்துக்



# தமிழர் திருநாள்

வ. வேலையன், கல்பாக்கம்

பொங்கல் திருவிழா தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் பெருவிழா. போகித் திருநாள், பொங்கல் புத்தாண்டுப் பெருநாள் இரண்டும் தமிழ் மக்களின் வீட்டு நலனையும் திருவள்ளுவர் திருநாள், உழவர் திருநாள் இரண்டும் தமிழ்நாட்டு நலனையும், இயல் தமிழ்த் திருநாள் இசைத்தமிழ். திருநாள், நாடகத் தமிழ் திருநாள் மூன்றும் தமிழ் மொழியின் நலனையும் பேணிப் போற்றி வருகின்றன.

மார்கழி இறுதி நாள் தொடங்கி தை 6 ஆம் நாள் முடிய ஒரு கிழமை விழாவாகப் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.

இன்று உலகில் 72 நாடுகளில் வாழ்கின்ற ஏறத்தாழ பதின்மூன்று கோடித் தமிழ் இனமக்கள் சாதி, மதம், நிறம், கட்சி, நாடு வேறுபாடு இல்லாமல் பண்பாட்டு விழாவாகத் தமிழர் திருநாளாகப் பொங்கல் பொன்னாளைக் கொண்டாடுகிறார்கள்.

இவ்விழாவைக் கீழ்க் குறிப்பிட்டவாறு கொண்டாடல் வேண்டும் என்று தமிழகப் புலவர் குழுவும், தமிழ்நாடு அரசும் முறை செய்து வேண்டுகோள் விடுத்துள்ளன.

மார்கழி இறுதிநாள்: போகி விழா,
தை.1. பொங்கல் புத்தாண்டு விழா,
தை.2. திருவள்ளுவர் விழா,
தை.3. உழவர் விழா,
தை.4. இயல் தமிழ் விழா,
தை.5. இசைத் தமிழ் விழா,
தை.6. நாடகத் தமிழ் விழா.

இவ்வாறே தமிழர் திருநாள் கொண்டாடுவோம் - உலகில் தலை நிமிர்ந்து செந்தமிழின் புகழ் பாடுவோம்.



களைக் கூறியிருக்கிறார். க.நா.சு. ஆல் நாவலின் சிகரம் என்று வர்ணிக்கப்பட்ட 'இதயநாதம்' பிற்கால எழுத்தாளர் ஒருவரால் மறக்கப்பட்டதும் உண்டு.

தனிப்பட்டவர்களின் மீது அவருக்கு என்றும் பகைமை கிடையாது. சொல்லப்போனால் கல்கி, அகிலன், பார்த்தசாரதி ஆகியோரின் மீது பெருத்த கௌரவமும் ஈடுபாடும் உண்டு. அவர்களின் எழுத்தைத் தான் அவர் தன் சொந்தக் கருத்தின்படி விமர்சனம் செய்து வந்தார். அதிலும் கல்கி அவர்களைக் கடைசி [illegible] போதிலும் அந்தப் பத்திரிகையிலேயே தன் கதைகள் கட்டுரைகள் எழுதிப் பிரசுரமாக்கிக் கொண்டார் என்றால் அவரின் 'தைரியம்' எத்தனை பெரியது.

'கல்கி' பத்திரிகையின் முதல் சந்தாதாரர் க.நா.சு. தானாம். மாறுபட்ட கருத்துடைய டி.கே.சி. மீது மிகவும் மதிப்பு வைத்திருந்தார்.

சிறுபத்திரிகைகள் வெளிவருவதற்கு அவரின் முயற்சிகள்தான் அஸ்திவாரமாக அமைந்து வருகிறது.

அவரே ஆசிரியராக இருந்து பல சிறு பத்திரிகைகளை வெளியிட்டிருக்கிறார். சூறாவளி, ராமபாணம் சந்திரோதயம், இலக்கிய வட்டம், ஞானரதம்-கடைசியாக முன்றில்.

76 வயதிற்கு மேலும் இலக்கியத்தில் அவருக்கு இருந்த ஈடுபாட்டைக் கண்ணால் கண்டும், காதால் கேட்டும் உணர்ந்தவன் நான். 1988ன் ஆரம்பத்தில் மா. அரங்கநாதன் ஏற்பாட்டின் மூலமாக கெ.பக்தவச்சலம் Y.M.C.A. பட்டிமன்றத்தில் ''உலக இலக்கியம்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு செய்து வந்ததை யாரால் மறக்க இயலும்.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் ஆறுமாதம் இருந்து இலக்கிய வகுப்புகள் நடத்தி வந்தார். இக்கால இலக்கிய மாணவர்களுக்கு அது ஒரு வரப்பிரசாதமாகும். 'இலக்கியத்திற்கு ஓர் இயக்கம்' என்ற நூலுக்காக 1987ல் சாகித்ய அகாடமி விருதினை இவர் பெற்றார்.

சுருக்கமாகச் சொல்லப்போனால் தமிழ எழுத்தாளர்கள் மிகவும் பாக்கியசாலிகள். இருந்தும் தங்களுக்கு வழிகாட்ட, தங்கள் எழுத்துக்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை விட, எப்படி இருக்கக் கூடாது என்பதற்காக உலக இலக்கியங்களை எல்லாம் கற்று, சாரம் எடுத்துச் சொல்லி, பல வகைகளில் பயனுற அவர் எழுதி வந்தார் என்பதை கடைசிவரையிலும் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் தங்கள் எழுத்தைப் பற்றி அவர் என்ன சொல்கிறார் என்பதை மட்டும் கேட்க மிகவும் விருப்பம்காட்டினார். (நகுலன் கூறுவதைப்போல) அவர் கடைசியாக எழுதிய நூல் ''கலை நுட்பங்கள்''. அது ஒன்றே போதும் அவர் பெருமையைச் சொல்ல.



## எக்டேருக்கு 9 டன் நெல் உற்பத்தி

வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் நெல் உற்பத்தியை உயர்த்தும் வகையில் தமிழகமெங்கும் ஒரு லட்சம் எக்டேரில் "எக்டேருக்கு 9 டன் நெல் உற்பத்தித் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு பருவமழை காலத்தே பெய்துள்ளதாலும், பாசனமளிக்கும் நீர்த்தேக்கங்கள், ஆறுகள், ஏரிகள், கிணறுகளில் நீர்வரத்து நன்கு அமைந்துள்ளதாலும், 23 லட்சம் எக்டேரில் நெல் பயிரிட்டு 60 லட்சம் டன்கள் அரிசி உற்பத்தி இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண்மைக் காடு வளர்ப்பு

பருவ மழை குறைவாகப் பெய்வதுடன் மண்வளம் சரியில்லாத பகுதிகளில் உழவர்கள் சீமைக்கருவேல், வெள்ளை வேலன் கருவேலன், வேப்ப மரக்கன்றுகள் அதிக அளவில் பயிரிட வேண்டும்.



கோடைப்பருவத்தில் பெய்யும் சொற்ப மழையைக் கொண்டு பல்வேறு மரக்கன்றுகள் நட தேவையான இடைவெளியுடன் 2 அடி ஆழமுள்ள குழிகளை விசைக் கலப்பையுடன் இணைந்த துளைக்கருவிகள் கொண்டு தோண்டலாம். ஒவ்வொரு குழிக்கும் ஒரு கூடை தொழு எருவுடன் அரை கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் ஒரு கிலோ 'பைரேட்' கலந்து மேல் மண்ணுடன் நிரப்பி மரக்கன்றுகளை நட வேண்டும்.

சீமைக்கருவேல் 4 வருடங்களில் ஏக்கருக்கு 4,000 ரூபாய் வருமானம் தரக்கூடியது. கருவேல் பத்து வருடங்களில் மர வேலைக்கு உகந்ததாக வளர்ந்து ஏக்கருக்கு ரூ. 10,000 வரை வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது.

இரண்டாவதாக வறட்சிப் பகுதிகளில் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்யும் சராசரி மழை சுமார் 170 மி.மீ. அளவே இருப்பதால் நீர் வழிந்தோடுவதைத் தவிர்க்க சரிவிற்கு குறுக்கே அகலப்பகுதிகளில் உழ வேண்டும். 6 அடி இடைவெளியில் அகலப்பாத்திகளை அமைத்து அதில் 2 அடி உழுவதால் மீதி உழாமல் விடப்பட்டுள்ள 4 அடிப்பகுதியில் நீர் வந்து சேரும்.



# ஐம்பெரும் செல்வங்கள்

மூத்தமிழ்க் காவலர்

கி.ஆ.பெ. விசுவநாதம்

மண்ணிலே விளைகின்ற பொன், வெள்ளி, இரும்பு மட்டுமல்ல செல்வங்கள். கடலிலே விளைகின்ற முத்து மட்டுமல்ல செல்வங்கள். தீவுகளில் விளைகின்ற பவளம் மட்டுமல்ல செல்வங்கள். காட்டிலே விளைகின்ற அகில், சந்தனம் மட்டுமல்ல செல்வங்கள். இலக்கியங்களிலே புதைந்து கிடக்கின்ற கருத்துகளும் செல்வங்கள் என்று உணர வேண்டும். அத்தகைய உயர்ந்த கருத்துகளைக் கொண்ட செல்வங்களே நம்முடைய ஐம்பெரும் காப்பியங்கள்.

நம் செல்வங்கள் அதோடு நின்று விடவில்லை. வாழும் நாடும், வாழும் மக்களும், பேசும் மொழியும், கேட்கும் இசையும், இன்றும் மருந்துகளும், நம் செல்வங்களாகக் காட்சியளிக்கின்றன. அல்ல, அல்ல, உலகின் பெருஞ்செல்வங்களாகவே ஒளி வீசுகின்றன.

**1. தமிழ்நாடு**

உலகின் மிகத் தொன்மையான நாடு தமிழ்நாடு. கடல் கொண்ட தென்னாடும் அதன் ஒரு பகுதி; ''பஃறுளி யாறும் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள'' வரலாற்றை இலக்கியங்கள் கூறுகின்றன. இந்து மாக்கடல் [illegible] தமிழ் நாட்டின் தென் பகுதியை, மேலை நாட்டினர் ''லெமூரி யாக் கண்டம்'' எனக் கூறுவர். தமிழகத்தை ஒரு உலகமாகவே கருதி, அதற்குரிய எல்லைகளைத் தமிழ்ச் சான்றோர்கள் ''வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்'' [illegible] கின்றனர்.

வரலாற்றுக்கு முற்பட்ட ஒரு காலத்தில், இந்திய நாடு முழுதுமே திராவிட நாடாக விளங்கியிருக்கிறது. மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட இதை ஆரப்பா, பழம் பெரும் நாகரிகங்களும் மெய்ப்பிக்கின்றன. சேரமன்னன் ஒருவனுக்கு ''இமய வரம்பன்'' என்று ஒரு பெயருண்டு. இமயமலை வரை அவன் ஆண்டிருக்கிறான். சோழ மன்னன் ஒருவனுக்கு ''ஒரு மொழி வைத்து உலகாண்டவன்'' என்று பெயர். இந்திய நிலப்பரப்பை மட்டுமல்ல இரண்டாம் குலோத்துங்கன் பர்மாவை ஆண்டிருக்கிறான். பல சோழ மன்னர்கள் கெடாவை ஆண்டிருக்கின்றனர். இன்றும் மலாய் நாட்டில், சோழ மன்னனின் புலிக்கொடி பறக்கிறது. கரிகாற்சோழன் இலங்கைக்குப் படையெடுத்துச் சென்று, வெற்றி பெற்று, 20,000 சிங்கள வீரர்களையும் சிறைப்பிடித்துக் கொண்டு வந்து, குடகு நாட்டிலிருந்து காவிரிப்பூம்பட்டினம் வரை 400 மைல் நீளம் காவிரிக்கு இருபுறமும் கரை கட்டச் செய்திருக்கிறான். இலங்கையில் உள்ள தமிழ்மக்கள் தம் விடுதலைக்காகப் புலிக்கொடியை ஏந்தியே போராடுகின்றனர். இத்தனை நாடுகளும் பழங்காலத்தில் தமிழ்நாட்டின் நிழலிலேயே வாழ்ந்திருக்கின்றன. புகார் நகரம் ஒரு காலத்தில் தமிழகத்தின் தலைநகராக இருந்தது. அது இமயமலையோடும், பொதிகை மலையோடும் வைத்து ஒப்புநோக்கப் பெற்றிருக்கிறது. ''பொதியிலாயினும் இமயமாயினும், பொதுவறு சிறப்பிற் புகாரே ஆயினும்'' என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

கடந்த உலகப்போரில் ''அட்டீஸ் அபாபா'' என்ற நாடு வீழ்ச்சியுற்றது. அதை ஒரு ஐரோப்பியப்பத்திரிகை ஆசிரியர், ''ஓராயிரம் ஆண்டுகளாக ஒரே தலைமுறையினரால் ஆளப் பெற்று வந்த, உலகத்தின் ஒரே நாடு வீழ்ச்சியுற்றது'' என வருந்தி எழுதியிருந்தார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே ஒரே தலைமுறையினரால் ஆளப்பட்டு வந்த உலகத்தின் ஒரே நாடு தமிழ்நாடு என்பதை அவர் அறியார்.

உலகம் முழுதும் படையெடுத்து வெற்றி பெற்ற அலெக்சாண்டருடைய படை காவிரியைக் கடந்து தமிழ்நாட்டுக்குள் புக முடியவில்லை. இந்தியா முழுதும் அசோகரின் கொடி பறந்து கொண்டிருந்த காலத்திலேயும் தமிழ்நாட்டில் தமிழ் மன்னர்களின் கொடிகளே பறந்து கொண்டிருந்தன. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, ''இமயமலையின் நெற்றியில், மீனக் கொடியும் புலிக் கொடியும், விற்கொடியும் பொறிக்கப்பெற்றிருந்தன'' என்று 1800 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இளங்கோவடிகள் கூறியிருக்கிறார்.

''கயல் பொறித்த இமய நெற்றியின்
அயல் பொறித்த புலியும் வில்லும்
என்பது அவரது வாக்கு.

**2. தமிழ் மக்கள்**

உலகின் மிகத் தொன்மையான மக்கள் தமிழ் மக்கள். உலகம் தோன்றி, மலைகள் தோன்றி, கற்கள் தோன்றிய காலத்திற்குப் பின்பும், அக்கற்கள் மண்ணாகா

கரைந்து மணலாகத் தோன்றிய காலத்திற்கு முன்பும் தோன்றிய மக்கள் தமிழ் மக்கள். ''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் வாளொடு முன் தோன்றிய வர்கள் தமிழ் மக்கள்'' என்பது சான்றோர் வாக்கு. அவர்கள் வெறுங்கையோடு உலவ வில்லை. வாளொடு தோன்றினர் என்பது தமிழ் மக்களின் வீரத்தைக் காட்டுகிறது. "சூரியன் தோன்றுகிற காலத்திலேயே தம் முன்னோர் தோன்றினர்'' என்று சோழ மன்னர்கள் சூரிய வட்டக்குடை பிடித்து வாழ்ந்தனர். ''சந்திரன் தோன்றிய காலத்திலேயே தம் முன்னோர்கள் தோன்றினர்'' என்பதன் அறிகுறியாகப் பாண்டியர்கள் சந்திர வட்டக் குடை பிடித்து ஆண்டு வந்தனர்.

''பதியெழுவறியாப் பழங்குடியினர்'' என்பது இளங்கோவடிகளின் வாக்கு. அது, ஒரு ஊரை விட்டு மற்றொரு ஊருக்குக் குடிபெயர்ந்து அறியாத தொன்மை யான மக்கள் தமிழ் மக்கள் என்பதைக் குறிக்கும்.

கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது 3000 ஆண்டுகளுக்கு முன்பு ரோமாபுரியை ஆண்ட ஏழாவது சாலமோன் காலத்திலேயே தமிழ்நாட்டிலிருந்து அகில், சந்தனம், மிளகு, மயில் தோகை, முத்து முதலியவற்றை,தமிழ் மக்கள் பாய்மரக் கப்பலில் ஏற்றிக் கொண்டு சென்றிருக்கின்றனர். காற்றடிக்கின்ற திசையை நோக்கியே தமிழ் மக்கள் தங்கள் பாய் மரக் கப்பல்களைச் செலுத்தி வந்திருக்கின்றனர். இந்தியாவிலிருந்து பல பொருள்களை மேலை நாடுகளுக்குக் கொண்டு சென்று விற்று, அங்கிருந்து பொன், வெள்ளி, முதலியவைகளைக் கொண்டு வந்திருக்கின்றனர். இதிலிருந்து கடற் கொள்ளைக் கூட்டத்திற்கும், சுறா மீன் கூட்டத்துக்கும் அஞ்சாது, பகலிலும் இரவிலும் திசையறிந்து,கடலில் படகு ஓட்டிய வீர மக்கள் பழந்தமிழ்மக்கள் என்று தெரிகிறது.வீர மக்கள் மட்டுமல்ல, ஒழுக்க நெறிகளில் சிறந்து விளங்கிய சான்றோர்கள் பலர்,பழந்தமிழ் மக்களாகக் காட்சியளிக்கின்றனர்.



## 3. தமிழ் மொழி

உலகின் மிகத் தொன்மையான மொழி தமிழ் மொழி. உலகின் முதல் மொழி தமிழ் மொழி என்பது தமிழ் அறிஞர்களின் கருத்து. இதை மறுக்க வந்த மேலை நாட்டினர், உலகின் முதல் மொழி தமிழ் மட்டுமல்ல. இலத்தீன், கிரீக், தமிழ், சீனம் இவை நான்குமே முதல் மொழிகள் எனக் கூறுகின்றனர். இதை நாமும் மறுக்கவில்லை.இந்த நான்கு மொழிகளில் எது முதல் மொழி என்பதை அவர்களாலும் கூறமுடிய வில்லை. தமிழ்மொழி தோன்றிய காலத்தை எவராலும் கணித்துக் கூற முடியாது.

''உலகம் தோன்றிய பொழுது அதில் உள்ள பொருள்கள் எப்படி,எப்படித் தோன்றின எனக்கருதி ஆராய்ந்து கூறும் உலக அறிஞர்களாலும் கூட தமிழ் மொழி தோன்றிய காலத்தைக் கண்டு கூற முடியாது'' என்பது தேசியக்கவி சுப்ரமணிய பாரதியாரின் கருத்து.

''தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள், என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்!!''

என்று அவர் நெஞ்சு நிமிர்ந்து கூறியிருக்கிறார்.

கடல்கொண்ட தென்னாட்டில் மறைந்து போன மதுரையில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்ச் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்திருக்கிறான் ஒரு பாண்டிய மன்னன். இது முதற்சங்கம் என்றும், இது 9000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. பையநாவை அசைத்த பொழுதே தமிழ் தோன்றியது என்பது சமயாச்சாரியர்களின் கருத்து. உதடு அசையும் பொழுதே உயிரொலிகளும் உயிரெழுத்துக்களும் தோன்றின என்று தமிழ் இலக்கணம் கூறும். தொண்டை, நாக்கு, பற்கள், இத்தனைக்கும் வேலையில்லாமல் உதடுகளாலேயே ஒலிக்கக்கூடியவை உயிர் ஒலிகளான உயிரெழுத்துக்களாகும். இரண்டு உதடுகளைத் திறக்கும் பொழுதே 'அ', இ உதடுகளையும் சுருக்கும் பொழுதே 'உ', அதை அ படியே சுருக்கி உயர்த்தும் பொழுதே 'ஓ', கீ உதட்டை மட்டும் திறக்கும் பொழுதே 'எ', இரண் உதடுகளையும் இளிக்கும் பொழுதே 'இ', வேறு வகை யாக இந்த உதடுகள் அசையா. அதை அறிந்தே தமிழ்ச் சான்றோர்கள் இந்த உயிர் ஒலிகளுக்கு அ,இ,உ எ, ஒ என்ற உயிரெழுத்துக்களை அமைத்தனர் இதையே மேலை நாட்டினரும், 'A,E,I,O,U' என அமைத்துக் கொண்டனர்.

தமிழ் மொழிக்கு இனிய, எளிய, சிறந்த, தனித்த பழைய என்ற ஐந்து அடைமொழிகளும் பொருந்தும் இன்று உலகத்தில பேசப்படுகின்ற 2000க்கும் மேற்பட்ட மொழிகளில் எந்த மொழிக்கும் இந்த ஐந்து அடை மொழிகளும் பொருந்தாது. இரண்டொன்று பொரு தலாம். சில மொழிகளுக்கு மூன்றும் பொருந்தலாம் எந்த மொழியுடனும் இந்த ஐந்து அடைமொழிகளு ஒட்டாது. 'இனிய தமிழ்', 'எளிய தமிழ்', 'சிறந் தமிழ்', 'தனித்தமிழ்', 'பழந்தமிழ்', என்று தமி மொழியை மட்டுமே கூற முடியும.

'ல', ள' என்ற ஒலியோடு 'ழ' என்று ஒலிக்கவும் தமிழில் ஒரு எழுத்து உண்டு. இந்த 'ழ' எழுத் உலகத்தின் எந்த மொழியிலும் இல்லை. இதனாலே இந்த 'ழ' கரத்தைத் தமிழ்ப்புலவர் பெருமக்கள் சிறப் 'ழ'கரம் எனக் கூறுவர்.

தமிழ் மொழியை உயர் தனிச் செம்மொழி என தமிழ்ச் சான்றோர் கூறுவதுண்டு. இது, தமிழ் உயர்ந் மொழி, தனித்த மொழி, செம்மைப் படுத்தப்பட்ட மொழி என மூன்று பொருள்களைத் தருகின்ற ஒரு சொற்றொடர் ஆகும்.

தமிழ் மொழியிலுள்ள குறில், நெடில்கள் இரண்டையும், வேற்றுமை உருபுகள் எட்டையும், அகம் புறம் என்ற இலக்கணங்கள் இரண்டையும் பிற மொழிகளிற் காண முடியாது.

தமிழ் மொழிக்கு 86,200 சொற்கள் உள்ளன என்று மறைமலை அடிகள் ஆராய்ந்து கூறியுள்ளனர். இவை அத்தனையும் தமிழ் மொழிக்கே உரிய சொந்தச் சொற்கள். இந்த அளவு அதிக எண்ணிக்கையுடைய சொந்தச் சொற்கள் உலகில் உள்ள இரண்டாயிரம் மொழிகளில் எந்த மொழிக்கும் இல்லை. ஆங்கில மொழி அகராதிகளில் இலட்சக் கணக்கான சொற்கள் இருந்தாலும்,ஆங்கில மொழிக்குச் சொந்தச் சொற்கள் 20,000க்கு மேல் உண்டு என்று எந்த ஒரு ஆங்கிலப் பேராசிரியரும் இன்றுவரை கூற வில்லை.

இன்னும் ஒன்று. 86,200 தமிழ்ச் சொற்களில் ஏழு எழுத்துக்கு மேற்பட்ட சொல் எதுவும் இல்லை. ஏழு எழுத்துச் சொற்களே இருக்குறளில் இல்லை. ஆறு எழுத்து ஐந்தெழுத்துச் சொற்கள், எங்கோ காணப் படுகின்றன. நான்கு எழுத்துச் சொற்களே சில. மூன்று இரண்டு எழுத்துச் சொற்களே 2000க்குமேல் காணப்படுகின்றன. வா, போ, கை, பை, மை, வை, என்ற ஓரெழுத்து ஒரு சொல்லும் தமிழில் உண்டு.



## 4. தமிழ் இசை

உலகின் மிகத் தொன்மையான இசை தமிழ் இசை. இசையை ஏழாகக் கண்டவர்கள் தமிழ்ச் சான்றோர்கள். இன்றும் எட்டாவது இசையை உலகத்தின் ஐந்து கண்டங்களிலும் உள்ள இசை அறிஞர்கள் எவரும் காணவில்லை. இது குரல், துத்தம், கைக்கிளை, இளி, உழை, விளரி, தாரம் என்பன. இதையே வட நாட்டினர் 'ச,ரி,க,ம,ப த,நி' என மாற்றி,பண்ணை ராகம் எனவும், ஆளத்தியை ஆலாபரணம் எனவும், இசையை சங்கீதம் எனவும் மாற்றிக் கூறி வருகின்றனர்.

இசைக் கருவிகள் தோல் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி என மூவகைப்படும். இம் மூன்று கருவிகளையும் கண்டவன் தமிழன். இது தமிழுக்கும் தமிழகத்துக்கும், தமிழ் மக்களுக்கும் மட்டுமே உரிமையுடைய என்று மெய்ப்பிக்கவே இக்கருவிகளுக்குப்பெய ரிடும் பொழுது, தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு 'ழ' கரத்தை வைத்து, தோல் கருவிக்கு 'முழவு' என்றும், துளைக் கருவிக்கு, 'குழல்' என்றும் நரம்புக்கருவிக்கு 'யாழ்' என்றும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே [illegible] பெயரிட்டுப் பதிவு செய்திருப்பது தமிழ் இசையின் சிறப் பையும் தொன்மையையும் காட்டுகிறது.

மிகவும் தொன்மையான காலத்தில் மனிதன் விலங்குகளை வேட்டையாடி அதன் இறைச்சியை தின்ற பிறகு; அதன் தோல்களை மரக்கிளைகளில் காய வைத்தான். காய்ந்த தோலின்மீது உலர்ந்த குச்சிகள் உராய்வதைக் கொண்டு தமிழன் தோல்கருவியைக் கண்டு பிடித்தான். விலங்குகளை வேட்டையாடும் பொழுது, வில்லின் நாணிலிருந்து கிளம்பும் ஒலியைக் கொண்டு தமிழன் நரம்புக் கருவிகளைக் கண்டு பிடித் தான். ஆற்றின், இரு கரைகளிலும் உள்ள நாணல் செடிகளில் உள்ள நீர்கலையை வண்டுகள் துளைத்து சுவைத்து உண்ட பிறகு, அதன் உள்ளே தென்றல் காற்று புகுந்து ஓசையிடுவதைக் கண்டு தமிழன் துளைக் கருவியைக் கண்டுபிடித்தான் என்று ஒரு பழம் பாடல் கூறுகிறது.

தமிழ் இசையை வெறுப்பவர்கள்,தங்கள் இசையை கர்நாடக இசை என்று கூறிக் கொள்ளுகிறார்கள் தமிழ் இசை வேறு, கர்நாடக இசை வேறு அல்ல இரண்டும் ஒன்றே. தமிழ் இசையின் மாறு பெயரே கர்நாடக இசை என்பது. தமிழ் நாட்டுக்கு,கரை நாடு என்று பெயர், சேர மண்டலக் கடற்கரை, சோழ மண்டலக் கடற்கரை, பாண்டி மண்டலக் கடற்கரை என 620 மைல் தூரம் கடற்கரை உண்டு. முப்புறமும் அலைகடல்கள், கடற்கரையைக் காணாத வடநாட்டினர், தமிழ் இசையை 'கரைநாட்டு இசை' என்று கூறினர். ஆங்கிலேயர் இதை 'கர்நாட்டிக் மியூசிக்' என்றனர். ஆரியர்கள் இதைக் கர்நாடக இசை என மொழி பெயர்த்துக் கொண்டனர்.

'கர்நாடக இசை என்பதும் தவறல்ல. 'கர்நாடகம்' என்பது பழைமையைக் குறிக்கும். கர்நாடக இசை என்பது பழமையான இசை என்ற பொருளில் தமிழ் இசையையே குறிப்பிடுவதாகும.

தமிழ் தோன்றிய பொழுதே தமிழ் இசையும் தோன்றியிருக்கிறது என்ற உண்மையை இயல், இசை, நாடகம் என முத்தமிழ்ச் சொற்றொடர் நமக்கு மெய்ப்பிக்கிறது. மற்ற இசைகளுக்கெல்லாம, அவை எவ்வப் போது தோன்றின என்பதற்கு வரலாறு உள்ளது. தமிழ் இசைக்கு வரலாறு இல்லை. அது எப்போது தோன்றியது என்று அறிந்து கூறும் அறிஞர்களும் இன்று இல்லை. அத்தகைய தொன்மையான இசை தமிழ் இசை,தமிழ் மக்களின் பிறப்பு, வளர்ப்பு, உழைப்பு, சடங்கு, காவு ஆகிய வாழ்க்கை அனைத்திலுமே இன்றும் தமிழ் இசையைக் காணலாம்.

## 5. தமிழ் மருத்துவம்

தமிழ் அறிஞர்கள் கண்ட மருத்துவக்கலை தமிழ் மருத்துவம் எனப் பெறும். இதைக் கண்டவர்கள் பல்லா

யிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சித்தர்கள். ... வாம் இதைச் சித்த மருத்துவம் என்றும் கூறுவதுண்டு. சித்தர்கள், இந்த உடம்பை யானையைப் போல் பெருக்கிக் காட்டுதல், பூனையைப் போலச் சிறுக்கக் காட்டுதல், இரும்பைப் போலக் கனத்துக் காட்டுதல், பஞ்சைப்போல் எளிதாக்கிக் காட்டுதல், நீரில் நடத்தல், நெருப்பில் துயில்தல், வானில் பறத்தல், கூடு விட்டுக் கூடு பாய்தல் ஆகிய எட்டு சித்திகளையும் பெற்றவர்கள். சித்த மருத்துவத்தின் கருவும், உருவும் 'உணவே மருந்து. மருந்தே உணவு' என்பது தான். உடலைப் பாதுகாக்க உணவு வகைகளே போதுமானவை என்பது இதன் கருத்து. இதையும் மீறி வரும் சில நோய்களை, செடி, கொடி, பட்டை, இலை, தழை, வேர், விதை முதலிய வற்றைக் கொண்டும் போக்கலாம். இதிலும் தீராத நோய்களை லேகியம், மாத்திரை, எண்ணெய் ஆகிய வற்றைக் கொண்டும் போக்கலாம். இதிலும் தீராத நோய்களை, கடுகு, மிளகு, சீரகம், பூண்டு, மஞ்சள், பெருங்காயம் முதலிய கடைச்சரக்குகளைக் கொண்டும் போக்கலாம். இதிலும் தீராத நோய்களை, தங்கம், முத்து, பவளம் முதலிய பொடிகளைக் ( பஸ்பம் ) கொண்டு போக்கலாம். இவை அனைத்திலும் தீராத மிகப்பெரு நோய்களை நஞ்சுப் (பாசாணம்) பொருள்களைக் கொண்டும் போக்கி வருவது தமிழ் மருத்துவம். இன்று உலகம் முழுதும் பரவியிருக்கும் ஆங்கில மருத்துவத்தால் தீராத நோய்களையும் தமிழ் மருத்துவம் தீர்த்து வருகிறது.

பொன், வெள்ளி, இரும்பு முதலிய உலோகங்கள் ஒன்பதும், முத்து, மணி, பவளம், முதலிய இரத்தினங்கள் ஒன்பதும், வீரம், பூரம், முதலிய பாசாணங்கள் ஒன்பதும் ஆக மூவொன்பது இருபத்தேழையும் புடம் போட்டுப் பொடி செய்கின்ற முறைகள் அனைத்தும் தமிழ் மருத்துவத்திற்கு மட்டுமே உரியன. இம்முறைகளை, ''ஞான மார்க்க''த்தின் மூலம் கண்டறிந்து கூறியவர்கள் தமிழ் மக்களின் முன்னோர்களாகிய சித்தர் பெருமக்கள். மக்களின் உடம்பில் உள்ள நோய்களைக் கையில் உள்ள நரம்புகளைத் தொட்டுப் பார்த்து அறிகின்ற முறை சித்த மருத்துவத்தில் மட்டுமே உண்டு. இது நாடி பார்த்தல் எனப்படும்.

... தமிழ் மருத்துவத்தில் சாகாக்கலை என்பதும் ஒன்று. ... தமிழ் மொழியில் மட்டுமே இருந்தது. ... அழிந்து போயிற்று. எனினும் அதன் திறமையைப் பதினெண் சித்தர் பாடல்களில் காணமுடிகிறது. சாகாக் கலையின் ஆசிரியர்களே சித்தர்கள். அக்கலையின் முடிவெல்லாம் ஒன்றேயொன்று, அது பெற்ற உடம்பு சாகடிப்பதற்கு அல்ல என்பதே. அவ்வாறு செய்யாமல் பலர் தமது உடல்களை அழியவிடுவதைக்கண்டு, அவர்கள் வருந்தியிருக்கின்றனர்.

''இசைவான கப்பலினை ஓக வெள்ளத்தில்
எந்நாளும் ஓடாம்-என்றாடாய் பாம்பே''

என்பது பாம்பாட்டிச் சித்தர் வாக்கு. இந்த உடம்பில் இந்த உயிர் என்றென்றும் தங்கியிருக்க வேண்டும் என்பது அவரது கருத்து.

''நந்தவனத்திலோராண்டி
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி-அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி''.

என்பது மற்றொரு சித்தரின் வாக்கு. இவ்வுலகத்தில் ஓர் ஆன்மா (நாலு ஆறு) பத்து மாதமாய்த் தாய் வயிற்றில் தவமிருந்து பிரம்மாவை வேண்டி ஓர் உடம்பைக் கொண்டு வந்தான். அதைப் பாதுகாக்கத் தெரியாமல் இவ்வுலக இன்ப துன்பங்களில் உழன்று, உழன்று அடியோடு சாகடித்தாண்டி என்பது இதன் பொருள்.

இதிலிருந்து, ஒழுங்காக உணவு முறைகளாலும் ஒழுக்க முறைகளாலும் உடம்பில் நோய்களே வராமல் பாதுகாக்க முடியும் என்று தெரிகிறது. சித்த மருத்துவம் காலத்தால் முந்தியதும், விலையால் மலிந்ததும், பலனால் மிகுந்ததும், கையாள்வதில் சிறந்ததும் ஆகும்.

இவை ஐந்தும் நாம் பெற்ற ஐம்பெருஞ்செல்வங்கள். அதிலும் பழம் பெருஞ் செல்வங்கள். இவை அனைத்தும் நமக்கே உரியன. இவற்றைப் பாதுகாக்கும் கடமையும் நமக்கே உரியன.

# பார்த்தோம் படித்தோம்

16-12-88 இதழில் 4-ஆம் அட்டையில் வெளியிட்ட மறைந்த முதல்வர் டாக்டர். எம். ஜி. ஆர். அவர்களின் திருவுருவப் படம் அருமையிலும் அருமை.

(இதேபோல் பாராட்டி திருவண்ணாமலை, வெ. சங்கரநாராயணன், பறங்கிப்பேட்டை ரமேஷ் குமார் ஆகியோரும் எழுதியுள்ளனர்)

தந்தை பெரியாரின் பொன் மொழிகள் அறிவை வளர்க்கும் அருமருந்தாய் இருந்தன.

—ப. ஷேக் அலாவுதீன், திருநெல்லிக்காவல்—3.

திரு. கி. வா. ஜகந்நாதன் நினைவைப் போற்றும் வகையில், அன்னாரின் இலக்கிய சுவைபட விளக்கியிருந்தார் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா.

—அ. சுப்பையன் செட்டிக்குறிச்சி.

திரு. சிவி விசுவநாதன், எழுதிய 'தமிழகச் சிறைகளில் தேசத் தலைவர்கள்' பற்றியசெய்திகள் சுவையாக இருந்தன.

—ப. முருகேசப் பாண்டியன், கரப்பாடி.

'தொழிற்சாலைத் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி' கட்டுரையினை (1-12-88) வரவேற்கிறேன்.

—அ. கந்தசுவாமி, திருப்பூர்.

'பிரதமரிடம் மக்கள் அளித்த முறையீடுகள் — கோரிக்கைகளுக்கு உடனடியாகத் தீர்வு' என்ற கட்டுரை மிகவும் அருமையாக இருந்தது.

—கே. என். எம். ராஜா, பனஞ்சாயம்.

மாணவர் பக்கத்திலுள்ள 'அன்னையே அகிலம் ஆவாள்' என்ற பாடல், தாய்க் குலத்தின் பெருமைகளைத் தூண்டியது.

—வி. கே. வீரசேகரன், விக்கிரபாண்டியம்.

'ஒரு காலக் கனவின் கவிதைக் கதை' உண்மையிலேயே கண்ணீரை வரவழைத்து விட்டது.

—ஏ. வி. எம். இஸ்மாயில், திட்டச்சேரி.

தந்தை பெரியாரின் பொன் மொழிகள் நலம் பயப்பனவாகும்.

—ப. அ. சண்முகம் எளம்பூர்.

அச்சிட்டு வெளியிடுவோர் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

# உழவர் திருநாள்

